தொல்காப்பியம்

உரைவளம்

எழுத்ததிகாரம்

தொகை மரபு

பதிப்பாசிரியர்:

ஆ. சிவலிங்கனார்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

(உரைவளம்)

தொகைமரபு

பதிப்பாசிரியர்

ஆ. சிவலிங்கனார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

டி. டி. டி. ஐ., தரமணி, சென்னை-600 113.

தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டம்
வெளியீடு – 7.

BIBLIOGRAPHICAL DATA

Title of the book	:	Tolkappiyam-Tokaimarapu
Editor	:	A. Sivalinganar International Institute of Tamil studies Madras-600 113.
Publisher & ©	:	International Institute of Tamil Studies Madras-600 113.
Publication Number	:	49
Language	:	Tamil
Edition	:	First
Date of Publication	:	May, 1982
Paper used	:	16 Kg. D/Demy
Size of the Book	:	21 × 18 cms.
Printing types used	:	10 Point and 8 Point
Number of pages	:	xxviii + 156
Number of copies	:	1200
Prize	:	**Rs. 8/- (Eight only)**
Printing	:	Sri Gomathy Achagam, Triplicane, Madras-5. P.Phone : 841478
Binding	:	Card Board
Artist	:	Eswari
Subject	:	Grammar
Summary	:	Commentaries on Tokaimarapu of Tolkappiyam.

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-113.

முன்னுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் செயல்படுத்திவரும் தொல்காப்பிய நூல் உரைவளத்திட்டத்தின் மூலம் ஏழாவது நூலாகத் "தொல்காப்பியம்—எழுத்ததிகாரம் (உரைவளம்)—தொகைமரபு" என்னும் நூல் வெளிவருகிறது.

முன்னைய உரைவள நூல்களிற்போலவே இதனிடத்தும் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உரைகளும், தற்கால அறிஞர் பெருமக்களின் கருத்துரைகளும் உள்ளன. நூற்பாக்களுக்கு ஆங்கில மொழிபெயர்ப்புகக்ளும், பிற இலக்கண நூல்களின் ஒப்புமை நூற்பாக்களும் உள்ளன.

'தொகைமரபு—ஓர் அறிமுகம்' என்னும் கட்டுரையையும் டாக்டர் வை. இரத்தினசபாபதி எழுதியுதவிய ஆங்கில முன்னுரையையும் கொண்டு வரும் இந்நூலினையும் தமிழுலகம் ஏற்று எங்கள் பணிக்கு ஊக்கம் அளிக்க வேண்டுகிறேன்.

பதிப்பாசிரியர் ஆ. சிவலிங்கனாரையும், அவர்க்கு உதவிய வர்களையும் பாராட்டுகிறேன்.

எம் நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் கல்வியமைச்சரு மாகிய மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கள் எங்கட்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து வருவதற்கு நன்றி மிகவுடையேன்.

யான் குறிப்பிட்ட காலஎல்லையில் தடங்கலின்றி அச்சிட்டுத்தந்த கோமதி அச்சக உரிமையாளர் சி. சரவணகுமார் அவர்கட்கு நன்றி.

அன்புடன்
ச. வே. சுப்பிரமணியன்

5—5—82

பதிப்புரை

தொல்காப்பியம்—சிறப்புப்பாயிர உரைவளம் முதலாக இது வரை ஆறு நூல்களை வெளியிட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஏழாவது நூலாகத் தொகைமரபு உரைவள நூலை வெளியிடுகின்றது.

இதன்கண் முன்னைய உரைவள நூல்களிற் போலவே இளம்பூரணர் உரை, நச்சினார்க்கினியர் உரைகளுடன் சுப்பிரமணிய சாஸ்திரியார், வேங்கடராசுலு ரெட்டியார், வெள்ளை வாரணனார், பதிப்பாசிரியர், பிறர் கருத்துரைகளும் அடங்கியுள்ளன. டாக்டர் சி. இலக்குவனார், கமீல் சுவலபில் ஆகியோர் ஆங்கில மொழிபெயர்ப்புகளும் உள்ளன. நூற்பாக் களை ஒட்டிப் பிற்கால இலக்கண நூல்களின் ஒப்புமை நூற்பாக் களும் தரப்பட்டுள்ளன.

முன்னதாகப் பதிப்பாசிரியர் எழுதிய 'தொகைமரபு—ஓர் அறிமுகம்' என்னும் கட்டுரையும், டாக்டர் வை. இரத்தின சபாபதி எழுதியுதவிய ஆங்கில முன்னுரையும் (Foreword) சேர்க்கப் பட்டுள்ளன.

பதிப்பு செம்மையாக அமையத் துணைபுரிந்த செல்வி, ச சிவகாமி, புலவர் க. வா. சச்சிதானந்தம், மயிலம் தமிழ்க்கல்லூரி முதல்வர், துரை. கார்த்திகேயன், பேராசிரியர் சிவசுப்பிரமணியன், ஆங்கில முன்னுரை வழங்கிய டாக்டர் வை. இரத்தினசபாபதி, கோமதி அச்சக உரிமையாளர் சி. சரவணகுமார் ஆகியோர்க்கு நன்றி.

வழக்கம்போல் என்னை ஊக்கியும் உயர்த்தியும் வரும் உலகத்தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கட்கு என்றும் நன்றியுடையேன்.

நிறுவனத் தலைவர், தமிழக அரசுக் கல்வியமைச்சர், மாண்பு மிகு செ. அரங்கநாயகம் அவர்கட்கு நன்றி.

இந்நூலையும் ஏற்று அறிவுரை வழங்கும் அறிஞர்கட்கும் நன்றியேன்.

சென்னை 113
24—5—82

ஆ. சி.

பொருளடக்கம்

முன்னுரை	iii
பதிப்புரை	v
பொருளடக்கம்	vii—viii
தொகைமரபு—ஓர் அறிமுகம்	ix—xxii
Foreword	xxiii—xxv
சுருக்க விளக்கம்	xxvi—xxvii
System of Transliteration	xxviii
தொகைமரபு விளக்கம்	1—4
1. உயிர்மெய் ஈறுகளின் பொதுப்புணர்ச்சி	
மமெல்லினம் தோன்றும் இடம்	4—7
வருமொழி இயல்பாதல்	7—12
வருமொழி யுறழ்ச்சி	12—17
ணனமுன் யாவும் ஞாவும்	17—19
ணன ஈறு அல்வழியில் இயல்பாதல்	19—22
அவை வேற்றுமையிலும் இயல்பாதல்	23—24
லனமுன் தநக்கள் திரிதல்	25—26
ணள முன் தநமெய் டண ஆதல்	27—29
2. உயிர்ஈறு மெய்யீறுகளின் சிறப்புப் புணர்ச்சி	
முன்னிலை வினைச்சொல் முடியுமாறு	29—33
அதற்குச் சிறப்பு விதி	33—40
உயர்திணைப் பெயர் புணருமாறு	40—45
அதற்குச் சிறப்பு விதி	45—48

விரவுப்பெயருள் இயல்பு 48—52

மூன்றாம் வேற்றுமை யுருபு 43—57

இரண்டாம் வேற்றுமைத் திரிபு 58—66

இகர ஐகார ஈற்று அல்வழி முடிபு 66—69

இ, ஐ ஈற்று ஏழாம் வேற்றுமை முடிபு 69—74

நெடில்முன், குறில்முன் ஒற்றுக்கள் 74—78

குறில் முன் ஒற்று இரட்டாத இடம் 78—81

நும் என் மொழிக்கும் அவ்விதி 81—82

புள்ளியிறுதி உகரம் பெறாத இடம் 82—84

அளவுநிறை எண்ணுப் பெயர்கள் தம்மிற் புணருமாறு 84—88

அவை அரை என்பதனோடு புணர்தல் 81—89

அவை குறை என்பதனோடு புணர்தல் 90—91

அவற்றுட் குற்றுகர மொழிகட்குச் சாரியை 91—92

கலம், அத்துச் சாரியை பெறுதல் 93—95

பனையும் காவும் இன்சாரியை பெறுதல் 95—96

அளவுநிறைப் பெயர்களின் மொழிமுதலாம் எழுத்துக்கள் 97—99

3. புறனடை

இவ்வியலுக்குப் புறனடை. 99—106

யாவர் யாது என்னும் சொற்களின் மரூஉ 107—112

சொல்லகராதி 113—127

சூத்திர முதற்குறிப்பகராதி 128

இணைப்பு—கருவியும் செய்கையும் 129—147

உரைத்தொடர் விளக்கம்

உதாரணப் பொருள் விளக்கம் 148—154

பயன்படுத்தப்பெற்ற நூல்கள் 15:—156

தொகைமரபு—ஓர் அறிமுகம்

தொகை மரபு

தொகைமரபு என்பது தொகையும் மரபும் என உம்மைத் தொகை; அது தொகையும் மரபும் பற்றிக் கூறும் பகுதியைக் குறித்தலின் உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாம்.

தொகை என்பது தொகுப்பு—தொகுதி என்னும் பொருளது எனவே தொகைமரபில் கூறப்படும் செய்திகள், தனித்தனிச் சிறப்புச் சொற்கள் பற்றியின்றி ஒன்றற்கு மேற்பட்ட பலவற்றின் இலக்கணம் தொகுப்புத் தொகுப்பாகவே கூறப்படும் என்பதாம்.

மரபு என்பது தொன்றுதொட்டு இடையில் திரிவின்றி வழங்கப்பட்டு வருவதாம். அவ்வாறு வழங்கப்பட்டு வரும் சொற்கள் பற்றியும் இவ்வியலிற் கூறப்படும்.

புணரியல்

தொல்காப்பிய எழுத்ததிகாரம் ஒன்பது இயல்களை யுடையது. நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல் என்னும் முதல் மூன்றியல்கள் தவிரப் புணரியல் முதலாகக் குற்றியலுகரப் புணரியல் ஈறாகவுள்ள ஆறு இயல்களும், சொற்கள் நிலை வருமொழிகளாக இருந்து தம்மிற் புணருமாறு கூறுவன ஆதலின் அவ்வாறும் புணரியல் என்னும் பெயருக்குரியன. அவ்வகையில் தொகைமரபும் புணரியல் ஆகும்.

தொகைமரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்பன சிறப்புப் புணரியல்கள். அவற்றிற்குரிய பொதுப் புணர்ச்சி விதி கூறும் இயல் 'புணரியல்' என்ற பெயரில் அமைந்தது. அதனால் மற்றையன தனித்தனிச் சிறப்புப் பெயர்களில் அமைந்தன. உருபுபுணர்தல் உருபியலிலும், உயிரீறு வருமொழியுடன் புணர்தல் உயிர் மயங்கியலிலும், மெய்யீறு வருமொழியுடன்

புணர்தல் புள்ளிமயங்கியலிலும், குற்றியலுகரம் வருமொழி யுடன் புணர்தல் குற்றியலுகரப் புணரியலிலும் அமைந்தன. அவ்வியல்களில் தனித்தனி எழுத்தீறுகள் பற்றிக் கூறப்படு மாதலின் பல வெழுத்துகளாகத் தொகுத்துக் கூறப்படும் இலக்கணங்கள் இத்தொகைமரபில் அமையும்.

செய்கை நான்கு

நிலைமொழியும் வருமொழியும் தொடரும்போது, நிலை மொழியிறுதி யெழுத்தும் வருமொழி முதல் எழுத்தும் இயல்பு நிலையோ திரிபு நிலையோ அடையும். இதைச் செய்கை என்பர். பொன்வளையல்—இயல்பு. பொற்றகடு—திரிபு.

இச்செய்கை நான்குவகைப்படும். அவை அகச் செய்கை, புறச்செய்கை, அகப்புறச் செய்கை, புறப்புறச் செய்கை என்பன. அச்செய்கை பற்றிக் கூறும் இலக்கணச் சூத்திரங்களும் அகச் செய்கைச் சூத்திரம், புறச்செய்கைச் சூத்திரம், அகப்புறச் செய்கைச் சூத்திரம், புறப்புறச் செய்கைச் சூத்திரம் எனப்படும்.

அகச் செய்கை என்பது நிலைமொழியிறுதி எழுத்து பற்றிய செய்கை.

புறச் செய்கை என்பது வருமொழி முதல் எழுத்து பற்றிய செய்கை.

அகப்புறச் செய்கை யென்பது நிலைமொழியிறுதி நோக்கி யும் வருமொழி முதல் நோக்கியும் கூறுவது.

புறப்புறச் செய்கை யென்பது நிலைமொழியீற்றையும் வருமொழி முதலையும் புணர்க்க அவற்றில் யாதோர் விதியும் இல்லாமல் அவற்றிற்கு அப்பாற்பட்ட ஒன்றைப் பற்றியது.

இச்செய்கை வேற்றுமைவழி அல்வழி என இருவகையில் வரும்.

அகச் செய்கை

ணகர னகர ஒற்றுகள் நிலைமொழியீற்றில் நிற்க, வலி, மெலி, இடையெழுத்துகளை முதலில் உள்ள சொற்கள் வருமாயின் அவ்விரண்டெழுத்துகளும் யாதோர் மாறுபாடும் அடைவதில்லை.

மண் கடிது,	பொன் கடிது
மண் சிறிது	பொன் சிறிது

மண் தீது	பொன் தீது
மண் பெரிது	பொன் பெரிது
மண் ஞாலம்	பொன் ஞாலம்
மண் நன்று	பொன் நன்று
மண்மாண்டது	பொன் மாண்டது
மண்யாது	பொன் யாது
மண்வலிது	பொன் வலிது

இவை அல்வழி. வேற்றுமையில் வருமொழி முதலில் வல்லெழுத்தின்றி மெல்லெழுத்தும் இடையெழுத்தும் வருமாயின் ணகரமும் னகரமும் அவ்வாறே அமையும்.

மண் ஞாற்சி	பொன் ஞாற்சி
மண் நீட்சி	பொன் நீட்சி
மண் மாட்சி	பொன் மாட்சி
மண் யாப்பு	பொன் யாப்பு
மண் வன்மை	பொன் வன்மை

இவை வேற்றுமைச் செய்கையால் வந்தன. (நூற்பா. 5, 6)

எறி கொற்றா
கொணா கொற்றா — உயிரீற்று முன்னிலை—இயல்பு

உண் கொற்றா
தின் கொற்றா — மெய்யீற்று முன்னிலை—இயல்பு

நட கொற்றா, நடக்கொற்றா—உயிரீற்று முன்னிலை இயல்பும் மிகலும் (உறழ்ச்சி)

ஈர் கொற்றா, ஈர்க் கொற்றா—மெய்யீற்று முன்னிலை இயல்பும் மிகலும் (உறழ்ச்சி)

இவை உயிரீறும் மெய்யீறுமாக வரும் முன்னிலை வினை பற்றிய அகச் செய்கை (9, 10).

உயிர்திணைப் பெயர்கள் உயிரீறாயினும் மெய்யீறாயினும் வருமொழி முதலில் எந்த எழுத்து வந்தாலும் இயல்பாக அமையும். நம்பி குறியன், அவன் குறியன் என அல்வழியிலும் நம்பிகை, அவன்கை என வேற்றுமையிலும் இயல்பாக அமைந்தன.

பலர் + சான்றார் = பல்சான்றார் கபிலன் + பரணன் = கபிலபரணர் இறைவன் + நெடுவேட்டுவன் = இறைவ நெடுவேட்டுவர் மருத்துவன் + மாணிக்கன் = மருத்துவ மாணிக்கர்	நிலைமொழி யிறுதி கெட்டன
பலர் + அரசர் = பல்லரசர் கோலிகன் + கருவி = கோலிகக் கருவி வண்ணாரர் + பெண்டிர் = வண்ணாரப் பெண்டிர் ஆசீவகன் + பள்ளி = ஆசீவகப் பள்ளி	ஈறுகெட்டு வல்லெழுத்து மிக்கன.

குமரன் + கோட்டம் = குமர கோட்டம், குமரக்கோட்டம்— ஈறுகெட்டு வல்லெழுத்து உறழ்ந்தன.

இவை உயர்திணைச் சொல் பற்றிய அகச் செய்கை (ii).

புறச் செய்கை

வணிகருட் சிறந்தோர்க்கு அரசராற் கொடுக்கப்படும் சிறப்புப் பட்டம் எட்டி என்பது. அவ்வாறு வேளாளருட் சிறந்தோர்க்குக் கொடுக்கப்படுவன காவிதி என்பது. எட்டி, காவிதி என்னும் உயர்திணைப் பெயர்கள் முன் பூ, புரவு போலும் வல்லெழுத்து முதல்மொழி வந்தால் நிலைமொழி யிறுதி உயிர் யாதோர் மாற்றமும் இன்றி அப்படியே இருக்க வருமொழி முதல் வல்லெழுத்து தான் மிகுந்து வரும்.

எட்டி + பூ = எட்டிப் பூ, எட்டி + புரவு = எட்டிப்புரவு

காவிதி + பூ = காவிதிப்பூ, காவிதி + புரவு = காவிதிப்புரவு.

தினை என்பதொரு பட்டமும் வேளாளர்க்கு அக்காலத்துக் கொடுக்கப்பட்டதுபோலும். தினைப்பூ, தினைப்புரவு என்னும் உதாரணங்களும் கூறினர். இச்செய்கை வருமொழி முதல் எழுத்து பற்றியதாக இருத்தலின் புறச்செய்கையாகும் (12).

அகப்புறச் செய்கை

சாத்தன் + குறியன் = சாத்தன் குறியன்—உயர்திணை

சாத்தன் + குறிது = சாத்தன்குறிது—அஃறிணை

சாத்தன் என்னும் சொல்லின் இறுதி னகர மெய்யும் குறிது என்னும் வருமொழியின் முதல் ககர மெய்யும் ஆகிய இரண்டும் யாதோர் மாறுபாடும் இல்லாமல் அமைந்தன. இவ்வாறே

ஙை என்பதிலும் காண்க. சாத்தன் என்பது உயர்திணை அஃறிணையென்னும் இரண்டற்கும் பொது. விரவுப்பெயர் என வழங்கப்படும். விரவுப் பெயர்த்தொடரில் இவ்வாறு நிலைமொழியீறும் வருமொழி முதலும் இயல்பாகவே அமையும் என்பது அகப்புறச் செய்கை விதியாகும் (18).

புறப்புறச் செய்கை

உழக்கு + குறை = உழக்கின் குறை பனை + குறை = பனையின் குறை கா + குறை = காவின் குறை	இன் சாரியை இடை வந்தது

கலம் + குறை = கலத்துக்குறை — அத்துச்சாரியை இடை வந்தது.

இவ்வாறு நிலைமொழியீறு வருமொழிமுதல் ஆகியவற்றிற்கு இடையில் வேறு ஓர் நிகழ்ச்சி (சாரியை வருதல்) நிகழ்வது புறப் புறச் செய்கை (25, 26, 27).

கருவி*

சமைத்தல் என்பது செய்கை; அச்சமைத்தலுக்கு வேண்டிய அரிசி, விறகு முதலியன அதற்குக் கருவிகள். அதுபோல் நிலை மொழியீறும் வருமொழி முதலும் சேரும்போது ஆம் நிகழ்ச்சி செய்கை. அது பற்றிக்கூறும் சூத்திரம் செய்கைச் சூத்திரம். அச் செய்கைக்கு வேண்டிய முன் ஏற்பாடுகள் பற்றிய அமைப்பு அதற்குரிய கருவி; அவ்வேறுபாடு பற்றிய சூத்திரம் கருவிச் சூத்திரம். கருவியும் நான்கு வகைப்படும். அகக்கருவி, புறக் கருவி, அகப்புறக் கருவி, புறப்புறக் கருவி என்பன அவை.

அகக் கருவி என்பது நிலைமொழியையும் வருமொழியையும் புணர்தற்குரிய நிலையில் ஒழுங்குபடுத்துதல்.

புறக்கருவி என்பது நிலைமொழி வருமொழிகளின் இயல்பு களைக் கூறுவது.

அகப்புறக் கருவி என்பது புணர்தற்குரிய நிலைமொழி வரு மொழிகளின் இயல்பு பற்றியும் இடையில் வரும் சொல்பற்றியும் கூறுவது.

புறப்புறக் கருவி என்பது சொல்லுக்குக் காரணமான எழுத்துகளைப் பற்றியது.

---

*கருவியும் செய்கையும் பற்றிய கட்டுரையினை இணைப்பில் காண்க. தெளிவு வேண்டி அக்கட்டுரை இணைக்கப்பட்டுள்ளது.

இக்கருவிகள் பற்றிய சூத்திரங்கள் தொகைமரபில் அதிகம் இல்லை. அகக்கருவி பற்றிய சூத்திரங்களேயுள.

கச தப முதலிய மொழிமேல் தோன்றும்
மெல்லெழுத் தியற்கை சொல்லிய முறையால்
ஙஞநம என்னும் ஒற்றாகும்மே
அன்ன மரபின் மொழிவயி னான (1)

என்பது ஒன்று. உயிர் மயங்கியலில் உயிரீற்றின் முன் வல்லெழுத்து முதல் மொழிவந்தால் மெல்லெழுத்து மிகும் என்ற விதி வருகிறது. உதாரணத்துக்கு "மரப் பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே" (உயிர் மயங்கியல் 15) என்னும் சூத்திரம் காணலாம். மரப்பெயர் விள என்பது. இன் முன் வரும் வல்லின முதல்மொழி கோடு என்பது. இவ்விரண்டும் சேரும்போது (விள + கோடு) மெல்லெழுத்து மிகும் என்பது விதி. எந்த மெல்லெழுத்து என்பது சூத்திரத்தில் குறிப்பிடவில்லை. இப்படிப்பல இடம் உண்டு. அவற்றுக்கெல்லாம் பொது விதியாக மேற்காட்டிய 'கசதப' என்பது அமைகிறது. வருமொழிமுதலில் வரும் வல்லெழுத்துக்கு இனமான மெல்லெழுத்தே மிகும் என்பது அச்சூத்திரத்தில் விளக்கப்பட்டது; கசதப என்பனவற்றிற்கு இனமான (முறையே) ஙஞநம என்பனவே அவை. எனவே இச்சூத்திரம் வருமொழியின் முதல் எழுத்துப்பற்றிய முன் ஏற்பாடான கருவிச் சூத்திரம் ஆகலின் அகக்கருவிச் சூத்திரம் என்னலாம்.

ஆறன் உருபினும் நான்கன் உருபினும்
கூறிய குற்றொற் றிரட்டல் இல்லை
ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும்
நெடுமுதல் குறுகும் மொழின் ஆன (1)

இச்சூத்திரம் நிலைமொழி பற்றிய அகக்கருவிச் சூத்திரம் நெடுமுதல் குறுகும் மொழிகள் தாம் நாம் முதலியன. அவை தம் நம் முதலியவாகக் குறுகும். இவை ஆறாம் வேற்றுமையுருபு 'அது' என்பதும் நான்காம் வேற்றுமை யுருபு 'கு' என்பதும் வரும்போது 'அ' என்ற எழுத்தைப் பெறும். (தாம் + அது → தம் + அது = தம் + அ + அது → தம + அது). தாம் என்பது அது என்பதுடன் சேரும்போது அது என்பதன் அகரம் கெடத் தமது எனச்சேரும்.

'அது' உருபின் அகரத்தைக் கெடுத்துச் சேர்ப்பதற்கு முன் தம் என்பது அ எழுத்துப்பெற்றுத் தம என நிற்கும் என இச் சூத்திரம் மூலம் தெரிவித்தலின் நிலைமொழியைச் சரிசெய்து வைத்துக் கொள்ளும் ஏற்பாடாகும் இச்சூத்திரம். அதனால் நிலைமொழி பற்றிய அகக்கருவிச் சூத்திரம் இது.

தொகைச் சூத்திரம்

இவ்வியலில் உள்ள சூத்திரம் 30 தொகுத்து முடித்த சூத்திரம்.

21. அவை. 2, 3, 5—21, 28, 29 எண் உள்ள சூத்திரங்கள்.
மரபுபற்றிக்கூறிய சூத்திரம் 2. அவை 4,30 எண் உள்ளன.
இரண்டும் பற்றிய சூத்திரம் 7. அவை: 1,22—27 எண் உள்ளன.

ஞநமய வவெனும் முதலாகு மொழியும்
உயிர்முத லாகிய மொழியும் உளப்பட
அன்றி யனைத்தும் எல்லா வழியும்
நின்ற சொல்முன் இயல்பா கும்மே

இந்நூற்பாவுரையில் இளம்பூரணர்,

> இஃது இருபத்து நான்கு ஈற்றிற்கும் அல்வழியினும் வேற்றுமையினும் அகத்தோத்தினுள் நாற்பத்தெட்டுச் சூத்திரத்தால் முடிவதனை, ஈண்டு ஒரு சூத்திரத்தால் தொகுத்து முடித்தவாறாயிற்று; மேலும் இவ்வாறே தொகுத்து முடிகின்றவாறு அறிக.

என எழுதியுள்ளார். எனவே இது போலும் சூத்திரங்கள் தொகைச் சூத்திரங்களாம்.

மரபுச்சூத்திரம்

ணனவென் புள்ளிமுன் யாவும் ஞாவும்
வினையோ ரனைய என்மனார் புலவர் (4)

இதுமரபுச் சூத்திரம். மண்யாத்த பொன்யாத்த என்பன மண் ஞாத்த பொன்யாத்த என யகரத்துக்கு ஞகரம் மாற்றெழுத்தாக வந்தது. யகரத்துக்கு ஞகரம் மாற்றெழுத்தாக வருவது மரபு. ஞகரத்துக்கு யகரம் மாற்றெழுத்தாக வராது.

'யாவர்' என்பது 'யார்' என வருதலும், 'யாது' என்பது 'யாவது' என வருதலும் மரூஉ வகையிற் சார்ந்த மரபாக வரும் என்ற கருத்தில் 30ஆம் நூற்பா அமைந்துள்ளது.

இவையிரண்டும் மரபு மட்டும் பற்றிய சூத்திரம்.

தொகைமரபுச் சூத்திரம்

கசதப முதலிய மொழிமேல் தோன்றும்
மெல்லெழுத் தியற்கை சொல்லிய முறையால்
ங ஞ ந ம வென்னும் ஒற்றா கும்மே
அன்ன மரபின் மொழிவயி னான.

இச்சூத்திரத்தில் இரண்டும் அமைந்தவாறு காணலாம். உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகிய வற்றில் நிலைமொழி முன்னர் வல்லெழுத்து முதல் மொழி வந்தால் மெல்லெழுத்து மிகும் எனக் கூறப்படினும் அம் மெல்லெழுத்துகள் இனமெல்லெழுத்துகளே யாம் என இதில் கூறியது மரபு பற்றியதாகும். க ச த ப...ங ஞ ந ம எனச் சேர்த்துத் தொகுத்துக் கூறியதால் தொகுதி கூறியதாகக் கொள்ளல் வேண்டும். எனவே இச்சூத்திரம் தொகை, மரபு என்ற இரண்டு பற்றிக் கூறியது என்க.

உயிரும் புள்ளியும் இறுதி யாகி
அளவும் நிறையும் எண்ணும் சுட்டி
உளவெனப் பட்ட எல்லாச் சொல்லும்
தத்தங் கிளவி தம்மகப் பட்ட
முத்தை வரூஉங் காலந் தோன்றின்
ஒத்தது என்ப ஏஎன் சாரியை. (22)

இச்சூத்திரத்தில் அளவுப்பெயரும் நிறைப்பெயரும் நிலை மொழியாய் நிற்க, அவற்றின் குறையளவுகள் வருமொழியாய் வரின் இடையில் ஏ என்னும் சாரியை வரும் என்பது.

உழக்கே ஆழாக்கு கலனே பதக்கு	அளவுப்பெயர்
தொடியே கஃசு கொள்ளே ஐயவி	நிறைப்பெயர்
காணியே முந்திரிகை காலே காணி அரையே அரைக்கால்	எண்ணுப்பெயர்

இவை உதாரணங்கள். மேற்சூத்திரத்தில் முதல் ஐந்து வரிகளில் தொகைச் செய்தியும், 'ஒத்த தென்ப ஏ என் சாரியை' என்பதில் மரபுச் செய்தியும் காணலாம். ஏகாரம் பெற்றே வருவது மரபாகவே வருவதாம். எனவே இச்சூத்திரமும் தொகை, மரபு என்னும் இரண்டும் கூறியதாம். இப்படியே பிறவும் கொள்க.

உரையருமை

தொல்காப்பியச் சூத்திரங்கள் சிலவற்றிற்கு உரையில்லை யென்றால் இக்காலத்தில் பொருள் விளங்கிக் கொள்வது அரிய தாகும். இளம்பூரணர் உரை இல்லையென்றால் பின்னர் வந்த நச்சினார்க்கினியர் போல்வார்க்கு எளிதில் உரையெழுத முடியா மல் போயிருக்கும்.

ணன வென் புள்ளிமுன் யாவும் ஞாவும்
வினையோ ரனைய என்மனார் புலவர் (4)

என்னும் நூற்பாவுக்கு உரையும் உதாரணமும் எளிதில் புலப்படுவனவல்ல. ணகர னகர ஒற்றுகளை இறுதியில் கொண்ட சொற்கள், யகரத்தை முதலாகக் கொண்ட வினைச் சொல் வருமொழியாக வரும்போது, அந்த யகரம் ஞகரமாகவும் ஒலிக்கலாம்—அதாவது மாற்றெழுத்தாக—மாற்றொலியாக அமையலாம் என்னும் நியதிக்கேற்ப அமையும் சொற்களாக வேண்டும். இதை எளிதில் கண்டு பிடிக்க முடியாது. இளம் பூரணர் மண் பொன் என்னும் இரண்டு சொற்களைக் கண்டு பிடித்து யாத்த என்னும் வினைச்சொல்லையும் கண்டு மண் யாத்த பொன் யாத்த, மண் ஞாத்த, பொன் ஞாத்த என அமைத்து உதாரணம் கண்டார். இவ்வுதாரணத்தை அடிப்படை யாக வைத்து நச்சினார்க்கினியர் மண்யாத்த கோட்ட மழகளிறு, மண் ஞாத்த கோட்ட மழகளிறு, பொன் யாத்ததார்ப் புரவி, பொன் ஞாத்த தார்ப் புரவி எனத் தொடரை எழுவாய் பயனிலைகளுடன் முடித்தார். யா எழுத்துக்கு மாற்றெழுத்தாக ஞா வருமேதவிர ஞா எழுத்துக்கு யா மாற்றெழுத்தாக வராது என்பதையும் நன்கு ஆராய்ந்து உணர்ந்து "ஞா முற்கூறாது யா முற்கூறியவதனான் யா முதன் மொழிக் கண் ஞா வரும் என்றுணர்க', என்றும் எழுதினார். நச்சினார்க் கினியர் மேலும் ஒருபடி சென்று "வினையோரனைய" என வினையில் யாவுக்கு ஞா வரும் என்றதனால் பெயர்க்கண்

யாவுக்குப் பதில் ஞா வராது அதாவது யானை என்பது ஞானை என வராது எனக் கூறினார்.

சுட்டு முதலாகிய இகர இறுதிக்கு அதோளி (முதலில் சுட்டும் இறுதியில் இகரமும் உடையது) என்றும், எகர முதல் வினாவின் இகர இறுதிக்கு எதோளி (முதலில் எகரம் இறுதியில் இகரம்) என்றும், சுட்டுச் சினை நீடிய ஐ என்பதற்கு ஆண்டை (முதலில் அகரச் சுட்டு நீண்டது இறுதியில் ஐ உள்ளது) என்றும், யாவென் வினாவின் ஐ யென் இறுதிக்கு யாண்டை (முதலில் யா இறுதியில் ஐ உடையது) என்றும் உதாரணம் காட்டிய பெருமை இளம்பூரணருக்குரியது. இவ்வுதாரணங்களை இவர் காட்டவில்லை யென்றால் வேறு உதாரணங்களைக் காண்பது அரிதே.

அளவுப் பெயர்க்கும் (முகத்தலளவு) நிறைப் பெயர்க்கும் மொழி முதலில் வரும் எழுத்துகள் ஒன்பது என்றார் தொல் காப்பியர் (28). அவ்வெழுத்துக்கள் க ச த ப நம வ அ உ என்பன என்றும் கூறினார்; அவ்வளவே. இவற்றை முதலில் உடைய பெயர்களை இளம்பூரணரே விளக்கினார். அவை கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டில், அகல், உழக்கு என்பன முகத்தல் அளவுப் பெயர் என்றும், கழஞ்சு, சீரகம், தொடி, பலம் நிறை, மா,வரை, அந்தை,உம்மி,என்பன நிறுத்தலளவைப் பெயர் என்றும் விளக்கினார். மேலும் இம்மி ஓரடை ஓரடை என் பனவும் அளவுப் பெயர்கள் என்றார். இக்காலத்தில் கலம், நாழி, கழஞ்சு, பலம், போலும் சில பெயர்கள் தவிர மற்றையன வழங்கப்படவில்லை. வட்டில் என்பது புட்டி என வழங்கப்படு கிறது.

உயிரீறாகிய உயர்திணைப் பெயர்கள் வருமொழி முதலில் வலி முதலிய அனைத்துக் கணங்களும் வரினும் யாதோர் திரிபும் இல்லாமல் இயல்பாக இருக்கும் என்று முதலில் (11) கூறிய ஆசிரியர், அப்பெயர்களுள் இகர ஈற்றுப் பெயர்கள் இயல்பாக முடிவதன்றித் திரிந்து முடிவனவும் உள என்பார்,

அவற்றுள்

இகர இறு பெயர் திரிபிடன் உடைத்தே'' (12)

என்றார். இதற்கு இளம்பூரணர் எட்டிப்பூ, எட்டிப்புரவு, காவிதிப்பூ, காவிதிப்புரவு, நம்பிப்பூ, நம்பிப்பேறு என

உதாரணம் காட்டினர். எட்டி காவிதி நம்பி என்பன உயர் திணைப் பெயர்கள். எட்டி என்பது வணிகருட் சிறந்தார்க்கு அரசரால் கொடுக்கப்படும் பெயர். நம்பி என்பது ஆண் மக்க ளுட் சிறந்தானைக் குறிப்பது. இச்சூத்திரத்தில் இளம்பூரணர்,

> ''இடனுடைத்து என்றதனால் இகர ஈறன்றிப் பிற ஈறும் ஈறுதிரியாது வல்லெழுத்து மிக்கு வருவன ஈண்டுக் கொள்க
> திணைப்பூ திணைப்பரவு என வரும்''

என்றெழுதினார். உயர்திணைபற்றிப் பேசும் இடத்தில் திணை என்பதைக் கூறியதால் திணை என்பதும் உயர்திணைப் பெயர் எனக் கொள்ளவேண்டியுள்ளது. எட்டிப் பூ எட்டிப்பரவு, காவிதிப்பூ காவிதிப்புரவு எனக்காட்டியமை போலவே திணைப் பூ திணைப்புரவு என உதாரணம் காட்டினார் இளம்பூரணர். இதனால் எட்டி என்பானுக்குத் தரும்பூ காவிதி என்பானுக்குத் தரும்பூ எனக் கொள்வதுபோலவே திணை என்னும் பட்டம் உடையானுக்குத் தரும்பூ எனப் பொருள் கொள்ளவேண்டும் என்பதும், திணை என்பதும் அக்காலத்தில் அரசரால் வேளாளர்க்கு (அல்லது யாருக்கோ) அளிக்கப்படும் சிறப்புப் பட்டப் பெயர் என்பதும் அறியலாம்.

> உயிரீ றாகிய முன்னிலைக் கிளவியும்
> புள்ளி யிறுதி முன்னிலைக் கிளவியும்
> இயல்பா குநவும் உறழ்பா குநவும்
> ஆயீ ரியல வல்லெழுத்து வரினே (9)

என்னும் நூற்பாவில் முன்னிலைக் கிளவி என்று மட்டும் சொல்லாமல் உயிரீறாகிய புள்ளியிறுதி என்ற அடைமொழி களைக் கொடுத்துச் சொல்லியதன் சிறப்பை இளம்பூரணர்,

> ''உயிரீறு புள்ளியிறுதி என்றமையால் முன்னிலை வினைச் சொல் என்பது கொள்க.''

என்றெழுதினார். இதன் காரணம் என்ன? 'நீயென் பெயர் ....வல்லெழுத்து இயற்கையாகும்' (எழு. 251) என உயிரீற்று முன்னிலை யொருமைப் பெயர் வருமொழி மெல்லெழுத்தாயின் யாதோர் மாற்றமும் இன்றி இயல்பாகவே 'நீ குறியை' என்பது போல அல்வழியில் வரும் என்று கூறி விட்டமையாலும் நீயிர்

என்பது நும் என்ற வடிவம் திரிந்த வடிவம் எனப் புள்ளி மயங்கியலில் கூறினமையானும் (எழு. 327) நும் என்பது வேற்றுமையேற்கும் வடிவமேயன்றி எழுவாய்க்காகும் வடிவம் அன்று ஆதலினாலும் முன்னிலைப் பெயர்களை விலக்கவேண்டும் என்பதற்காக உயிரீறு புள்ளியீறு என்றார் ஆசிரியர் என்பதையுணர்ந்து கூறினார் இளம்பூரணர்.

முன்னிலைவினை செய்வினையும் ஏவல் வினையும் என இரண்டு வகைப்படும். இவ்விரண்டனுள் இச்சூத்திரத்திற் கொள்ளவேண்டுவது யாது என இளம்பூரணர் கூறவில்லை. ஆனால் உதாரணமாக எறி கொற்றா கொணா கொற்றா என்று ஏவல் வினைக்குரிய உதாரணமே காட்டினார். இளம்பூரணர் உரையை நன்குணர்ந்த நச்சினார்க்கினியர்

> ''ஈறு என்று ஓதினமையின் வினைச் சொல்லே கொள்க. இவை முன்னின்றான் தொழில் உணர்த்துவனவும், அவனைத் தொழிற்படுத்துவனவும் என இரு வகைய. இஐ ஆய் முதலியன தொழில் உணர்த்துவன. நடவா முதலியன உயிரீறும் புள்ளியீறும் தொழிற் படுத்துவன''

என எழுதினார். அவரும் முன்னிலை வினையை விட்டு முன்னிலை யேவல் வினையைக் கொண்டதற்குக் காரணம் கூறவில்லை.

முன்னிலை வினைமுற்று விகுதிகள் இ, ஐ என்னும் உயிர் எழுத்தும், ஆய் என்னும் மெய்யீற்று விகுதி இடைச் சொல்லும் ஆம். எனவே உயிரில் இரண்டும் மெய்யில் ஒன்றும் ஒருமைக்கும், ரகர இறுதி முன்னிலைப் பன்மைக்குரியதாகலின் அஃதொன்றும் ஆக நான்கு எழுத்தளவில் முன்னிலைவினை நின்று விடும். ஏவல் வினையோ நட வா மடி முதலிய இருபத்து நான்கு ஈறுகளிலும் வரும். அதனால் ஏவல் வினையே கொள்ளவேண்டும் என்று இரண்டு உரையாசிரியர்களும் உதாரணம் காட்டினார்.

உண்டி கொற்றா, உண்டனை கொற்றா, உண்டீர் புலவரே என முன்னிலை வினைக்கும் உதாரணம் கொள்ளலாம். இவ்வாறு வருதல் கூடாது என இருவரும் உரையாமையின் அவ்விருவர்க்கும் உடன்பாடாம் என்னலாம்.

> **உயிரீ றாகிய உயர்திணைப் பெயரும்**
> **புள்ளி யிறுதி யுயர்திணைப் பெயரும்**
> **எல்லா வழியும் இயல்பென மொழிப (10)**

என்னும் சூத்திரத்தில் நம்பி குறியன் அவன் குறியன் என உயர் திணைப் பெயர் இறுதி வருமொழி வல்லெழுத்துடன் சேரும் போது யாதோர் மாற்றமும் இன்றி இயல்பாக வந்தமைக்கு உதாரணம் காட்டிய உரையாசிரியர் இருவரும், ஒருவென் குறியென எனத் தன்மைப் பெயர் இறுதி இயல்பாய் வந்ததற்கும் உதாரணம் காட்டினர். தன்மைப் பெயர் உயர்திணைக் குரியது என்பது தொல்காப்பியர் கொள்கை, விரவுப் பெயர் பற்றிக் கூறவந்த சூத்திரத்தில் (பெயரியல் 20) தன்மைப் பெயரைச் சேர்க்காததும், கிளவியாக்கத்தில்,

''தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவி
என்று எண்ணுவழி மருங்கின்'' (43)

எனத் தன்மைச் சொல்லை உயர்திணையில் சேர்த்துக் கூறுதலும் காணலாம். எனவே தொல்காப்பியரை நன்கு உணர்ந்த நிலையில் மறவாமல் உயர்திணைப் பெயர் உதாரணத்தில் 'ஒருவென்' என்னும் தன்மைப் பெயரைக்காட்டிய புலமையை வியவாமல் இருக்கமுடியாது ; (ஒருவென் — ஒருவனாகியயான்—வினையாலணையும் பெயர்).

குறையால் நிறைவு

தொகைமரபில் ஆசிரியர் தரும் குறைகளால் உரையாசிரியர்கள் பல கருத்துகளை நிறைவு செய்துள்ளனர் என்பதைக் காணலாம். நூல் முழுமையும் இப்படிக்குறையும் நிறையும் உண்டு.

'ஞ ந ம ய வ' (2) ''உயிரீறாகிய உயர்திணைப் பெயரும்'' (ii) என்னும் சூத்திரங்களில் 'எல்லா வழியும்' என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். அல்வழி வேற்றுமை வழி எனச் சொற்புணர்ச்சி வழியிரண்டே, அதனால் இருவழியும் என்னலாம். இருவரைப் பார்த்து 'எல்லாரும் வருக' என்னும் வழக்கு இல்லை; இருவரும் வருக' என்பதே வழக்கு. இருவர்க்கு மேல் உள்ளவர்களையே எல்லாரும் வருக என்பர். அவ்வாறே அஃறிணைப் பொருளையும் ஆள்வர். ஆசிரியர் அல்வழி வேற்றுமைவழி ஆகிய இரண்டையும் இருவழியும் என்னாமல் 'எல்லாவழியும்' என்றார். இது பெருந்தவறில்லை யாயினும் வழக்கில் அரிதாகலான் இவ்வரிய வழக்கை யாசிரியர் வேண்டுமென்றே அமைத்தார். அதனால்

சிறப்புக் கருத்துகள் சில நமக்குக் கிடைக்கவைத்தார் (உரைகளைப் பார்க்க).

முறை மாற்றுதலாகிய குறையைச் செய்தும் கருத்துப்பெற வைத்துள்ளார். "ஙனவென் புள்ளிமுன்" ( ) என்னும் சூத்திரத்தில் யாவும் ஞாவும் என ஞாவை முற்கூறாமல் யாவை முற்கூறினார். இது நெடுங்கணக்கு வைப்பு முறைக்கு மாறுபட்டது. இதனால் பெறப்பட்ட கருத்து யாவுக்கு ஞா மாற்றெழுத்தாக வரும் என்பது உரையிற்காணலாம்.

சொல்லவேண்டிய முறையிற் சொல்லாமல் வேறாகச் சொல்லும் குறையினால் ஒருகருத்துப் பெறவைத்ததை "அவற்றுள் இகர ஈற்றுப் பெயர் திரிபிடன் உடைத்தே" (12) என்னும் சூத்திரத்தில் காணலாம். இதன் முதற் சூத்திரம் 'உயிரீறாகிய உயர்திணைப் பெயரும் புள்ளியிறுதி உயர்திணைப் பெயரும் எல்லாவழியும் இயல்பாகவே வரும்' என்பது. இச் சூத்திரம் அவ்வியல்பில் திரிந்து இகர ஈற்றுப்பெயர் வரும் என்பது. அதனால் இச்சூத்திரத்தை "இகர ஈற்றுப்பெயர் திரிதலும் உண்டே" என உம்மை கொடுத்துக் கூறவேண்டும். அவ்வாறுகூறாமல் இடன் உடைத்து எனக் கூறியதனால் 'திணை' என்னும் ஐகார ஈறும் திரியும் என்ற கருத்தைப் பெறவைத்தார்.

தேவையில்லாதவற்றைத் தேவைப்படுத்துதலும் ஆசிரியர் வழக்கம். "ஔவென வரூஉம்" என்னும் சூத்திரத்தில் 'முற்ற'(10) என்பதும், 'மெல்லெழுத்து மிகுவழி' (15) என்பதில் 'ஒழியாது' 'மெய்பெற' என்பனவும், 'சுட்டுமுதலாகிய' (17) என்பதில் 'சொல்லிய மருங்கு' என்பதும், 'நெடியதன் முன்னர்' (18) என்பதில் 'அறிய' 'நெறியியல்' என்பனவும், 'ஆறன் உருபினும்' என்பதில் 'கூறிய' என்பதும், 'குறையென் கிளவி' (24) என்பதில் 'முன்' 'நிறைய' என்பனவும், 'பனையென்' (27) என்பதில் 'நினையுங்காலை' என்பதும், 'பலரறி சொல்முன்' (30) என்பதில் 'ஒன்றிய' என்பதும் தேவையில்லாதனவாயிருந்து தேவையான கருத்துகளைத் தந்தமையை அவ்வவற்றின் உரைகளிற் காண்க.

ஆ. சிவலிங்கனார்

Dr: V. RATHINASABAPATHY
The Dr. S. Radhakrishnan
Institute for Advanced
Study in Philosophy
University of Madras.

Foreword

It is my sincere duty to congratulate Dr. S V. Subramaniam, Director, International Institute of Tamil Studies and his Colleagues for bringing out Thokaimarapu, the fifth chapter of Ezhuththathikaram of Tolkappiyam. But this is the seventh volume in the series of Tolkappiyam — Uraivalam. I proudly confess that I have no special qualifications to write a foreword to this volume since I am a student of professor. A. Sivalinganar, the editor of this Tholkappiyam—Uraivalam series. The editor has displayed deep scholarship and an analytical study of the available material on Tokaimarapu. Scholars and students of Tamil grammar are bound to benefit by a study of this well brought out book.

Dr. Ilakkuvanar, a scholar of rare eminence, gives a statement about the language part of Tolkappiyam. He says that "in the later centuries, criticism of language seems to be favoured by scholars and people; but not criticism of literature. Because all literary works of later centuries are having affinity with religion."

"Now we are able to find parallelism in Tolkappiyam and in the works of western languages, concerning the studies of language and literature. Because of this parallelism of ideas and theories no body can come to the conclusion that Tolkappiyam has copied the works of western languages or vice-versa." To support this view Dr. Ilakkuvanar quotes the well known saying — Great men think alike. Strictly speaking, this saying will prove only partial truth. Individuality is the gem which proves itself through the work of the great man. The glory of the great man is established by his individuality. we must find out the individuality of Tolkappiyar. Otherwise, it will be proved in future that Tolkappiyam is nothing but a copy of some other works.

Scholars of the linguistic works and critics are of the opinion that the study of Tolkappiyam in the light of what we learn from the linguistic works and criticisms of literature of modern age will be benificial to our language and literature. Though this method is unanimously admitted by the scholars, I prefer the other way of understanding the theories. We must know first Tolkappiyar and his theories. Afterwards, we must study of linguisitc works and criticism of language in the eight of what we learn from Tolkappiyar. This is the basic error by which we are unable to construct the individuality of Tolkappiyam and to find out the central theme of several chapters like Thokai marapu. No commentator clearly explains the general meaning of the chapter Thokai marapu. There were many commentators who had made elaborate study of Tolkappiyam and their commentaries were strictly followed, by the later scholars without changing any single word or phrase. Now I had an opportunity to see the first as well as new approach in explaining the central theme of Thokai marapu by professor A. Sivalinganar.

Philosophy is different from religion. Without knowing the subject matter of philosophy, some thinkers disvalue this discipline which is recognised as the science of all sciences by the well-known scientists. philosophical background is necessary to understand the central theme of Tolkappiyam.

Tokai marapu is explained by the scholars as follows:

"It is a summary of the phonemes and morphemes which occur when the sentence is formed"

"It is a general summary of rules which govern the joining of letters in the formation of words and sentence"

It is also true Tokaimarapu is considered to be a superficial one. This is the reason for which commentators try to establish that this chapter cannot be considered as superficial one.

In Ezhuthathikaram, Tolkappiyar uses the word Marapu only in three different places. Thokaimarapu is one of the three important places. The changes of letters are identified by the three different terminologies - Punarchi, Thokai and Mayangal. Thokai is different from Punarchi. Thokai is natural and Punarchi is accidental. In between the two stages, we have the sense of Mayakkam. We must know the significance of the classification of the six chapters in Ezhuthathikaram.

My critical study of Tholkappiyam is entirely different from of others and I can establish the individuality of Tolkappiyar in my way of approach. But I appreciate the effort of the editor for explaining the central theme of Thokai marapu in a new way. I have already mentioned the importance of Tokaimarapu in my foreword of Mozhi marabu, the 3rd volume of this series.

The following points of the editor's critical statements will make scholars to fee proud of this magnificient work.

'தொகைமரபு-ஓர் அறிமுகம்' is the record of the scholarship of the editor. Here we see the new line of thinking in explaining the central theme of Thokai marabu.

Editor's explanations to the examples given by the commentators are very interesting as well as useful.

I am very much thankful to Dr. S. V. Subramaniam who has asked me to write a foreword to this volume of the Tolkappaiyam, Uraivalam series. This is my heart felt sense of gratitude to my revered teacher Professor A. Sivalinganar.

This volume is a monument of industry and learning and should prove very useful to the further research.

Madras-5 — V. RATHINASABAPATHY

20-5-82

சுருக்க விளக்கம்

அகத்—அகத்திணையியல்

அகம்—அகநானூறு

அவி—அவிநயம்

ஆ. மொ—ஆங்கில மொழிபெயர்ப்பு

இடை—இடையியல்

இல—இலக்குவனார்

இ—ள்—இதன் பொருள்

இளம்—இளம்பூரணர்

உ—ம்—உதாரணம்

உயிர், உயிர்ம—உயிர் மயங்கியல்

உயிரீற்—உயிரீற்றுப்புணரியல்

உரி—உரியியல்

உருபி—உருபியல்

எச்ச—எச்சவியல்

எ—டு.—எடுத்துக்காட்டு

எழு, எழுத்—எழுத்ததிகாரம்

எ—று.—என்றவாறு

கலி—கலித்தொகை.

சங்கர—சங்கர நமச்சிவாயர்

சிவ—சிவலிங்கனார்

சிவஞா—சிவஞான முனிவர்

சிலப்—சிலப்பதிகாரம் (சிலம்பு)

சுப்பிர—சுப்பிரமணிய சாஸ்திரியார்

சு. வே.—சுவடி வேறுபாடு

சொல்—சொல்லதிகாரம்

தொகை—தொகைமரபு

தொல்—தொல்காப்பியம்

தொல்—பொருள்—தொல்காப்பியப் பொருளதிகாரம்

தொன், தொ. வி—தொன்னூல் விளக்கம்

நச்—நச்சினார்க்கினியர்

நன்—நன்னூல்

நேமி—நேமிநாதம்

பக்—பக்கம்

பி. இ. நூ.—பிற்கால இலக்கண நூல்

பி. கு.—பிறகுறிப்புகள்

பிறப்—பிறப்பியல்

புணரி—புணரியல்

புள்ளி—புள்ளி மயங்கியல்

புறம்—புறநானூறு

பேரா—பேராசிரியர்

பொ—ள்.—பொருள்

மயிலை—மயிலை நாதர்

மரபு—மரபியல்

மலைபடு—மலைபடு கடாம்

முத்து—முத்து வீரியம்

வீர—வீரசோழியம்

வெள்ளை—வெள்ளைவாரணனார்.

வேங்கட.—வேங்கடராசுலு ரெட்டியார்

வேற்—வேற்றுமையியல்

வேற்.ம—வேற்றுமை மயங்கியல்

SYSTEM OF TRANSLITERATION

உயிரெழுத்துக்கள்-Vowels

	இலக்குவனார்	கமீல் சுவலபில்
அ	— a	a
ஆ	— ā	ā
இ	— i	i
ஈ	— ī	ī
உ	— u	u
ஊ	— ū	ū
எ	— e	e
ஏ	— ē	ē
ஐ	— ai	ai
ஒ	— o	o
ஓ	— ō	ō
ஔ	— au	au

மெய்யெழுத்துக்கள்-Consonants

வல்லினம்.	க்	— k	k
	ச்	— s	c
	ட்	— t	ṭ
	த்	— th	t
	ப்	— p	p
	ற்	— ṛ	ṛ
மெல்லினம்.	ங்	— ṅ	ṅ
	ஞ்	— ñ	ñ
	ண்	— ṇ	ṇ
	ந்	— n	n
	ம்	— m	m
	ன்	— n̲	n̲
இடையினம்.	ய்	— y	y
	ர்	— r	r
	ல்	— l	l
	வ்	— v	v
	ழ்	— l	ḻ
	ள்	— ḷ	ḷ

தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

உரைவளம்

வேண்டுகோள்

151-ஆம் சூத்திரத்தின் தொடர்பாகப் பக்கம் 28-ல் இறுதியில் உள்ள ''முன்னிலைப் பெயரை நீக்கியதற்குச்...... பொருந்தாதென விடுக்க'' என்னும் பகுதியையும்,

பக்கம் 29-ல் முதலில் உள்ள ''இனி உரையாளர் இருவரும்......இவை மிகாமல் வந்ததற்கு ஆம்'' என்னும் பகுதியையும் பக்கம் 33-ல் 152-ஆம் சூத்திர உரைகளின் இறுதியில் சேர்த்துப் படிக்க வேண்டுகிறேன்.

—ஆ. சி.

எழுத்தும் சாரியையும் மிகுப் புணருமாறு இது [illegible] உணர்த்தி அவைதாம் விரிந்த [5]சூத்திரப் [6]பொருளவன்றியும் தொக்குப் புணருமாறு கூறுதலின், இவ்வோத்துப் புணரியலோடு இயைபுடைத்தாயிற்று.

சுவடி வேறுபாடு :

1. விரித்து
2. தொக்கு
3. செயற்கை
4. ஒரோர்
5. சூத்திரம்
6. பொருளவன்றித்

சுப்பிரமணிய சாஸ்திரியரர்

பின்வரும் உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் இவற்றுள் விரிவாய்க் கூற வேண்டுவனவற்றுள் சிலவற்றைத் தொகுத்து ஈண்டு ஆசிரியர் கூறுதலானும், வருமொழி முதலின் மாறுதலை ஆங்குக் கூறாது ஈண்டே தொகுத்துக் கூறுதலானும், பகுதிக்கும் வேற்றுமை யுருபிற்கும் இடையில் தோன்றுஞ் சாரியைகளின் மாறுதல்களைத் தொகுத்துக் கூறுதலானும் இவ் வியலுக்குத் தொகைமரபு எனப் பெயரிட்டனர் என்க. தொகையியல் எனப் பெயரிடாது தொகைமரபு என ஏன் பெயரிட்டனர் எனின், இவ்வியலுள் உள்ள சூத்திரங்களிற் பலவற்றிலும் முன்னோரது கொள்கையைத் தொகுத்துக் கூறினமையின் என்க. அஃது என்ப, என்மனார் புலவர், மொழிப என்ற சொற்களான் விளங்கும்.

உருபியல் முதலியவற்றிற் கூறப்படாதனவற்றை ஈண்டு ஆசிரியர் கூறினமையின், சொல்லதிகாரத்துள் முன் எட்டு இயலிலும் கூறப்படாதனவற்றை எச்சவியலுட் கூறி அதனை இறுதியியலாகக் கூறியவாறு இதனையும் இறுதியியலாக ஏன் கூறிற்றிலர் எனின், முன்னோரது கொள்கையை முன்னர் உணர்த்துவதே அவரிடமுள்ள பெருமதிப்பைக் காட்டுமாகலின் என்க. அவ்வாறாயின் இதனைப் புணரியலின் முன்னர் ஏன் கூறவில்லையெனின், ஆங்கே பெரும்பாலும் கருவிச் சூத்திரங்கள் கூறப்பட்டமையானும், ஈண்டுச் செய்கைச் சூத்திரங்கள் கூறப் படுகின்றமையானும், செய்கைச் சூத்திரங்களுக்கு முன்னர்க் கருவிச் சூத்திரங்களைக் கூறுதல் இன்றியமையாததானும் என்க.

பின்வரும் மூன்று சூத்திரங்களும் உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல் இரண்டற்கும் பொதுவாகும்.

வேங்கடராகுலு ரெட்டியார்

ஆசிரியர், முன்னர், உயிரீற்று மொழிகளோடு மொழிகள் புணரும் இயல்பினை ஓர் இயலிலும், மெய்யீற்று மொழிகளோடு மொழிகள் புணரும் இயல்பினை வேறோர் இயலிலும், குற்றிய லுகர வீற்று மொழிகளோடு மொழிகள் புணரும் இயல்பினைப் பிறிதோர் இயலிலும் கூறுவார். அங்ஙனம் கூறுமிடத்தும் முறைப்படி ஒரோர் ஈறுகளை நிறுத்தி, அவற்றிற்கு அல்வழிக்கும் வேற்றுமைக்குந் தனித்தனி விதி கூறுவார். ஆதலின், அவர் கொண்ட முறைப்படி, ஒரே விதிபெறுகின்ற இருபத்து நான்கு

ஈறுகளுக்கும் அல்வழிக்கு இருபத்து நான்கும், வேற்றுமைக்கு இருபத்து நான்குமாக நாற்பத்தெட்டுச் சூத்திரத்தில் விதி கூறல் வேண்டும். அவ்வாறு கூறின் சூத்திரம் பல்குமாகலின் ஒரே விதி பெறுகின்ற பல ஈறுகளைத் தொகுத்து அவற்றிற்கு இவ்வியலில் விதி கூறுகின்றார். இவ்வியலிற் கூறும் விதிகள் எல்லாம், இரண்டு ஈறுகள் முதலாக இருபத்து நான்கு ஈறுகள் வரையும் ஒரே விதி பெறும் பல எழுத்துகளுக்கேயாகும். இவ்வியலின் இரண்டாஞ் சூத்திரம் இருபத்து நான்கு ஈறுகளுக்கும் விதி கூறுவது; நான்காஞ் சூத்திரம் இரண்டு ஈறுகட்கு விதி கூறுவது. இவ்வாறே ஒவ்வொரு சூத்திரமும் அறிக. இதனானே இவ்வியல் தொகைமரபு எனப் பெயர் பெற்றது. தொகை—தொகுத்தது; ஒருங்கு சேர்த்தது; ஸம்க்ஷேபம். மேலியலில், மொழிகளின் புணர்ச்சி வகையையும், புணருமிடத்து வரும் சாரியைகளையும், அவற்றின் திரிபினையும் கூறி, இவ்வியலில் மொழிகள் புணரும் முறைமை கூறுதலின், மேலையியலோடு இஃது இயைபுடையதாயிற்று.

வெள்ளை வாரணனார்

மேல் மூவகை மொழியும் நால்வகையாற் புணர்வுழி மூன்று திரிபும் ஓர் இயல்பும் எய்தி, வேற்றுமை அல்வழியென இருபகுதியவாகி எழுத்தும் சாரியையும் மிக்குப் புணருமாறு இதுவென்று உணர்த்தினார். அப்புணர்ச்சிக்கட்படும் இலக்கணங்களாய்த் தொன்று தொட்டு வரும் இலக்கண மரபுகளை இவ்வியலின் கண் தொகுத்துணர்த்துதலின், இது தொகைமரபு என்னும் பெயர்த்தாயிற்று. உயிரீறும் புள்ளியீறும் மேலை அகத்தோத்தினுள் முடிக்கும் வழி ஈறுகள் தோறும் விரிந்து முடிவனவற்றை ஈண்டு ஒரோ ஓர் சூத்திரங்களால் தொகுத்து முடிவு கூறுவர் ஆசிரியர்

இலக்குவனார்

A general summary of rules which govern the joining of letters in the formation of words and sentences.

கமில் சுவலபில்

Collection of (morphophonemic) rules.

சிவலிங்கனார்

தொகுத்து முடித்தலும் மரபு பற்றிக் கூறலும் ஆகிய இருவகைகள் இவ்வியலிற் கூறப்பட்டிருத்தலின் தொகை மரபு என்னும் பெயர்த்தாயிற்று.

இவ்வியலில் உள்ள மொத்த நூற்பாக்கள் 30. தொகுத்து முடித்த நூற்பாக்கள் பொதுவும் சிறப்புமாக 21. அவை : 2, 3, 5—21, 28, 29 என்னும் எண்கள் கொண்டன.

மரபு மட்டும் பற்றிய நூற்பாக்கள் 2. அவை : 4, 30 என்னும் எண்கள் கொண்டன.

இரண்டும் பற்றிய நூற்பாக்கள் 7. அவை: 1, 22—27 என்னும் எண்கள் கொண்டன.

1. உயிர்ஈறு மெய்ஈறுகளின் பொதுப்புணர்ச்சி
மெல்லினம் தோன்றும் இடம்

144. *கசதப முதலிய மொழிமேல் தோன்றும்
மெல்லெழுத் தியற்கை சொல்லிய முறையான்
ஙஞநம வென்னும் ஒற்றா கும்மே
அன்ன மரபின் மொழிவயி னான. (1)

ஆங்கில மொழிபெயர்ப்பு

இலக்குவனார்

The soft consonants, which precede k, c, th and p when standing as initials of the coming words, are ṅ, ñ, n and m respectively (as given in the alphabet).

கமீல்சுவலபெல்

Collection of (morphophonemic) rules
The nasal sounds which appear
preceding k, c, t, (and) p are,
respectively, ṅ, ñ, n (and) m;
they are realized in utterances of such type.

---

* இந்நூற்பா மொழிவாம் என்னும் உத்திக்கு இனம். (தொல். பொருள். 665. பேராசிரியர்).

நூற்பாவின் முதலில் உள்ள எண் எழுத்ததிகாரத் தொடர் எண்; இறுதியில் உள்ள எண் தொகை மரபுத் தொடர் எண்.

இளம்.

இத்தலைச் சூத்திரம் என் நுதலிற்றோ வெனின், அல்வழியும் வேற்றுமையுமாகிய [4]இருவழிக்கண்ணும், உயிர்மயங்கியலையும் புள்ளி மயங்கியலையும் நோக்கியதோர் [5]வருமொழிக் கருவி கூறுதல் நுதலிற்று.

(இதன் பொருள்): க ச த ப முதலிய மொழிமேல் தோன்றும் மெல் எழுத்து இயற்கை—உயிரீற்றினும் புள்ளியீற்றினும் இருவழியும் க ச த பக்களை முதலாகவுடைய மொழிகளின்மேல் தோன்றும் மெல்லெழுத்தினது இயல்பு கூறின், சொல்லிய முறையான் ங ஞ ந ம என்னும் ஒற்று ஆகும்—மெல்லெழுத்து மேற்சொல்லும் முறைமையான் க ச த பக்களுக்கு நிரல்நிறை வகையானே ங ஞ ந ம என்னும் ஒற்றாகும், அன்ன மரபின் மொழிவயின் ஆன—அத்தன்மைத்தாகிய முறைமையினையுடைய மொழிகளிடத்து.

எடுத்துக்காட்டு: விளங்கோடு, செதில், தோல், பூ என வரும்.

'தோன்றும்' என்றதனால், தோன்றி நின்றனவும்* [6]அவ்வாறே திரிந்து மெல்லெழுத்தாம் என்பது. மரங்குறிது, சிறிது, தீது, பெரிது எனவரும். அன்ன மரபின் [7]மொழியன்மையின், விளக்குறுமை என்புழி மெல்லெழுத்து மிகாதாயிற்று.

நச்.

இத்தலைச் சூத்திரம் உயிர்மயங்கியலையும் புள்ளி மயங்கியலையும் நோக்கியதோர் வருமொழிக் கருவி கூறுகின்றது.

சு. வே. :

4. இருவகைக்கண்ணும்
5. வழிமொழி
6. அவ்வாறு
7. மொழியின்மையின்

* தோன்றி நின்றன என்பதற்கு இயல்பாகவே தோன்றி நின்றன எனக் கொள்க. மரம் என்பதில் மகரஒற்று இயல்பாகவே உள்ளது.

(இ—ள்.) உயிரீறும் புள்ளியீறும் முன்னர் நிற்பக் கசதபக் களை முதலாகவுடைய மொழிகள் வந்தால் அவற்றிற்கு மேலே தோன்றி நிற்கும் இயல்பாகிய மெல்லெழுத்துக்கள், நெடுங் கணக்கிற் பொருந்தக் கூறிய முறையானே க ச த பக்களுக்கு ங ஞ ந ம என்னும் ஒற்றுக்கள் நிரல்நிறை வகையானாம், அத்தன்மைத்தாகிய முறைமையினையுடைய மொழிகளிடத்து என்றவாறு.

எ—டு : விளங்கோடு, செதில், தோல், பூ என வரும். இது "மரப் பெயர்க்கிளவி" (எழு. 217) என்பதனான் மெல்லெழுத்துப் பெற்றது. மரங்குறிது, சிறிது, தீது, பெரிது என அல்வழிக்கண் திரியுமாறு 'அல்வழியெல்லாம்' (எழு. 314) என்பதனாற் பெறுது மேனும் ஈண்டுத் 'தோன்றும்' என்றதனால் நிலைமொழிக்கண் தோன்றி நின்ற ஒற்றுத் திரிதல் கொள்க. அன்ன மரபின் மொழியன்மையின் *விளக்குறுமை, விளக்குறைத்தான் என்புழி மெல்லெழுத்துப் பெறாவாயின. இவை ஏழாவதும் இரண்டா வதும் திரிதலின் இங்ஙனம் எழுத்துப் பெறுவனவுந் திரிவன்வும் வருமொழியே பற்றி வரும் என்று உணர்க.

சுப்பிர.

பொருள்: க், ச், த், ப் இவற்றை முதல் எழுத்தாகவுடைய வருமொழியின் முன்னர் வரும் மெல்லெழுத்து முறையே ங், ஞ், ந், ம் இவையே யாகும் அவ்வாறுள்ள மரபைக் கொண்ட மொழிகளின் கண்.

மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே (எழு. 218)

வெரிந்என் இறுதி முழுதுங் கெடுவழி
வருமிடன் உடைத்தே மெல்லெழுத்து இயற்கை. (எழு 302)

அல்வழி யெல்லாம் மெல்லெழுத் தாகும் (எழு 315)

முதலிய சூத்திரங்களில் மெல்லெழுத்து எனப் பொதுப்படக் கூறியதனான், விள+கோடு, விள+செதிள், விள+தோல், விள+பூ; வெரிந்+குறை, வெரிந்+செய்கை, வெரிந்+தலை வெரிந்+புறம்; மரம்+குறிது, மரம்+சிறிது, மரம்+தீது, மரம்+பெரிது என்றவிடத்து ங் ஞ் ந் ம் இவை முறையே வரும் என்பது இச்சூத்திரத்தான் உணர்த்தப்பட்டது.

* விளக்குறுமை—விளவின்கண் குறுமையென 7ஆம் வேற்றுமை. விளவினது குறுமையென 6ஆம் வேற்றுமையும் ஆம்.

'அன்னமரபின் மொழிவயினான' என்றது எற்றுக்கு எனின், விளக்குறுமை போன்ற இடங்களில் மெல்லெழுத்து வாராமையைக் குறித்தற்கு என்க.

'தோன்றும்' என்றதனால் தோன்றி நின்றனவும் அவ்வாறே திரிந்து மெல்லெழுத்தாம் என்பது; மரங் குறிது... எனவரும்' என இளம்பூரணர் கூறினர். தோன்றும் என்ற பெயரெஞ்சு கிளவி ஆசிரியர் தொல்காப்பியனாரது கொள்கையில் நிகழ்காலம் எதிர் காலம் இரண்டினும் வருமாகையான் அவ்வாறு கூற வேண்டுவ தின்று.

வெள்ளை.

பின்னர் உயிரீற்றினும் புள்ளியீற்றினும் வல்லெழுத்து வருவழி மெல்லெழுத்து மிகும் என விதிக்கும் இடங்களில் எல்லாம் இன்ன வல்லெழுத்து முன்னர் இம்மெல்லெழுத்து மிகும் என்னும் இயல்பு விளக்கப் பெறாமையின், க, ச, த, ப, முன் முறையே அவற்றின் கிளையொற்றாகிய ங, ஞ, ந, ம மிகும் என ஈண்டுக் கருவி செய்து கொண்டார்.

பிற குறிப்புகள்

'மொழிவயின் ஆன' என்பதில் உள்ள 'ஆன' என்பது அசைநிலை யென்பர் தெய்வச்சிலையார். இதை அவர், கடிநிலை யிலவே பொருள் வயி னான (தொல். சொல். வேற். மயங். 10) என்னும் நூற்பாவில் 'ஆன' அசை நிலையாயிற்று என்பதால் அறியலாம்.

வருமொழி இயல்பாதல்

145. ஞநமய வவெனும் முதலாகு மொழியும்
உயிர்முத லாகிய மொழியும் உளப்பட
அன்றி யனைத்தும் எல்லா வழியும்
நின்ற சொல்முன் இயல்பா கும்மே. (2)

ஆ. மொ.

இல.

The words which have ñ, n̲, m, y, and v, as the first letters and
The words which have vowels as the first letters
All in all relations, case or non case
Stand unchanged before the coming words of all endings.

க. சு.

When the initial sound of the succeeding words is ñ, n, m, y, v, or When the initial sound is a vowel, no change takes place,
Whatever be the final sound of standing word, and whatever be its relationship.

பிற இலக்கணநூல்கள்:

நன்னூல்: 158.

எண்மூ வெழுத்தீற்று எவ்வகை மொழிக்கும்
முன்வரு ஞநமய வக்கள் இயல்பும்.

இலக்கண விளக்கம்: 69.

எண்மூ வெழுத்தீற்று எவ்வகை மொழிக்கும்
முன்வரு ஞநமய வக்கள் இயல்பும்.

இளம்.

இது, இருபத்து நான்கு ஈற்றின் முன்னும் வன்கணம் ஒழிந்த கணங்கட்கு இருவழியும் வருமொழி முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ—ள்.) ஞநமயவ எனும் முதல் ஆகு மொழியும்—ஞநமயவ என்று சொல்லப்படும் முதல் எழுத்து உளவாகும் மொழியும், உயிர்முதல் ஆகிய மொழியும் உளப்பட—உயிர் முதலாகிய மொழியும் ஆக, அன்றி அனைத்தும் எல்லா வழியும்—அவ் வனைத்து மொழியும் அல்வழியும் வேற்றுமையுமாகிய எல்லா விடத்தும், நின்ற சொல்முன் இயல்பு ஆகும்—இருபத்து நான்கு [1]ஈற்றுப் பெயராகிய [2]நிலைமொழி முன்னர் இயல்பாகி முடியும்.

ஈண்டு உளப்பட என்பது ஆக என்னும் பொருண்மைத்து.

எ—டு: விள, தாழ் என [3]நிறுத்தி, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது, அடைந்தது, ஆடிற்று, இடிந்தது, ஈரிற்று, உடைந்தது, [4]ஊறிற்று, எழுந்தது, ஏறிற்று, ஐது,

சு. வே:

1. ஈற்றினும்
2. நிலைமொழியின்
3. நிறுத்து
4. ஊரிற்று

ஓடிந்தது, ஓடிற்று, ஔவி யத்தது, நுந்தையது எனவும்; ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை,[5]அடைவு, ஆட்டம், இடிபு, ஈட்டம், உடைபு, ஊற்றம், எழு, ஏணி, ஐயம், ஒடுக்கம், ஓக்கம், ஔவியம், நுந்தை எனவும் ஒட்டிக் கொள்க.*

'எல்லாம்' என்றதனான் ஒற்றிரட்டலும், உடம்படு மெய் கோடலும், [6]உயிர்ஏறி முடிதலும் எனவரும் இக்கருவித் திரிபு (மூன்று திரிபும் அன்மையின்) திரிபு எனப்படா என்பது கொள்க. இஃது இருபத்து நான்கு ஈற்றிற்கும், அல்வழியினும், வேற்றுமை யினும், அகத்தோத்தினுள் நாற்பத்தெட்டுச் சூத்திரத்தான் முடிவதனை, ஈண்டு ஒரு சூத்திரத்தான் தொகுத்து முடித்த தாயிற்று. மேலும் [7]இவ்வாறே தொகுத்து முடிக்கின்றவாறு அறிக.

நச்.

இது முற்கூறிய நால்வகைப் புணர்ச்சியுள் இயல்பு புணருங் கால் இக்கூறிய பதினேழ் எழுத்தும் வருமொழியாய் வந்த இடத்து, இருபத்து நான்கு ஈற்றின் முன்னரும் வேற்றுமையிலும் அல்வழியிலும் வருமொழி யியல்பாய் முடிக என்கின்றது.

(இ—ள்.) ஞநமயவ என்று சொல்லப்படும் எழுத்துக்கள் முதலாய் நிற்கும் சொற்களும், உயிரெழுத்து முதலாய் நின்ற சொற்களும் தம்மிற்கூட, அப்பதினேழாகிய வருமொழிகளும், வேற்றுமையும் அல்வழியுமாகிய எல்லா இடத்தும், இருபத்து நான்கு ஈற்றவாய் நின்ற பெயர்ச் சொல் முன்னர்த் திரிபின்றி இயல்பு புணர்ச்சியாய் நிற்கும்; எ—று.

உயிரீற்றின்கண் எகர ஒகரம் ஒழிந்தன கொள்க.

எ—டு: விள பலா கிளி குரீ கடு பூ சே கை சோ கௌ என நிறுத்தி, ஞான்றது நீண்டது மாண்டது யாது வலிது நுந்தையது என மெய்ம் முதல் மொழி வருவித்து, பொருள் தருதற்கு

5. அடைப்பு
6. உயிர்ஏற
7. இவ்வாறே முடிகின்றவாறு.

*குற்றியலுகர ஈற்றுமுன் ஞநமவ முதலியன இயல்பாக வந்தமைக்கு எடுத்துக்காட்டு தரப்படவில்லை. நச். உரையில் தரப்பட்டுள்ளது.

ஏற்பன அறிந்து கூட்டுக. சோ என்பது அரண். அதற்குச் சோ ஞொள்கிற்று எனக் கொள்க. கௌ என்பதற்குக் கௌ நெகிழ்ந்தது நீடிற்று என்க. இனி இவற்றின் முன்னர் உயிர் முதல் மொழி வருங்கால் அழகிது ஆயிற்று இல்லை ஈண்டிற்று உண்டு ஊறிற்று எழுந்தது ஏய்ந்தது ஐது ஒன்று ஓங்கிற்று ஔவியத்தது என வரும். இவற்றுட் சோவுக்கு இடிந்தது ஈண்டையது உள்ளது ஊறிற்று என்பனவற்றோடு முற்கூறிய வற்றையும் ஒட்டுக. இனி வேற்றுமைக்கண் விள முதலிய வற்றை நிறுத்தி ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வன்மை, அழகு, ஆக்கம், இளமை, ஈட்டம், உயர்வு, ஊற்றம், எழுச்சி, ஏற்றம், ஐயம், ஒழிவு, ஓக்கம், ஔவியம் என ஒட்டுக. ஏலாதனவற்றிற்கு முற்கூறியவாறு போல ஏற்பன கொணர்ந்து ஒட்டுக.

இனிப் புள்ளியீற்று ணகாரமும் னகாரமும் மேற் கூறுப. ஏனைய ஈண்டுக் கூறுதும்.

எ—டு: உரிஞ், வெரிந் என நிறுத்தி, நெகிழ்ந்தது, நீடிற்று, அழகிது, ஆயிற்று எனவும்; நெகிழ்ச்சி, நீட்டிப்பு, அடைவு, ஆக்கம் எனவும் வருவித்து எல்லாவற்றோடும் ஒட்டுக. மரம், வேய், வேர், யாழ் என நிறுத்தி ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது, நுந்தையது, அழகிது, ஆயிற்று எனவும்; ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வன்மை, அடைவு, ஆக்கம் எனவும் வருவித்து எல்லாவற்றோடும் ஒட்டுக. இவற்றுள் மகர ஈறு வேற்றுமைக்கட்செடுதல் 'துவர' (எழு. 310) என்றதனாற் கொள்க. அல்வழிக்கட் கெடுதல் 'அல்வழி யெல்லாம்' (எழு. 314) என்றதனாற் சொள்க நிலை மொழித் திரிபு ஈண்டுக் கொள்ளாமை உணர்க. யகர ஈறு யகரத்தின் முன்னர் இரண்டி டத்துங் கெடுதல் ஈண்டு 'எல்லாம்' என்றதனாற் கொள்க வேல், தெவ், கோள் என நிறுத்தி ஏற்பன கொணர்ந்து இருவழியும் ஒட்டுக. ணகார லகார ளகார னகாரங்களின் முன்னர் நகரம் வருமொழியாக வந்துழி அந்நகரந் திரிதலின் அத்திரிந்த உதாரணங்கள் ஈண்டுக் கொள்ளற்க. இவற்றுள் திரிந்து வருவன வுள; *அவை எடுத்தோத்தானும் ‡இலேசானும் ஏனை ஒத்துக்

* எடுத்தோத்து—வெளிப்படையில் கூறப்பட்ட விதி.

‡ இலேசு—எளிது→ எளிசு→ இலேசு = பொருளற்றது; அது எழுத்தாகவும் சொல் வடிவாகவும் வரும்.

களுள் முடிக்கின்ற வற்றான் உணர்க. இனி [1]எல்லாம் என்றதனான் உயிர்க்கணமாயின் ஒற்றிரட்டியும் உடம்படுமெய் பெற்றும் உயிர் ஏறியும் முடியும் கருவித் திரிபுகள் திரிபெனப் படா இவ்வியல்பின்கண் என்று உணர்க. வரகு ஞான்றது, வரகு ஞாற்சி எனக் குற்றுகரத்தின் கண்ணும் இவ்வாறே கொள்க. இருபத்து நான்கு ஈற்றிற்கும் வேற்றுமைக்கும் அல்வழிக்கும் அகத்தோத்தினுள் நாற்பத்தெட்டுச் சூத்திரங்களான் முடிவன வற்றை ஒரு சூத்திரத்தாற் றொகுத்து முடித்தார். மேலும் இவ்வாறே கூறுப. இவ்வியல்பு வருமொழி நோக்கிக் கூறிய தென்று உணர்க. இவ்வியல்பு புணர்ச்சி, மெய்க்கண் நிகழுமாறு உயிர்க்கண் நிகழாமையின் மெய் முற் கூறினார்.

சுப்பிர.

இது பொதுச் சூத்திரம். இதற்குப் புறனடைகள் பல; அவை ஆங்காங்குக் கூறப்படும்......

உளப்பட என்றதற்கு 'ஆக' என இளம்பூரணரும், தம்மிற் கூட' என நச்சினார்க்கினியரும் பொருள் கொண்டனர். 'நின்ற சொல்' என்றதற்கு 'நிலைமொழி' எனப் பொருள் இருப்பினும் 'நிலைமொழியாகிய பெயர்' எனப் பொருள் கொண்டனர் உரை காரர்கள். வினையை நீக்குதற்குக் காரணம் தெரியவில்லை. சூத்திரத்தில் ஞ ந ம ய வ உயிர் இவற்றை முதலாகக் கொண்ட எல்லாமொழியும் நின்ற சொல்முன் இயல்பாகும் என்று ஆசிரியர் கூறியிருக்க, உரையாசிரியர்கள் உயிரின்பின், குற்றியலுகரத் துக்கும் தாம் உதாரணம் கொடுப்பதாகக் கருதி நுந்தையது நுந்தை என்று கொடுத்துள்ளனர். குற்றியலுகரம் உயிரெழுத்திற் சேர்ந்ததல்ல என்பது ஆசிரியர் துணிபு; ஆகையால் இது பொருந் தாது. அன்றியும் வருமொழியாகிய இச் சொற்களில் நகரமே யன்றி, உகரம் முதலில்லை என்பது கருதத் தக்கது.

இச்சூத்திரவுரையில் சூத்திரத்துள்ள எல்லாம் என்றதனால் யகர ஈறு யகரத்தின் முன்னர் இரண்டிடத்துங் கெடுதலையும், உயிர்க்கணமாயின் ஒற்றிரட்டியும் உடம்படுமெய் பெற்றும் உயிரேறியும் முடியும் கருவித்திரிபுகள் திரிபெனப்படா என்பதை யும் கொண்டனர் நச்சினார்க்கினியர். பின்னர் உள்ளனவற்றை மாத்திரம் கொண்டனர் இளம்பூரணர். ஒற்றிரட்டலையும் உடம் படுமெய் கோடலையும் உணர்த்துஞ் சூத்திரங்களை இதற்குப் புறனடையாகக் கொண்டு அவற்றைத் திரிபு எனக் கொள்ளின் குற்றம் யாது?

சு. வே: 1 எல்லா வழியும்

வெள்ளை.

எகர ஒகரம் பெயர்க்கீ றாகா (எழு 272) என மேற்கூறுவா ராதலின், உயிரீற்றின்கண் எகர ஒகரம் ஒழிந்தன கொள்க. 'எல்லாம் என்றதனான்...திரிபெனப் படா'' என்பர் இளம் பூரணர். எனவே இவை முற்கூறிய மெய் பிறிதாதல், மிகுதல், குன்றல் என்ற மூன்று திரிபினுள்ளும் அடங்கா என்பது அவர் கருத்தாதல் புலனாம்.

சிவ.

நிலை வருமொழிகள் தம்மிற் புணருங்கால் வரும் திரிபுகள் கருவித்திரிபு என்றும் செய்கைத் திரிபு என்றும் இரண்டுவகைப் படும். அவைபற்றிக் கூறும் சூத்திரங்களும் கருவிச் சூத்திரம், செய்கைச் சூத்திரம் எனப்படும். செய்கைச் சூத்திரம் என்பது நிலைமொழியீறு வருமொழிமுதலுடன் புணரும்போது அடையும் இயல்பு அல்லது திரிபு பற்றிக் கூறுவது. மற்றையன எல்லாம் கருவிச் சூத்திரம் ஆகும். உயிர் ஏறி முடிதல் வருமொழி முதல் பற்றியது ஆதலினாலும் (ஆல்+இலை—ஆலிலை) உடம்படுமெய் பெறுதல் (மணி+அடித்தான்—மணியடித்தான்) நிலைமொழியீறு பற்றியின்றி வருமொழி முதல் பற்றியும் இன்றி இரண்டற்கும் பொதுவில் வருவது ஆதலினாலும் 'ஒற்றிரட்டுதல் (கல்+எறிந்தான்—கல்லெறிந் தான்) நிலைமொழியீற்றின் செயலாயினும் வேறு எழுத்துத் தோன்றல் இன்மையானும் இம் மூன்றையும் திரிபாயினும் திரிபு எனக் கொள்வதில்லை. அதனால் உரைகாரர்கள் அவற்றைத் திரிபெனப்படா என்றனர். மூன்று திரிபாவன தோன்றல், திரிதல், கெடுதல் என்பனவாம்.

வருமொழியுறழ்ச்சி

146. அவற்றுள்
மெல்லெழுத் தியற்கை யுறழினும் வரையார்
சொல்லிய தொடர்மொழி யிறுதி யான (3)

ஆ. மொ.
இல.

Among these
The nature of the soft consonants may stand affected at the end of words of more than two letters.

க சு :

Among those
None prevents the optional insertion of a nasal after the final member of a toṭar moḻi.

பி. இ. நா.

இல. வி. 69.

மெல்லெழுத் தியற்கை யுறழினும் வரையார்
நன்மதி நாட்டத்து என்மனார் புலவர்.

இளம்.

இது, மேற்கூறிய முடிபிற் சிலவற்றிற்கு, அம்முடிபு விலக்கிப் பிறிதுவிதி எய்துவித்தல் நுதலிற்று.

(இ-ள்) அவற்றுள் — மேற் சொல்லப்பட்ட மூன்றுகணத் தினும், மெல்லெழுத்து இயற்கை உறழினும் வரையார் — மெல் லெழுத்தினது இயல்பு இயல்பாதலேயன்றி உறழ்ந்து[1] முடியினும் நீக்கார், சொல்லிய தொடர்மொழி இறுதியான — சொல்லப் பட்ட தொடர்மொழி[2] யீற்றுக்கண்.

எ-டு : கதிர் ஞெரி, கதிர்ஞ்ஞெரி, நுனி, முரி என வரும்.

வருமொழி முதற் கூறியவதனான், ஓரெழுத்தொரு மொழி யுள்ளும், ஈரெழுத்தொரு மொழியுள்ளும் சிலவற்றிற்கு உறழ்ச்சி முடிபு கொள்க.

எ-டு : பூஞெரி, பூஞ்ஞெரி, நுனி, முரிஎனவும் காய்ஞெரி, காய்ஞ்ஞெரி, நுனி, முரி எனவும் வரும்.

சொல்லிய என்றதனான் ஓரெழுத்தொருமொழியுள்ளும் ஈரெழுத்தொரு மொழியுள்ளும் சிலவற்றிற்கு மிக்கு முடிதல் கொள்க.

கைஞ்ஞெரித்தார், நீட்டினார், [3]முறித்தார் எனவும், *மெய்ஞ் ஞானம், மெய்ந்நூல், மெய்ம்மறந்தார் எனவும் வரும்.

சு. வே : 1. முடிதலும் 2. யீற்றின்கண் 3. மடித்தார், மறிந்தார்
* இதுமுதலான எடுத்துக்காட்டுச் சில ஏடுகளில் இல்லை — திரு. அடிகளாசிரியர் பதிப்பு.

நச்.

இது முற்கூறிய முடிபிற் சிலவற்றிற்கு அம்முடிபு விலக்கிப் பிறிதுவிதி எய்துவித்தது.

(இ-ள்) முற்கூறிய மூன்று கணத்தினுள், மெல்லெழுத்து இயல்பு இயல்பாதலேயன்றி உறழ்ந்து முடியினும் நீக்கார்; சொல்லப்பட்ட தொடர்மொழியீற்றுக்கண்; எ-று.

உம்மை எதிர்மறை; எனவே, உறழாமை வலியுடைத்தா யிற்று கதிர்ஞெரி, கதிர்ஞ்ஞெரி, நுனி, முரி எனவும், இதழ்ஞெரி, இதழ்ஞ்ஞெரி, நுனி, முரி எனவும் வரும்.

வருமொழி முற்கூறியவதனால் ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழிகளுள்ளும் சில உறழ்ச்சி பெற்று முடிதல் கொள்க. பூஞெரி, பூஞ்ஞெரி, நுனி, முரி; காய்ஞெரி, காய்ஞ்ஞெரி, நுனி, முரி என வரும்.

சொல்லிய என்றதனான் ஓரெழுத்தொரு மொழிகளுள் சில மிக்கு முடிதல் கொள்க. கைஞ்ஞெரித்தார், நீட்டினார், மறித்தார் என வரும். இன்னும் இதனானே ஈரெழுத்தொரு மொழிக்கண் மெய்ஞ்ஞானம், நூல், மறந்தார் எனவரும். இவற்றை நலிந்து கூறப் பிறத்தலின் இயல்பென்பாரும் உளர். பூஞாற்றினார் என்றாற்போல்வன மிகாதன.

சுப்பிர.

உரைகாரர்கள் "வருமொழி முற்கூறிய வதனால் ஓரெழுத் தொருமொழியுள்ளும் ஈரெழுத் தொருமொழியுள்ளும் சிலவற் றிற்கு உறழ்ச்சி முடிபு கொள்க. சொல்லிய என்றதனான் ஓரெழுத்தொரு மொழியுள்ளும் ஈரெழுத்தொரு மொழியுள்ளும் சிலவற்றிற்கு மிக்கு முடிதல் கொள்க." என்றுங் கூறினர். ஆசிரியர் தொடர் மொழி எனக் கூறியிருக்கின்றமையான், அவை பிற்காலத்து வழக்காய் இருத்தல் கூடும். ஆயின் சொல்லிய என்பது எற்றுக்கு எனின், தொடர்மொழி என்று இங்குக்கூறியது இரண்டு மொழிகள் தொடர்ந்த தொடர் மொழியை யன்று; ஓர் எழுத்தொரு மொழி என்ற சூத்திரத்துக் கூறிய தொடர் மொழி யைக் குறிக்க என்பதற்கு என்னலாம்.

வேங்கட.

'வரையார்' என்றதனால் கதிர்நுனி என்பது போல இயல்பாக முடிதலே பழைய வழக்கென்றும், கதிர்ந் நுனி என்பது போல மிக்கு முடிதல் பிற்காலத்ததாயினும் ஆசிரியர்கள் ஏற்றுக் கொண்டனர் என்றும் அறியப்படும்.

உரையாசிரியர்கள் இருவரும், ''வருமொழி முற்கூறிய வதனான் ஓரெழுத்தொரு மொழியுள்ளும் ஈரெழுத்தொரு மொழியுள்ளும் சிலவற்றிற்கு உறழ்ச்சி முடிவு கொள்க'' என்றும், ''சொல்லிய என்றதனான் ஓரெழுத்தொருமொழிகளுட் சில மிக்கே முடிதல் கொள்க'' என்றும் கூறி உதாரணம் கொடுத்தனர் அவருள் நச்சினார்க்கினியர் ''இன்னும் இதனானே (சொல்லிய என்ற தனான்) ஈரெழுத்தொரு மொழிக்கண் மெய்ஞ் ஞானம், நூல், மறந்தார் என வரும்'' என்றும் எழுதினார். ஆசிரியர், 'மெல்லெழுத்தியற்கை யுறழினும் வரையார்' என்னும் முதலடியளவில் சூத்திரம் முடித்திருப்பாராயின், ஓரெழுத்தொரு மொழி முதலாக மூவகை மொழிகளின் முன்னும் மெல்லெழுத்து உறழும் என்று கொள்ளலாம். அவ்வாறன்றி 'சொல்லிய தொடர்மொழி யிறுதியான' என்று கிளந்து கூறினாராகலின், தொடர் மொழிக்கு முன்னர் மட்டுமே மெல்லெழுத்து உறழ்தல் அவர் கருத்தாதல் தெளியப்படும். மேற் சூத்திரத்தில், 'ஞநமயவ எனும் முதலாகு மொழியும், உயிர் முதலாகிய மொழியும்'' என்று, வருமொழிகளே முதலிற் கூறினார். இச் சூத்திரம், அவற்றுட் சில எழுத்துக்களுக்குக் கூறும் சிறப்பு விதியாகலின் ஈண்டும் வருமொழியை முதலிற் கூறினார். சொல்லிய என்றது மேலே, 'ஓரெழுத்தொருமொழி' என்னும் சூத்திரத்துக் கூறிய என்று நினைப்பித்தபடி. இவற்றால் உரையாசிரியர்கள் கூற்று ஆசிரியர் கருத்தன்மை அறியப்படும்.

மேல் 'ஓரெழுத்தொருமொழி' என்ற சூத்திரத்தில் மொழியிலுள்ள ஒற்றும் குற்றுகரமும் எழுத்தாக எண்ணுதல் பொருந்தாது என்ற நச்சினார்க்கினியர் தாமே, இச் சூத்திரவுரையில், காய், மெய் என்பவற்றை ஈரெழுத் தொருமொழிகளாகக் கொண்டு எழுதியது முன்பின் முரணும்.

இனி, மேற் சூத்திரத்தில், மெல்லெழுத்துக்கள் இடையெழுத்துக்கள் ஆகிய ஐந்தும் இயல்பாகப் புணரும் என்றார்; இச் சூத்திரத்தில், மெல்லெழுத்துக்கள் இயல்பாதலேயன்றி ஒரோ

வழி உறழ்ந்து வரினும் அமையும் என்றார். இவற்றையொட்டி நன்னூலார்,

'எண்மூ வெழுத்தீற் றெவ்வகை மொழிக்கும்
முன்வரு ஞநமய வக்கள் இயல்பும்' (உயிரீற்றுப் புணரியல் 8)

என்று கூறினார். அவர், உரையாசிரியர் கொள்கையை மேற்கொண்டு பின்னர்,

குறில் வழி யத்தனி ஐந்நொது முன்மெலி
மிகலுமாம் (ஷி. 8)

என்றார். இவ்வாறாகவும், உரையாளர் சங்கர நமச்சிவாயப் புலவர், 'மெலிமிகலுமாம் என எண்ணின்கண் நிற்கும் எச்சவும் மையானே, நொ, து என்னும் இரண்டு சொல் முன்னும் இடையினம் மிகலுமாம் எனக் கூறினாராயிற்று." என்று கூறி, அதனோடமையாராய், "இடையினம் மிகுதலை ஆசிரியர் தொல்காப்பியரும்,

அவற்றுள்
மெல்லெழுத் தியற்கை யுறழினும் வரையார்

என உம்மையாற் றழீஇயினார்" என்றார். 'உறழினும்' என்ற விடத்து உம்மை, 'இயல்பாதலேயன்றி' என இறந்தது தழுவியதனோடு, 'ஒரோ வழி உறழினும்' என இழிவு சிறப்புப் பொருளும் தந்து நிற்றலே யன்றி, இடையினம் உறழ்தலைத் தழுவியதன்று. இடையெழுத்தும் உறழ்தல் ஆசிரியர் தொல்காப்பியனார்க்குக் கருத்தாயின், 'அவற்றுள் மெலியும் இடையும் உறழினும் வரையார்' என்றேனும், 'ஞ நமய வக்கள் உறழினும் வரையார்' என்றேனும் சூத்திரம் செய்திருப்பார் அவ்வாறன்றி, மேற் சூத்திரத்துக் கூறிய ஞ ந ம ய வ க்களுள் இடை யெழுத்துக்களை நீக்கிவிட்டு, 'மெல்லெழுத்தியற்கை என விதந்து கூறலின், அவர்க்கு அது கருத்தன்று என்பது தெளிவாகும். அன்றியும் தொடர்மொழியின் முன்னர் மெல்லெழுத்து உறழும் என்றாரே யன்றி, எல்லா மொழிக்கு முன்னும் உறழும் என்றாரல்லர். ஆகலின், நொ து என்னும் ஓரெழுத்தொருமொழிகளின் முன்னர் மிகுதற்கு இச்சூத்திரம் மேற்கோளாதல் அமையாது, இவற்றால்இச் சூத்திரத்திற்கு (அவற்றுள், மெல்லெழுத்...வரையார்), சங்கர நமச்சிவாயர் கூறியது சிறிதும் பொருந்தாது. அவர்,

இச்சூத்திரத்தின் இரண்டாம் அடியைக் குறிக்கின், தங் கோளுக்குச் சாதகம் ஆகாது பாதக மாகும் என்று கருதியே அதனைக் குறிக்காது விடுத்தாராவர். இவ்வாறு ஆசிரியர் கருத்திற்கு மாறாகப் பொருள் கூறிய இவர், "அச்சூத்திரத்திற்கு அவ்வாசிரியர் கருத்தன்றி வேறுரை செய்வாரும் உளர்'' என்று கூறியது வியப்பினைத் தருகின்றது.

பிற குறிப்புகள்

காய் மெய் என்னும் மொழிகளை இங்கே ஈரெழுத்தொரு மொழி என்று கொண்ட நச்சினார்க்கினியர் 'ஒரெழுத் தொரு மொழி' என்னும் சூத்திரத்து இவை முதலியவற்றை ஒற்றுத் தள்ளிக் கொள்ள வேண்டும் என்றது அவருக்கே உடன் பாடன்மையைக் காட்டும். எழுத்தியல்பு நோக்கி ஈண்டுக் கூறினார் எனின் ஆண்டும் அவ்வாறே கூறி விடுதல் பொருத்தம் என்பது அவர்க்கும் உடன்பாடாதல் காண்க—கணேசய்யர்.

தேவநேயப் பாவாணரும் இக்கருத்தே கூறுவர்.

ண ன முன் யாவும் ஞாவும்

147. ணனவென் புள்ளி முன் யாவும் ஞாவும்
வினையோ ரனைய என்மனார் புலவர்

ஆ. மொ.

இல.

Y and ñ standing as the first letters of the verbs are in the same position before ṇ and n (standing as the final letters of the standing words)

க. சு.

Scholars say that y-and ñ-may stand as initials of verbs after (words ending) in the non-vocalised consonants-ṇ and-ṉ.

பி. நா.

முத்து வீரியம். 188

ண னமுனர் வருஞய வொருவினை கொள்ளும்.

இளம்.

'இது யகர ஞகரங்கள் முதலாம்வழி நிகழ்வதோர் கருவி கூறுதல் நுதலிற்று.

(இ—ள்) ண ன என் புள்ளி முன்—ணன என்று சொல்லப் படும் புள்ளிகளின் முன், யாவும் ஞாவும் வினை ஓர் அனைய என் மனார் புலவர்—யாவும் ஞாவும் வினைச் சொற்கண் முதலாதற்கு ஒரு தன்மைய என்று சொல்லுவர் [2]புலவர்.

எ—டு : மண் யாத்த [3]எனவும், பொன் யாத்த எனவும், மண் ஞாத்த [4]எனவும் பொன் ஞாத்த எனவும் வரும்.

[5]ஞா முற்கூறாது யா முற்கூறிய வதனான், யாமுதன் மொழிக்கண் ஞா வரும் என்று கொள்க.

நச்சி.

இது யகர ஞகர முதன் மொழி வந்த இடத்து நிகழ்வதோர் தன்மை கூறுகின்றது. இதுவும் புணரியல் ஒழிபாய்க் கருவிப்பாற் படும்.

(இ—ள்) ணகார னகாரம் என்று கூறப்படும் புள்ளிகளின் முன்னர் வந்த யாவும் ஞாவும் முதலாகியவினைச் சொற்கள், ஒருவினை வந்த தன்மையை ஒக்கும் என்று சொல்லுவர் புலவர்; எ-று.

எ—டு : 'மண்யாத்த கோட்ட மழகளிறு தோன்றுமே' 'மண் ஞாத்த கோட்ட மழகளிறு தோன்றுமே' எனவும், 'பொன் யாத்த தார்ப் புரவி பரிக்குமே' 'பொன் ஞாத்ததார்ப் புரவி பரிக்குமே' எனவும் வரும்.

வினைக்கண் எனவே மண்யாமை மண்ஞாமை எனப் பெயர்க் கண் வாரா வாயின. ஞா முற் கூறாது யா முற்கூறியவதனான்

சு. வே:

1. என்னும் புள்ளி
2. ஆசிரியர்
3, 4. இவை சில ஏடுகளில் இல்லை.
5. ஞாமுதற் கூறாது யாமுதற் கூறிய

ஞாச் சென்றவழி யாச் செல்லாது; யாச் சென்றவழி ஞாச் செல்லும் என்று கொள்க. மண் ஞான்றது என்ற வழி மண் யான்றது என்று வராரமை யுணர்க.

சுப்பிர.

இச் சூத்திரத்துள் வினை என்றது எற்றுக்கு எனின், பெயர்க்கண் அவ்வாறே வாராது என விலக்க என்க.

'யாவும் ஞாவும்' என்பதற்கு 'யாவும் ஞாவும் முதலாகிய வினைச் சொற்கண்' என்றும் ,வினையோரனைய' என்பதற்கு 'ஒரு வினை வந்த தன்மையை ஒக்கும்' என்றும் பொருள் கூறினர் நச்சினார்க்கினியர், முன்னர் வினைச் சொற்கள் என்பது எவ்வாறு கிடைத்தது என்றது விளங்கவில்லை.

பி. சு.

யாவுக்கு ஞா மாற்றெழுத்தாக வரும் என்னும் இச்சூத்திரக் கருத்தை நன்னூலார் கூறவில்லை. நகரத்துக்கு ஞகரம் போலியாக வரும் எனக் கூற வந்த ''ஐகான் யவ்வழி'' (நன். 124) என்னும் சூத்திரவுரையில் சங்கர நமச்சிவாயர்,

''மண்யாத்த கோட்ட மழகளிறு தோன்றுமே''
மண் ஞாத்த கோட்ட மழகளிறு தோன்றுமே''

எனவும்,

''பொன் யாத்த தார்ப்புரவி பரிக்குமே'
''பொன் ஞாத்த தார்ப் புரவி பரிக்குமே''

எனவும் வருமொழி வினைக்கு முன்னர் யாநின்ற நிலைக்களத்து ஞா நிற்பினும் ஒக்கும் போலிக்கு ஆசிரியர் தொல்காப்பியர்,

ணன வென் புள்ளி முன்...என் மனார் புலவர்''

எனச் சூத்திரம் செய்தவாறு இவ்வாசிரியரும் சூத்திரம் செய்யா தொழிதல் இறந்தது விலக்கல் என்னும் உத்தி'' என்றெழுதினார்.

ண ன ஈறு அல்வழியில் இயல்பாதல்

148. மொழிமுத லாகும் எல்லா எழுத்தும்
வருவழி நின்ற ஆயிரு புள்ளியும்
வேற்றுமை அல்வழித் திரிபிடன் இலவே. (5)

ஆ. மொர.

இல.

When all the letters, which are eligible to stand as initials of the words, appear (at the beging of th comingwords)
If those two consonants (ṇ and n) stand as the final of standing verbs

க. சு.

There is no change in non–case relations.
Those two non-vocalised consonants (i, e, ṇ and ṉ standing (as final members) do not manifest
aud any change in non-case relation,
Whatever sound appears initially.

முத்து. 189.

அல்வழி இவ்விருமையும் முதலா கெழுத்து
எல்லாம் முன்வரின் இயல்பா கும்மே.

நன் : 209.

ணன...அல்வழிக்கு
அனைத்து மெய்வரினும் இயல்பா கும்மே.

இல. வி. 119.

ணன...... அல்வழிக்கு
அனைத்து மெய்வரினும் இயல்பாம்.

தொன். வி. 24.

ணன அல்வழிக் கென்றும் இயல்பாம்.

இளம்.

இது ணகார வீற்றிற்கும் னகார வீற்றிற்கும் அல்வழிக்கண் நிலைமொழி முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ—ள்) மொழி முதல் ஆகும் எல்லா எழுத்தும் வருவழி—மொழிக்கு[1] முதலாம் என்று சொல்லப்பட்ட இருபத்திரண் டெழுத்தும் வருமிடத்து, நின்ற அ இருபுள்ளியும் வேற்றுமை

சு. வே.

1: மொழிதலாம்

அல்வழி திரிபு இடன் இல—[1]மேற் சொல்லினின்ற ணனக்களாகிய அவ்விருபுள்ளியும் வேற்றுமையல்லாத அல்வழியிடத்துத் திரியும் இடம் இல.

எ—டு : மண், பொன் என நிறுத்தி, கடிது, சிறிது, தீது, பெரிது என வன்கணத்தோடு ஒட்டுக. பிற கணத்துக் கண்ணும் அவ்வாறே ஒட்டுக.

வருமொழி முதற் கூறியவதனான், ணகாரத்திற்குச் சிறு பான்மை [2]திரிபும் உண்டெனக் கொள்க. அது சாட்கோல் என வரும்.

நச்சி.

இது ணகார ஈறும் னகார ஈறும் அல்வழிக்கண் இயல்பாய் முடியும் என்கின்றது.

(இ—ள்) மொழிக்கு முதலாம் எனப்பட்ட இருபத்திரண் டெழுத்தும் வருமொழியாய் வருமிடத்து, முன்னர்க் கூறிநின்ற ணகாரமும் னகாரமும், வேற்றுமையல்லாத இடத்துத் திரியு மிடம் இல; எ-று.

மண் பொன் என நிறுத்திக் கடிது சிறிது தீது பெரிது ஞெகிழ்ந்தது நீண்டது மாண்டது யாது வலிது நுந்தையது அடைந்தது ஆயிற்று இல்லை ஈண்டிற்று உண்டு ஊட்டிற்று எவ்விடத்தது ஏறிற்று ஐது ஒழுகிற்று ஔவையது என ஒட்டுக. வருமொழி முற்கூறியவதனான் ணகாரத்திற்குச்சிறுபான்மை திரிபும் உண்டென்று கொள்க. சாட்கோல் எனவரும். இதற்குச் சாணாகிய கோல் என்க. இவை 'நின்ற சொல்முன் இயல்பாகும்' (எழு. 144) என்ற வழி அடங்காவாயின; அது வருமொழி பற்றித் திரியாமை கூறியதாகலின். இது நிலைமொழி பற்றித் திரியாமை கூறியது

சு. வே.

1. மேற்சொல்லி நின்ற, மேற்பெயர்ச் சொல்லினின்ற (நிலை மொழி காண் கண்டான் முதலிய வினைச் சொற்களாயும், இருத்தற்கு முடியுமாகலான் முன்னுள்ள பாடமே தவறற்றதாகும்—சுப்பிரமணிய சாஸ்திரியார்.)

2. திரிபு

சுப்பிர.

உ—ம் : மண் கடிது, பொன் பெரிது; காண்கரியை, கண்டான் கரியை.

இச் சூத்திர வுரையில் 'எல்லா வெழுத்தும் வருவழி' என்ற தற்கு 'இருபத்திரண்டெழுத்தும் வருமொழியாய் வருமிடத்து' என நச்சினார்க்கினியத்தில் உள்ளது. அங்கு வருமொழியாய் என்பதற்குப் பிரதியாக வருமொழி முதலாய் என்றிருப்பின் நலம்.

குறித்து வருகிளவி, நிறுத்த சொல் இவற்றிலுள்ள ஒரு பகுதி யாகிய வரு நில் என்பனவற்றை இச்சூத்திரத்துள்ள வருவழி, நின்ற என்ற சொற்களிற் காண்க.

வருமொழிமுற் கூறியவதனான் ணகாரத்திற்குச் சிறு பான்மை திரிபு உண்டெனவும், அதற்குச் சாட்கோல் என்பது உதாரணம் ஆகும் எனவும் கூறினர் உரைகாரர்கள். அது பண்புத் தொகையாகலின் "உயிரும் புள்ளியும்" (எழு. 482) என்ற சூத்திரத்தாற் கொள்ளல் தகும்.

வேங்கட.

உரையாசிரியர்கள், வருமொழி முற்கூறியவதனான், ணகாரத் திற்குத் திரிபு உளது என்றும், சாட்கோல் என வரும் என்றும் கூறினர். வருமொழி முற்கூறியதனால் பிற விதியை அமைத்தல் பொருந்தாது. 'ஞ ந ம ய வ எனும் முதலாகு மொழியும்' என்னும் இவ்வியல் இரண்டாஞ் சூத்திரத்தில் வருமொழியை முற்கூறியுள்ளார். முன்னர், 'உயிரீறாகிய முன்னிலைக் கிளவியும்' என்னும் சூத்திரத்திலும் வருமொழியை முற்கூறுகின்றார். உரையாசிரியர்கள் ஆண்டு அது பற்றி ஒன்றும் கொண்டனர் அல்லரே.

மேலைச் சூத்திரத்தில் 'ணனவென் புள்ளி முன்' என்று கூறியிருத்தலானும் அவற்றின் முன் வரும் மொழிகட்கே விதி கூறுகின்றாராகலானும் நிலைமொழியை முதலிற் கூறுதல் வேண்டாதாயிற்று.

அவை வேற்றுமையிலும் இயல்பாதால்

149. **வேற்றுமைக் கண்ணும் 'வல்லெழுத் தல்வழி**
மேற்கூ றியற்கை ஆவயி னான. **(6)**

ஆ. மொ.

இல.

Even in case relations exept in the case of the hard consonants, the same position continues regarding these two consonants.

க. சு.

The above-stated rule applies
even in case relationship,
with the exeption of plosives.

பி. நா.

முத்து. 190.

வல்லெழுத் தல்வழி இயல்பாம் வேற்றுமை

நன். 209.

ணன...பிறவரின் இயல்புமாகும் வேற்றுமைக்கு

இல. வி. 119.

ணன...பிறவரின் இயல்புமாகும் வேற்றுமைக்கு

இளம்.

இது, [1]அவ்விரண் டீற்றிற்கும் வேற்றுமைக்கண் நிலைமொழி முடிபு கூறுதல் நுதலிற்று.

சு. வே:

1. வல்லெழுத்தில் வழி. இப்பாடத்தினும் வல்லெழுத்தல்வழி என்ற பாடமே சிறக்கும்: 'அல்' என்பது ஒன்று இல்லை என்ற பொருளுடன் வேறு ஒன்று உண்டுஎன்ற குறிப்பையும்கொண்டதாகும். இங்கு வல்லெழுத்தில்லாமல் பிறகணம் உள்வழி என்ற பொருள் தருதல் காண்க. (சிவ)

* இச் சூத்திரத்தையும் முன் சூத்திரத்தையும் 303, 333 என் உள்ள சூத்திரங்களையும் ஒன்றாகக் கொண்டு, நன்னூலார்

ணனவல் லினம் வரட் டறவும் பிறவரின்
இயல்பு மாகும் வேற்றுமைக்கு அல்வழிக்கு
அனைத்து மெய்வரினும் இயல்பா கும்மே

என்றார். இதையே இலக்கண விளக்கமும் மேற்கொண்டது.

(இ—ள்.) வேற்றுமைக் கண்ணும்—வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக் கண்ணும், வல்லெழுத்து அல்வழி—வல்லெழுத்து அல்லாதவிடத்து, மேல்கூறு இயற்கை ஆவயின் ஆன—மேற் கூறிய இயல்பு முடிபாம் அவ்விரண்டு புள்ளியிடத்தும்.

எ-டு: மண், பொன் என நிறுத்தி, ஞாற்சி நீட்சி எனவன் கணம் ஒழித்து எல்லாவற்றோடும் ஒட்டுக.

நச்சி.

இது முற்கூறிய வாற்றான் வேற்றுமைக்கண் திரிபு எய்தி நின்றவற்றை ஈண்டு வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத்தல் வழித் திரியாவென எய்தியது விலக்கிற்று.

(இ—ள்.) அல்வழிக்கண் அங்ஙனம் திரியாது நின்ற அவ் வொற்றுக்கள், வேற்றுமைப் பொருட் புணர்ச்சியிடத்தும், வல்லெழுத்தல்லாத இடத்து மேற்கூறிய இயல்பு முடிபாம்; எ—று.

எனவே, வல்லெழுத்து வந்துழித் திரியும் என்றாராயிற்று.

எ-டு: மண், பொன் என நிறுத்தி, நெகிழ்ச்சி நீட்சி மாட்சி யாப்பு வன்மை நுந்தையது அழகு ஆக்கம் இன்மை என ஏற்பன கொணர்ந்து ஒட்டுக. இதுவும் செய்கைச் சூத்திரம். மேல் நான்கு சூத்திரத்தாற் கூறியன வல்லெழுத்து வந்துழித் திரியு மாறு தத்தம் ஈற்றுட் கூறுப.

சுப்பிர.

ஆவயினான் என்பதற்கு 'அவ்விரண்டு புள்ளியிடத்து' என இளம்பூரணரும், 'அல்வழிக்கண் அங்ஙனந் திரியாது நின்ற அவ் வொற்றுக்கள்' என்று நச்சினார்க்கினியரும் பொருள் கூறினர். பலவிடங்களிலும் சூத்திரத்தீற்றிலுள்ள ஆவயினான என்றதற்கு 'அவ்விடத்தின் கண் என்பது பொருளாதலின் ஈண்டு இளம் பூரணர் கூறும் பொருளே பொருந்தும்.

சு. வே:

1. அவ்விரண்டிற்கும்

லனமுன் தநக்கள் திரிதல்

150. *லனவென வரூஉம் புள்ளி முன்னர்த்
தந என வரிற் றனவா கும்மே.

ஆ. மொ.

இல.

If th and n̲ come after l and n consonants, they become ṟ and n respectively.

க. சு.

If t–and n–follow the non–vocalised consonants –l and -n̲, they will become r-and n–.

இளம்.

இது, புள்ளி மயங்கியலை நோக்கியதோர் வருமொழிக் கருவி கூறுதல் நுதலிற்று.

(இ—ள்.) லன எனவரும் புள்ளி முன்னர்—லன என்று [1]சொல்ல வருகின்ற புள்ளிகளின் முன்னர், தந எனவரின்—தந என வருமொழி வரின், றன ஆகும்—அத்தகர நகரங்கள் நிரல் நிறையானே றகர னகரங்களாம்.

எ-டு: கஃறீது, கன்னன்று, பொன்றீது, பொன்னன்று என வரும்.

நச்சி.

இது புள்ளி மயங்கியலை நோக்கியதோர் வருமொழிக் கருவி கூறுகின்றது.

(இ—ள்.) லகார னகாரம் என்று சொல்ல வருகின்ற புள்ளி களின் முன்னர், தகாரமும் நகாரமும் முதல் என்று சொல்லும் படியாகச் சில சொற்கள் வரின், நிரல்நிறையானே அவை றகார னகாரங்களாகத் திரியும்; எ—று.

---

* இந்நூற்பாவையும் அடுத்த நூற்பாவையும் இணைத்த நிலையில் பிறநூல்கள் கூறும்.

சு. வே:

1. சொல்லி,

எ-டு : கஃறீது, கன்னன்று, பொன்றீது, பொன்னன்று எனவரும். நிலைமொழித் திரிபு தத்தம் ஈற்றுட் கூறுப.

சிவலிங்கனார்

செய்கை என்பது நிலைமொழியீறு பற்றியது; கருவி என்பது வருமொழி முதல் பற்றியது. கஃறீது என்பது கல்+தீது என நிலைமொழியும் வருமொழியுமாக நின்று நிலைமொழியீற்று லகரம் ஆய்தமாகவும் வருமொழி முதல் தகரம் றகரமாகவும் திரிந்தன வேனும் நிலைமொழியீற்றின் திரிபைச் செய்கைத் திரிபு என்றும் வருமொழி முதல் திரிபைக் கருவித் திரிபு என்றும் கொள்ளவேண்டும். (இப்படியே பிறவற்றிலும் கொள்ளக) இந் நூற்பாவில் வருமொழிமுதலில் வரும் தகர நகரங்களின் திரிபு கூறப்படுதலின் கருவி கூறுதல் நுதலிற்று என்றனர் உரைகாரர் கள். இக்கருவி புள்ளி மயங்கியலை நோக்கியது என்பது, லகரம் ஆய்தமாகத் திரியும் என்று கூறும்,

தகரம் வரும் வழி ஆய்தம் நிலையலும்
புகரின் றென்மனார் புலமை யோரே. (எழு. 370)

என்ற புள்ளி மயங்கியல் நூற்பாவையும்,

கல்+தீது என்பன கற்றீது என வருமிடத்து நிலைமொழி யீற்று லகரம் றகர ஒற்றாகத்திரியும் என்று கூறவந்த

அல்வழி யெல்லாம் உறழ் என மொழிப (எழு. 369)

என்ற நூற்பாவையும் கருதியதால் புலப்படும்.

கல்+நன்று என்பன கன்னன்று எனவருமிடத்து இந்நூற்பா வின்படி நகரம் னகரமாகத்திரிய நிலைமொழியிறுதி லகரம்,

மெல்லெழுத் தியையின் னகரமாகும் (எழு. 368)
என்னும் நூற்பாவில்,

''இச்சூத்திரத்தினை வேற்றுமையது ஈற்றுக்கண்
அல்வழியது எடுத்துக் கோடற்கண் வைத்தமை
யான், அல்வழிக்கும் இம்முடிபு கொள்க''

என இளம்பூரணர் கூறுமாற்றான் னகரமாகத் திரிந்தது. இது செய்கைத் திரிபு; இதனையும் நோக்கியது இக்கருவி நூற்பா.

ணளமுன் தநமெய் டண ஆதல்

151. ணள வென் புள்ளிமுன் டண எனத் தோன்றும் (8)

ஆ. மொ.

இல.

After ṇ and ḷ they (th aud ṉ) becomed and ṇ.

க. சு.

After the non-vocalised consonants n and ḷ they will appear as ṭ and ṇ-.

பி. நா.

வீர. 14.

ஆறாம் உடலின் பின் தவ்வரின் ஆங்கதைந்தாம் உடலாம்
கூறார்ந்த நவ்வரின் முன் பினது ஆம்.

நேமி. 17.

..................தநக்கள்
முன் பின்னாம் தப்பி ன ண இயல்பாத் தட்டறவாம்

நன். 239.

னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகுந் தநக்கள் ஆயுங் காலே.

முத்து. 191.

ணள டணவாம் னல றனவாந் தந வரின்.

இளம்.

இதுவும் அது

(இ—ள்.) ணளஎன் புள்ளிமுன்—ணள என்னும் புள்ளிகளின் முன்னர் (*அதிகாரத்தினால் தகார நகாரங்கள் வரின்) டண எனத் தோன்றும்—அவை நிரல் நிறையான் டகார ணகாரங் களாய்த் தோன்றும்.

எ-டு : மண்டீது, மண்ணன்று, முஃடீது முண்ணன்று என வரும்.

* அதிகாரத்தினால் என்ற சொல்லை ஆசிரியர் ஒருவர் பாடஞ் சொல்லும் போது, மாணவர் ஏட்டில் எழுதியிருத்தல் கூடும். அஃது இடைச் செருகலாய் உரையின் மூலத்தில் வந்துள்ளது என்னலாம். (சிவ)

நச்.

இதுவும் அது

(இ—ள்.) ணகார ளகாரம் என்று சொல்லப்படும் புள்ளிகளின் முன்னர் அதிகாரத்தால் தகார நகாரங்கள் வரும் எனின், அவை [1]நிரல் நிறையானே டகார ணகாரங்களாய்த் திரிந்து தோன்றும்; எ—று.

எ-டு: மண்டீது, மண்ணன்று, முஃடீது, முண்ணன்று என வரும். நிலை மொழித் திரிபு தத்தம் ஈற்றுட் கூறுப.

சிவ.

முள் + தீது என்பன முஃடீது எனவருமிடத்துத் தகரம் டகர மாக இந்நூற்பாவின்படித் திரிய, நிலைமொழியீற்று ளகரம் டகரமாகத் திரிதலை

அல்வழி எல்லாம் உறழ் என மொழிப (எழு. 3 9)

என்பதனான் அமைக்க. இதனை நோக்கியது இந்நூற்பா.

முள் + நன்று என்பன முண்ணன்று என வருமிடத்து நகரம் ணகரமாகத்திரிதல் இந்நூற்பாவாலும் நிலைமொழியீற்று ளகரம் ணகரமாகத் திரிதலை

மெல்லெழுத் தியையின் ணகார மாகும் (எழு. 398)

என்னும் நூற்பாவில் ''இதனை வேற்றுமையிறுதிக்கண் (எழு.397) அல்வழியது எடுத்துக் கோடற்கண் (எழு. 399) சிங்க நோக்காக வைத்தலின் அல்வழிக்கும் இம்முடிபு கொள்க'' என இளம்பூரணர் கூறியதாலும் அமைத்துக் கொள்க. இதனை நோக்கியது இந்நூற்பா.

முன்னிலைப் பெயரை நீக்கியதற்குச் சுப்பிரமணிய சாஸ்திரியார் கூறியதே காரணம் ஆம். நூம்மின் திரிபெயர் நீயிர் ஆதலின் நீயிர் விலக்கப்பட்டதென்றால் 'நும்' என்பதைக் கொள்ளலாமோ எனின் அது வேற்றுமையுருபேற்கும் வடிவு அல்வழிக்குப் பொருந்தாதென விடுக்க.

சு. வே:

1. நிரல் நிறை வகையால்

இனி உரையாளர் இருவரும் ஏவல் வினைக்கே உதாரணம் காட்டினர், ஏவல் வினை இருபத்து நான்கு ஈற்றனவாய் வருதலின். ஏவலில்லா வினைக்கும் நாம் உதாரணம் காட்டிக் கொள்ளலாம். உண்டி கொற்றா, உண்டனை கொற்றா, உண்டாய் கொற்றா, உண்டனிர் புலவரே உண்டீர் புலவரே எனக்காட்டலாம். இவை மிகாமல் வந்ததற்கு ஆம்.

2. உயிர் ஈறு மெய் ஈறுகளின் சிறப்புப் புணர்ச்சி

முன்னிலை வினைச் சொல் முடியுமாறு

152. உயிரீ றாகிய முன்னிலைக் கிளவியும்
புள்ளியிறுதி முன்னிலைக் கிளவியும்
[1]இயல்பா குநவு [2]உறழ்பா குநவும் என்று
ஆயீர் இயல வல்லெழுதது வரினே. (9)

ஆ. மொ.
இல.

The verbs of second person which end in the vowel and the verbs of second person which end in consonant stand either without change or with change.
These are the two modes of joining
When hard consonants appear as the initials of the coming words)

க. சு.

If (the standing words is) a verb in the second person ending in a vowel or in a consonant (and) a plosive (at the begining of the coming word)
follows, there are two alternatives possible—
either there is no change,or othere is optional multiplication.

சு. வே:
1. இயல்பாகுதலும்
2. உறழா குநவும் (நச்)
உறழா குதலும்

பி. இ. நா.

நன். 161.

ஆவி யரழ இறுதி முன்னிலைவினை
ஏவல்முன் வல்லினம் இயல்பொடு விகற்பே.

இல. வி. 73.

உயிரும் புள்ளியும் இறுதி யாகிய
முன்னிலை வினையே ஏவல் என்றிவை
இயல்பா குநவும் உறழா குநவும் என்று
ஆயீர் இயல வல்லெழுத்து வரினே.

இளம்.

இது, '[1]முன்னிலை வினைச்சொல் வன்கணத்துக்கண் முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்) உயிர் ஈறாகிய முன்னிலைக் கிளவியும்—உயிர் ஈறாகிய முன்னிலைச் சொற்களும், புள்ளி இறுதி முன்னிலைக் கிளவியும்—புள்ளியிறுதியையுடைய முன்னிலைச் சொற்களும், வல்லெழுத்து வரின்—வல்லெழுத்து முதன் மொழிவரின், இயல்பு ஆகுநவும் உறழ்பு ஆகுநவும் என்று அ ஈர் இயல—இயல்பாவனவும் உறழ்ச்சியாவனவும் என அவ்விரண்டு இயல்பினையுடைய.

உயிரீறு புள்ளியீறு என்றமையான், முன்னிலைவினைச் சொல் என்பது கொள்க.

எ—டு : எறிகொற்றா, கொணாகொற்றா, சாத்தா, தேவா, பூதா எனவும், உண் கொற்றா, தின் சொற்றா [2]எனவும் வரும். இவை இயல்பு.

நடகொற்றா, நடக்கொற்றா எனவும், ஈர் கொற்றா, ஈர்க்கொற்றா [3]எனவும் வரும்; இவை உறழ்ச்சி.

நச்

இது முன்னிலை வினைச்சொல் வன்கணத்துக்கண் முடியுமாறு கூறுகின்றது.

சு. வே:

1. முன்னிலைச் சொல்
2, 3. எனவும் இவை

(இ—ள்) உயிரீறாய் வந்த முன்னிலை வினச் சொற்களும், புள்ளியீறாய் வந்த முன்னிலை வினைச் சொற்களும், வல்லெ ழுத்துமுதலாகிய மொழிவரின், இயல்பாய் முடிவனவும் உறழ்ந்து முடிவனவும் என அவ்விரண்டு இயல்பினை யுடைய; எ-று.

எ—டு : எறிகொற்றா, கொணாகொற்றா, உண்கொற்றா, தின் கொற்றா, சாத்தா, தேவா, பூதா என இவையியல்பு.

நடகொற்றா, நடக்கொற்றா, ஈர்கொற்றா, ஈர்க்கொற்றா சாத்தா தேவா பூதா என இவை உறழ்ச்சி.

ஈறென்று ஓதினமையின் வினைச்சொல்லே கொள்க. இவை முன்னின்றான் தொழில் உணர்த்துவனவும் அவனைத் தொழிற் படுத்துவனவும் என இருவகைய. இ ஐ ஆய் முதலியன தொழில் உணர்த்துவன .நட வா முதலியன உயிரீறும் புள்ளியீறும் தொழிற் படுத்துவன. நில்கொற்றா, நிற்கொற்றா எனத் திரிந்து உறழ்ந்தனவும் 'உறழாகுநவும்' என்னும் பொதுவகையான் முடிக்க. இயல்பும் உறழ்வும் என்று இரண்டியல்பின என்னாது 'ஆகுநவும்' என்றதனான் துக் கொற்றா நொக்கொற்றா, ஞெள்ளா, நாகா, மாடா, வடுகா என ஓரெழுத் தொருமொழி முன்னிலை வினைச் சொல் மிக்கே முடிதல் கொள்க.

சுப்பிர.

முன்னிலைக் கிளவி என்றது பெயர்வினை இரண்டற்கும் பொதுவாயினும், நீ என்ற முன்னிலைப் பெயரைப் பற்றியதை 251 (நீ யென் பெயரும்) 254 (நீயென் ஒரு பெயர்) ஆவது சூத்திரங்களில் தனியாய் ஆசிரியர் கூறினமையானும், நீயிர் என்றது அவரது கொள்கையில் நும்மின் திரிபெயர் ஆதலானும் ஈண்டு அச்சொல்லான் முன்னிலைவினையே குறிக்கப்படும் என்க.

வேங்கட.

இச்சூத்திரத்தில் முன்னிலைக் கிளவி என்றது முன்னிலை வினைச்சொல்லை. முற்சூத்திரத்தில், முன்னிலை மொழிக்கண் வாராத ஈறுகள்* இவை என்று விலக்குதலின் இஃது அறியப்படும். இவ்வாசிரியர், ஏவல்வினை முற்று என்று ஒன்றனை யாண்டுங் கூறிற்றிலராகலின் முன்னிலைக் கிளவி என்றதில் அதுவும்

* ஏவல் முன்னிலை எனக் கொள்க.

அடங்கும். நன்னூலார் ஏவல் வினை என்று ஒரு வகை கொண்டாராகலின், அவர் இச்சூத்திரக் கருத்தினைக் கூறுமிடத்து,

ஆவி யரழ இறுதிமுன் னிலைவினை
ஏவல்முன் வல்லினம் இயல்பொடு விகற்பே (நன். 161)

என்று முன்னிலைவினை *ஏவல்வினை இரண்டனையும் கூறினார்.

'இயல்பும் உறழ்வும் என்று இரண்டியல்பின் என்னாது ஆகுநவும் என்றதனான், துக்கொற்றா நொக்கொற்றா, ஞெள்ளா, நாகா, வடுகா என ஒரெழுத்தொருமொழி முன்னிலைவினைச் சொல் மிக்கே முடிதல் கொள்க' என்றார் நச்சினார்க்கினியர். ஆசிரியர் அது கருதினாராயின், முன்னர் 26 ஆம் (வேற்றுமை யல்வழி எழு. 159) சூத்திரத்திற் கூறுதல் போல 'இயல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவும் உறழா குநவும்' என் றாயீரியல வல்லெழுத்து வரினே' என்று கூறினாராதலின், துக்கொற்றா நொக்கொற்றா என்று வல்லெழுத்து மிக்கே முடிதலும், துஞ்ஞெள்ளா, துவ்வடுகா என மெல்லெழுத்தும் இடையெழுத்தும் மிக்கு முடிதலும் அவர்க்குக் கருத்தாகாது' உரையாசிரியர் இவற்றைக் கூறாமை உட்கொளத் தக்கது.

அற்றேல், 'துக்கொற்றா' என்று வல்லெழுத்து மிகாதுவரின் வாழை பழம் என்பது போலாகுமாகலின், அது பொருந்தா தெனின், அற்றன்று. வாழைப் பழம் என்பது தொகைச் சொல்லாகலின் ஒரு சொன்னீர்மைத்து; இது பிளவு பட்டிசைப் பது. அதனான் மிகாது வருதல் அமையும்.

வெள்ளை வாரணனார்

நட, வா, உண், தின் என உயிரீறும் புள்ளியீறுமாய் நின்று முன்னின்றானைத் தொழிற்படுத்துவனவும், உண்டி, உண்டனை, உண்டாய் என இ, ஐ, ஆய் என்னும் மூன்றீற்றவாய் நின்று முன்னின்றானது தொழில் உணர்த்துவனவும் என முன்னிலை வினைச் சொற்கள் இருவகைய. அவ்விரண்டினையும் இச் சூத்திரத்து முன்னிலைக் கிளவி என ஆசிரியர் ஒன்றாக அடக்கினார்.

* ஏவலினைப் பிரித்தோதியது விளங்குதற் கெனக் கொள்க— மயிலைநாதர். (நன். 160. உரை)

இச் சூத்திர விதியினை நன்னூலார்,

ஆவி யரழ இறுதி முன்னிலை வினை
ஏவல் முன் வல்லினம் இயல்பொடு விகற்பே (161)

என்ற சூத்திரத்துட் கூறிப் போந்தார். இதன் கண் முன்னின்றானது தொழில் உணர்த்துவதாய்த் தன்மைவினை படர்க்கை வினைகட்கு இனமாய முன்னிலை வினையை முன்னிலை எனவும், முன்னின்றானைத் தொழிற்படுத்துவதாய் முன்னிலை யொன்றற்கே யுரிய வினையை 'ஏவல்' எனவும் பவணந்தியார் விதந்து கூறினமை நோக்கத் தக்கது.

அதற்குச் சிறப்பு விதி

153. ஔவென வரூஉம் உயிர் இறு சொல்லும்
ஞ ந ம வ என்னும் புள்ளி யிறுதியும்
குற்றிய லுகரத்து இறுதியும் [1]உளப்பட
முற்றத் [2]தோன்றா முன்னிலை மொழிக்கே. (10)

ஆ. மொ.

இல.

The word which ends in 'ou'
The word weich ends in ñ, ṇ, m and v and
The word which ends in shortened 'u' will not appear in the second person perfectly unchanged.

க. சு :

In the words of the second person
ending in the vowels 'au' and in the non-vocalised
consonants ñ, n, m, v,
and when the over-short u occurs at the end (the above said rule?) does not apply completely.

சு. வே:

1. உட்பட
2. தோற்றா

பி.இ. நூ.

இல. வி. 74.

> **ஒளஎன வரூஉம் உயிர் இறு சொல்லும்**
> **ஞ ந ம வ என்னும் புள்ளி யிறுதியும்**
> **குற்றிய லுகரத் திறுதியும் உளப்பட**
> **முற்றத் தோன்றா முன்னைய முடிபே**
> **உகரம் பெறூஉம் ஆவயி னான.**

முத்து. 192

> **ஒள இறு ஞ ந ம வ இறுதியும் உகர**
> **முற்றுகரம் முன் னிலை உறழ்தலும் விதியாகும்:**

இளம்.

இது மேல் முடிபு கூறியவற்றுள் சிலவற்றிற்கு அம் முடிபு விலக்குதல் நுதலிற்று.

(இ—ள்.) ஒள எனவரும் **உயிர் இறு** சொல்லும்—ஒள என வருகின்ற உயிரீற்றுச் சொல்லும், ஞநமவ என்னும் புள்ளியிறுதியும்—ஞநமவ என்று சொல்லப்படும் புள்ளியீற்றுச் சொல்லும், குற்றியலுகரத்து இறுதியும் உளப்பட—குற்றியலுகரமாகிய இறுதியையுடைய [1]சொல்லுமாகிய இவை, முன்னிலை மொழிக்கு முற்றத் தோன்றா—முன்னிலை மொழிக்குக் கூறிய இயல்பும் [2]உறழ்வுமாகிய முடிவிற்கு முற்றத் தோன்றா.

'முற்ற' என்றதனான், ஈண்டு விலக்கப்பட்டவற்றுட் குற்றிய லுகர ஈறு ஒழித்து, ஒழிந்தனவெல்லாம் நிலைமொழி உகரம் பெற்று, வருமொழி வல்லெழுத்து மிக்கு முடிதலும் கொள்க.

எ-டு: கௌவு கொற்றா, கௌவுக் கொற்றா; உரிஞு கொற்றா, உரிஞுக் கொற்றா; பொருநு கொற்றா, பொருநுக் கொற்றா; திருமு கொற்றா, திருமுக் கொற்றா; தெவ்வு கொற்றா, தெவ்வுக் கொற்றா எனவும், [3]கூட்டு கொற்றா [4]கூட்டுக் கொற்றா எனவும் வரும்.

சு. வே:

1. சொல்லுமாக
2. உறழுமாகிய
3. கூடு
4. கூடுக்

நச்.

இஃது எய்தியது விலக்கிற்று, முற்கூறியவற்றுள் சில [5]ஆகாதனவற்றை வரைந்து உணர்த்தலின்.

(இ—ள்.) ஔ என வருகின்ற உயிரீற்றுச் சொல்லும், ஞநமவ என்று சொல்லப்படும் புள்ளியீற்றுச் சொல்லும், குற்றியலுகரத்தை இறுதியிலே உடைய சொல்லும், முன்னர் முன்னிலை மொழிக்குப் பொருந்தக் கூறிய இயல்பும் உறழ்ச்சியுமாகிய முடிபிற்கு முற்றத் தோன்றா; எ—று.

'முற்ற' என்றதனான் நிலைமொழி உகரம் பெற்று உறழ்ந்து முடிதல் கொள்க.

எ-டு: கௌவு கொற்றா கௌவுக் கொற்றா, வௌவு கொற்றா வௌவுக் கொற்றா, உரிஞு கொற்றா உரிஞுக் கொற்றா, பெருநு கொற்றா பெருநுக் கொற்றா, திருமு கொற்றா திருமுக் கொற்றா, தெவ்வுகொற்றா தெவ்வுக் கொற்றா, கூட்டு கொற்றா கூட்டுக் கொற்றா என வரும்.

சுப்பிர.

ஈண்டு முற்றுதல் என்பதற்கு ஒத்திருத்தல் என்றேனும் (முற்கூறியவிதி) நிரம்பியிருத்தல் என்றேனும் பொருள் கூறலாம்.

உளப்பட என்றதற்குப் பொருந்த என்ற பொருளைக் கூறி, அதனை முற்ற என்பதனோடு அந்நுவயித்தனர் நச்சினார்க்கினியர். அது சூத்திரப் போக்கிற்குப் பொருந்தாது.

'முற்ற என்றதனால் நிலைமெழி உகரம் பெற்று வருமொழி வல்லெழுத்து உறழ்ந்து முடிதல் கொள்க' எனக் கொண்டனர் உரைகாரர்கள். உகரம் பெறுதலும் வல்லெழுத்து மிகுதலும் 297 (ஞகாரை ஒற்றிய) 298 (ஞ ந ம வ இயை) 299 (நகர விறுதியு) 329 (தொழிற் பெயரெல்) 383 (ஏனை வகரம்) ஆவது சூத்திரங்களாற் பெறப்படுதலின், இவ்வாறு அவர் கூறுதல் பொருந்துமா என ஆராய்தற்பாலது.

சு. வே.

5. வாராதனவற்றை

வேங்கட.

மேற் சூத்திரத்தில், முன்னிலைக்கண் வரும் உயிரீறு புள்ளியீறு இவற்றின் முன் வரும் வல்லெழுத்திற்கு விதி கூறினாராகலின், அவ்விரண் டீறுகளுள்ளும் முன்னிலைக்கண் வாராத ஈறு இவை என்று இச்சூத்திரத்திற் கூறுகின்றார்.

மேற்சூத்திரத்தில் 'புள்ளியிறுதி' என்றதனால் குற்றிய லுகரவீறும் உட்பட்டதாகலின், முன்னிலைக்கண் வாராத குற்றியலுகரமும் விலக்க வேண்டுவதாயிற்று.

முற்ற என்றதனால், ஈண்டு விலக்கப் பட்டவற்றுள் குற்றியலுகர வீறொழித்து ஒழிந்தனவெல்லாம் நிலைமொழி உகரம் பெற்று, வருமொழி வல்லெழுத்து உறழ்ந்து முடிதலும், குற்றியலுகர வீறு வருமொழி வல்லெழுத்து மிக்கு முடிதலும் கொள்க' என்றார் இளம் பூரணர். இவற்றால் அவர் குற்றிய லுகர வீறு மட்டும் உகரம் பெறாதே முடியும் என்று கொண்டது அறியப்படும்.

நச்சினார்க்கினியர் 'முற்ற என்றதனால் நிலை மொழி உகரம் பெற்று உறழ்ந்து முடிதல் கொள்க' என்று எழுதி உதாரணம் காட்டினார். இளம்பூரணர் எழுதியாங்கு, நச்சினார்க்கினியர் குற்றியலுகரவீறு ஒழித்து ஒழிந்தன வெல்லாம்' என்றெழுதா ததனான், குற்றியலுகரமும் ஏனையீறுகள் போன்று உகரம் பெறும் என்பது அவர் கருத்தாகும்.

ஆசிரியர், 'தோன்றா' என்று கூறிய மூவகையீறுகளும் அவ்வாறே 'தோன்றா' என்று உரை கூறல் வேண்டும். அல்லது, மூவகை யீறுகளும் உகரம் பெற்று முடியும் எனல் வேண்டும். அவ்வாறன்றி, மூவகையீறுகளுள் இருவகையீறுகள் உகரம் பெற்று வரும் என்றும், ஒன்று உகரம் பெறாது நின்றாங்கு வரும் என்றும் உரையாசிரியர் கூறியது அமைவுடையதாதல் இல்லை.

ஒளகார ஈறும் மகர ஈறும் முன்னிலைக்கண் வாரா என்றதன் காரணத்தை, திராவிட மொழியின் மூவிடப் பெயர் என்னும் நூலி லும், குற்றியலுகர வீற்றை விலக்கியதன் காரணத்தைக் குற்றிய லுகரம் என்னும் கட்டுரையிலும் விரிவாக எழுதியுள்ளேன். ஆகலின், அவற்றை ஈண்டுச் சுருக்கமாகத் தருகின்றேன்.

ஔகாரத்தை விலக்கியதன் காரணம்

முன்னிலை யொருமை வினை முற்றின் விகுதிகளாய் வரும் இ ஐ ஆய் என்பவை மூன்றனுள், ஐ என்பது நீ என்னும் பெயரி னுள்ள ஈகாரத்தின் திரிபாகும். இனி ஆய் என்பது ஐ(அய்) என்பதன் நீண்ட வடிவே. இதனை ஐகார ஔகாரம் என்னும் கட்டுரையில் விளக்கமாக எழுதியுள்ளேன். ஆண்டுக் காணலாகும். ஐ (அய்) என்பது அய்யன் என்னும் பெயரின் முதனிலையாகும். அது தலைமையையும் தலைமையுடையானையும் குறிக்கும். அண்ணன் என்னும் பொருளில் பயின்று வந்துள்ளது இவ்வாறே ஔ (அவ்) என்பது அவ்வை என்னும் பெயரின் முதனிலையாகும். அவ்வை என்பது அக்கை என்னும் பொருளில் வழங்கியிருப்பது காணலாம்.

இனி, கன்னட மொழியில் மகடூஉ முன்னிலை வினைகளில் ஔ விகுதி அமைத்து வழங்கும் வழக்குப் பல இலக்கியங்களிலும் உளது. ஆடூஉவினை நோக்கிக் கூறுமிடத்து, கேள்வை என்று வரும் சொல், மகடூஉவினை நோக்கிக் கூறுமிடத்து, *கேள்வௌ என்று வரும். இந்தி மொழியிலும் முன்னிலையில் மகடூஉ வினைக்கு வேறு விகுதி உளது. இவ்வாறே தமிழிலும் பண்டைக் காலத்தில் ஆடூஉ முன்னிலைவினைக்கண் அய் (ஐ) என்பதனைச் சேர்த்தும், மகடூஉ முன்னிலைவினைக்கண் ஔ என்பதனைச் சேர்த்தும் வழங்கினர் எனவும், பிற்காலத்தில் படர்க்கைக் கணன்றி முன்னிலைக் கண்ணும் அஃறிணை வழக்கு வந்ததனான் அவ்வேறுபாடு வேண்டுதல் இன்று என்று ஒழிக்கப்பட்டது எனவும், அதனானே ஆசிரியர் 'ஔ என வரூஉம் உயிரிறு கிளவி யும்...முற்றத் தோன்றா முன்னிலை மொழிக்கே' என்று கூறலா யினர் எனவும் உய்த்துணரக் கூடும்.

மகரத்தை விலக்கியதன் காரணம்

முன்னிலைப் பன்மைக்கண், செய்யும் இரும் என்பன் போன்ற ஏவலிற் காணும் உம் விகுதி பண்டைச் செய்புட்களில் காணவில்லை; ஆயின்,

'உண்ம என இரக்கும் பெரும்பெயர்ச் சாத்தன்' (புறம். 178)
இரும்போர் ஒக்கலொடு தின்ம் எனத் தருதலின்' (புறம். 150)

*கன்னட ஆதிபுராணம் 3 84

என்று மகரவீற்று முன்னிலைச்சொல் வந்துள்ளது. இச் சொற்களை நோக்கின், மகரமெய் பன்மையைக் குறிப்பது என்பது போதரும். என்னையெனின், செய்கு, வருது என்பன போன்ற தன்மையொருமை (வினைச் சொற்களோடு மகரமெய் சேர்ந்து செய்கும், வருதும் என்றாகித் தன்மைப்பன்மையைக் குறித்தல் போல, உண், தின் என்னும் முன்னிலையொருமை வினைச் சொல்லோடு மகரமெய் சேர்ந்து உண்ம், தின்ம் என்றாகி முன்னிலைப்பன்மை வினையைக் குறிக்கின்றது என்க. இம் மகரம், நீம் என்னும் முன்னிலைப் பன்மைப் பெயர்க்கண் உள்ள மகரமே யாகும். செந்தமிழில் நீம் என்னும் பெயர்க்கண் நின்ற மகரத்தை ஒழித்ததனான், வினைக்கண்ணும் உண்ம் என்பது போல மகரம் வரலாகாது என்று விலக்கப்பட்டது. அதனானே, சென்மே நின்மே என்பன போன்ற சொற்களில் மகரம், ஏகாரம் ஊர்ந்து வருதற்கு வந்தது என்பாராயினர். ஆண்டும் மகரம் பன்மையைக் குறிப்பதே. இவையிரண்டும் (ஔ, ம) தொல்காப் பியனார் காலத்தின் முன்னரே விலக்கப்பட்டனவாகும்.

குற்றியலுகரத்தை விலக்கியதன் காரணம்

முற்றிய லுகரமொடு பொருள் வேறு படாஅது
அப்பெயர் மருங்கின் நிலையிய லான (மொழி 35)

என்னும் சூத்திரத்தான், மொழி முதற் குற்றியலுகரம் முற்றிய லுகரமாக ஒலிக்கப்படினும், பெயர்ச் சொற்கண்ணே நிற்றலின் பொருள் வேறுபடுதல் இல்லை என்பதை அறிவித்தார். அதனான், மொழியிறுதிக் குற்றியலுகரமும் முற்றியலுகரமாக ஒலிக்கும் என்பதும், அவ்வாறு ஒலித்தல் (முன்னிலை) வினைச் சொல்லின் கண்ணே என்பதும், ஆண்டுப் பொருள் வேறுபடும் என்பதும் போதருதலின், அச்சூத்திர வுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'காதுகட்டு கத்து முருக்கு தெருட்டு என்பன முற்றுகரமும் குற்றுகரமுமாய்ப் பொருள் வேறுபட்டு நின்றாற் போல(ாது) நுந்தை என்று குவித்து முற்றக் கூறியவிடத்தும் இதழ்குவியாது குறையக்கூறிய விடத்தும் ஒரு பொருளே தந்தவாறு காண்க என்று எழுதியுள்ளார். இதனால், காது கட்டு முதலிய சொற்கள் குற்றியலுகரமாய் ஒலிக்குமிடத்தில் பெயர்ச் சொற்கள் என்பதும், முற்றுகரமாய் ஒலிக்குமிடத்தில் வினைச்சொற்கள் என்பதும் அவர் கருத்தாதல் அறியப்படும்.

காது கட்டு முதலிய சொற்கள் முன்னிலைக்கண் முற்றுகர மாதலின், 'குற்றியலுகரத் திறுதியும்...தோன்றா' என்று ஆசிரியர் கூறினார் என்றலே அமைதி நிற்க.

ஞநவக்களை விலக்கியதன் காரணம்

வகாரம், அவ் இவ் உவ் என்னும் சுட்டுக்களிலும், தெவ் என்னும் பெயர்ச் சொல்லிலுமன்றி வருதலின்மையின் அது வாராதென்று விலக்கப்பட்டது. ஞகாரம் உரிஞ் என்னும் தொழிற் பெயர் ஒன்றன்கண்ணும், நகாரம் வெரிந் என்னும் பெயர்சொற் கண்ணும் பொருந் என்னும் தொழிற்பெயர் ஒன்றன் கண்ணுமே வரும் ஆகலின் அவையும் வினைக்கண் வாரா என்று விலக்கப் பட்டன. ஞநக்கள் முன்னிலை யேவற்கண் வரும் என்றும் ஆண்டு உகரம் பெறும் என்றும் நன்னூலார் கூறியாங்கு இவ் வாசிரியர் கூறாமையின், ஞநக்கள் தொழிற் பெயர்க்கணன்றி முன்னிலை வினைக்கண் வாரா என்பது அறியலாகும்.

சிவ.

''இளம்பூரணர் குற்றியலுகர வீறு வருமொழி வல்லெழுத்து மிக்கு முடிதலும் கொள்க எனக் கூறி, கூட்டுக் கொற்றா என்ற உதாரணம் ஒன்றனையே கூறினர்'' என்றார் திரு—அடிக ளாசிரியர். அவரே இளம்பூரணர் உரையில் வந்த கூட்டுக் கொற்றா என்பதற்குச் சுவடி வேறுபாடாக,

(1) கூடு கொற்றா கூடுக்கொற்றா

(2) கூட்டு கொற்றா கூட்டுக் கொற்றா

என்பனவுளவாகக் குறிப்பிட்டுள்ளார் எனவே மேற்காட்டிய இரண்டு பாடங்களுள் ஒன்றைக் கொள்ளலாம் இரண்டையும் கொள்வதில் தவறில்லை.

தெவ் என்னும் ஒரு சொல் அன்றி வேறு வகர ஈற்றுப் பெயர்ச் சொல்லோ வினைச் சொல்லோ இல்லை சுட்டுப் பெயர்களாக அவ் இவ் உவ் என்பனவுண்டு தெவ் என்பது பகை என்னும் பொருளது. இதனை எடுத்தல் ஓசையாற் சொல்லப் பகைகொள் என வினையாம். இதன் அடியாகத் தெவ்வர் என்னும் பெயர்ச் சொல்லும் தெவ்வு தெவ்வினான், தெவ்வுவி, தெவ்வுவித்தான் முதலிய வினைச் சொற்களும்

உருவாம் நச்சினார்க்கினியர் வினையியல் 27ஆம் நூற்பாவில் இச் சொற்களைக் கூறுதல் காண்க.

தெவ்வுதல் என்பதற்கு முகத்தல் என்னும் பொருளும் உண்டு "நீர்த் தெவ்வும் நிறைத் தொழுவர்" என மதுரைக் காஞ்சியில் (8) வருவது காண்க. தெவு தெவ்வு ஆயிற்று

உயர்திணைப் பெயர் புணருமாறு

154* உயிரீ றாகிய உயர்திணைப் பெயரும்
புள்ளி யிறுதி உயர்திணைப் பெயரும்
எல்லா வழியும் இயல்பென மொழிப. (11)

ஆ. மொ.

இல.

High class nouns ending in vowels and in consonant stand unchanged in all ways and relations.

க. சு.

The nouns of the personal class ending in vowels, and the nouns of the personal class ending in non-vocalised consonants, manifest no change in all relationship; so it is said.

பி இ. நூ.

நன். 159

......உயர்திணைப் பெயர்கள் ஈற்றுமெய்
வலிவரின் இயல்பாம்; ஆவி யரமுன்
வன்மை மிகா சிலவிகாரமாம் உயர்திணை

இல. வி. 71

......உயர்திணைப் பெயர்கள் ஈற்றுமெய்
வலிவரின் இயல்பாம் அவற்று ஈற்று உயிர்முன்
வன்மை மிகா; சில விகாரமாம் உயர்திணை

* 'ராசராசன்+புரி' என்பது ராசராசபுரி என னகரம் கெட்டது. உயிரீறாகிய உயர்திணைப் பெயரும் என்னும் சூத்திரத்துள்ள விகற்பாற் கொள்க என்பர் தக்கயாகப் பரணி உரையாசிரியர்—திரு. அடிகளாசிரியர் குறிப்பு.

முத்து. 192

இருவழியினும் உடல் உயிரையும் இறுதியாம்
உயர்திணை முனர்எலாம் உற இயல்பாகும் [3]

இளம்.

இது, உயர்திணைப் பெயர் *நான்கு கணத்துக் கண்ணும் இருவழியும் முடியுமாறு உணர்த்துதல் நுதலிற்று

(இ—ள்) உயிர் ஈறு ஆகிய உயர்திணைப் பெயரும்-உயிர் ஈறாகிய உயர்திணைப் பெயர்களும், புள்ளி இறுதி உயர்திணைப் பெயரும்—புள்ளியிறுதியுடைய உயர்திணைப் பெயர்களும், எல்லா வழியும் இயல்பு என மொழிப—நான்கு கணத்தினும் அல்வழியும் வேற்றுமையுமாகிய எல்லாவிடத்தும் இயல்பாம் என்று சொல்லுவர்,

எ—டு : நம்பி எனவும் அவன் எனவும் [1]நிறுத்தி அல்வழிக் கண் குறியன் சிறியன் தீயன் பெரியன் எனவும், ஞான்றான் நீண்டான் மாண்டான் எனவும்; யாவன் வலியன் எனவும்; அடைந்தான் ஔவியத்தான் எனவும்; வேற்றுமைக்கண் கை செவி தலை புறம் எனவும்; ஞாற்சி நீட்சி மாட்சி எனவும்; யாப்பு வலுமை எனவும், அடைபு ஔவியம் எனவும் ஒட்டுக. ஒருவென் என [2]நிறுத்திக் குறியென் சிறியென் எனவும், கை செவி தலை புறம் எனவும் தன்மைப் பெயர்க்கண்ணும் ஒட்டுக.

உயிரீறு [3]புள்ளியிறுதி என்றதனால், உயர்திணைப் பெயருள் இயல்பன்றி முடிவன வெல்லாம் கொள்க. [4]பல் சான்றார், கபிலபரணர், இறைவ நெடு வேட்டுவர், [5]மருத்துவ மாணிக்கர் [6]பல்லரசர் என இவை ஈறு கெட்டு முடிந்தன.

சு.வே:

1. நிறுத்து
2. நிறுத்து
3. புள்ளியீறு
4. பலசான்றார்
5. மருத்துவ மாணி
6. பல வரைசர்

** கோலிகக் கருவி, [7]வண்ணாரப் பெண்டிர், ஆசீவகப் பள்ளி என இவை ஈறுகெட்டு வல்லெழுத்து மிக்கன.

*** [8]குமர கோட்டம் குமரக்கோட்டம், பிரமகோட்டம் பிரமக்கோட்டம் என இவை ஈறுகெட்டு வல்லெழுத்து உறழ்ந்து முடிந்தன. பிறவும் அன்ன.

எல்லாம் என்றதனால் [9]உயர்திணைச் சொல் இயல்பாயும் திரிந்தும் முடிவன கொள்க. உண்ப சான்றார், உண்டார் சான்றார், [10]உண்பேன் பார்ப்பேன் என இவையியல்பு. [11]உண்டேஞ் சான்றேம் [12]உண்டேம் நாம் என இவை திரிந்தன. பிறவு மன்ன.

நச்.

இஃது உயர்திணைப் பெயர் வன்கணம் மென்கணம் இடைக்கணம் உயிர்க்கணம் என்னும் நான்கு கணத்தினும் இருவழியும் முடியுமாறு கூறுகின்றது.

(இ—ள்) உயிரீறாய் வந்த உயர்திணைப் பெயர்களும் புள்ளியீற்றினையுடைய உயர்திணைப் பெயர்களும், நான்கு கணத்து அல்வழியும் வேற்றுமையுமாகிய எல்லா இடத்தும், இயல்பாய் முடியும் என்று கூறுவர் புலவர்; எ—று.

---

7. வண்ணாரப் பண்டி, வண்ணாரப் பாடி
8. குமார கோட்டம்
9. உயர்திணை வினைச்சொல்
10. உண்பென் பார்ப்பென்
11. உண்டனெஞ் சான்றேம்
12. உண்டே நாம்

* நான்கு கணம் : வன்கணம், மென்கணம், இடைக்கணம், உயிர்க்கணம் என்பன. கணம்—கூட்டம்.
பலர் + சான்றார், கபிலன் + பரணன், இறைவன் + நெடுவேட்டுவன், மருத்துவன் + மாணிக்கன், பலர் + அரசர்.

** கோலிகன், வண்ணாரன், ஆசீவகன். குமரன், பிரமன். தன்மையிடம் உயர்திணைக்குரியதாதலின் உண்பேன் உண்டேம் எனத் தன்மை யொருமை தன்மைப் பன்மை வினையாலணையும் பெயர்கள் காட்டப்பட்டன. உண்பேனாகியயான், உண்பேமாகிய யாம் எனப் பொருள் கொள்க. நச். வினையாகக் கொள்வர். அதுவும் ஆம்.

வன்கணம் ஒழிந்த கணங்களை ஞ ந ம ய வ (எழு. 144) என்பதனான் முடிப்பாரும் உளர். அது பொருந்தாது இவ்வாசிரியர் உயர்திணைப் பெயரும் விரவுப் பெயரும் எடுத்தோதியே முடிப்பாராதலின்.

எ—டு : நம்பி அவன் எனவும், நங்கை அவள் எனவும் நிறுத்தி, அல்வழிக்கண் குறியன் சிறியன் தீயன் பெரியன் எனவும்; குறியள் சிறியள் தீயள் பெரியள் எனவும்: ஞான்றான் நீண்டான் மாண்டான் எனவும்; யாவன் வலியன் எனவும், யாவள் வலியள் எனவும்; அடைந்தான் ஆயினான் ஔவியத்தான் எனவும்; அழகியள் ஆடினாள் ஔவியத்தாள் எனவும் ஒட்டுக.

ஒருவேன் எனத் தன்மைப் பெயர்க்கண்ணும் குறியேன் சிறியேன் தீயேன் பெரியேன் எனவும், கை செவி தலை புறம் எனவும் ஒட்டுக. நீ முன்னிலை விரவுப் பெயராதலின் ஈண்டைக் காகா.

இனி உயிரீறு புள்ளியிறுதி என்ற மிகையானே உயர்திணைப் பெயர் திரிந்து முடிவனவும் கொள்க. கபில பரணர், இறைவ நெடு வேட்டுவர், மருத்துவ மாணிக்கர் என னகர வீறு கெட்டு இயல்பாய் முடிந்தன. ஆசீவகப் பள்ளி *நிக்கந்தக் கோட்டம் என இவை அவ்வீறு கெட்டு ஒற்றுமிக்கு முடிந்தன. ஈழவக்கத்தி வாணிகத்தெரு அரசக் கன்னி கோலிகக் கருவி என இவை ஒருமையீறும் பன்மையீறும் கெட்டு மிக்கு முடிந்தன. குமர கோட்டம் குமரக் கோட்டம், பிரம கோட்டம் பிரமக் கோட்டம் என இவை ஈறு கெட்டு வல்லெழுத்து உறழ்ந்தன.

வண்ணாரப் பெண்டிர் இது மிக்கு முடிந்தது. பல்சங்கத்தார் பல்சான்றோர் பல்லரசர் என்றாற் போல்வன ரகரவீறும் அதன் முன்னின்ற அகரமும் கெட்டுப் பிற செய்கைகளும் பெற்று முடிந்தன.

இனி எல்லாவழியும் என்றதனான் உயர்திணை வினைச் சொல் இயல்பாயும் திரிந்தும் முடிவன எல்லாங் கொள்க.

* நிக்கந்தன் + கோட்டம், ஈழவன் + கத்தி, வாணிகன் + தெரு, அரசன் + கன்னி. (ஈழவர் வாணிகர், அரசர் எனப் பன்மைக்கும் கொள்க.)

உண்குஉண்டு சேறுவருது உண்பல் உண்டேன் உண்பேன்என்னும் தன்மை வினைகளைக் கொற்றா சாத்தா தேவா பூதா என்பன வற்றோடு ஒட்டுக. உண்டீர் சான்றீர் பார்ப்பீர் என முன்னிலைக் கண்ணும், உண்ப உண்டார் சான்றார் பார்ப்பார் எனப் படர்க் கைக் கண்ணும் ஒட்டுக. இவை இயல்பு. உண்டனெஞ் சான்றேம் உண்டே நாம் என்றாற் போல்வன திரிந்து முடிந்தன. பிறவும் அன்ன.

சுப்பிர.

''உயிரீறு புள்ளியிறுதி என்றதனால்...ஈறுகெட்டு வல்லெழுத்து உறழ்ந்து முடிந்தன'' என்றனர் இளம்பூரணர். அவரைப் பின்பற்றினர் நச்சினார்க்கினியர். இவையெல்லாம் 482 ஆவது (உயிரும் புள்ளியும் இறுதியாகி) சூத்திரத்துள்ள 'அன்னவை யெல்லாம் மருவின் பாத்திய, புணரியல் நிலையிடை உணரத்தோன்றா' என்றதனாற் கொள்ளப்படும் ஆதலால், உரைகாரர்கள் ஈண்டு அவற்றைக் கொள்ள வேண்டுவதின்று.

'எல்லாம் என்றதனால்...உண்டே நாம் என இவை திரிந்தன' என்றனர் இளம்பூரணர்; அவரைப் பின்பற்றினர் நச்சினார்க் கினியர். இதனை ''அல்வழி யெல்லாம் மெல்லெழுத்தாகும்'' (எழு. 314) என்ற சூத்திரத்தானும் அச்சூத்திரத்துரையானும் பெறுதல் இயலுமாதலான் ஈண்டு அவர் அவ்வாறு கொள்ள வேண்டுவதின்று.

வேங்கட.

உரையாசிரியர்கள், 'உயிரீறு புள்ளியிறுதி' என்றதனால் உயர்திணைப் பெயர்கள் திரிந்து முடிவனவும் கொள்க' என்று எழுதி, மூவகைத் திரிபிற்கும் உதாரணம் காட்டினர். அதுவே யன்றிப் பின்னரும், 'எல்லா வழியும்' என்றதனால், உயர்திணைச் சொல் இயல்பாயும் திரிந்தும் முடிவன கொள்க' என்றும் எழுதினர். ஆசிரியர் 'எல்லா வழியும் இயல்பென மொழிப' என்று தொல்லாசிரியர் கொள்கையைக் கூறி, அவ்வாறு இயல்பென மொழிவராயினும், இகர ஈற்றுப் பெயர் திரியுமிடங் களைத் தாம் செய்யுட்களில் கண்டு, அதனை முற்சூத்திரத்தில், 'இகர இறுபெயர் திரிபிடனுடைத்தே' என்று கூறுகின்றார். உரையாசிரியர்கள் காட்டுதல்போல உயர்திணைப் பெயர்கள்

பல மூன்று திரிபும் பெறுமாயின், அவற்றைக் கூறாது விடுவாரல்லர். இகர வீறு திரிபு எய்துதலைக் கூறினவர் பிற ஈறுகளைக் குறிக்காது விடுவாரோ? ஆதலின், உயர்திணைப் பெயர்களுள் இகர வீற்றுப் பெயர் ஒன்று ஒழிய மற்றை ஈறுகள் எல்லாம் இயல்பாய் முடியும் என்றலே ஆசிரியர் கருத்தாதல் பெறுதும். அன்றியும், ஆசிரியர் உயர்திணைப் பெயர்களுக்கு விதி கூறுமிடத்தில், உரையாளர் வினைச் சொல் திரிதலைக் காட்டுதலும் அமையாது.

வெள்ளை.

இவற்றுள் வன்கணம் ஒழிந்தவற்றை 'ஞ ந ம ய வ' (எழு. 144) என்பதனால் முடிப்பாரும் உளர். உயர்திணைப் பெயரையும் விரவுப் பெயரையும் எடுத்தோதியே முடித்தல் ஆசிரியர் வழக்கமாகலின் இச்சூத்திரத்தில் அடக்குதலே பொருத்தம் உடையதாம்.

அதற்குச் சிறப்பு விதி.

155. அவற்றுள்
[1]இகர ஈற் றுப்பெயர் திரிபிடன் உடைத்தே (12)

ஆ. மொ.

இல.

Among those
The noun ending in 'i' many have
place of change

க. சு.

Among them
There is place for change
with nouns ending in-i.

பிஇ. நா.

நன். 195.

சில விகாரமாம் உயர்திணை.

சு. வே: 1 இகர இறு பெயர் (நச்)

இல வி. 71.

சில விகாரமாம் உயர்திணை

முத்து. 19 .

இ ஐ **இறுதி முன் வன் கணம் மிகுமே**

இளம்.

இது உயர்திணைப் பெயருட் சிலவற்றிற்கு எய்தாதது எய்து வித்தல் நுதலிற்று.

(இ-ள்) அவற்றுள்—மேற் சொல்லப்பட்ட உயர்திணைப் பெயருள், இகர ஈற்றுப் பெயர்—இகரமாகிய இறுதியையுடைய பெயர், திரிபு இடன் உடைத்து—திரிந்து முடியும் இடமும் உடைத்து.

உரையிற் கோடல் என்பதனான், இது மிக்க திரிபு என்பது கொள்ளப்படும்.

எ—டு : எட்டிப் பூ, எட்டிப் புரவு, காவிதிப் பூ, காவிதிப் புரவு, நம்பிப்பூ, நம்பிப்பேறு என வரும்.

இடனுடைத்து என்பதனான், இகர ஈறு அன்றிப் பிற ஈறும் ஈறு திரியாது வல்லெழுத்து மிக்கு வருவன ஈண்டுக் கொள்க. தினைப் பூ, தினைப் புரவு என வரும்.

நச்.

இஃது உயர்திணைப் பெயருள் சிலவற்றிற்கு எய்தாதது எய்து வித்தது.

(இ—ள்.) முற் கூறிய உயர்திணைப் பெயர்களுள் இகர ஈற்றுப் பெயர், இருவழியும் திரிந்து முடியும் இடன் உடைத்து; எ—று.

எ-டு : எட்டிப்பூ காவிதிப்பூ நம்பிப்பேறு என இவ்வுயர் திணைப் பெயர்கள் வேற்றுமைக்கண் மிக்கு முடிந்தன: எட்டி காவிதி என்பன தேய வழக்காகிய சிறப்புப் பெயர். எட்டி மரம் அன்று. அஃது 'எட்டி குமரன் இருந்தோன் தன்னை' (மணி. 4:58) என்பதனான் உணர்க. இவை எட்டியதுபூ எட்டிக்குப்பூ என விரியும் இனி நம்பிக் கொல்லன் நம்பிச் சான்றான் நம்பித்துணை நம்பிப்பிள்ளை எனவும், செட்டிக் கூத்தன் சாத்தன் தேவன் பூதன் எனவும் அல்வழிக்கண் உயர்

திணைப் பெயர் மிக்கு முடிந்தன. இடனுடைத் தென்றதனான் இகர ஈறல்லாதனவும் ஈறு திரியாது நின்று வல்லெழுத்துப் பெறுதல் கொள்க. நங்கைப் பெண் நங்கைச் *சானி என அல்வழிக்கண் சிறுபான்மை ஐகார ஈறு மிக்கன. இவ்வீற் றஃறிணைப் பெயர் மிக்கு முடிதல் உயிர்மயங்கியலுட் கூறுப.

வேங்கட.

'இடனுடைத்து' என்பதனால், பிறவீறு திரிந்து முடிதல் கொள்க' என்றெழுதி, தினைப்பூ தினைப் புரவு என்பனவற்றை உதாரணங்காட்டினர் இளம்பூரணர். இச்சூத்திரத்திற் கூறுவது, மேற் சூத்திரத்திற் கூறப்பட்டவற்றுள் ஒன்றற்குப் புறனடையாகலின், அஃறிணைப் பெயர்களை ஈண்டுக் காட்டுதல் தகாது என்று கொண்டு, நங்கைப்பெண், நங்கைச் சானி என்று ஐகாரவீற்று உயர்திணைப் பெயரைக் காட்டினார் நச்சினார்க்கினியர்.

இடனுடைத்து என்றது, இத்திரிபு, பெரும்பான்மையன்று; ஒரோவழிவரும் என்னும் பொருளது. இதனை,

''ஆனொற் றகரமொடு நிலையிடன் உடைத்தே'' (எழு. 232)
''ழகர உகரம் நீடிட னுடைத்தே'' (எழு 2[illegible])
''வருமிட னுடைத்தே மெல்லெழுத்தியற்கை'' (எழு. 300)

என்று வருமிடங்களிற் பொருள் நோக்கி அறியலாகும். இவற்றால் 'இடனுடைத்து' என்றதனால் ஐகாரவீறு திரிதலைக் காட்டுதல் பொருந்தா தென்பது போதரும்

சிவ.

உயிரீறாகிய உயர்திணைப் பெயரும்
....
எல்லா வழியும் இயல்பென மொழிப (எழு. [illegible]54)

என்னும் நூற்பாவை அடுத்து இந்நூற்பா கூறப்படுதலின் இந்நூற்பாவில் உள்ள திரிபு என்பதற்கு மிக்க திரிபு எனக் கொள்ளு

*சானி என்பது பெண்பாற் பெயரை அடுத்து வருவதோர் இடைச் சொல் என்னலாம். இக்காலத்தும் துரைச்சானியம்மா என்ற வழக்கு இருத்தலைக் காணலாம். (சிவ)

தல்வேண்டும்; இகர உயிரீறு பற்றியதாதலின் கெடுதலோ வேறாகத் திரிதலோ கொள்வதற்கில்லை.

எட்டி என்பது வணிகருட் சிறந்தோர்க்கு அரசராற் கொடுக்கப்படும் பட்டப்பெயர். காவிதி என்பது உழுவித்துண்ணும் வேளாளருட் சிறந்தோர்க்குக் கொடுக்கப்படும் பட்டப்பெயர். காவிதி என்பது வரியிலாரைக் குறிக்கும் என்பர் சிலப்பதிகார அரும்பதவுரைகாரர். (சிலப். 22:9) எட்டி காவிதி என்னும் இப்பட்டப் பெயர்கள் அவற்றைப் பெறும் ஆடவர்க்கு வழங்கியமையால் உயர்திணைப் பெயர்களாம். இவை எட்டி+பூ, காவிதி+பூ என வருமொழி வல்லெழுத்தோடு புணரும்வழி எட்டிப்பூ, காவிதிப்பூ என வல்லெழுத்து மிக்குப் புணரும்.

'இடனுடைத்து என்றதனால்......திணைப்பூ திணைப்புரவு எனவரும்' என இளம்பூரணர் எழுதுவது கொண்டு திணை என்பதுவும் அரசராற் கொடுக்கப்பட்ட சிறப்புப் பெயர் எனக் கொள்ளலாம். எனவே அது உயர்திணைக்குரியதாகும். அதனல் திணை+பூ=திணைப்பூ என வல்லெழுத்து மிக்குவரும். சுப்பிரமணியசாஸ்திரியாரும் திணை என்பதை உயர்திணைப் பெயர் என்றே எழுதினர். இப்படிக் கொள்வதால் வேங்கடராசுலு ரெட்டியார் திணை என்பதை அஃறிணைப் பெயராகக் கொண்டு இளம்பூரணரை மறுத்தது பொருந்தாது என்பது பெறப்படும்.

விரவுப் பெயருள் இயல்பு

156. அஃறிணை விரவுப்பெயர் இயல்புமா ருளவே (12)

ஆ. மொ.

இல.

Non-class Common noun may stand with out any change.

க. சு.

Those (personal) nouns which are also used as non-personal nouns do sometimes remain unchanged, too.

பி. இ. நூ.

நன். 159

பொதுப் பெயர்......ஈற்றுமெய்
வலிவரின் இயல்பாம் ஆவி யரமுன்
வன்மை மிகா

இல. வி. 71.

பொதுப் பெயர்......ஈற்றுமெய்
வலிவரின் இயல்பாம் அவற்றீற்று உயிர்முன்
வன்மை மிகா.

முத்து. 195.

இருமைக் கும்பொது இயல்பாத லும்முள

இளம்.

இது, விரவுப்பெயர் முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ—ள்.) அஃறிணை விரவுப் பெயர்—உயர்திணையோடு அஃறிணை விரவும் விரவுப் பெயர், இயல்பும் உள—இயல்பாய் முடிவனவும் உள; இயல்பின்றி முடிவனவும் உள. இயல்பின்றி முடிவன இன்னவாறு முடியும் எனமேல் அகத்தோத்தினுட் கூறப்படும்*

எ-டு: சாத்தன் குறியன் சாத்தன் குறிது எனவும், சாத்தன் கை எனவும் இவ்வாறு அல்வழியினும் வேற்றுமையினும் நான்கு கணததோடும் ஒட்டிக்கொள்க.

நச்.

இது விரவுப் பெயருள் இயல்பாய் முடிவனவும் உள என்கின்றது.

(இ—ள்) உயர்திணைப் பெயரோடு அஃறிணை விரவிய விரவுப் பெயர், இயல்பாய் முடிவனவும் உள; உம்மையான் இயல்பின்றி முடிவனவும் உள; எ—று.

---

*னகர ஈறுபற்றிய விதிகளை நூற்பா எண் 348, 349—351, 353, 354இல் காண்க.

ணகரவீறுபற்றிய விதியினை நூற்பா எண் 304இல் காண்க.

ம்கரவீறுபற்றிய விதிகளை நூற்பா எண் 322—327

ஈகாரஈறுபற்றிய விதிகளை நூற்பா எண் 251, 254இல் காண்க.

உயர்திணைப் பெயரோடு அஃறிணை சென்று விரவிற் றென்றது என்னை, சொல்லதிகாரத்து 'இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமையின்' (தொல். சொல். 179) என்று சூத்திரம் [1]செய்வாரால் எனின், அதுவும் பொருந்துமாறு கூறுதும். சாத்தன் சாத்தி, முடவன் முடத்தி எனவரும் விரவுப்பெயர்க்கண் உயர்திணைக்கு உரித்தாக ஓதிய ஆண்பாலும் பெண்பாலும் உணர்த்தி நின்ற ஈற்றெழுத்துக்களே அஃறிணை [2]யாண்பாலும் பெண்பாலும் உணர்த்திற் றென்றல் வேண்டும். என்ன? அஃறிணைக்கு ஒருமைப்பாலும் பன்மைப்பாலும் உணர்த்தும் ஈறன்றி ஆண்பாலும் பெண்பாலும் உணர்த்தும் ஈறுகள் உளவாக ஆசிரியர் ஓதாமையின்; அங்ஙனம் உயர்திணை யிருபாலும் உணர்த்தும் ஈறுகள் நின்றே அஃறிணை ஆண்பாலையும் பெண் பாலையும் உணர்த்துதலின், அஃறிணை உயர்திணையோடு சென்று விரவிற்றென்று அவற்றின் உண்மைத்தன்மை தோற்றம் கூறுவான் ஈண்டுக் கூறினார். இவ்வாறே விளிமரபின்கட் 'கிளந்த விறுதி யஃறிணை விரவுப் பெயர்' (எழு. 150) என்புழி யும் ஆசிரியர் உயர்திணை விரவிய விரவுப் பெயர் என ஆண்டும் உண்மைத் தன்மைத் தோற்றம் கூறுவர். மாணக்கன் இனிது உணர்தற்கு இவ்வாறு விரவுப் பெயரினது உண்மைத் தன்மைத் தோற்றம் இரண்டு அதிகாரத்தும் கூறி அவ்விரவுப் பெயர் வழக்கின்கண் இருதிணைப் பொருளும் உணர்த்தி இருதிணைச் சொல்லாய் நிற்றற்கும் ஒத்த வுரிமையவாம் எனப் புலப்பட நிற்குமாறு [3]காட்டினார் என்று உணர்க.

இனி, அவை அல்வழிக்கண் இயல்பாய் நிற்குமாறு :— சாத்தன் கொற்றன் சாத்தி கொற்றி என நிறுத்திக் குறியன் சிறியன் தீயன் பெரியன் குறியள் சிறியள் தீயள் பெரியள் எனவும், ஞான்றான் நீண்டான் மாண்டான் யாவன் வலியன் ஞான்றாள் நீண்டாள் மாணடாள் யாவள் வலியள் எனவும், அடைந்தான் ஒளித்தான் அடைந்தாள் ஒளித்தாள் எனவும் நான்கு கணத் தோடும் [4]ஒட்டி உணர்க. இனி வேற்றுமைக்கண் கை செவி

சு. வே:

1. செய்வாராதலின்
2. ஆண்பெண் உணர்த்திற்றென்றல்
3. கூறினார்.
4. ஒட்டுக.

தலை புறம் எனவும், ஞாற்சி நீட்சி மாட்சி யாப்பு வன்மை அழகு ஔவியம் எனவும் ஒட்டுக. இவற்றுள் னகாரம் நிற்பத் தகார நகாரம் வந்துழித் திரியும் உதாரணம் ஈண்டுக் கொள்ளற்க. இனிச் சாத்தன் குறிது சாத்தி குறிது என அஃறிணை முடிபு ஏற்பனவும் கொள்க. இவற்றொடு வினைச் சொல் தலைப் பெய்ய இவை இருதிணைக்கும் உரியவாம். ஆண்டு நாற்பத் தெட்டுச் சூத்திரங்களான் முடிவதனை ஈண்டுத் தொகுத்தார். இஃது உயர்திணைக்கும் ஒக்கும். உம்மையான் இயல்பின்றி முடிவன னகார வீற்றுட் காட்டுதும்.

சுப்பிர.

முற்சூத்திரங்களில் உயர்திணைப்பெயர் நிலைமொழியாய் இருக்கும்போதுள்ள புணர்ச்சி கூறப்பட்டமையான், இச்சூத் திரத்துள் அஃறிணைப்பெயர் நிலைமொழியாய் இருக்கும் போதுள்ள புணர்ச்சியைக் கூறுதற்கு விரவுப்பெயர் எனக்கூறின் சாலும், அஃறிணை என்ற அடைமொழி வேண்டா எனின், அவ் வாறாயின் உம்மையால் உயர்திணைப் பெயரும் இயல்பின்றி வருவனவும் உள என அறியப்படும்; அஃது ஆசிரியர்க்கு உடன் பாடன்று.

அவ்வாறாயின் அஃறிணை என்றாற் சாலும், விரவுப்பெயர் என்றல் வேண்டாம் எனின், அவ்வாறாயின் விரவுப் பெயர் அல்லா அஃறிணைப் பெயர்க்கும் இச்சித்திரம் புணர்ச்சி விதிக் கின்றது எனக் கருதப்படும்; அஃது உடன்பாடன்று.

சிவ.

பொதுப் பெயர் விரவுப்பெயர் என்பன ஒரு பொருளன, எனினும் விரவுப் பெயர் என்பது இரண்டு வகைப்படும்; உயர்திணை விரவுப் பெயர் அஃறிணை விரவுப் பெயர் என்பன அவை. உயர்திணையானது அஃறிணையோடு சென்று விரவின் அது உயர்திணை விரவுப் பெயர் எனப்படும். அஃறிணையானது உயர்திணையோடு சென்று விரவின் அது அஃறிணை விரவுப் பெயர் எனப்படும். உயர்திணை அஃறிணை என்பனவற்றைச் சொற்களின் இறுதி எழுத்துகளைக் கொண்டே அறிய வேண்டும். உயர்திணை ஆண்பாலுக்குரிய இறுதி எழுத்து னகர ஒற்று; பெண்பாலுக்குரிய இறுதி எழுத்து ளகர ஒற்று.

அவன், அவள் எனக் கண்டு கொள்க. பெண்பாலுக்கு இகரமும் இறுதி எழுத்தாகும்; தோழி எனக்கண்டு கொள்க. அவன் அவள் தோழி என்பன உயர்திணை. *சாத்தன் சாத்தி என்பனவற்றில் ஆண்பாலுக்குரிய னகர ஈறும் பெண்பாலுக்குரிய இகர ஈறும் உள்ளன. எனவே இவை உயர்திணைக்குரியனவாம். இவற்றோடு காளைமாடு பசுமாடுகளைக் குறிக்க வேறு சொற்களை வேண்டாமல் அவற்றையே கொண்டமையால் உயர்திணையில்—உயர்திணையோடு அஃறிணை விரவியதாகக் கொள்ள வேண்டும். அதாவது காளைமாடு சாத்தன் என்றதில் விரவியதாகவும் பசுமாடு சாத்தி என்றதில் விரவியதாகவும் கொள்ளல் வேண்டும். அதனால் சாத்தன் சாத்தி என்பன அஃறிணை விரவுப் பெயர்.

இனி நீ, நீயிர், அன்னை, அத்தை முதலிய சொற்கள் உயர் திணைக்குரிய ஈறு உடையன அல்ல; அதனால் இவை அஃறிணைக்குரியனவாம். (அஃறிணைக்கு ஒருமை பன்மை ஈறுகள் உண்டே தவிர ஆண் பெண் பாலுணர்த்தும் ஈறுகள் இல்லை) இவை உயர்திணையிடத்தும் வழங்கப் படுவன. ஆதலின் இவற்றை உயர்திணை விரவுப் பெயர் என்னல் வேண்டும். உயர்திணை அஃறிணையோடு விரவிய பெயர் என்னல் வேண்டும்.

மேற்காட்டிய விளக்கத்தைச் சேனாவரையர் விளி மரபு 33ஆம் நூற்பாவில், "உயர்திணைப் பெயரும் உயர்திணை விரவுப் பெயரும் விளி கொள்ளுமாறு உணர்த்துகின்றார்" என்று கூறியதால் தெளியலாம்,

சேனாவரையர் பெயர்களை உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர், உயர்திணை விரவுப் பெயர் அஃறிணை விரவுப் பெயர் என நான்காகவும் கொண்டுள்ளார் என அறியலாம்.

* விளக்கத்துக்காக நச். கூறியதை மீண்டும் எழுதலாயிற்று.

மூன்றாம் வேற்றுமை யுருபு

157. புள்ளி யிறுதியும் உயிரிறு கிளவியும்
வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையால்
தம்மின் ஆகிய தொழிற்சொல் முன்வரின்
மெய்ம்மை யாகலும் உறழத் தோன்றலும்
அம்முறை யிரண்டும் உரியவை யுளவே
வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும். (14)

ஆ. மொ.

இல.

By way of expounding the rules for the doubling of hard consonants after the ending of consonants and vowels of the standing words, they may be found two ways of, joining, which are 'standing natural' and 'having the optional appearance of consonants, when the verb, having the hard consonants as inilials, appears before the third case nominative.

It–Can be learnt in the chapter on cases.

க. சு.

It a noun (with its third case-marker dropped ends in a vowel or a non-vocalised consonant, and is followed by a verb which denotes its action (and) which begins with a plosive trat admits
its doubling, there exist two proper ways
(of sandhi)-no change, or the optional appearance oa consonants : one should study it
Carefully in ihe chapter on cases.

பி. இ. நு.

நன். 256.

புள்ளியும் உயிரும் ஆயிரு சொல்முன்
தம்மின் ஆகிய தொழில் மொழி வரினே
வல்லினம் விகற்பமும் இயல்பும் ஆகும்.

இல. வி. 76.

புள்ளியும் உயிரும் ஆயிரு சொல்முன்
தம்மின் ஆகிய தொழில்மொழி வரினே
வல்லினம் விகற்பமும் இயல்பும் ஆவனவுள.

முத்து. 196.

இனமாம் தொழிற்பெயர் எய்தின் வேற்றுமை
வழியியல் பாதலும் உறழ்தலும் ஆகும்.

இளம்.

இது மூன்றாம் வேற்றுமைத் திரிபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்) புள்ளியிறுதியும் உயிர் இறு கிளவியும்—புள்ளியீற்றுச் சொல்லும் உயிரீற்றுச் சொல்லும், வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையான்—வல்லெழுத்தினது மிகுதி மேற்சொல்லும் முறைமையான், தம்மின் ஆகிய தொழிற் சொல் முன்வரின்—அம்மூன்றாவதன் பொருளாகிய வினை முதற்பொருள்கள் தம்மான் உளவாகியவினைச் சொற்கள் தாம் அவற்றுமுன் வரின், மெய்ம்மையாகலும் உறழத் தோன்றலும் அ முறை இரண்டும் உரியவை உள—இயல்பாதலும் உறழத் தோன்றுதலுமாகிய அம்முறைமையினையுடைய இரண்டு செய்கையும் உரியன உள, வேற்றுமை மருங்கில் போற்றல் வேண்டும்—அவற்றை மேலே வேற்றுமைப் பொருட் புணர்ச்சி முடிபு சொல்லுமிடத்துப் போற்றியறிதல் வேண்டும்.

எ—டு : நாய்கோட்பட்டான் புலிகோட் பட்டான், சாரப்பட்டான், தீண்டப்பட்டான், பாயப்பட்டான் என இவை இயல்பு. சூர்கோட்பட்டான் சூர்க்கோட்பட்டான், வ்ளிகோட் பட்டான் வளிக்கோட்பட்டான் என இவை உறழ்ச்சி.

‡ புள்ளியீறு உயிரீறு என்றதனால், பேஎய் கோட்பட்டான் பேஎய்க் கோட்பட்டான் என்னும் உறழ்ச்சியுள் எகரப் பேறு கொள்க. 'உரியவை உள' என்றதனான், *பாம்பு கோட்பட்டான் பாப்புக்கோட்பட்டான் என்னும் உறழ்ச்சியுள் நிலை மொழி ஒற்றுத் திரியாமையும் திரிதலும் கொள்க.

---

‡ பிற்கூறவேண்டிய புள்ளியீற்றை முற்கூறியவதனான் என்பது கருத்து.

* சு. வே : பாப்புக் கோட்பட்டான் பாம்பு கோட்பட்டான்... ஒற்றுத் திரிதலும் திரியாமையும் கொள்க.

நச்.

இது மேல் உயிரீற்றிற்கும் புள்ளியீற்றிற்கும் வேற்றுமைக்கட் கூறும் முடிபு பெறாது நிற்கும் மூன்றாம் வேற்றுமை முடிபு கூறுகின்றது.

(இ—ள்) மூன்றாவதற்கு உரியவினை முதற் பொருளான் உளளாகிய தொழிற் சொல், புள்ளியீற்றுச் சொல் முன்னரும் உயிரீற்றுச் சொல் முன்னரும் வருமாயின், அவற்றுள் இயல்பாக லும் உறழத் தோன்றலுமாகிய அம்முறை இரண்டும் பெறுதற்கு உரிய உள ஆதலால், உயிர் மயங்கிய லுள்ளும் புள்ளி மயங்கிய லுள்ளும் வேற்றுமைப் புணர்ச்சிக்குச் சொல்லிய முறையான் விரும்பும் வல்லெழுத்து மிகுதியை, ஈண்டுக் கொள்ளற்க; எ—று.

மெய்ம்மை பட்டாங்கு ஆதலின் இயல்பாம்.

எ—டு : நாய் புலி என நிறுத்திக் கோட்பட்டான் சாரப்பட்டான் தீண்டப்பட்டான் பாயப்பட்டான் என வருவித்து இயல்பாயவாறு காண்க. சூர்கோட்பட்டான் சூர்க்கோட்பட்டான், வளிகோட்பட்டான் வளிக்கோட்பட்டான் சாரப்பட்டான் தீண்ட்ப்பட்டான் பாயப்பட்டான் என இவை உறழ்ந்தன. இவை நாற்பத் தெட்டுச் சூத்திரங்களான் முடிவன வற்றைத் தொகுத்தார்.

புள்ளியிறுதி, உயிரிறு கிளவி என்றதனாற் பேஎய் கோட்பட்டான் பேஎய்க் கோட்பட்டான் என எகரப் பேறும் உறழ்ச்சிக்குக் கொடுக்க. 'அம்முறையிரண்டும் உரியவை உளவே' என்றதனாற் பாம்புகோட்பட்டான் பாப்புக்கோட்பட்டான் என்னும் உறழ்ச்சியுள் நிலைமொழி ஒற்றுத் திரிதலும் கொள்க. இவ்வீறுகள் நாய்க்கால் தேர்க்கால் கிளிக்கால் என ஆண்டு வேற்றுமைக்கண் வல்லெழுத்து மிகுமாறு காண்க.

சுப்பிர.

இச்சூத்திரக் கருத்தில் நச்சினார்க்கினியர் இளம்பூரணரோடு மாறுபடாதிருப்பினும், சொன்முறையான் பொருளைக் கூறு மிடத்து வேறுபட்டனர். "வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையான் வேற்றுமை மருங்கில் போற்றல் வேண்டும்" என்ற தொடர்க்கு "வேற்றுமை மருங்கில் சொல்லிய முறையான்

வேண்டும் வல்லெழுத்து மிகுதி போற்றல்" என அந்நுவயங் கொண்டு "உயிர் மயங்கியலுள்ளும் புள்ளிமயங்கியலுள்ளும் வேற்றுமைப் புணர்ச்சிக்குச் சொல்லிய முறையான் விரும்பும் வல்லெழுத்து மிகுதியை ஈண்டுக் கொள்ளற்க" எனப் பொருள் கூறினர். இவ்வந்நுவயம் சூத்திரப் போக்கிற்கு மாறுபாடாயிருத்தலுடன், இவ்வாறு பொருள் கொள்ளின் இவ்விரண்டு அடிகளும் சூத்திரத்துள் மிகையாகும். ஆகலின் இளம்பூரணர் கொண்ட அந்நுவயமே சிறக்கும்

இச்சூத்திரம் மூன்றாம் வேற்றுமையுருபு தொக்கபெயர் நிலைமொழியாய் இருக்க வரும் புணர்ச்சியை உணர்த்துகின்றது என்றது எவ்வாறு அறியப்பட்டதெனின், "வேற்றுமை மருங்கின்" எனக் கூறப்பட்டமையானும், "தம்மினாகிய தொழிற் சொல்" எனக் கூறப்பட்டமையானும், வேற்றுமை வழியில் வினைமுதற் பொருள் மூன்றாம் வேற்றுமைக் குரித்தாகலானும் அவ்வாறு அறியப்பட்டதென்க.

வேங்கட.

தமிழ் மொழியின் இயல்பினை நோக்கி, கடிக்கப்பட்டான் என்பது போல்பவற்றை இரண்டு சொல்லாகக் கொண்டு இவ்வாறு கூறுதல் அமையுமாயினும், ஆசிரியர் செயப்பாட்டு வினையை உடன் பட்டிருத்தலின் அதனை ஒரு சொல்லாகக் கோடலே அவர் கருத்திற்கியைவது.

இனி, 'அம்முறையிரண்டும் உரியவை உளவே' என்றதனான், பாம்புகோட்பட்டான் பாப்புக்கோட்பட்டான் என்னும் உறழ்ச்சியுள் நிலை மொழி ஒற்றுத் திரிதலும் கொள்க' என்றனர் உரையாளர் இருவரும். 'உரியவையுள' என்றதனான் இயல்பாதற்கு உரியவையும், உறழ்ந்து வருதற்கு உரியவையும் உள என்பது போதருமேயன்றி. நிலைமொழித் திரிபு உண்டு என்பது போதருதல் இன்று. நிலைமொழி ஒற்றுத்திரிபு முன்னர்க் குற்றியலுகரப் புணரியலுள் 9 ஆம் சூத்திரத்தில் விதிக்கப்படுகின்றது.

நச்சினார்க்கினியர், "தம்மினாகிய...மிகுதி போற்றல்" என்று பிரித்துக் கூட்டிப் பொருள் கூறினார். இச்சூத்திரம் ஆற்றொழுக்காகப் பொருள் படுதலானும், இளம்பூரணர் நேரே

பொருள் கூறியுள்ளாராகலானும், இவ்வாசிரியர் இவ்வாறு சொற்களைச் சிதைத்துப் பிரித்துக் கூட்டுமாறு சூத்திரம் செய்வதிலர் ஆகலானும் அவர் பிரித்துக் கூட்டிப் பொருள் கூறியது வேண்டற் பாலதன்று.

'வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்' என்பதற்கு, 'இவ்வேறுபாடு போற்றியுணர வேண்டும்' என்பது பொருள். முன்னர்ச் சொல்லதிகாரத்தில் "அவைதாம், தத்தம் பொருள்" (115) என்னுஞ் சூத்திரத்தில் இவ்வாறே, 'வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்' என்று வந்துளதற்குச் சேனாவரையர் கூறியிருக்கும் உரை காண்க.

பி. கு.

நாய் கோட்பாட்டான் என்பது நாயால் கொள்ளப்பட்டான் என்று பொருள்படும். கோட்பாட்டான் என்பது கோள், பட்டான் என இருசொல் கூடியது. கோள்—கொள்ளுதல். கொள்ளுதல் தொழில் நிலைமொழியாகிய நாயினுடையது. படுதல் தொழில் ஒருவனுடையது. அவ்வொருவனுக்குப் படுதல் (கொள்ளப்படுதல்) தொழில் வந்தது நாயாலாம். அதனால் கோட்பட்டான் என்பதில் தன்னால் (நாயால்)—தன் தொழிலால் ஒருவனுக்கு விளைந்த (படுதல்) தொழில் இருத்தலின் கோட்பாட்டான் என்பது தம்மின் ஆகிய தொழிற்சொல் ஆயிற்று.

கோட்பாட்டான் என்பதில் பட்டான் என்பது தம்மினாகியசொல் என்றும், கோள் என்பது முதலாக இடைப்பிற வருவன தம்தொழிலாகும் என்றும் வெள்ளைவாரணனார் கூறினார்.

"ஈண்டு யகர ரகர ஈற்றுப் புள்ளிகளும் லகர இகரமும் ளகர இகரமுமாகிய உயிரீறுகளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இவ்வீறுகள் ஈண்டு மூன்றாம் வேற்றுமைக்குரிய வினைமுதற் பொருளில் நின்று அவற்றாலாகிய தொழிலை யுணர்த்தும் சொல்லை வருமொழியாக ஏற்றுள்ளன. இங்ஙனம் வருமிடத்தே தான் இயல்பும் உறழ்ச்சியுமாக நிற்கும். இவ்வீறுகளே பின்னர் புள்ளி மயங்கியலில் பொருட் புணர்ச்சியாக நிற்கும்பொழுது இயல்பின்றி மிகுந்தே வரும் எனக் கூறப்படுகின்றன. வேற்றுமை மருங்கில் போற்றல் வேண்டும் என்ற தொடருக்கு மேற்கூறிய வேற்றுமைப் புணர்ச்சி, பொருட்புணர்ச்சி ஆகிய இரண்டிடத்

திற்கும் உள்ள வேற்றுமையைப் போற்றியறிதல் வேண்டும் எனப் பொருள் காணின் சிறப்புடைத்தாகும் என்பது என் கருத்து''—கு. சுந்தரமூர்த்தி.

இரண்டாம் வேற்றுமைத் திரிபு

158. மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்
வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும்
இயற்கை மருங்கின் [1]மிகற்கை தோன்றலும்
உயிர்மிக வருவழி யுயிர்கெட வருதலும்
சாரியை [2]யுள்வழிச் சாரியை கெடுதலும்
சாரியை [3]யுள்வழித் தன் உருபு நிலையலும்
சாரியை இயற்கை உறழத் தோன்றலும்
உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்
அஃறிணை விரவுப்பெயர்க் கவ்வியல் நிலையலும்
மெய்பிறி தாகிடத் தியற்கை யாதலும்
அன்ன பிறவும் தன்னியல் மருங்கின்
மெய்பெறக் கிளந்து பொருள்வரைந் திசைக்கும்
ஐகார வேற்றுமைத் திரிபென மொழிப' (15)

ஆ. மொ.

இல.

The learned say that the variations of the 'ai' case (2nd case) are having the hard consonant instead of soft consonant, or vice versa having the appearance of consonant instead of standing natural, having the lose of vowel instead of retaining it, having the disappearance of the increment when it is proper to stand, having its sign where there is increment, having the variations in the appearance of consonant in the place of the incremnet, appearing always with the high class and non-class nouns and having the consonant with out change instead of having it changed.

சு. வே:

1, செயற்கை

2, 3. உளவழி

க. சு.

It is said that the different kinds of sandhi which take place between the standing and the coming words when the former is in the (second) case with the suffix-at or without it (are as follows):

(1) Insertion of dlosive instead of nasal

(2) Insertion of nasal instead of plosive,

(3) Occurrance of doubling in place of no change,

(4) absence of vowel where vowel should have been inserted

(5) absence of empty-morph where emptymorph should have occuted,

(6) Occurrence of the case-maeker along with the empty-morph,

(7) Occurrence of doubling in place of empty-morph,

(8) in variable occurrence of the case-marker with (the nouns of) the personal class,

(9) the same with the personal nouns used as non-personal nouns.

(10) absence of change in place where there ought to have been change, and similar (change).

பி: இ. நா.

நன். 255.

இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்
உயர்திணை யிடத்து விரிந்துந் தொக்கும்
விரவுப் பெயரின் விரிந்து நின்றும்
அன்ன பிறவும் ஆகும் ஐயுருபே.

இல. வி. 75.

மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்
....
ஐகார வேற்றுமைத் திரிபென மொழிப.

(தொல். நூற்பாவே இது.)

முத்து. 197.

வலிமிகுவழி மெலிமிகுதலும்; மெலிமிகும்
வழிவலி மிகுதலும் இயல்பின் வழிமிகு
தலும், உயிர் வழியுயிர் கெடுதலும், சாரியை
வரும்வழி சாரியை கெடுதலும், மெய்வேறு
ஆகிடத் தியற்கை ஆதலும்பொது பெயர்க்கு
அவ்வியல் நிலையலும் ஐ உருபு இயல்பே.

இளம்.

இது, இரண்டாம் வேற்றுமைத் திரிபு கூறுதல் நுதலிற்று.

(இ—ள்.) மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்—மெல்லெழுத்து மிகுமிடத்து வல்லெழுத்தாதலொடு தோன்றுதலும், வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும்—வல்லெழுத்து மிகுமிடத்து மெல்லெழுத் தாதலொடு தோன்றுதலும், இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும்—இயற்கையிடத்து மிகுதி தோன்றுதலும், உயிர் மிக வருவழி உயிர்கெட வருதலும்—உயிர்மிக வருமிடத்து அவ்வுயிர் கெடவருதலும், சாரியை உள்வழி சாரியை கெடுதலும்—சாரியையுள்ள இடத்துச் சாரியை கெடுதலும், சாரியை உள்வழி தன் உருபு நிலையலும்—சாரியை உள்ளவிடத்துச் சாரியையொடு தன் உருபு நிற்றலும், சாரியை இயற்கை உறழத் தோன்றலும்—சாரியை பெறுக என்றவழிச் சாரியை பெறாது இயல்பாகிய மொழிகள் வருமொழியினும் நிலைமொழியினும்மிக்கும் திரிந்தும் [1]வருமொழி வல்லெழுத்துக்கள் உறழ்ச்சியாகத் தோன்றுதலும், உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்—உயர்திணைப் பெயரிடத்துத் தன் உருபு [2]தொகாதே விரிந்து வருதலும், அஃறிணை விரவுப் பெயர்க்கு அஃஇயல் நிலையலும்—உயர்திணையோடு அஃறிணை விரவுப் [3]பெயர்க்கும் அவ்வுருபு அவ்வியல்பிலே நிற்றலும், மெய் பிறிது ஆகு இடத்து இயற்கை ஆதலும்—மெய் பிறிதாய் முடியுமிடத்து இயல்பாய் [4]முடிதலும், அன்ன பிறவும்—அத்தன்மையன பிற முடிபுகளும், தன் இயல் மருங்கின் மெய்

சு. வே:

1. வரும்மொழி வல்லெழுத்துக்கள்
2. தொகாது விரிந்தே
3. பெயர்க்கு
4. முடிதலுடைய

பெற கிளந்து பொருள் வரைந்து இசைக்கும்—தனது இயல்பாகிய கூற்றால் அகத்தோத்தினுட் பொருள்பெற எடுத்தோதப்பட்ட வேற்றுமைப் பொருட் புணர்ச்சியது பொதுமுடிவினைத் தான் வரைந்து வேறு முடிபிற்றாய் நின்று ஒலிக்கும், ஐகார வேற்றுமைத் திரிபு எனமொழிப—ஐகார வேற்றுமையினது வேறுபாட்டுப் புணர்ச்சி என்றும் சொல்லுவர் புலவர்.

எ-டு: *விளக்குறைத்தான் என்பது மெல்லெழுத்து மிகுவழி (218) வல்லெழுத்து மிக்கது. மரங்குறைத்தான் என்பது வல்லெழுத்து மிகுவழி (311) மெல்லெழுத்து மிக்கது. தாய்க்கொலை என்பது இயல்பாமிடத்து (359) மிக்கது. பலாக்குறைத்தான் என்பது உயிர்மிக வருவழி (227) உயிர் கெட்டது. வண்டு கொணர்ந்தான் என்பது சாரியை உள்வழிச் (421) சாரியை கெட்டது. வண்டினைக் கொணர்ந்தான் என்பது சாரியை உள்வழி தன் உருபு நிலையிற்று. புளி குறைத்தான் புளிக் குறைத்தான், பூல் குறைத்தான் பூற் குறைத்தான் என இவை சாரியை இயற்கை ‡(245, 376) உறழத் தோன்றின. நம்பியைக் கொணர்ந்தான் என்பது உயர்திணை மருங்கின் ஒழியாது வந்தது. கொற்றனைக் கொணர்ந்தான் என்பது விரவுப்பெயர்க்கு அவ்வியல் நிலையது. மண் கொணர்ந்தான் என்பது மெய் பிறிதாகிடத்து (303) இயற்கையாய் வந்தது.

அன்னபிறவும் என்றதனாற் கொள்வன கழி குறைத்தான் (236), தினைபிளந்தான் (281) என்பன. பிறவும் அன்ன.

ஒழியாது என்றதனான், ஒரோவழி ஒழிந்தும் வரும். $அவற்கண்டு எனவும், ஒன்னார்த் தெறலும் எனவும் இவை உயர்திணையுள் ஒழிந்து வந்தன. மகற் பெற்றாள், மகட் பெற்றாள் என இவை விரவுப் பெயருள் ஒழிந்து வந்தன. இவ்விலேசு தன்னானே இவற்றின் முடிவு வேற்றுமையும் கொள்க.

---

*விளக்குறைத்தான் என்பது விள + குறைத்தான் எனப் பிரிக்கப்படின் "மரபெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே" என்னும் நூற்பாவின் (218) விதிப்படி மரங்குறைத்தான் எனச் சேர்தல் வேண்டும்; அவ்வாறன்றி வல்லெழுத்து மிக்குச் சேர்ந்துள்ளது. இது பொதுவில் வேற்றுமைப் புணர்ச்சிக்குக்கூறப்பட்ட விதிக்குத் திரிந்து வந்தது. இத்திரிபு இரண்டாம் வேற்றுமை வினை கொண்டு முடிதலினால் வருவது. இவ்வாறே ஏனைய உதாரணங்களுக்கும் அடைப்புக்குறிகளில் உள்ள நூற்பாக்களின் துணை

மெய்பெற என்றதனான், உறழ்ச்சியாய் முடிவனவும் கொள்க. மை கொணர்ந்தான், மைக்கொணர்ந்தான் எனவும், வில்கோள் விற்கோள் எனவும் வரும். இவ்வாறு திரிந்து முடியாது, அகத்தோத்தில் [1]பொது முடிபே முடிபாய்க் கடுக் குறைத்தான், (260) செப்புக் கொணர்ந்தான் (410) என்றாற் போல்வன முடிவன அறிந்து கொள்க. இவ்வாறு வேறுபட முடிவது பெரும்பான்மையும் இரண்டாவது வினையோடு முடியும் வழிப் போலும். அது ''தம்மினாகிய தொழிற்சொல் முன்வரின்' (157)என நின்ற அதிகாரத்தாற் கொள்ள வைத்தார் போலும். 'தன்னின முடித்தல்' என்பதனான், ஏழாம் வேற்றுமை வினையொடு முடியும் வழித் திரிபும் கொள்க. 'வரைபாய் வருடை' (281) ''புலம்புக்கனனே புல்லணற் காளை'' (311) என வரும்.

நச்.

இஃது இரண்டாம் வேற்றுமைத்திரிபு தொகுத்து உணர்த்து கின்றது.

(இ—ள்.) 'மரப்பெயர்க்கிளவி மெல்லெழுத்து மிகுமே' (217) என்றதனான் விளங்குறைத்தான் என மெல்லெழுத்து

கொண்டு விதிகண்டு இந்நூற்பாவின்படி வந்த திரிபும் காண்க. நச். உரை விளக்கமாக உதாரணத்துடன் அமைந்துள்ளது காண்க.

‡சாரியையிற்கை—சாரியை இல்லாமை. புளி, பூல் என்பன குறைத் தான் என்பதுடன் சேரும்போது புளி குறைத்தான் எனச்சாரியை யில்லாமையோடு வருமொழி வல்லெழுத்து மிகாலமையும், புளிக் குறைத்தான் என்பதில் சாரியை இல்லாமையோடு வருமொழி வல்லெழுத்து மிக்கமையும் காண்க. உறழ்தல் என்பது மிகுதலும் மிகாமையும் குறிக்கும்.

$அவற்கண்டு என்பது அவன், கண்டு எனப் பிரிக்கப்படும். அவன் கண்டு எனச் சேர்த்துக் கூறும்போது அவன் (ஒன்றைப்) பார்த்து என எழுவாய்த் தொடராகிவிடும். அவனைக் கண்டுஎன இரண் டாம் வேற்றுமைத் தொடராகவும் கூடும். இரண்டற்கும் வேறு பாடு காணவே அவன் என்பது அவற் என னகரம் றகரமாகத் திரிகிறது. இத்திரிந்த நிலையில் சாரியை இன்றி வந்துள்ளது. இவ்வாறே பிறவும் கொள்க. சு. வே; அவர்க்கண்டு.

(எண்கள் எழுத்ததிகார நூற்பா எண்கள்)

சு. வே : 1. பொதுமுடிபாம், பொதுமுடிபாய்க்

மிகுமிடத்து விளக்குறைத்தான் என வல்லெழுத்துத் தோன்று தலும், 'மகர விறுதி' (10) என்பதனான் மரக்குறைத்தான் என வல்லெழுத்து மிகுமிடத்து மரங்குறைத்தான் என மெல் லெழுத்துத் தோன்றுதலும், 'தாயென்கிளவி யியற்கையாகும்' (358) என்ற வழித் தாய்கொலை என இயல்பாய் வருமிடத்துத் தாய்க் கொலை என மிகுதி தோன்றலும், 'குறியதன் முன்னரும்' (226) எனவும், 'குற்றெழுத்திம்பரும்' (267) எனவும் 'ஏயென் இறுதிக்கு'(277)எனவும் கூறியவற்றான் உயிர் மிக்கு வருமிடத்துப் பலாக்குறைத்தான் [1]கழுக்கொணர்ந்தான் ஏக்கட்டினான் என உயிர் கெடவருதலும், 'வண்டும் பெண்டும்' (420) என்பதனாற் சாரியைப் பேறு உள்ள இடத்து வண்டினைக் கொணர்ந்தான் எனத் தன் உருபு நிற்றலும், (இதற்கு வல்லெழுத்துப் பேறு ஈற்று வகையாற் கொள்க), 'புளிமரக் கிளவிக்கு' (244) எனவும், 'பனையும் அரையும்' (283) எனவும், 'பூல்வேல் என்றா' (375) எனவும் பெற்ற சாரியை பெறாது இயல்பாய் நின்று புளிகுறைத் தான் புளிக்குறைத்தான், பனைதடிந்தான் பனைத்தடிந்தான், பூல்குறைத்தான் பூற்குறைத்தான என மிக்குந் திரிந்தும் உறழ்ச்சியாகத் தோன்றலும், 'உயிரீறாகிய உயர்திணைப் பெயரும்' (153) என்பதனான் வேற்றுமைக்கண் இயல்பாய் வரும் என்றவை நம்பியைக் கொணர்ந்தான் நங்கையைக் கொணர்ந் தான் என்றவழி இரண்டன் உருபு தொகாதே நிற்றலும். (ஒழியாது என்றதனான் மகற் பெற்றாள் மகட்பெற்றாள் எனவும் ஆடூஉ வறிசொல், 'மழவ ரோட்டிய' 'அவர்க்கண் டெம்முள்' எனவும் ஒழிந்தும் வரும் என்று கொள்க. உயர்திணையோடு அஃறிணை விரவும் பெயர்க்குக் கொற்றனைக் கொணர்ந்தான் என உருபு தொகாதே நிற்றலும், (அவ்வியல் நிலையலும் என்றதனானே மகப்பெற்றேனென விரவுப் பெயர்க் கண்ணும் தொகுதல் கொள்க. உருபியலுள் 'தேருங்காலை' (202) என்ற இலேசான் இதற்கும் முன்னையதற்கும் வல்லெழுத்துப் பேறும் கொள்க), புள்ளிமயங்கியலுள் ணகார னகார இறுதி வல்லெழுத்தியையின் மெய் பிறிதாம் என்ற இடத்து மெய் பிறிதாகாது மண் கொணர்ந்தான், பொன் கொணர்ந்தான் என இயற்கையாய் வருதலும், அவை போல்வன பிறவும் (அவை[2]

சு. வே : 1. தழுக்கொணர்ந்தான்
2. ஏக்கண்டு (இது தவறு)

'எக்கண்டு பெயருங்காலை யாழநின் கற்கெழு சிறு குடி' எனவும் 'நப்புணர்வில்லா நயனில்லோர் நட்பு' எனவும் வருவழி எக்கண்டு நப்புணர்வு என்னும் தொடக்கங் குறுகும் உயர்திணைப் பெயர்கள் மெல்லெழுத்துப் பெறுதற்கு உரியன வல்லெழுத்துப் பெறுதல் கொள்க. இன்னும் தினைபிளந்தான் மயிர் குறைத்தான். தற்கொண்டான் செறுத்தான் புகழ்ந்தான் என வரும்), தன்னையே நோக்கித் திரிபு நடக்குமிடத்து, பொருள் பெற எடுத்தோதப்பட்டு ஏனை வேற்றுமைப் பொருட் புணர்ச்சியது பொது முடிபினைத் தான் நீக்கி வேறு முடிபிற்றாய் நின்று ஒலிக்கும், இரண்டாம் வேற்றுமையது யது வேறுபட்ட புணர்ச்சி என்று கூறுவர் ஆசிரியர்; எ—று.

மெய்பெற என்றதனானே சாரியை உள்வழித் தன்னுருபு நிலையாது செய்யுட்கண் வருவனவும் பிறவற்றின்கண் உறழ்ந்து முடிவனவும் கொள்க. 'மறங் கடிந்த வருங் கற்பின்' எனவும் 'சில் சொல்லிற் பல கூந்தல்' எனவும் 'ஆயிரு திணையின் இசைக்குமன்' எனவும் பிறாண்டு பெரும்பான்மையும் வரும் என்று கொள்க. மைகொணர்ந்தான் மைக்கொணர்ந்தான், வில்கோள் விற்கோள் என வரும். இனி இவ்வாறு திரியாது அகத்தோத்திற் கூறிய பொது முடிபே தமக்கு முடிபாக வருவன வும் கொள்க. அவை கடுக் குறைத்தான் செப்புக் கொணர்ந்தான் என்றாற் போல்வன. 'தம்மினாகிய தொழிற் சொல் முன் வரினே' (157) என்ற அதிகாரத்தான் வினை வந்துழியே இங்ஙனம் பெரும்பான்மை திரிவது என்றுணர்க. இனித் தன்னின முடித்தல் என்பதனான் ஏழாவதற்கும் வினையோடு முடிவுழித் திரிதல் கொள்க. அது 'வரைபாய் வருடை மலைபடு; 503 புலம்புக்கனனே புல்லணற்காளை (புறம். 258) என்றாற் போல வரும்.

வேங்கட.

இச்சூத்திரத்தில் 'உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்' என்று ஆசிரியர் கூறியிருப்ப, உரையாசிரியர், 'ஒழியாது என்ற தனான் ஒரோ வழி ஒழிந்து வரும். அவர்க் கண்டு எனவும், ஒன்னார்த் தெறலும் எனவும் இவை உயர்திணையுள் ஒழிந்து வந்தன. மகப்பெற்றான் மகட் பெற்றான் என இவை விரவுப் பெயருள் ஒழிந்து வந்தன' என்றார். நச்சினார்க்கினியர், 'ஒழியாது என்றதனான், மகற்பெற்றான் மகடபெற்றான்

எனவும், ஆடூஉ வறிசொல், மழவரோட்டிய, அவர்க்கண் டெம்முள் எனவும் ஒழிந்தும் வரும் என்று கொள்க' என்றார்.

ஆசிரியர் ஒழியாது வரும் என்றது கொண்டு, இவரிருவரும் ஒழிந்தும் வரும் என்று கூறுதல் நேர்மாறாகும். ஆயின், 'ஆசிரியரே 'ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல்' என்று, உருபு வாராதிருப்பச் சூத்திரஞ் செய்தாராகலின், உடம்பொடு புணர்த்தலாற் கொள்ளுதல் கூடும் எனின், அவை தொகை நிலைச் சொல்லாதலின், ஈண்டு அவ்வாறு கூறப்பட்டன என்க. இனி, ஆடூஉ மகடூஉ என்பன பொருளால் உயர்திணையே யாயினும் ஆண்பால் பெண்பால்களுக்குரிய விகுதி பெறாமல், அஃறிணையொன்றன்பாலுக்குரிய துவ்விகுதி பெற்றிருத்தலின் சொல்லான் அஃறிணையேயாகுமாதலின் உருபின்றி வந்தன. இவை அஃறிணைச் சொல்லாயிருத்தல் கருதியே உயர்திணைப் பெயர்க்கண் வாராத இன்சாரியை இச்சொற்கண் வரின் குற்ற மில்லை யென்று,

> ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயர்க்கும்
> இன்னிடை வரினும் மான மில்லை. (உயிர் மய. 69)

என்னும் சூத்திரத்தாற் கூறினார். 'ஆடூஉ வறி சொல் மகடூஉ வறி சொல் என்பன பொருள் நோக்கால் இரண்டாம் வேற்றுமை விரிக்கப்படுமாகலின், அவற்றின் சார்பினால் 'பல்லோரறியும் சொல்லொடு சிவணி' என்பதும் அவ்வாறே விவரிக்கப்படும் என்று, ஆண்டும் உருபினை விரித்திலர். 'தன்னுமவளுஞ் சுட்டி' என்னுமிடத்து, தான் என்பது தன் என்று குறுகியதனானே வேற்றுமையுருபு ஏற்குநிலை தோன்றுமாகலின் அஃது அமையும். இனி அவர்க்கண்டு, ஒன்னார்த்தெறலும் என்பன போல வருபவை திரிபு புணர்ச்சி பெற்று வந்ததனால் இரண்டாம் வேற்றுமை என்பது அறியப்படும். 'பல்லோர்க் குறித்த முறை நிலைப் பெயரே' என்று ஆசிரியர் கூறியிருப்பது காண்க. இனி, 'மழவரோட்டிய' என்பது இத்தகையதன்றாகலானும், பொருட் கண் ஐயந்தோன்றுமாகலானும் அது போன்ற விடங்களில் உருபு ஒழிந்து வருதல் அமைதியன்று.

இவ்வாறு பிற்காலத்தில் வழங்கியதனை அமைத்துக் கொள்வான் வேண்டி, நன்னூலார்,

"உயர்திணை யிடத்து விரிந்தும் தொக்கும்"

(உருபு புணரியல் 16)

என்பாராயினார்.

பி. கு.

நச்சினார்க்கினியர் உரையில் 'ஏனை வேற்றுமைப் பொருட் புணர்ச்சியது' என்ற தொடரில் 'ஏனை' என்பது தவறாக வந்திருத்தல் வேண்டும் என்றும், 'ஒழியாது', 'மெய்பெற' என்ற சொற்களால் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் பெறப்பட்ட தாகக் கொண்ட பொருளை 'அன்ன பிறவும்' என்றதனானே கொளல்தகும் என்றும் கூறுவர் சுப்பிரமணிய சாஸ்திரியார்.

தக்கயாகப் பரணி உரையாசிரியர் 'மல்லர்க் கடந்தானை' (540) என்னும் தாழிசை யுரையுள் 'மகற்பெற்றான்' என்பதை உயர்திணை மருங்கின் ஒழிந்து வந்ததற்கு உதாரணம் காட்டுவர். அதனால், இவர் நச்சினார்க்கினியர்க்குப் பிற்பட்டவர் போலும். இளம்பூரணர் விரவுப் பெயர்க்கு உதாரணம் காட்டினர் —திரு. அடிசுளாசிரியர்.

இகர ஐகார ஈற்று அல்வழி முடிபு

159. வேற்றுமை யல்வழி இஐ என்னும்
ஈற்றுப் பெயர்க்கிளவி மூவகை 'நிலைஇய
அவைதாம்
இயல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவும்
உறழா குநவும் என்மனார் புலவர். (16)

ஆ. மொ.

இல.

In non-case relations the nouns, which end in 'i' and 'ai' have three positions which are standing with out change, having the appearance of hard consonants and having the optional appearance of hard consonants- So say the learned.

க. சு.

In non-case relationship ,
the nouns which end in - i (for) – ai
have three (possible) rules :
They are

சு. வே : நிலைய, (நச்)

absence of any change (oblicatory) insertion of plosive, and optional insertion of plosive;
so say the scholars,

பி. இ: நூ.

நன். 176.

அல்வழி இ ஐ முன்னர் ஆயின்
இயல்பும் மிகலும் விகற்பமு மாகும்.

இல. வி. 77.

வேற்றுமை அல்வழி இ ஐ என்னும்
ஈற்றுப் பெயர்க்கிளவி மூவகை நிலைய
அவைதாம்
இயல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவும்
உறழா குநவும் என்மனார் புலவர்.

முத்து. 198.

அல்வழி இஐ முன்னர் இயல்பாதலும்
மிகுதலும் உறழ்தலும் வேண்டப் படுமே.

இளம்.

இது, இகரவீற்றுப் பெயர்க்கும் ஐகார வீற்றுப் பெயர்க்கும் அல்வழி முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ—ள்) வேற்றுமை அல்வழி இ ஐ என்னும் ஈற்றுப் பெயர்க் கிளவி மூவகைநிலைய—வேற்றுமை யல்லாத அல்வழியிடத்தும் இ ஐ என்னும் ஈற்றையுடைய பெயர்ச் சொற்கள் மூவகை முடிபு நிலைமையுடைய, அவை தாம் இயல்பு ஆகுநவும் வல்லெழுத்து மிகுநவும் உறழ் ஆகுநவும் என்மனார் புலவர்—அவை தாம் இயல்பாய் முடிவனவும் வல்லெழுத்து மிகுவனவும் உறழ்ச்சியாய் முடிவனவும் இவை யென்று சொல்லுவர் புலவர்,

எ—டு: பருத்திகுறிது, அரை குறிது: சிறிது, தீது, பெரிது என இவை இயல்பு. அலிக்கொற்றன் [1]புலிக் கொற்றன் என இவை மிகுதி. கிளிகுறிது கிளிக்குறிது, திணைகுறிது திணைக் குறிது என இவை உறழ்ச்சி.

சு. வே:

1. புலிக்கொற்றன், அலிக்கொற்றன் என இகர வீற்றுக்குக் கூறப்பட்டதாதலின் ஐகார வீற்றுக்குப் புலைக் கொற்றன் என்பதே பாடமாகும்.

'பெயர்க்கிளவி மூவகை நிலைய' எனவே, பெயர்க்கிளவி யல்லாத கிளவி, மிகுதியும் இயல்பும் என இருவகையெனக் கொள்க. *ஒல்லைக் கொண்டான் என்பது ஐகார வீற்று வினைச் சொல் மிகுதி. இகர வீற்று மிகுதி வந்த வழிக் கண்டு கொள்க.

தில்லைச் சொல்லே, மன்னைச் சொல்லே என்றது ஐகார வீற்றிடைச் சொல் மிகுதி. இவற்றியல்பு வந்தவழிக் கண்டு கொள்க.

கடிகா என்பது இகரவீற்று உரிச் சொல் இயல்பு. இவ்வீற்று மிகுதி வந்தவழிக் கண்டு கொள்க. பணைத்தோள் என்பது ஐகார வீற்று உரிச் சொல்மிகுதி. இவ்வீற்றியல்பு வந்தவழிக் கண்டு கொள்க.

நச்.

இஃது இகர ஈற்றுப் பெயர்க்கும் ஐகார ஈற்றுப் பெயர்க்கும் அல்வழி முடிபு கூறுகின்றது.

(இ—ள்.) வேற்றுமையல்லா இடத்து, இஐ என்னும் ஈற்றை யுடைய பெயர்ச் சொற்கள் மூவகையாகிய முடிபு நிலையை யுடைய: அம்முடிபுகள்தாம், இயல்பாய் முடிவனவும், வல் லெழுத்து மிக்கு முடிவனவும், உறழ்ச்சியாய் முடிவனவும் என இவையென்று கூறுவர் புலவர்; எ—று.

எ—டு: பருத்தி குறிது, நாரை குறிது, சிறிது, தீது, பெரிது என இவை இயல்பு. மாசித்திங்கள், சித்திரைத்திங்கள், அலிக் கொற்றன், புலைக்கொற்றன், காவிக்கண், குவளைக்கண் என இவை மிகுதி. கிளிகுறிது கிளிக்குறிது, தினைகுறிது தினைக்குறிது என இவை உறழ்ச்சி.

பெயர்க் கிளவி மூவகை நிலைய எனவே பெயரல்லாத இரண்டீற்று வினைச் சொல்லும் இடைச் சொல்லும் உரிச் சொல்லும் இயல்பும் மிகுதியுமாகிய இருவகை நிலையவாம். ஒல்லைக் கொண்டான் என்பது ஐகாரவீற்று வினைச்சொல்

*ஒல்லை = விரைவு. இது உரிச்சொல் ஆயினும் 'விரைந்து' எனப் பொருள் தருதலின் வினைச் சொல்லாயிற்றுப் போலும்,

மிகுதி. 'இனியணி' (236) என்பதன்கண் இகர ஈற்று வினையெச்சம் எடுத்தோதுப; இவற்றிற்கு இயல்பு வந்தவழிக்கண்டு கொள்க. 'சென்மதிபாக' இஃது இகர வீற்று இடைச்சொல் இயல்பு மிகுதி வந்துழிக்கண்டு கொள்க. 'தில்லைச் சொல்லே' (சொல்லதி. 253) இஃது ஐகார ஈற்று இடைச்சொல் மிகுதி. இயல்பு வந்துழிக்காண்க. 'கடிகா' இஃது இகர ஈற்று உரிச்சொல் இயல்பு. மிகுதி வந்துழிக் காண்க. 'பணைத்தோள்' இஃது ஐகாரவீறு உரிச்சொல் மிகுதி. இயல்பு வந்துழிக் காண்க.

பி. கு.

இயல்பு எழுவாய்த் தொடர் உம்மைத் தொகைகளிலும், மிகுதி பண்புத்தொகை உவமைத் தொகைகளிலும், உறழ்ச்சி சில பெயர்முன் எழுவாய்த் தொடரிலும் கொள்ளப்படும்.

ஈண்டு பெயர்க்கிளவி என்றது அஃறிணைப் பெயரையே குறிக்கும். 154 ஆம் சூத்திரத்தில் உயர்திணைப் பெயர்க்குச் செய்கை கூறப்பட்டமையின. இச்சூத்திரத்துள்ள முதலிரண்டடிகளை ஒரு சூத்திரமாகவும் பின்னருள்ள மூன்றடிகளை மற்றொரு சூத்திரமாகவும் ஆசிரியர் தொல்காப்பியனார் கருதியிருத்தல் கூடும்—சுப்பிரமணியசாஸ்திரியார்.

இ, ஐ ஈற்று ஏழாம் வேற்றுமை முடிபு

160. சுட்டுமுத லாகிய இகர இறுதியும்
எகரமுதல் வினாவின் இகர இறுதியும்
சுட்டுச்சினை நீடிய ஐயென் இறுதியும்
யாஎன் வினாவின் ஐயென் இறுதியும்
வல்லெழுத்து [1]மிகுநவும் [2]உறழா குநவும்
[3]சொல்லிய மருங்கின் உளவென மொழிப. (17)

ஆ. மொ.

இல.

The final 'i' of the word which has the demonstratives as initials and the final 'i' of the interrogative word which has 'e' as initial and the final 'ai' of the word which has

சு. வே:

1. மிகுனவும்
2. உறழாகுனவும்
3. சொல்லியன்

the demonstrative being lengthened as initial and
the final 'ai' of interrogative word which has 'ya' as initial have either the appearance of non-appearance of hard consonants
in the places mentioned above-so say the learr ed.

க. சு.

The final - 'i' of a word which has demonstrative initialy, the final- i of an interrogative word which has e initialy, the final – ai of a word which has initialy the lengthened part of the demonstrative and the final-ai of an interrogative having yā-inilialy,
have, in positions stated (above) the (obligatory) insertion of a plosive, or [the cptional insertion (of a plosive) thus it is said.

பி: இ. நூ.

முத்து. 199.

இகரச் சுட்டும் ஐகான் இறுதியும்
மிகுதலும் உறழ்தலும் உளஎன மொழிப.

இளம்.

இது, அவ்விகர ஐகார வீற்றுள் ஏழாம் வேற்றுமை இடப் பொருள் உணர நின்ற இடைச்சொல் முடிபு கூறுதல் நுதலிற்று.

(இ—ள்.) சுட்டு முதலாகிய இகர இறுதியும்—சுட்டெழுத்தினை முதலாகவுடைய இகரவீற்று இடைச்சொல்லும், எகர முதல் வினாவின் இகர இறுதியும்—எகரமாகிய மொழிமுதல் வினாவினுடைய இகர ஈற்று இடைச் சொல்லும், சுட்டு சினை நீடிய ஐ என் இறுதியும்—சுட்டாகிய உறுப்பெழுத்து நீண்ட ஐகார ஈற்றுச் சொல்லும், யா என் வினாவின் ஐ என இறுதியும்—யா என்னும் [1]வினாவினை முதற்கண் உடைய ஐகார ஈற்று இடைச் சொல்லும், வல்லெழுத்து மிகுநவும் உறழாகுநவும்

சு. வே:

1. வினாவினையுடைய
2. அவற்றுள் ஐகார வீற்றுள்

சொல்லிய மருங்கின் உளஎன மொழிப—வல்லெழுத்து மிக்கு முடிவனவும் உறழ்ச்சியாய் முடிவனவும் மேற் சொல்லப்பட்ட இடத்தின் கண்ணே உள என்று சொல்லுவர் புலவர்.

எ—டு: ‡அதோளிக் கொண்டான், இதோளிக் கொண்டான், உதோளிக் கொண்டான், எதோளிக் கொண்டான், சென்றான், தந்தான், போயினான் எனவும், ஆண்டைக் கொண்டான் ஈண்டைக் கொண்டான், ஊண்டைக் கொண்டான், யாண்டைக் கொண்டான் எனவும் இவை மிக்கு முடிந்தன.

*அவ்வழி கொண்டான் அவ்வழிக் கொண்டான், இவ்வழி கொண்டான் இவ்வழிக் கொண்டான், உவ்வழி கொண்டான் உவ்வழிக் கொண்டான், எவ்வழி கொண்டான் எவ்வழிக் கொண்டான் எனவும், ஆங்கவை கொண்டான் ஆங்கவைக் கொண்டான், ஈங்கிவை கொண்டான் ஈங்கிவைக் கொண்டான், ஊங்குவை கொண்டான் ஊங்குவைக் கொண்டான், யாங்கவை கொண்டான் யாங்கவைக் கொண்டான் எனவும் இவை உறழ்ந்து முடிந்தன. [2]இவற்றுள் ஐகாரவீற்றுள் உறழ்ந்து முடிந்தன திரிபுடையன. திரிபில்லன பெற்ற வழிக் கண்டு கொள்க.

'சொல்லிய மருங்கு' என்றதனால், பிற ஐகார வீறு மிக்கு முடிவன கொள்க. பண்டைச் சான்றார், ஒரு திங்களைக் குழவி என வரும்.

நச்.

இஃது ஏழாம் வேற்றுமை இடப் பொருணர்த்தி நின்ற இகர ஐகார ஈற்று இடைச்சொல் முடிபு கூறுகின்றது.

(இ—ள்.) இகர ஐகாரங்கட்கு முன்னர்க்கூறிய மூவகை இலக்கணங்களுள் இயல்பை நீக்கி, சுட்டெழுத்தினை முதலாகவுடைய அவ்விகர ஈற்று இடைச்சொல்லும், எகரமாகிய வினாவினை முதலாகவுடைய அவ்விகர ஈற்று இடைச்சொல்லும், சுட்டாகிய உறுப்பெழுத்து நீண்ட அவ்வைகார ஈற்று இடைச்சொல்லும், யாவென் வினாவினை முதற்கண்ணுடைய அவ்வைகார வீற்று இடைச்சொல்லும், வல்லெழுத்து மிக்கு முடிவனவும், உறழ்ச்சியாய் முடிவனவும், உளவென்று கூறுவர் புலவர்: எ—று

‡அதோளி, இதோளி உதோளி என்பன அதோள், இதோள், உதோள் எனவும் வழங்கும். சூ. 399 இல் காண்க.

*அவ்வழி—அக்காலம் (சிலம்பு. 23:463—அரும்பதவுரை)

எ-டு : அதோளிக் கொண்டான் இதோளிக் கொண்டான் உதோளிக் கொண்டான் எதோளிக் கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவும், ஆண்டைக் கொண்டான் ஈண்டைக் கொண்டான் ஊண்டைக் கொண்டான் யாண்டைக் கொண்டான் எனவும் இவை மிக்கன. அதோளி அவ்விடம் என்னும் பொருட்டு. அவ்வழி கொண்டான் அவ்வழிக் கொண் டான், இவ்வழி கொண்டான் இவ்வழிக் கொண்டான், உவ்வழி கொண்டான் உவ்வழிக் கொண்டான், எவ்வழி கொண்டான் எவ்வழிக் கொண்டான் என உறழ்ந்தன. சுட்டுச்சினை நீண்ட தற்கும் யா வினாவிற்கும் வரும் ஐகார ஈற்றுக்கு உதாரணம் அக் காலத்து ஆயிடை கொண்டான் ஆயிடைக் கொண்டான் என்றாற்போல ஏனைய வற்றிற்கும் வழங்கிற்றுப் போலும். இனி, ஆங்கவை கொண்டான் ஆங்கவைக் கொண்டான் என்பன காட்டுவாரும் உளர்*. அவை திரிபுடையனவாம். சொல்லியல் என்றதனாலே பிற ஐகார ஈறு மிக்கு முடிவன கொள்க. அன்றைக் கூத்தர் பண்டைச்சான்றோர் எனவும், ஒரு திங்களைக் குழவி நாளைக் குழவி எனவும்வரும்.

சுப்பிர.

முதலிரண்டடியில் 'முதல்' என்ற சொல் இருத்தலான் மூன்றாவது அடியிலுள்ள 'சினை' என்றதற்கு 'முதல் எழுத் தாகிய சினை' எனவும், 'யாவென் வினாவின் என்றதற்கு யாவென்ற முதலைக் கொண்ட வினாவின்' எனவும் பொருள் கொளல் வேண்டும்.

இச்சூத்திரம் 'ஏழாம் வேற்றுமை இடப்பொருள் நின்ற இடைச்சொல் முடிபு கூறுகின்றது' என உரைகாரர்கள் கூறினர். இச்சூத்திரத்தில் 'சொல்லிய மருங்கின்' என்றும், முற்சூத்திரத் தில் 'பெயர்க் கிளவி' என்றும் ஆசிரியர் கூறியிருக்கின்றமையான் அதோளி, ஆண்டை முதலியவற்றை ஆசிரியர் பெயராகவே கொண்டார் எனக் கூறுதல் சாலும். இவற்றைப் பிற்காலத்தார் இடைச்சொல்லாகக் கொண்டனர் என்பது வெளிப்படை

''சொல்லிய மருங்கு' என்றதனால் பிற ஐகார வீறுமிக்கு முடிவன கொள்க. பண்டைச் சான்றார் ஒரு திங்களைக் குழவி'' என்றனர் இளம்பூரணர். நச்சினார்க்கினியரும் அவரோடு உடன்

*இளம்பூரணர்

பட்டனர். அவ்விருவர் கூறும் உதாரணங்களெல்லாம் வேற்றுமைப் புணர்ச்சியாகக் கொள்ளுதல் சாலும் ஆகலானும், வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லெழுத்து மிகுதியை 'ஐகார விறுதிப் பெயர்நிலை முன்னர்'' (எழுத். 280) என்ற சூத்திரத்தில் ஆசிரியர் உணர்த்தினமையானும் அவ்விருவர் தங் கொள்கையும் ஆய்தற்பாலது.

வேங்கட.

இச்சூத்திரத்தின் முதலிரண்டடிகளுக்கு உதாரணமாகக் காட்டப்பட்டுள்ள அதோளி இதோளி உதோளி எதோளி என்னும் சொற்களை, அதோள் இதோள் உதோள் எதோள் என்று ளகர ஈற்றுப் பெயர்களாகவும் உரையாளர்கள் காட்டி யிருக்கின்றனர். இவற்றை நோக்கின், அதோள் இதோள் முதலிய ளகர வீற்றுச் சொற்களே இயல்பாயவை எனவும், அவை இகரம் சேரப்பெற்று அதோளி இதோளி முதலியனவாய் வழங்கின எனவும், ஈற்று ளகரம் கெட்டு அதோ இதோ முதலியனவாய் இக்காலத்து வழக்கில் வழங்குகின்றன எனவும் புலனாகும். இதாஎன்னும் சொல்லைத் திசைச்சொல் என்றார் ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

நெட்டெழுத்துக்களுக்குக் குற்றெழுத்துக்கள் சினை என்று கொள்ளுவர் இவ்வாசிரியர். அதனான் ஆண்டை ஈண்டை ஊண்டை என்பவற்றில் உள்ள ஆ, ஈ, ஊ, என்னும் நெட்டெழுத்துக்களை, 'சுட்டுச் சினை நீடிய' என்று கூறினார். முன்னர், 'சுட்டுச்சினை நீடிய மென்றொடர் மொழியும்' (எழுத். 427) என்பதும் காண்க.

பி. கு.

திரு—அடிகளாசிரியர் எழுதிய குறிப்புகள்.

(1) இளம்பூரணர் சுட்டுச்சினை நீடிய என்பதற்கு 'சுட்டாகிய உறுப்பெழுத்து நீண்ட' என்று உரை கூறினர். யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் "ஒரெழுத்தே ஒரு பொருள் பயந்து நிற்பன சிறப்பெழுத் தென்றும், இயைந்து பொருள் பயப்பன உறுப்பெழுத்தென்றும் வழங்கப்படுமெனக் கொள்க'' என்று கூறுவதை நோக்குக. பின்னும் 'சுட்டுச்சினை நீடிய மென்றொடர் மொழியும் (428) என்று வருவதனை நோக்குக.

(2 ஒரு காலத்து வழங்கப்பட்ட சொல் ஒரு காலத்து இலவாதலும் பொருள் வேறு படுதலும் உடைய. அவை

அதோளி, இதோளி, உதோளி எனவும், குயின் எனவும் வருவன போன்றவை என்பர். (தொல்—செய்—80—போர். நச்) முல்லைக் கலி 17 ஆம் பாட்டில் 'ஈதோளி கண்டேனால்' என்னும் பகுதிக்கு, 'இவ்விடத்தே கண்டேனால்' என்று பொருள் கூறி, 'இதோளி' என்பது 'ஈதோளி' எனச் சுட்டு நீண்டுநின்றது. இது சுட்டுமுதலாகிய இகரவீற்று வல்லெழுத்து மிக்கு நின்றது என்றனர், நச்சினார்க்கினியர்.

வெள்ளை வாரணனார் தொல்காப்பியம்—நன்னூல் உரையில் இச்சூத்திரத்தின் கீழ் "இஃது ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர்த்தி நின்ற ஐகார ஈற்று இடைச்சொல் முடிபு கூறுகின்றது" என்றிருக்கின்றது. இகர ஐகார வீற்று என்றிருக்க வேண்டும்.

நெடில்முன் குறில் முன் ஒற்றுக்கள்.

161. நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும்
குறியதன் முன்னர்த் தன் உருபு இரட்டலும்
அறியத் தோன்றிய நெறியியல் என்ப. (18)

ஆ. மொ.

இல.

The disappearance of consonant before the long letter and the doubling of consonant before the short (letter) are in accordance with the rules widely known.

க. சு.

The consonant which follows long vowels is dropped
and (that which follows) short vowels
has its shap doubled ;
they say that in order to know (these consonants),
a system of prescribed rules (was) revealed.

பி. இ. நா.

வீர. 14.

குறில் பின்பு மெய்கள் ஏறா உயிர் பின் வர
இரண்டாகும்.

நேமி. 15.

குற்றொற்று இரட்டும் உயிர் வந்தால்

நன். 205.

தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.

இல. வி. 66.

தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.

தொ. வி. 36.

தனிக்குறில் மெய் உயிர் சார்புளி மிகும்.

இளம்.

இது புள்ளி மயங்கியலை நோக்கியதோர் நிலைமொழிக் கருவி கூறுதல் நுதலிற்று.

(இ—ள்) நெடியதன் முன்னர் ஒற்று மெய் கெடுதலும்—நெட்டெழுத்தின் முன் நின்ற ஒற்றுத் தன் வடிவு கெடுதலும், குறியதன் முன்னர் தன் உருபு இரட்டலும்—குற்றெழுத்தின் முன்னர் நின்ற ஒற்றுத் தன் வடிவு இரட்டுதலும், அறியத் தோன்றும் நெறி இயல் என்ப அவை அறியும்படித் தோன்றிய முறைமையான [1]இயல்பையுடையன என்று சொல்லுவர்.

எ—டு : கோறீது, [2]கோஙன்று என இவை நெடியதன் முன்னர் ஒற்றுக் கெட்டன.

மண்ணகல் பொன்னகல் என இவை குறியதன் முன்னர்த் தன் உருபு இரட்டின.

மேலைச் சூத்திரத்து [3]நான்கனுருபு பிற் கூறியவதனால், [4]ஒற்று இரட்டுதல் உயிர் முதன் மொழிக்கண்ண தென்று கொள்க. குறியது பின்கூறிய [1]முறையன்றிய கூற்றினால் நெடியன குறுகி நின்ற வழியும் குறியதன் முன்னர் ஒற்றாய் இரட்டுதலும், குறியது திரிந்து நெடியதாய வழி [6]அதன் முன்னர் ஒற்றுக் கெடுதலும் கொள்க.

தம்மை நம்மை என இவை நெடியன குறுகி நின்று ஒற்று இரட்டின. மற்றையது வந்த வழிக் கண்டு கொள்க.

சு. வே: 1. இயல்பினை
2. கோணன்று
3. ஆறனுருபிற்,
4. ஒற்றிரட்டு
5. முறையன்றி அக் கூற்றினால்
6. நெடியதன் முன்னர்

'அறிய' என்றதனான், நெடியதன் முன்னர்ஒற்றுக் கெடுவது தகார நகாரங்கள் வந்து திரிந்த வழி யென்ப தூஉம், †ஆண்டெல்லாம் கெடா தென்பதூஉம் கொள்க. தேன்றீது என்பது ஆண்டுக் கெடாதது.

நெறியியல் என்றதனால் குறியதன் முன்னர் நின்ற [7]ஒற்றின்றிய புணர்ச்சியாற் பெற்றதும் இரட்டும் என உணர்க. ‡அவ்வடை எனவரும்

நச்.

இது, புள்ளி மயங்கியலை நோக்கியதோர் நிலை மொழிக் கருவி கூறுகின்றது.

(இ—ள்) நெட்டெழுத்தின் முன் நின்ற ஒற்றுத் தன் வடிவு கெடுதலும், குற்றெழுத்தின் முன் நின்ற ஒற்றுத் தன் வடிவு இரட்டித்தலும், அறியும்படி வந்த அடிப்பாட்டியல் என்று கூறுவர் ஆசிரியர்; எ—று.

இங்ஙனம் நெடியதன் முன்னர் ஒற்றுக் கெடுவன ணகாரமும் னகாரமும் மகாரமும் லகாரமும் ளகாரமும் என ஐவகையவாம்.

எ—டு: கோணிமிர்ந்தது, தானல்லன், தாநல்லர், வேனன்று தோணன்று என நகரம் வருமொழியாதற்கண் நெடியதன் முன்னர் ஒற்றுக் கெட்டது. கோறீது வேறீது எனத் தகரம் வருமொழியாதற்கண் லகார ஒற்றுக் கெட்டது. ஏனைய வந்துழிக் காண்க. இவற்றை "லன வென வரூஉம்' (149) ணள வென் புள்ளி முன் (150) என்பனவற்றான் முடித்துக் கெடுமாறு காண்க. ஒற்றிரட்டுவன ஞகார நகார மகாரம் ஒழிந்தன. கண்ணழகிது, பொன்னகல், தம்மாடை, சொல்லழகிது, எள்ளழகிது, நெய்யகல், தெவ்வலன் எனக் குறியதன் முன்னர்த் தன் உரு இரட்டின.

மேலைச் சூத்திரத்து நான்கனுருபு பிற்கூறியவதனான் ஒற்றிரட்டுதல் உயிர் முதல்மொழிக்கண்ண தென்றுணர்க.

சு.வே: 7. ஒற்றன்றிப்

† ஆண்டெல்லாம்—நெடியதன் முன்னர் ஒற்றுள்ள இடமெல்லாம்

‡அ என்பது அடை என்பதுடன் சேரும்போது 'வ்' இடைவந்து 'அவ்' என நின்று பின்னர், 'அடை' என்பதின் அகரம் ஏறி முடியுமுன் அந்த 'வ்' இரட்டி 'அவ்வ்' என நின்று, 'அவ்வடை' என்றாயினமை காண்க.

குறியது பிற்கூறிய முறையன்றிக் கூற்றினால் தம்மை எம்மை நின்னை என நெடியன குறுகி நின்ற வழியும் குறியதன் முன்னர் ஒற்றாய் இரட்டுதலும், விரனன்று, குறணிமிர்ந்தது எனக் குறிலிணையின் முன்னர் வந்த ஒற்றுக் கெடுதலும், வராறீது நன்று எனக் குறினெடிற் கண் நின்ற ஒற்றுக் கெடுதலும், அது கொறோழி எனவும் குரிசிறீயன் எனவும் தொடர்மொழியீற்று நின்ற ஒற்றுக் கெடுதலும் இடைச்சொல்லோடு ஒட்டுப்பட்டு நிற்றலும், [1]காற்றீது எனவும் விரற்றீது எனவும் ஒற்று நிற்றலும் கொள்க.

சுப்பிர.

'நெடியதன் முன்னர் என்றாரேனும் நெட்டெழுத்தைக் கொண்ட ஈரெழுத்தொரு மொழியின் நெடியதன் முன்னர் எனவும், 'ஒற்றுமெய்' என்றாரேனும் 'இறுதியொற்றுமெய்' எனவும் கொள்ளல் வேண்டும்.

உ—ம் : கோல் + தீது = கோல் + றீது (150) = கோறீது; மண் + அகல் = மண்ணகல்.

முதல் + நிலை = முதனிலை போன்றன "குறுமையும் நெடுமையும்" என்ற சூத்திரத்தாலும் இச் சூத்திரத்தாலும் கொள்க.

"குறியது பின் கூறிய முறையன்றிக் கூற்றினான் நெடியன குறுகி நின்ற வழியும் குறியதன் முன்னர் ஒற்றாய் இரட்டுதலும் (தாம் + ஐ = தம் + ஐ = தம்மை) குறியது திரிந்து நெடிதாயவழி அதன் முன்னர் ஒற்றாய்க் கெடுதலும் கொள்க" என்றும், "நெறியியல்" என்றதனால் குறியதன் முன்னர் நின்றஒற்றின்றிப் புணர்ச்சியாற் பெற்றதும் இரட்டும் என உணர்க. அவ்வடை எனவரும்" என்றும் இளம்பூரணர் கூறினர். அக் கொள்கையைப் பின்பற்றினர் நச்சினார்க்கினியர். வாலிழந்த நரி நரியேயன்றி வேறாகாமையானும், ஆறாம் விரல் புதிதாக முளைத்த கையையுடையோன் வேறு மனிதனாக ஆகாமையானும், இடங்களுக்குத் தக்கவாறு ஒருவனுக்குச் சில அணிகலன்கள் முதலியன அவனுடலிற் றோன்றினும் அவனுடல் வேறாகாமையானும்,

சு. வே :

1. கற்றீது.

தம்மை, அவ்வடை என்பனவற்றை உலக நியாயங்களாற் கொள்ளுதல் பொருந்துமாதலான் உரைகாரர்கள் மிகையாற் கொள்ளுதல் வேண்டுவதின்று.

அறிய என்ற சொல்லின் பயன் இவ்விதி எங்கும் செல்லா தென்பதை உணர்த்த எனக்கூறுவர் உரைகாரர்கள்.

"மேலைச் சூத்திரத்து ஆறனுருபு பிற்கூறுயவதனான் ஒற்று இரட்டுதல் உயிர் முதல் மொழிக்கண்ணதென்று கொள்க" என இளம் பூரணரும், 'மேலைச்சூத்திரத்து நான்கனுருபு பிற்கூறிய வதனான் ஒற்றிரட்டுதல் உயிர் முதன் மொழிக் கண்ணதென் றுணர்க'' என நச்சினார்க்கினியரும் கூறினர். ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள் இம் மெய்களே நிலைமொழியிறுதியில் இருத்தல் கூடுமாகலானும், இவை இரட்டிப்பின் இவற்றின் பின்னர் மெய் வருதல் இயலாது என்பது "யரழ வென்னும்" (48) என்ற சூத்திரத்தான் அறியப்படுமாகலானும், வருமொழி முதல் உயிரா யிருக்கும்போதே நிலைமொழியீற்று மெய் இரட்டுதல் நிகழும் எனக் கொள்ளல் தகும்.

குறில் முன் ஒற்று இரட்டாத இடம்.

162. **ஆறன் உருபினும் நான்கன் உருபினும்**
கூறிய குற்றொற்று இரட்டல் இல்லை
ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும்
நெடுமுதல் குறுகும் மொழிமுன் னான. (19)

ஆ. மொ.

இல :

When having the sign of the sixth case and of the fourth case,
The doubling of consonant preceded by a short letter never takes place as stated. The final consonant of the word which has it long inilial shortened will stand with 'a'.

க ·சு.

If the words which shorten their long root-vowcl
are followed by the sixth or the fourth case-marker,
the (above) mentioned doubling of consonants
does not occur; (their) final non-vocalised consonants
will be followed by-a.

பி. இ. நா.

நன். 247

தான் தாம்......

குவ்வின் அவ்வரும் நான்கு ஆறு இரட்டல.

முத்து. 200

ஆறும் நான்கும் இரட்டுதல் இலவே.

இளம்.

இது, உருபியலை நோக்கியதோர் நிலை மொழிக் கருவி கூறுதல் நுதலிற்று.

(இ—ள்) ஆறன் உருபினும் நான்கன் உருபினும் ஈறு ஆகு புள்ளி அகரமொடு நிலையும்—ஆறன் உருபின்கண்ணும் நான்கன் உருபின் கண்ணும் ஈறாகு புள்ளிகள் அகரத்தொடு நிலைபெறும், நெடுமுதல் குறுகும் மொழிமுன் கூறிய குற்றொற்று இரட்டல் இல்லை—[1]நெடிதாகிய முதல் எழுத்துக் குறுகி முடியும் மொழிக் கண் [2]மேற் கூறிய குற்றொற்று இரட்டல் (ஆறன் உருபின் கண்ணும் நான்கன் உருபின் கண்ணும்) இல்லை.

எ—டு : *தமது, தமக்கு; நமது, நமக்கு என வரும்.

'கூறிய' என்ற தனானே $நெடுமுதல் [3]குறுகாத மொழிக்கு ‡இவ்விருவிதியும் கொள்க. எல்லார்தமதும், எல்லார் தமக்கும் என வரும்.

சு. வே.

1. நொடியதாகிய
2. மேற்குற்றொற்று.
3. குறுகாதவழியும், குறுகாத மொழியும் குறுகு மொழியும் இவ் விருவிதியும் கொள்க, குறுகாத மொழியும் அவ்விதியும் கொள்க.

* தாம் + அது → தம் + அது → தம + அது → தம + து → தமது. இதை முறையே 189, 162, 116 எண்களுள்ள நூற்பாக்களின் விதிப்படி அமைக்க.
தாம் + கு → தம் + கு → தம + கு → தமக் + கு → தமக்கு. இதை முறையே 189, 162, 115 எண்களுள்ள நூற்பாக்களின் விதிப் படி முடிக்க.

‡ இவ்விருவிதி = குற்றொற்றிரட்டாமை, ஈறாகுபுள்ளி அகரமொரு நிலையல்.

$ நெடுமுதல் குறுகும் மொழிகள் : தாம் நாம் யாம்; தான் யான்; நீ:

நச்

இஃது உருபியலை நோக்கியதோர் நிலைமொழிக் கருவி கூறுகின்றது.

(இ—ள்.) நெடிதாகிய முதலெழுத்துக் குறுகி முடியும் அறு வகைப்பட்ட மொழிகளின் முன்னர் வந்த, ஆறாம் வேற்றுமைக் கண்ணும் நான்காம் வேற்றுமைக் கண்ணும், முன்னர் நிலை மொழிக்கு இரட்டும் என்ற குற்றொற்று இரட்டி வருதல் இல்லை, நிலைமொழியீற்றுக்கண் நின்ற ஒற்றுக்கள் அகரம் பெற்று நிற்கும்; எ—று

உருபியலின் 'நீயென் ஒருபெயர்' (179) எனவும், [4]தாம் நாம் என்னும்' (188) எனவும் கூறியவற்றால் குறுகி ஒற்றுரட்டித் தம்மை நம்மை எம்மை தன்னை நின்னை என்னை என வருவன இதனானே தமது நமது எமது தனது நினது எனது எனவும், தமக்கு நமக்கு எமக்கு தனக்கு நினக்கு எனக்கு எனவும் ஒற்றிரட் டாது அகரம் பெற்று வந்தன. நான்காவதற்கு ஒற்றுமிகுதல் ''வல்லெழுத்து முதலிய'' (114) என்பதனாற் கொள்க. *ஆறன் உருபாகிய அகரம் ஏறி முடியாமைக்குக் காரணம் 'ஆறனுருபின் அகரக்கிளவி' (115) என்புழிக் கூறினாம். ஒற்றிரட்டாமையும் அகரப்பேறும் இரண்டற்கும் ஒத்தவிதி என்று உணர்க. கூறிய என்றதனான் நெடுமுதல் குறுகாத **தம் நம் நும் என வரும் சாரியைகட்கும் இவ்விருவிதியும் கொள்க. எல்லார் தமக்கும், எல்லாநமக்கும், எல்லீர்நுமக்கும் எல்லார் தமதும் எல்லா நமதும் எல்லீர்நுமதும் என வரும்.

சுப்பிர.

நெடுமுதல் குறுகும் மொழிகளுள் யான், யாம் என்பன வற்றையும் கொள்ளல் வேண்டும். ''கூறிய என்றதனானே நெடு முதல் குறுகாத மொழியும் குறுகுமொழியும் இவ்விருவிதியும் கொள்க; எல்லார் தமதும் எல்லார்தமக்கும்'' என்றனர் இளம் பூரணர். அவ்வாறே கூறினர் நச்சினார்க்கினியரும். தற்போ துள்ள சங்க இலக்கியங்களில் எல்லார்தமதும், எல்லார்தமக்கும்

* இதற்கு உரைத்தொடர் விளக்கம் பார்க்க.

** தாம்நாம் (வழக்கற்றது) என்னும் பெயர்களே தம் நம் நும் எனக் குறுகிச் சாரியையாவதால், 'நெடுமுதல் குறுகாத தம் நம்நும், என நச்சினார்க்கினியர் கூறுவது பொருந்தாது.—பாவாணர்.

போன்ற வழக்குக் காணப்படாமையானும், தொல்காப்பியனார் காலத்துக்கு முன்னருள்ள இலக்கியங்களில் அவைவழங்கப்பட்டன என்று திண்ணமாய்க் கூறத் தற்போது இயலாமையானும், இச் சூத்திரத்துள் 'கூறிய' என்ற சொல் மிகையின்மையானும் அவர்தங்கூற்று ஆராய்தற்பாலது.*

நும் என் மொழிக்கும் அவ்விதி.

163. நும் என் இறுதியும் அந்நிலை திரியாது (20)

ஆ. மொ.

இல :

The final of 'num' also will not deviate from the above position.

க. சு.

The final (consonant) of num will not deviate from that rule.

பி- நா.

முத்து. 202

நும் என் இறுதியும் அந்நிலை திரியாது

இளம்.

இதுவும் அது.

(இ—ள்.) நும் என் இறுதியும் அ நிலை திரியாது—நும் என்னும் மகர இறுதி மேற்கூறிய ஈறாகு புள்ளி அகரமொடு நிலையலும் குற்றொற்றிரட்டாமையுமாகிய அந்நிலைமையில் திரியாது.

எ—டு : நுமக்கு, நுமது எனவரும்.

நச்.

இது †நெடுமுதல் குறுகாத நும் என்கின்றதும் அவ்விதி பெறும் என்கின்றது.

* மிகைச்சொற் பெய்வதன் நோக்கமே தன்னால் கூறப்படாது ஒழிந்தனவற்றையும், தனக்குப் பிற்காலம் வருவனவற்றையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே யாகலின் இக்கருத்து ஏற்புடையதன்று.

† நீயிர் என்பதன் திரிபு நும் எனின் நெடுமுதல் குறுகியதாகவே கொள்ளலாம். நும் என்பதன் திரிபு நீயிர் என ஆசிரியர் கூறியத னால் (316) நச்சினார்க்கினியர் நும் என்பது நெடுமுதல் குறுகா தது என்றார் போலும்,

(இ—ள்.) நெடுமுதல் குறுகா நும்மென்னும் மகரவீறும் முற் கூறிய குற்றொற்றிரட்டாமையும் ஈறாகு புள்ளி அகரமொடு நிலையலும் எய்தும்; எ—று.

எ—டு ; நுமது, நுமக்கு எனவரும்.

புள்ளியிறுதி உகரம் பெறாத இடம்

164. ‡உகரமொடு புணரும் புள்ளி யிறுதி
யகரமும் உயிரும் [1]வருவழி யியற்கை

ஆ. மொ.

இல.

The final consonant, which takes 'u' is nature
When 'ya' and vowels succeed (as coming words).

சு. சு :

Consonantal endings (capable of) joining with (a following) u-sound
do remain (without the u) when
words beginning with y-or with vowels follow.

இளம்.

இது, புள்ளி மயங்கியலை நோக்கியதோர் நிலை மொழிச் செய்கை கூறுதல் நுதலிற்று.

(இ—ள்.) உயிரொடு புணரும் புள்ளியிறுதி—உகரப் பேற் றோடு புணரும் புள்ளியிறுதிகள், யகரமும் உயிரும் வருவழி இயற்கை—யகரமும் உயிரும் வருமொழியாய் வருமிடத்து அவ் வுகரம் பெறாது இயல்பாய் முடியும்.

எ—டு : உரிஞ்யானா, உரிஞ் அனந்தா, பொருந் யானா, பொருந் அனந்தா, உரிஞ் ஆதா, பொருந் ஆதா என ஒட்டுக.

நச்.

இது புள்ளி மயங்கியலை நோக்கியதோர் நிலைமொழிச் செய்கை கூறுகின்றது.

---

‡இந்நூற்பா ஆடி நிழலின் அறியத் தோன்றுதல் என்பதற்குப் பேராசிரியரால் மேற்கோளாக ஆளப்பட்டுள்ளது. தொல். பொருள். 655)

சு. வே: 1. வரும்வழி

(இ—ள்.) உகரப் பேற்றோடு புணரும் புள்ளியீறுகள், யகரமும் உயிரும் வருமொழியாய் வருமிடத்து அவ்வுகரம் பெறாது இயல்பாய் முடியும்; எ—று.

அவ்வீறுகளாவன ‡புள்ளி மயங்கியலுள் உகரம் பெறும் என்று விதிக்கும் பல ஈறுகளும் என்று கொள்க. உரிஞ் யானா அனந்தா ஆதா இகலா ஈந்தா உழுந்தா ஊறா எயினா ஐயா ஒழுக்கா ஓதா ஔவியா எனவும், உரிஞ்யாது அழகு எனவும் ஒட்டுக ஏனைப் புள்ளிகளோடும் ஏற்பன அறிந்து ஒட்டுக.

'ஞகாரை ஒற்றிய (296) என்பதனானும் 'ஞநமவ வியையினும்' (297) என்பதனானும் யகரமும் உயிரும் வந்தால் உகரம் பெறாது இயல்பாம் என்பது பெறுதலின் ஈண்டு விலக்கல் வேண்டாவெனின், எடுத்தோத்தில் வழியதே உய்த்துணர்ச்சியென்று கொள்க.

இது முதலாக அல்வழி கூறுகின்றார்.

சுப்பிர.

'ஞகாரை ஒற்றிய' (297) ஞநமயவ இயையினும் உகரம் நிலையும் (298, என்ற சூத்திரங்களான் தொழிற் பெயரின் பின்னர் வல்லெழுத்தும், ஞநமவ என்பனவும் வரின் வலி மிகுதலும் உகரம் வருதலும் அறியப்படுகின்றமையானும், 'ஞநமயவ' (145) என்ற சூத்திரத்தான் வருமொழி முதல் யகரமும் உயிருமாயிருக்க வரும் புணர்ச்சி இயல்பாம் என்பது அறியப்படுகின்றமையானும், இச்சூத்திரம் வேண்டா; அவ்வாறிருக்க ஆசிரியர் இச்சூத்திரங் கூறினமையான் 'ஞநமயவ' (145) என்ற சூத்திரம் நிலைமொழி தொழிற் பெயராயிருக்க வரும் மாறுதல்களை விதிக்கவில்லை எனக் கூறுதல் தகும்.

வேங்கட.

இச்சூத்திரத்திற்கு உதாரணம் காட்டிய வழி உரையாளர் இருவரும் உரிஞ் அனந்தா, உரிஞ் ஆதா என்று உரிஞ் என்பதை முன்னிலை வினையாக நிறுத்தி உதாகரித்துள்ளனர். ஆசிரியர், 'ஞநமவ என்னும் புள்ளியிறுதியும்...முற்றத்தோன்றா முன்னிலை மொழிக்கே' (எழுத். 152)) என்று விலக்கியிருத்தலின், ஞநக்களை

‡ஞ (297) ண (307) ம (328) ந(299) ன (247) ல (374) வ[383] ள[402]சூ. பார்க்க

முன்னிலை வினைக்கண் நிறுத்தி உதாரணம் காட்டுதல் பொருந்தாது. அன்றியும், புள்ளி மயங்கியலுள், ஞந முதலிய வீற்றுத் தொழிற் பெயர்கள் உகரம் பெறுதற்கு விதி கூறுகின் றாரே யன்றி, நன்னூலார் போல, அவ்வீற்று முன்னிலை வினையும் உகரம் பெறும் என்னாமையான், அவை முன்னிலைக்கண் வாரா என்பதே அவர் கருத்தாகும் என்பது மேலே கூறப் பட்டுள்ளது.

வல்லெழுத்து வரும்வழி உகரம் பெறுகின்ற புள்ளியீற்றுத் தொழிற் பெயர்கள், யகரமும் உயிர் எழுத்துக்களும் வருமிடத் தில் உகரம் பெறா என்றலே இச்சூத்திரத்தின் பொருள். இதனான், யகரமும் உயிரை யொத்ததாதல் புலனாகும்.

பி கு.

உரையாளர் இருவரும் உரிஞ் அனந்தா உரிஞ் யானா என்று காட்டிய உதாரணங்களில் உரிஞ் என்பது முன்னிலை வினைப் பொருளது என்று வேங்கடராசுலு ரெட்டியார் கருதியது பொருந்துவதன்று. உரிஞ் என்பது உரிஞுதல் என்ற பொருள தேயாம். இச்சூத்திரப் பொருளாக "வல்லெழுத்து வரும்வழி... என்றலே இச்சூத்திரத்தின் பொருள்" என அவர் எழுதியதும் தேவையில்லை. உரையாளர் இருவரும் எழுதிய உரைகளும் அதுவேயாதலின்.

அளவு நிறை எண்ணுப் பெயர்கள் தம்மிற் புணருமாறு

165. உயிரும் புள்ளியும் இறுதி யாகி
அளவும் நிறையும் எண்ணும் சுட்டி
உளவெனப் பட்ட எல்லாச் சொல்லும்
தத்தம் கிளவி தம்மகப் பட்ட
முத்தை வருஉங் காலந் தோன்றின்
ஒத்தது என்ப ஏயென் சாரியை **(22)**

ஆ. மொ:

இல.

Vowels and consonants as final letters being
All the words which denote measurement,
Weight and number,
When the bigger is succeeded by the smaller,

The increment 'ē' is suitable
So say the learned.

க சு :

After all the words which end in vowels and non-vocalised Consonants
and point to measures, weights, and numbers,
if they are followed by analogical words denoting
lesser (measure, weight, or number),
the proper empty-morph is said to be-ē.

பி. இ. நூ.

இல. வி. 79.

இந்நூற்பாவையே ஆண்டுள்ளது இலக்கண விளக்கம்

முத்து. 201.

எண்நிறை யளவும் ஏயொடு சிவணும்,

இளம்.

இது, அளவுப் பெயரும் நிறைப் பெயரும் எண்ணுப் பெயரும் தம்மிற்புணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ—ள்) உயிரும் புள்ளியும் [1]இறுதியாகி அளவும் நிறையும் எண்ணும் சுட்டி உள எனப்பட்ட எல்லாச் சொல்லும்—உயிரும் புள்ளியும் ஈறாய் அளவையும் நிறையையும் எண்ணையும் கருதி உளவென்று சொல்லபபட்ட எல்லாச் சொற்களும், தம் தம் கிளவி தம் அகப்பட்ட முந்தை வரும் காலம் தோன்றின் ஏ என் சாரியை ஒத்தது என்ப—தமக்கு இனமாகிய [2]சொற்களாய்த் தமக்கு அகப்படும் மொழியாய் உள்ளன தம் முன்னே வரும் காலம் தோன்றுமாயின் ஏ என்னும் சாரியை பெற்று முடிதலைப் பொருந்திற்று என்ப.

எ—டு : உழக்கே யாழாக்கு, கலானே பதக்கு என இவை அளவுப் பெயர். தொடியே கஃசு, கொள்ளே ஐயவி என இவை நிறைப் பெயர். காணியே முந்திரிகை, காலே காணி என இவை எண்ணுப் பெயர்.

சு. வே :

1. ஈறாய்
2. சொற்களாகிய

உயிரீறு புள்ளியீறு என்றதனானே, 'ஏ' என் சாரியை பெறாதனவும் உளவென்று கொள்க. குறுணி நானாழி என வரும்.

நச்.

இஃது அளவும் நிறையும் எண்ணுமாகிய பெயர்கள் தம்மிற் புணருமாறு கூறுகின்றது.

(இ—ள்.) உயிரும் புள்ளியும் தமக்கு ஈறாய், அளவையும் நிறையையும் எண்ணையும் கருதி வருவன உளவென்று ஆசிரியர் கூறப்பட்ட எல்லாச் சொற்களும், தத்தமக்கு இனமாகிய சொற்களாய்த் தம்மிற் குறைந்த சொற்கள், தம்முன்னே வரும் காலந் தோன்றுமாயின், தாம் ஏ என் சாரியை பெற்று முடிதலைப் பொருந்திற் றென்பார் ஆசிரியர்; எ—று.

முந்தை முத்தை என விகாரம்.

எ—டு: நாழியே யாழாக்கு, உழக்கே யாழாக்கு கலனே பதக்கு என அளவுப்பெயர் ஏகாரம் பெற்றுத் தம் முன்னர்த் தம்மிற் குறைந்தன வந்தன. தொடியே கஃசு, கழஞ்சே குன்றி, கொள்ளே ஐயவி என நிறைப்பெயர் ஏகாரம் பெற்றுத் தம் முன்னர்த் தம்மிற் குறைந்தன வந்தன. ஒன்றே கால், காலே காணி, காணியே முந்திரிகை என எண்ணுப்பெயர் ஏகாரம் பெற்றுத் தம் முன்னர்த் தம்மிற் குறைந்தன வந்தன அதிகாரம் பட்ட புள்ளியீறு முற் கூறாததனானே குறுணி நானாழி, ஐந்நாழி யுழக்கு என ஏகார மின்றி வருவனவும் கொள்க.

சுப்பிர.

'எல்லாச் சொல்லும்' என்றதை எழுவாயாகவும் 'ஒத்தது' என்றதைப் பயனிலையாகவும் 'ஏ என் சாரியை' என்றதைச் செயப்படு பொருளாகவும் கொண்டனர் உரைகாரர்கள். *'எல்லாச் சொல்லும்' என்றது பன்மையாகவும் ஒத்தது என்றது ஒருமையாகவும் இருத்தலின், எல்லாச் சொல்லும் என்றதை நான்காம் வேற்றுமையாகவும், 'ஏ யென்சாரியை' என்றதை முதல் வேற்றுமையாகவும் கொள்ளலாம்.

*எல்லாச் சொல்லும் என்பது பன்மையையுணர்த்துமாயினும் சொல்லும் என்பது ஒருமையாதலின் 'ஒத்தது' என்னும் ஒருமை யொடு முடிவதில் தவறில்லை.

"உயிரீறு புள்ளி...உளவென்றுணர்க" என இளம்பூரணரும், "அதிகாரப்பட்ட...குறுணிநானாழி கொள்க" என நச்சினார்க்கினியரும் கூறினர். 'ஒத்தது' என்ற சொல்லானே அதனைக் கொள்ளல்தகும். முந்தை என்றது வலிக்கும் வழி வலித்தலும் (சொல் 403) என்ற சூத்திரத்தான் முத்தை என ஆயிற்று.

இச்சூத்திரத்தில் 'புள்ளி' என்றது மெய், குற்றிய லுகரம் இவ்விரண்டனையும் குறிக்கும். †

வேங்கட.

உயிரீறு புள்ளியீறு என்றதனானே, ஏ என் சாரியை பெறாதனவும் உள என்று கொள்க' என்று உரையாசிரியரும், 'புள்ளியீறு முற்கூறாததனானே...ஏகாரம் இன்றி வருவனவும் கொள்க' என்று நச்சினார்க்கினியரும் கூறினர். ஆசிரியர்,

"ஔஎன வருஉம் உயிரிறு சொல்லும்
ஞ ந ம வ என்னும் புள்ளி யிறுதியும்" (தொகை. 19)

என்றும்,

'உயிரீறாகிய உயர்திணைப் பெயரும்
புள்ளி யிறுதி உயர்திணைப் பெயரும்' (தொகை 11)

என்றும்,

'உயிரும் புள்ளியும் இறுதி யாகி' (குற்றிய. 77)

என்றும், பிறாண்டும் கூறுகின்றாராகலானும், புள்ளியீற்றை முற்கூறாமை முறையன்மை யன்றாகலானும், உரைகாரர் கூறியவை பொருந்தா.

‡ஆயின், சாரியை பெறாது வருதல் எவ்வாறு அமைக்கப் படும் எனின், 'ஒத்த தென்ப' என்றதனான் அமைக்கப்படும். சொல்லதிகாரத்தில்

'எவ்வயிற் பெயரும்...செவ்வி தென்ப (வேற். 7)

†இக்கருத்து தம்முடையதாகக் கணேசய்யர் குறிப்பிட்டுள்ளார். அவரது தொல். எழுத்து. நச். உரை 6 வெளிவந்த ஆண்டு 1—1—1937 சாஸ்திரியார் உரை 6 வெளி வந்தது 8—12—1937

‡இக்கருத்து சுப்பிரமணிய சாஸ்திரியாரால் முன்னர்க் கூறப் பட்டது.

என்னும் சூத்திரத்தில்', செவ்விது', என்றதனான் 'யான் வந்தேன்' என்னாது 'வந்தேன்' என்பதுவும் கொள்ளப் படுதல் போல. ஆயினும், காலே மாகாணி என்னாது கால் மாகாணி எனின் பொருள் வேறுபடுதலின், அத்தகைய விடங்களில் சாரியை பெற்றே வருதல் வேண்டும்.

அவை அரை என்பதனோடு புணர்தல்.

166. அரையென வருஉம் பால்வரை கிளவிக்குப்
புரைவது அன்றால் சாரியை இயற்கை. (23)

ஆ. மொ.

இல.

Having of (ē) increment is not appropriate
To the word 'Arai' which denotes a part of a thing.

க. சு :

The inserting of the empty-morph (ē) is not realized with a word
Which means a portion (of a thing) namely arai.

பி. இ. நா

முத்து. 202

அரைவரினே அகன்றோடும் மற்றே.

இளம்.

இது எய்தியது விலக்குதல் நுதலிற்று.

(இ—ள்) அரையென வரும் பால்வரை கிளவிக்கு—அரை யென்று சொல்லவருகின்ற பொருட் கூற்றையுணர நின்ற சொல் லிற்கு, புரைவது அன்று சாரியை இயற்கை—பொருந்துவது அன்று மேற் கூறிய ஏ என் சாரியை பெறும் இயல்பு.

எ—டு : உழக்கரை, தொடியரை, ஒன்றரை என வரும்.

இது, 'ஒட்டுதற் கொழுகிய வழக்கு' (புணரியல் 30) அன்று என்பதனால் விலக்குண்ணாதோ வெனின், 'தம்மகப்பட்ட'

என்று வருமொழியையும் வரைந்தோதினமையின் இதற்கு அவ் விதி செல்லாதென்பது.*

நச்.

இஃது எய்தியது விலக்கிற்று.

(இ. ள்.) அம் மூவகைச் சொல் முன்னர்வரும் அரை என்று சொல்ல வருகின்ற பொருட் கூற்றை உணரநின்ற சொல்லிற்கு, ஏ என்சாரியை பெறுந்தன்மை பொருந்துவதன்று; எ—று.

ஆல் அசை,

எ—டு: **உழக்கரை** செவிட்டரை மூவுழக்கரை எனவும், கஃசரை கழஞ்சரை தொடியரை கொள்ளரை எனவும், ஒன்றரை பத்தரை எனவும் இவை ஏ என் சாரியை பெறாவாய் வந்தன. 'புரைவதன்று' என்றதனால் ‡கலவரை என்பதனை ஒற்றுக் கெடுத்துச் செய்கை செய்து முடிக்க, இதனானே செவிட்டரை என்புழி டகர ஒற்றுமிகுதலுங் கொள்க. ஒட்டுதற்கொழுகிய வழக்கு அன்மையின் சாரியை பெறாவாயின என்றாலோ வெனின், அவை பெற்றும் பெறாதும் வருவனவற்றிற்குக் கூறிய தாகலானும் இது 'தம்மகப்பட்ட' (194) என வரைந்தோதினமை யானும் விலக்கல் வேண்டிற்று.

---

*புணரியல் 30 ஆம் நூற்பாவில் சாரியையானது வருவதற்குரிய வழக்குடைய இடத்தில்தான் வரும் என்பது கூறப்பட்டமையின் அதிலேயே வருவதற்குரிய வழக்கல்லாவிடத்துச்சாரியை வாராது என்பதும் பெறப்பட்டது. அதனால் இந்நூற்பாவிலும் முன் கூறிய அளவுப் பெயர்களின் பின், அவற்றிற் குறைந்த அளவுப் பெயர்கள் வரின் ஏ யென்‡சாரியை வாராது எனக் கூற வேண்டுவதில்லை. கூறக்காரணம் என் எனின், நிலைமொழி அளவுப்பெயரினை யடுத்து அதற்குட்பட்ட அளவுப் பெயர் வரு மொழியாக வரினும் ஏ என்னும் சாரியை வரும் என்பது பெறப் பட்டு விடுமாதலின் கூறவேண்டுவதாயிற்று.

‡கலவரை: கலம் + அரை → கல + அரை → கல + வ் + அரை = கலவரை.

அவை குறை என்பதனோடு புணர்தல்.

167. **குறையென் கிளவி முன்வரு காலை**
நிறையத் தோன்றும் வேற்றுமை இயற்கை **(24)**

ஆ. மொ.

இல.

If the word 'Kuṛai' succeeds (the words of measure)
The rules of cases will begin to appear.

க. சு.

When the word Kuṛai follows
(words denoting measure, weight and number),
The rules of sandhi) which functions fully.
(is) that which is appropriate to case-relationship.

பி. இ. நூ.

முத்து. 203.

குறைவரின் வேற்றுமை கொளின் மிகும் என்ப.

இளம்.

இது எய்தியது விலக்கிப் பிறிது விதி [1]உணர்த்துதல் நுதலிற்று.

(இ.-ள்.) குறை என் கிளவி முன்வரு காலை—குறை என்னும் சொல் அளவு முதலியவற்றின் முன் வருங்காலத்து, நிறைய தோன்றும் வேற்றுமை இயற்கை—நிறையத் தோன்றும் மேல் வேற்றுமைப் பொருட் புணர்ச்சி [2]முடிபிற்குச் சொல்லும் இயல்பு

எ—டு: ‡உரிக்குறை, கலக்குறை தொடிக்குறை, கொட் குறை, காணிக்குறை, காற்குறை என வரும்.

'முன்' என்றதனான், பொருட்பெயரோடு புணரும்வழியும் வேற்றுமை முடிபு எய்துக வென்பது; கலப் பயறு என வரும்.

சு. வே:

1. கூறுதல்
2. முடியிற்

‡ உரிக்குறை = உரியும் அதன் குறையும்.

'நிறைய' என்பதனால், [3]கூறு என்பதன் கண்ணும் வேற்றுமை முடிபு எய்தும் என்பது; *நாழிக் [4]கூறு என வரும்.

நச்

இஃது எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது, ஏயென் சாரியை விலக்கி வேற்றுமை முடிபினோடு மாட்டெறிதலின்.

(இ—ள்.) குறையென்னும் சொல் அளவுப் பெயர் முதலியவற்றின் முன் வருங்காலத்திற்கு, வேற்றுமைப் புணர்ச்சி முடிபிற்கு உரித்தாகக் கூறுந்தன்மை நிரம்பத்தோன்றும்; எ—று.

எ—டு: உரிக்குறை கலக்குறை எனவும், தொடிக்குறை கொட்குறை எனவும், காணிக்குறை காற்குறை எனவும் வரும். உரிய நெல்லும் குறை நெல்லும் என்க

'வேற்றுமை யியற்கை' எனவே இவை வேற்றுமையன்றாயின. எனவே உரிக்குறை என்பதற்கு உரியும் உழக்கும் எனப் பொருளாயிற்று. ஏனையும் அன்ன

'முன்வரு காலை' என்றதனானே கலப்பயறு, கலப்பாகு என்றாற்போலப் பொருட் பெயரோடு புணரும் வழியும் இவ்வேற்றுமை முடிபு எய்துவிக்க. பாகென்றது பாக்கினை. நிறையவென்றதனானே உரிக்கூறு தொடிக்கூறு காணிக்கூறு எனக் கூறு என்றதற்கும் இம்முடிபு எய்து விக்க

அவற்றுட் குற்றுகர மொழிகட்குச் சாரியை

168. குற்றிய லுகரக்கு இன்னே சாரியை (25)

ஆ. மொ.

இல:

The increment 'in' is (added) to shortened 'u'.

க சு

The empty-morph iṇ (is affixed) to the over-shart-'u'.

பி. இ நா

முத்து. 204.

குற்றிய லுகரக் கின்னே சாரியை.

சு. வே:

3. கூற்று

4. கூற்று.

*நாழிக்கூறு = நாழியும் அதன் பாகமும். கூறு = பாதி [பிங்கலம் 328]

இளம்.

இது, வேற்றுமை முடிபு விலக்கி இன் வகுத்தமையின் எய்தியது விலக்கிப் பிறிது விதிகூறுதல் நுதலிற்று.

(இ—ள்.) குற்றியலுகரக்கு—[1]குற்றியலுகர ஈற்று அளவுப் பெயர் முதலியவற்றிற்கு, சாரியை இன்—(குறையொடு [2]புணரும் வழி வரும்) சாரியை இன்

எ—டு : உழக்கின் குறை, கழஞ்சின் குறை, ஒன்றின் குறை என வரும்.

நச்.

இது வேற்றுமை முடிபு விலக்கி இன் வகுத்தலின் எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுகின்றது.

(இ—ள்.) குற்றியலுகர ஈற்று அளவுப் பெயர் முதலியவற்றிற்குக் குறை யென்பதனோடு புணரும் வழி வரும் சாரியை, இன்சாரியையேயாம்; எ—று.

‡ 'குற்றியலுகரக்கு' இதற்கு அத்து விதித்து முடிக்க. குற்றியலுகரத் தின்னே என்பதும் பாடம்.

எ—டு : உழக்கின் குறை ஆழாக்கின் குறை எனவும், கழஞ்சின்குறை கஃசின் குறை எனவும், ஒன்றின்குறை பத்தின் குறை எனவும் வரும். இதற்கு உழக்கும் குறையும் என்பது பொருள். இது வேற்றுமைக்கண்ணாயின் உழக்கிற் குறையென நிற்கும்.

சுப்பிர.

குற்றியலுகரம் என்றது குற்றியலுகரத்தை ஈற்றிற் கொண்ட சொல்லைக் குறிக்கும். அஃது அளவு, நிறை, எண் இவற்றில் ஒன்றைக் குறிக்கும் சொல் என்பது அவற்றின் அதிகாரத்தான் விளங்கும்.

'குறையென் கிளவி முன் வருகாலை' என்றது முதற் சூத்திரத்தினின்று அதிகரித்தது.

சு. வே :

1. குற்றுகர
2. புணரும் அவ்வழி.

†குற்றியலுகரம் + கு → குற்றியலுகரம் + அத்து + கு → குற்றியலுகர + அத்து + கு → குற்றியலுகர + க் + கு → குற்றியலுகரக்கு.
அத்து விதித்து முடிக்க என்பது அத்துச்சாரியை கொடுத்துப் பின் அதை நீக்குக என்பது பொருள்.

கலம், அத்துச் சாரியை பெறும்.

169. அத்திடை வரூஉம் கலம் என் அளவே. (26)

ஆ. மொ.

இல :

The a'ththu' comes between 'Kalam' the measure (and Kuṛai)

க. சு :

attu comes between the measure-word Kalam (and kuṛai)

பி. இ. நூ

முத்து. 205.

கலம் என் அளவே அத்தொடு சிவணும்.

இளம்

இதுவும் அது,

(இ—ள்) கலம் என் அளவு இடை அத்து வரும்—கலம் என்னும் அளவுப்பெயர் (குறையொடு [1]புணரும்வழி) [2]இடையில் அத்துவரும்.

எ—டு : கலத்துக் குறை எனவரும்.

*இது, 'கலன்' என்னும் னகரவீறேல், நிலைமொழி ஒற்றுக் கேடும் வருமொழி ஒற்றுப்பேறும் 'அத்தேவற்றே' (புணரியல் 31) என்பதனாற் கொள்ளப்படும் 'கலனெனளவு' என ஓதாதது செய்யுளின்பம் நோக்கிப் போலும். சாரியை முற்கூறியவதனான் இன்சாரியை பெற்றவழி முன் மாட்டேற்றான் எய்திய வல்லெழுத்து வீழ்க்க

சு. வே:

1. புணரும்வழி அத்து வரும்
2. இடையே

*கலன் என்னும் னகர ஈறேல் என்பதால் கலத்துக்குறை எனக் காட்டிய உதாரணம் கலம் என்பதற்கு எனத் தெரிகிறது. ஆசிரியர் கலம் எனக்கொண்டே சூத்திரம் செய்தார் என்பதும் இளம்பூரணர் எண்ணம் எனத் தெரிகிறது. ஆனால் 'கலன் என ஓதாதது செய்யுள் இன்பம் நோக்கிப் போலும்' எனக் கூறியது ஆசிரியர் கலன் என்பதற்குப் பதிலாகக் கலம் எனக் கூறிவிட்டார் என இளம்பூரணர் நினைப்பதாகத் தெரிகிறது. இது இளம் பூரணரின் தடுமாற்றமே—[சிவ.] உரைத்தொடர் விளக்கம் பார்க்க.

நச்.

இதுவும் எய்தியது விலக்கிப்பிறிதுவிதி வகுத்தது, வேற்றுமை விதிவிலக்கி அத்து வகுத்தலின்.

(இ—ள்) கலம் என்னும் அளவுப் பெயர் குறையொடு புணருமிடத்து, அத்துச் சாரியை இடைவந்து புணரும்; எ—று.

எ-டு: கலத்துக் குறை. இதனை அத்து வற்றே (133) என்பதனான் முடிக்க, இதற்குக் கலமும் குறையும் என்பது பொருள். சாரியை முற்கூறியவதனானே முன் இன்சாரியை பெற்றவழி வல்லெழுத்து வீழ்க்க

சுப்பிர.

அளவு என்றது அளவுப்பெயர் என்ற பொருளில் வந்தது. 'கலமென்னளவே' என்றதை முதல் வேற்றுமையாகக் கொண்டு 'புணரும்வழி' என்றதை வருவித்து அதற்குப்பயனிலையாக்கினர் உரைகாரர்கள். அதனை ஏழாம் வேற்றுமையுருபு தொக்க சொல்லாய்க் கொளின் நலம்.

'மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை' (185) என்ற சூத்திரத்தால் 'கலம்' என்ற சொல்லின் பின்னர் அத்துச் சாரியை வரும்; இச்சூத்திரம் வேண்டா எனின் அற்றன்று; அதனால் வரும் அத்துச் சாரியை 'குறையென் கிளவி' (167) என்ற சூத்திரத்தால் தவிர்க்கப்பட்டதென்க.

வேங்கட.

சாரியை முற்கூறியவதனான், கலத்தின் குறை என இன் சாரியை பெற்றவழி வல்லெழுத்து வீழ்க்க என்றனர் உரையாளர் இருவரும். ஆசிரியர், மேற்சூத்திரத்தால், குற்றியலுகரவீற்றுப் பெயர்களுக்கு மட்டுமே இன்சாரியை விதித்தாராகலின், 'கலம்' என்னும் மகரவீற்றுப் பெயர்க்கு அச்சிறப்பு விதிச் சாரியை வாராது. அதனான், அவர் கூற்று வேண்டற்பாலதன்று.

இச்சூத்திரம் ஒரு பெயர்க்கே விதி கூறுதலின், இதனை இவ் வியலில் வைத்துக் கூறுதல் அமையாதால் எனின், ஆசிரியர், மேல் நான்கு சூத்திரங்களான அளவுப் பெயர் முதலியவற்றின் முன்னர் வந்து புணரும் சொற்களுக்கு விதி கூற வந்தவர், அப் பெயர்களோடு 'குறை' என்னும் சொல் புணர்தலை மேல்

இரண்டு சூத்திரங்களானும் முன்வரும் சூத்திரத்தானும் கூறலுற்றாராகலின், அச்சொல் புணருமிடத்து அத்துச் சாரியை பெறுவதனை இச்சூத்திரத்திற் கூறுதலான் இஃது ஈண்டு வைக்கப்பட்டதென்க. ஈண்டுக் கூறாது அகத்தோத்திற் கூறின், இச்சூத்திரத்தில் அடிகள் பல்குதலேயன்றி, அச்சூத்திரத்துப் பொருளை இவ்வியலிற் கூறியவற்றோடு ஒருசேர உளங்கொள்ளுதலும் அரிதாகும்.

பி. கு.

"கலம் என்பது மகர ஒற்றுச் சொல்லே என்பர் நச்சினார்க்கினியர். மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை (186) என்பதால், கலம் என்ற சொல்லும் அத்துச்சாரியை பெற இருக்க இந் நூற்பா மிகையெனின், அற்றன்று. மேல் 'குறையென் கிளவி' (167) என்பதால் சாரியைப்பேறு விலக்கி வல்லெழுத்து மிகுதலே கூறினமையின், இக்கலம் என்பதும் வல்லெழுத்து மிகுதல் ஒன்றே பெறும் என்பது பட்டு நிற்றலின் இது கூறவேண்டும் என்க. அன்றியும் ஆண்டுக் கூறப்படுவது பொருட் பெயராதலாலும், ஈண்டுக் கூறப்பட்டிருப்பது அளவுப் பெயராதலாலும் தனித்தனியே கூறவேண்டும் என்க. அளவுப் பெயர்க்கும், பொருட் பெயர்க்கும் விதியொன்றாயிருப்பினும் இலக்கணம் தனித்தனியே கூறுதல் இவ்வாசிரியர் கருத்தாம். அன்ன கருத்தினராதலை 167, 196 ஆகிய இரு நூற்பாக்களையும் ஒப்பிட்டுணர்க"—கு. சுந்தரமூர்த்தி.

பனையும் காவும் இன்சாரியை பெறுதல்

170. பனையென் அளவும் காவென் நிறையும்
நினையுங் காலை இன்னொடு சிவணும் (27)

ஆ. மொ.

இல.

The measure 'panai' and the weight 'Kā'
will have 'in' if we examine.

க. சு.

On careful consideration,
the word panai denoting measure,
and the word Kā denoting weight,
will combine with in.

பி இ. நூ.

முத்து 207.

பனையும் காவும் இன்னொடு சிவணும்

இளம்.

பனைஎன் அளவும் காஎன் நிறையும்–பனை என்னும் அளவுப் பெயரும் கா என்னும் நிறைப் பெயரும், நினையுங்காலை இன்னொடு சிவணும்—(குறை என்பதனோடு புணருமிடத்து) ஆராயுங்காலத்து இன்சாரியையொடு பொருந்தும்.

எ—டு : பனையின் குறை, காவின் குறை எனவரும்.

நினையுங்காலை என்றதனால் வல்லெழுத்துப் பேறும் சிறு பான்மை கொள்க. பனைக்குறை' காக்குறை எனவரும்.

நச்.

இதுவும் அது, வேற்றுமை விதி விலக்கி இன் வகுத்தலின்.

(இ—ள்.) பனை என்னும் அளவுப் பெயரும் கா என்னும் நிறைப் பெயரும், குறை என்பதனோடு புணருமிடத்து ஆராயுங் காலத்து இன்சாரியை பெற்றுப் புணரும்; எ—று.

எ—டு : பனையின் குறை, காவின் குறை எனவரும். இவையும் உம்மைத் தொகை* நினையுங்காலை என்பதனான் வேற்றுமைக்குரிய விதியெய்தி வல்லெழுத்துப் பெறுதலும் சிறு பான்மை கொள்க. பனைக்குறை காக்குறை எனவரும்.

இத்துணையும் அல்வழி முடிபு, இவற்றை 'வேற்றுமையல் வழி இஐ' (158) என்னும் சூத்திரத்திற் கூறாது வேறு ஓதினார் இவை அளவும் நிறையும் எண்ணும் ஆதலின்.

---

*பனைக்குறை=பனையும் அதன்குறையும். பனை— முகத்தலளவை காக்குறை காவும் அதன் குறையும். கா—நிறுத்தலளவை. இன்னும் ஒரு பனைப் பொழுது நிற்கிறது என்பதனான் பனை அளவுப் பெயராதல் பெறப்படும்—கணேசய்யர். அவர் கூற்றால் பனை கால அளவு என்பது பெறப்படும். [சிவ.]

அளவுநிறைப் பெயர்களின் மொழி முதலாம் எழுத்துக்கள்

171. அளவிற்கும் நிறையிற்கும் மொழி முதலாகி
உளஎனப் பட்ட ஒனபதிற்று எழுத்தே;
அவைதாம்,
கசதப என்றா [1]நமவ என்றா
அகர [2]உகரமோ டவையென மொழிப. (28)

ஆ. மொ.

இல.

There are nine letters which serve as initials of measures and weights : they are
'K', 'e', 'th', 'p', 'ṉ', 'm', 'v', in cluding 'a'
and 'u'- so say the learned.

க. சு :

There are only nine phonemes which stand at the beginning of words denoting measure and weight ;
they are
k, c, t, p and n, m, v,
and also a and u ;
so it is said.

இளம்.

இது, அளவுப் பெயர்க்கும் [3]நிறைப்பெயர்க்கும் முதலாம் எழுத்துக்கு வரையறை கூறுதல் நுதலிற்று.

(இ—ள்.) அளவிற்கும் நிறையிற்கும்—அளவுப் பெயர்க்கும் நிறைப் பெயர்க்கும், மொழிமுதலாகி உள எனப்பட்ட ஒன்பதிற்று எழுத்து—[4]மொழி முதலாய் **உள** என்று சொல்லப் பட்டன ஒன்பது எழுத்து, அவைதாம்—அவை (யாவையோ வெனின்) **கசபத** என்றா **நமவ** என்றா அகர உகரமோடு

சு. வே:

1. நமவவ்
2. உகரமொ
3. நிறைக்கும்
4. மொழிக்கு முதலாய்

அவையென மொழிப—க ச த ப க்களும் ந ம வ க்களும் [1]அகரமும் உகரமுமாகிய அவை என்று சொல்லுவர்.

எ—டு : கலம் சாடி தூதை பானை நாழி மண்டை [2]வட்டில் அகல் உழக்கு எனவும், கழஞ்சு [3]சீரகம் தொடி பலம் நிறை மா வரை அந்தை உம்மி எனவும் வரும்.

'உளவெனப்பட்ட' என்றதனான், உளவெனப் படாதனவும் அளவை உள என்பது. இம்மி [4]ஒரடை ஒராடை என வரும்.

* மற்று இவ்வரையறை கூறிப் பயந்தது என்னை யெனின், மேல் அகத்தோத்தினுள் அவற்றிற்கு முடிபு கூறும் வழி, அதிகாரத்தான் வன்கணத்தும், மேற் சொல்லா தொழிந்த கணத்தினும் சேறற்கு என்பது.

நச்.

இது முற்கூறிய மூன்றனுள் அளவிற்கும் நிறைக்கும் மொழிக்கு முதலாம் எழுத்து இனைத்தென்கின்றது.

(இ—ள்.) அளவுப் பெயர்க்கும் நிறைப் பெயர்க்கும் மொழிக்கு முதலாயுள்ள வென்று கூறப்பட்டன ஒன்பதெழுத்துகள்; அவ்வெழுத்துகள் தாம், க ச த ப க்களும் ந ம வ க்களும் அகர உகரமுமாகிய அவை யென்று கூறுவர் புலவர்; எ—று.

எ—டு ; கலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டி அகல் உழக்கு இவை அளவு. கழஞ்சு சீரகம் தொடி பலம் நிறை மா வரை [5]அந்தை இவைநிறை. நிறைக்கு உகர முதற்பெயர் வந்துழிக் காண்க. இனி 'உளவெனப்பட்ட' என்றதனான் உளவெனப் படாதனவும் உள; அவை இம்மி ஒரடை இடா என வரையறை கூறாதனவும் கொள்க. இன்னும் இதனானே தேய

சு. வே :

1. அகர உகரமோடு அவையும்
2. வட்டி
3. சீர்
4. ஒரெடை

*இதற்கு நச். உரை அடிக்குறிப்பில் விளக்கம் காண்க.

சு. வே: 5. அந்தம்

வழக்காய் ஒருஞார், ஒருதுவலி என்பனவுங் கொள்க. *இங்ஙனம் வரையறை கூறினார், அகத்தோத்தினுள் முடிபு கூறியவழி அதிகாரத்தான் வன்கணத்தின் மேல் செல்லாது ஒழிந்த கணத்தினும் செல்லும் என்றற்கு. எண்ணுப் பெயர் வரையறை யின்மையிற் கூறாராயினர்.

3. புறனடை

இவ்வியலுக்குப் புறனடை

175. **ஈறியல் மருங்கின் இவை இவற் றியல்பெனக்**
கூறிய கிளவிப் பல்லா றெல்லாம்
மெய்த்தலைப் பட்ட வழக்கொடு சிவணி
ஒத்தவை உரிய புணர்மொழி நிலையே. **(29)**

ஆ. மொ.

இல.

All the rules, which expound the nature of the final letters of standing words (which join the comming words) are to be found appropriate in accordance with the usage current in the country

க. சு:

All the different rules expounding the nature of the final sounds of standing words
(Which join the coming words) should be determined
as valid from the usage prevailing in reality.

* "அளவும் நிறையும் வேற்றுமையியல" (320) என்னும் நூற்பாவில் அதிகாரத்தால் வல்லின முதல் அளவுப் பெயர்களும் நிறைப்பெயர்களும் கொள்வதும், "அளபும் நிறையும் எண்ணும் வருவழி, நெடு முதல் குறுகலும் உகரம் வருதலும், கடிநிலை யின்றே யாசிரி யர்க்க" (390) என்னும் நூற்பாவில் வருமொழி யின்ன கணத்தது என்று சொல்லா தொழியினும் நாற்கணமும் கொள்வதும் நோக்கி யிவ்வாறு எழுதினார். இளம்பூரணர் "மற்றிவ் வரையறை...கணத்தினும் சேறற்கு என்பது" என்றுரைத்ததற்கும் இதுவே விளக்கமாகக் கொள்க. (சிவ)

இளம்.

இது, இவ்வோத்துப் புறனடை.

(இ—ள்) ஈறு இயல் மருங்கின்—உயிரும் புள்ளியும் இறுதி யானவை வருமொழியோடு கூடி நடக்குமிடத்து, இவை இவற்று இயல்பு எனகூறிய கிளவிப் பல் ஆறு எல்லாம்—இம்மொழிகளின் முடிபு இவை யெனக்கூறி முடிக்கப்பட்ட சொற்களின் (அவ்வாற்றான் முடியாது நின்ற) பலவகை முடிபுகள் எல்லாம், மெய்தலைப் பட்ட வழக்கொடு சிவணி ஒத்தவை உரிய புணர் மொழி நிலை—உண்மையைத் தலைப்பட்ட வழக்கொடு கூடிப் பொருந்தினவை உரியவாம் [3]புணரும் மொழிகள் நிலைமைக்கண்.

* எ—டு : விளஞான்றது என்புழி நிலைமொழிப் பெயரது இயல்பும், ஞான்ற ஞாயிறு என நிலைமொழி வினையாயவழி இருமொழி இயல்புமாகிய "ஞ ந ம ய வ" (தொகை. 2) என்பதன் ஒழிபும்,

"மண் கடிது என்புழி வருமொழி வன் கணத்து இயல்பாகிய மொழி முதலாகும்" (தொகை. 5) என்பதன் ஒழிபும்.

நடஞெள்ளா என்னும் இயல்பு கணத்து இருமொழியியல்பும் [4]நில்கொற்றா என்புழி நில் கொற்றா, நிற்கொற்றா என நிலை மொழி திரிந்த உறழ்ச்சியும், துக்கொற்றா துஞ்ஞெள்ளா என்னும் மிகுதியும், [5] உரிஞுஞெள்ளா என்னும் இயல்பு கணத்து உகரப் பேறும், உரிஞ்யானா உரிஞ் அனந்தா என்னும் இருமொழியியல்பும், மண்ணு கொற்றா மணணுக் கொற்றா, ஞெள்ளா எனவரும் "ஔவென வருஉம்" (தொகை 10) என்ப தனுள் விலக்கப்படாத ணகர னகர லகரமாகிய புள்ளியிறுதி களின் நிலைமொழி உகரப் பேறுமாகிய "உயிர் ஈறாகிய முன்னிலைக்கிளவி" (தொகை. 9) என்பதன் ஒழிபும்,

---

சு. வே :

1. முடிபு இவற்றின் இயல்பெனக்
2. சொற்களினது
3. புணர்மொழிகளின்
4: மாண்கடிது [இது தவறு]
5. நில்கொற்றா என் புழிட என்பது அடிகளாசிரியர் பதிப்பில் இல்லை.
6. உரிஞ் ஞெள்ளா என இயல்பு கணத்து

* இப்பகுதி விளக்கத்தை இந்நூற்பா உரைகளின் இறுதியிற்காண்க.

விரவுப் பெயர்த் திரிபின் மேல் எடுத்து ஓதப்படாதனவயா நின் ஞாண் என்றாற் போல வரும் "அஃறிணை விரவுப் பெயர்" (தொகை. 13) என்பதன் ஒழிபும்,

காவிக்கண் குவளைக்கண் என்றாற்போல அல்வழி முடிபாகிய "வேற்றுமை யல்வழி" (தொகை. 16) என்பதன் ஒழிபும்,

[1] பதக்கு நானாழி, சீரகரை, ஒருமாவரை என்னும் "உயிரும் புள்ளியும் இறுதியாகி" (தொகை. 22) என்பதன் ஒழிபும், பிதவற்றின் ஒழிபும் எல்லாம் ஈண்டே கொள்க.

நச்:

இஃது, இவ்வோத்திற்குப் புறனடை; எடுத்தோத்தானும் இலேசானும் முடியாதனவற்றிற்கு இதுவே ஒத்தாகலின்.

(இ—ள்.) உயிரும் புள்ளியும் இறுதியாகிய சொற்கள் வருமொழியோடு கூடி நடக்குமிடத்து, இம்மொழிகளின் முடிபு இவையெனக் கூறி முடிக்கப்பட்ட சொற்களினது அவ்வாற்றான் முடியாது நின்ற பலவகை முடிபுகள் எல்லாம், உண்மையைத் தலைப்பட்ட வழக்கோடு கூடி, புணரும் மொழிகளின் நிலைமைக்கட் பொருந்தினவை உரியவாம்; எ—று.

எ—டு ; நடஞெள்ளா என உயிரீறாகிய முன்னிலைக் கிளவி மென்கணத்தோடு இயல்பாய் முடிந்தது. மண்ணு கொற்றா, மண்ணுக் கொற்றா, உள்ளுகொற்றா உள்ளுக் கொற்றா, கொல்லு கொற்றா கொல்லுக் கொற்றா என்பன புள்ளியிறுதி முன்னிலைக் கிளவி உகரம் பெற்றும் உறழ்ந்தும் முடிந்தன. உரிஞு ஞெள்ளா இஃது "ஔவென வரூஉம்" (152) என்பதன் ஒழிபு. *பதக்க நானாழி பதக்க முந்நாழி என இவை ஏயென்சாரியை பெறாது அக்குப் பெற்று அதன் இறுதிமெய்ம்மிசையொடுங் கெட்டுப் புணர்ந்தன. ‡வாட்டானை தோற்றண்டை என்பன தகரம் வந்துழித் திரிந்து நெடியதன் முன்னர் ஒற்றுக் கெடாது நின்றன. †சீரகரை என்பதனைச் சீரகம் அரை என நிறுத்திக் ககர வொற்றின்

சு. வே:

1. குறுணிபதக்கு, நானாழிபதக்கு

* பதக்கு + அக்கு + நானாழி → பதக்கு + அ + நானாழி → பதக்க நானாழி

‡ வாள் + தானை, தோல் + தண்டை.

† சீரகம் + அரை → சீரக + அடை → சீரக் + அடை → சீரகரை.

மேலேறின அகரத்தையும் மகர ஒற்றையும் கெடுத்து அரை என்பதன் அகரத்தை ஏற்றி முடிக்க. இது நிறைப் பெயர். ஒருமா வரை என்பதனை ஒரு மா அரை என நிறுத்தி வருமொழி அகரம் கெடுத்து 'ஒருமாரை' என முடிக்க. $கலவரை என்பதனைக் கலரை என முடிக்க. ††அகர மகரம் கெடுத்து நாகணை எனப் பிறவும் வருவன எல்லாம் இச்சூத்திரத்தான் முடிக்க.

சிவ.

இளம்பூரணரின் எடுத்துக்காட்டு விளக்கம் :

1. ''விள ஞான்றது......ஞநமயவ என்பதன் ஒழிபும்'

'ஞநமயவ' (145) என்னும் நூற்பாவில், 'இருபத்து நான்கு ஈற்றுச் சொற்களும் நிலைமொழிகளாய் நிற்க, ஞநமயவ என்னும் மெய்களையும் உயிர்களையும் முதலாகக் கொண்டுள்ள மொழி கள் வருமொழிகளாக வரும்போது, வருமொழி முதல் எழுத்து திரிதலோ கெடுதலோ, அன்றித் தானே தோன்றுதாலா இல்லா மல் இயல்பாயே நிற்கும்' என்பது கூறப்பட்டது. அந்நூற்பா வானது வருமொழிமுதல் எழுத்தின் இயல்பு கூறுவது. எடுத்துக் காட்டாக விள+ஞான்றது என்பதில் ஞகரம் மூவகைத் திரிபும் இன்றி இயல்பாகும் என்பது காண்க. அந்நூற்பாவில் நிலை மொழி இறுதி எவ்வாறாகும் என்பது கூறப்படவில்லை. வேறு எங்கும் கூறப்படவில்லை. விள என்னும் நிலைமொழியிறுதியும் விள ஞான்றது என்பதில் யாதோர் திரிபும் இல்லாமல் இயல்பாக இருக்கிறது. இந்த நிலை மொழிப் பெயரினது இயல்புக்கு விதி வேறிடத்தின்மையின் ஞநமயவ என்னும் நூற்பாவில் கூறாது ஒழிந்த ஒழிபாகக் கொண்டு புறனடை நூற்பாவினையே விதியாகக் கொள்ள வேண்டும்.

'ஞநமயவ' என்னும் நூற்பாவில் நிலைமொழி பெயராக இருத்தற்கு விதி கூறப்பட்டது. நிலைமொழி வினையாக இருந்து மேற்சொன்ன வருமொழிகள் வந்தால் நிலைமொழி யீறும் வருமொழி முதலும் எவ்வாறு ஆம் என்பது எங்கும் கூறப் படவில்லை. எனவே ஞான்ற என்னும் நிலைமொழி வினையின் முன்னர் ஞாயிறு என்னும் பெயர் வந்தவிடத்தும் நிலைமொழி

$ கலவரை. கலம்+அரை→கல+அரை→கல்+அரை=கலரை.

†† நாகணை. நாகம்+அணை→நாக+அணை→நாக்+அணை= நாகணை.

யீறும் வருமொழி முதலும் இயல்பாகவே வரும் என்ற விதியை (யாண்டும் காணாமையின்), ஞநமயவ' என்பதன் ஒழிபாகவே கொண்டு புறனடை நூற்பாவால் அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

2. ''மண்கடிது......மொழிமுதலாகும் என்பதன் ஒழிபும்''

'மொழிமுதலாகும்' (148) என்னும், நூற்பாவில் 'நிலைமொழி ணகார னகர ஈறுகள், இருபத்திரண்டு எழுத்துக்களையும் முதற் கண் கொண்ட மொழிகள் வருமொழிகளாக வரின் அல்வழிப் புணர்ச்சியில் அவ்விரண்டும் திரிதல் இல்லாமல் இயல்பாய் வரும்' என்பதுகூறப்பட்டது. ஆனால் வருமொழிமுதல் எழுத்து என்ன வாகும்என்பது கூறப்படவில்லை. மண் கடிது என்பதில் ணகர ஒற்று இயல்பாதற்கு 'மொழி முதலாகும்' என்னும் நூற்பா விதி யாக அமையுமேயன்றிக் 'கடிது' என்பதன் ககரமுதல் எழுத்து திரி பின்றி இயல்பாகும் என்பதற்கு விதியாக அமையாது. அதனால் வருமொழி முதல் எழுத்தும் இயல்பாகும் என்ற விதியை 'மொழிமுதலாகும்' என்பதில் கூறப்படாத ஒழிபாகக்கொண்டு புறனடையால் அமைக்கவேண்டும்.

3. ''நடஞெள்ளா......உயிரீறாகிய முன்விலைக்கிளவி என்பதன் ஒழிபு''

உயிரீறாகிய முன்னிலைக் கிளவி (152) என்னும் நூற்பா வில், 'உயிரீற்று முன்னிலை வினைச் சொற்களும் மெய்யீற்று வினைச் சொற்களும் நிலைமொழிகளாக நிற்க, வல்லெழுத்து முதல்மொழி வந்தால் நிலைமொழியிறுதி எழுத்து இயல்பா கவோ உறழ்ந்தோ அமையும்' என்பது கூறப்பட்டது. அதில் நிலைமொழியிறுதி பற்றிக் கூறப்பட்டதேயன்றி வருமொழி முதல் வல்லெழுத்து எவ்வாறாம் என்பது கூறப்படவில்லை. 'நடஞெள்ளா' என்பதில் நிலைமொழியீறு இயல்பாக இருப்ப தற்கு 'உயிரீறாகிய என்னும் நூற்பாவிதியாக அமைகிறது. ஆனால் ஞெள்ளா என்னும் வருமொழி முதல் இயல்பாதலுக்கு விதியமையவில்லை. அதனால் 'உயிரீறாகிய' என்னும் நூற்பா வின் ஒழிபாகக் கொண்டு புறனடையால் வருமொழி முதல் ஞகரம் இயல்பாயிற்று. என்று கொள்ளவேண்டும். நட என்பது கொற்றா என்பதுடன் சேரும்போது நடகொற்ற என இயல்பா யும் நடக்கொற்றா என வல்லெழுத்து மிகுந்தும் வந்ததுபோல

நட ஞெள்ளா என வருமொழி இயல்பாக வருமே யன்றி நடஞ் ஞெள்ளா என வருமொழி ஞகரம் மிகுந்து வராது. நட என்பது மெல்லெழுத்து முதல் மொழியுடன் சேரும்போது இயல்பும் மிகுதியும் ஆகிய இரண்டு நிலையும் பெறுமோ என எண்ணினால் மிகுதல் இல்லை என்பது கூறப்படவேண்டும். அது கூறப்படா மையின், உயிரீறாகிய, என்பதன் ஒழிபாகக் கொண்டு புறனடை யால் நடஞெள்ளா என்பதில் நிலைமொழியீறு இயல்பாகவே அமையும் எனக் கொள்வேண்டும்.

நில் கொற்றா என்பதும் நில் கொற்றா என இயல்பாயும் நிற் கொற்றா என் லகரம் றகரமாகத் திரிந்து வரும். 'உயிரீறாகிய' என்னும் நூற்பாவில் 'இயல்பாகுநவும் உறழ்பாகுநவும்' எனக் கூறப்பட்டதற்கு இயல்பாவனவும் இயல்பும் மிகுதியும் ஆகிய உறழ்பு (இருநிலை) ஆவனவும் எனப் பொருள் கொள்ள வேண்டு தலினால், நில் என்பதன் லகரம் இயல்பாயும் றகரமாகத் திரிந்தும் வரும் உறழ்ச்சிக்கு அந்நூற்பாவில் விதியில்லை. எனவே அவ்விதி அந்நூற்பாவின் ஒழிபு எனக் கொண்டு புறன டையால் அமைக்க வேண்டும்.

துக்கொற்றா துஞ்ஞெள்ளா என்பனவற்றின் து என்னும் முன்னிலைக் கிளவியின் முன்னர்க் கொற்றா என்பதன் முதல் வல்லெழுத்தாகிய ககரமும் ஞெள்ளா என்பதன் முதல் எழுத் தாகிய ஞகரமும் மிக்கு வந்தன. 'உயிரீறாகிய' என்னும் நூற்பா வில் இயல்பும், இயல்பும் மிகுதியுமாகிய உறழ்ச்சியுமே கூறப் பட்டன. தனிமிகுதி கூறப்படவில்லை. எனவே இம்மிகுதியை அந்நூற்பாவின் ஒழிபு விதியாகக் கொண்டு புறனடையான் அமைக்க வேண்டும்.

4. உரிஞு ஞெள்ளா என்னும் இயல்புகணத்து உகரப் பேறும்''

'உயிரீறாகிய' என்னும் நூற்பாவில் இயல்பும் உறழ்வும் ஆகிய விதிகளே கூறப்பட்டன. உகரப்பேறு கூறப்படவில்லை. அதனால் (உரிஞ்+கொற்றா) உரிஞு கொற்றா என உகரம் பெறுதலை அந்நூற்பாவின் ஒழிபாகக் கொண்டு புறனடையான் அமைக்க.

அந்நூற்பாவில் வருமொழி வல்லெழுத்து முதலாயின் எவ் வாறாம் என்பது கூறப்பட்டதேயன்றி இடையெழுத்தும் உயிர்

எழுத்துமானால் எவ்வாறாம் என்பது கூறப்படவில்லை. அதனால் முன்னிலை ஏவல் வினைகளின் முன்னர் யகரமும் உயிரும் வரின் நிலைமொழி முதலும் வருமொழி முதலும் இயல்பாகும் என்ற விதியை அந்நூற்பாவின் ஒழிபாகக் கொண்டு புறனடையால் அமைக்க (உரிஞ்=உரிஞு வாயாக என ஏவல்வினை. உகரமொடு புணரும் புள்ளியிறுதி, உயிரும் யகரமும் வருவழியியற்கை (164) என்னும் நூற்பாவில் வரும் உரிஞ் என்பதற்கு உரிஞுதல் என்பது பொருள்.)

உயிரீறாகிய என்னும் நூற்பாவில் கூறப்பட்ட உயிரீறாகிய முன்னிலை ஏவல் வினைகளுள் ஔ இறுதியாகிய வினையும், மெய்யிறுதி முன்னிலை ஏவல் வினைகளுள் ஞ், ந், ம், வ் இறுதி வினைகளும் அந்நூற்பாவிற்கூறிய இயல்பாதலும், உறழ்தலும் ஆகிய இரண்டு விதிகளையும் பெறாமல் வேறு விதிகளைப் பெறும் என்ற கருத்தைத் தெரிவிப்பது 'ஔவெனவருஉம்' (153) என்னும் நூற்பா. இதில் விலக்கப்பட்டன ஔ, ஞ், ந், ம், வ் என்பன. விலக்கப்படாதன ஔ ஒழிந்த ஏனை உயிர்களும், ண் ன் ய் ர் ல் ழ் ள் என்னும் மெய்களும் குற்றியலுகரமுமாம். இவற்றுள் ணகர இறுதிச் சொல்லாகிய மண் (கழுவுவாயாக) என்பது மண்ணு கொற்றா மண்ணுக் கொற்றா என உகரம் பெற்று இயல்பாயும் உகரத்துடன் வல்லெழுத்துமிக்கும் வந்த உறழ்ச்சி முடிபுக்கும், மண்ணு ஞெள்ளா என்று வருமொழி ஞகரத்துடன் சேரும்போது உகரம் மட்டும் பெற்று வருதலுக்கும் 'உயிரீறாகிய' என்னும் நூற்பாவில் விதிகூறப்படவில்லை. அதனால் அவவிதி அந்நூற்பாவின் ஒழிபாகக்கொண்டு புறனடையான் அமைக்க வேண்டும்.

5. ''விரவுப்பெயர்த்......அஃறிணை விரவுப்பெயர் (156) என்பதன் ஒழிபும்''

''அஃறிணை விரவுப் பெயர்'' (156) என்னும் நூற்பாவில், 'அஃறிணைப் பொதுப் பெயர்கள் வருமொழி வல்லெழுத்து வரின் இயல்பாய் முடியும்' என்பது கூறப்பட்டது. சாத்தன் குறியன், சாத்தன்கை என்பன எடுத்துக்காட்டுகள். நீ என்பதும் பொதுப் பெயர். அதன் திரிபு நின் என்பது. அதன் னகர

ஒற்று ஞாண் என்பதனுடன் சேரும்போது நின்ஞாண் என யாதோர் திரிபும் இன்றி இயல்பாக உள்ளது. இவ்விதியாண்டும் ஓதப்படவில்லை. அதனால் இவ்விதி 'அஃறிணை விரவுப் பெயர்' என்பதன் ஒழிபாகக் கொண்டு புறனடையான் அமைக்கப் படும்.

6. "காவிக்கண்......வேற்றுமை அல்வழி (159) என்பதன் ஒழிபும்"

"வேற்றுமை அல்வழி" (159) என்னும் நூற்பாவில் 'இகர ஈற்றுப் பெயரும் ஐகார ஈற்றுப் பெயரும் அல்வழியில் இயல்பும், மிகுதியும், உறழ்வும் பெறும்' என்பது கூறப்பட்டது. காவிக்கண், குவளைக்கண் என்பன அந்நூற்பாவின் விதிப்படியே வல்லெழுத்து மிக்கு வந்தன. நச்சினார்க்கினியர் அந்நூற்பாவில் வல்லெழுத்து மிகுதிக்கு இவற்றைக் காட்டியுள்ளார். இளம்பூரணர் 'வேற்றுமை அல்வழி' என்பதன் ஒழிபு என்றது பொருந்தாது.

7. "பதக்குநானாழி......உயிரும் புள்ளியும் இறுதியாகி என்பதன் ஒழிபு"

'உயிரும் புள்ளியும் இறுதியாகி' (165) என்னும் நூற்பாவில், 'உயிரீற்று மெய்யீற்று அளவுப் பெயர்களும் நிறைப் பெயர்களும் நிலைமொழிகளாய் நிற்க, வருமொழிகளாய் அவற்றின் குறைந்த அளவு நிறைப் பெயர்கள் வருமேயானால் இடையில் ஏ என்ற சாரியை வரும்' என்பது கூறப்பட்டது

பதக்கு+நானாழி, சீரகம்+அரை. ஒருமா+அரை என்பன சேரும்போது ஏகாரம் இல்லாமல் பதக்கு நானாழி, சீரகவரை, ஒருமாவரை எனச்சேர்கின்றன. இவற்றிற்குரிய விதி 'உயிரும் புள்ளியும்' (165) என்னும் நூற்பாவில் இல்லாமையால் அதன் ஒழிபாகக் கொண்டு புறனடையான் அமைக்க.

நச்சினார்க்கினியர் காட்டிய எடுத்துக்காட்டுகளுக்கும் இவ்வாறே விளக்கம் அறிந்துகொள்க.

யாவர், யாது என்னும் சொற்களின் மரூஉ.

173. *பலரறி சொல்முன் யாவர் என்னும்
பெயரிடை வகரம் கெடுதலும் ஏனை
ஒன்றறி சொல்முன் யாதுஎன் வினாவிடை
ஒன்றிய வகரம் வருதலும் இரண்டும்
மருவின் பாத்தியின் திரியுமன் பயின்றே. (30)

ஆ. மொ

இல.

The disappearance of the sound 'va' in the word 'yāvar' preceded by the word which denotes many persons
The appearance of 'va' in the word 'yāthu'
preceded by the word which denotes neuter singular
These two, occur mostly in usage which makes the deformation of words.

க. சு :

The disappearance of the sound Va in the word
yāvar preceded by an epieene plural,
and the appearance of the sound va in the interrogative ponoun yātu preceded by non-human singular
these two occur mostly in usage considered as marūu.

பி. இ. நா.

முத்து. 208.

யாவர் அவர்முன் அடுப்பின் நடுநிலை
வகரம் கெடுதலும் யாதுஅது முன்வரின்
வகரம் வருதலும் அதன்இயல் பாகும்.

---

*பிரயோக விவேக நூலார் தனிமொழியும் தொடர்மொழியும் காரணம் இன்றி வர்ண விகாரமுதல் நான்கு பெறும் என்று கூறி. வர்ண நாசத்திற்கும் வர்ண ஆகமத்திற்கும் இந்நூற்பாவை மேற்கோள் காட்டினர். [சம—காரி. 9]—அடிகளாசிரியர்.

இது, மரூஉ முடிபு கூறுதல் நுதலிற்று

(இ-ள்) பலர் அறி சொல் முன் யாவர் என்னும் பெயரிடை வகரம் கெடுதலும்—பலரை அறியும் சொல்முன்னர் வருகின்ற யாவர் என்னும் பெயரிடையில் வகரம் கெடுதலும், ஏனை ஒன்று அறிசொல் முன் யாது என் வினா இடை ஒன்றிய வகரம் வருதலும்—ஒழிந்த ஒன்றனையறியும் சொல் முன்னர் வரும் யாது என்னும் வினா மொழியிடை உயிரொடு பொருந்திய வகரம் வருதலும், இரண்டும் மருவின் பாத்தியில் பயின்று திரியும்—இரண்டும் மரூஉக்களது முடிபினிடத்துப் பயின்று வழங்கும்.

எ—டு. அவர் யார் எனவும், அது யாவது எனவும் வரும்.

"ஒன்றிய' என்றதனான் வகர உயிர்மெய் என்று கொள்க. இன்னும் அதனானே, யாரென்பதும், யாவதென்பதும் நிலைமொழியாய்ப் பிற வருமொழியொடு புணரும் வழியும் இம் முடிபு கொள்க. "யார் யார்க் கண்டே. யுவப்பர்" எனவும். "யாவது நன்றெனவுணரார் மாட்டும்" எனவும், வரும்.

'பயின்று' என்றதனான், பலரறிசொல்லும் ஒன்றறிசொல்லும் வருமொழியாய வழியும் இம் முடிவு கொள்ளப்படும். யாரவர், யாவதது என வரும்.

நச்.

இது மரூஉச்சொல் முடிவு கூறுசின்றது.

(இ—ள்.) பலரை அறியும் அவர் என்னும் சொல்லின்முன்னர் வருகின்ற யாவர் என்னும் பெயர் இடையில் வகரம் கெடுதலும், ஒழிந்த ஒன்றனை அறியும் அது என்னும் சொல்லின் முன்னர் வருகின்ற. யாது என்னும் வினாச் சொல் இடையிலே உயிரொடு பொருந்திய வகரம் வருதலும், ஆகிய அவை இரண்டும் மருமுடிவின் பகுதியிடத்து மிகவும் பயின்று திரியும்; எ-று.

எ—டு: அவர் யார் எனவும், அது யாவது எனவும் வரும். அவர் யாவர் என்பது வகரங்கெட்டு அவர் யார் என நின்ற வழி "யாஅரென்னும் வினாவின் கிளவி" (சொல். 210) என்ற வினையியலுட்கூறும் வினைக்குறிப்புச் சொல்லாம் பிற எனின், ஆகாது; அவ்வகரங் கெட்டாலும் ஈண்டு யாவர் என்னும் பெயர்த் தன்மை

யாயே நிற்றலின். அது பெற்றவாறு என்னையெனின், ஈண்டுப் பலரறி சொல் முன் வந்த யாவர் என்பதன் வகரம் கெடும்எனவே ஏனை அவன் அவள் என்னும் இருபால் முன்னும் யாவர் என்பது வாரார் தென்றும், அது திரிந்து மருவாய் நிற்கும் என்றும் கூறுத லானும், 'யாவரெனும் பெயரிடை' என்பதனானும் பெற்றாம். இதனானே அவன் யாவர் அவள் யாவர் என்றாற் பால்வழுவாம் என்பது பெற்றாம். இதனை 'யாவன் யாவள் யாவர் என்னும்— ஆவயின் மூன்றொடு' (சொல். 162) எனப் பெயராக ஓதிய வற்றான் உணர்க. அன்றியும் யாரென்னும் வினாவின் கிளவி முப்பாற்கும் உரித்தென்று யாரென்னும் வினாவினைக் குறிப்பினை அவன் யார் அவள்யார் அவர்யார் இவர்யார் என முப்பாற்கும் ஒப்ப உரிமை கூறுதலானும் அது வேறென்பது பெற்றாம். அது வினையியலுள் ஓதினமையானும் 'வினாவிற் கேற்றல்' (சொல் 66) எனப் பயனிலையாக ஓதினமையானும் வேறாயிற்று.

இனி 'யார் யார்க் கண்டே யுவப்பர்' எனப் பலரறிசொல் முன்னரன்றி இயல்பாக வந்த யாரென்பது யாண்டு அடங்கும் எனின், அதுவும் யாரை யாரைக் கண்டு என உருபுவிரிதலின் யாவரை என்னும் வகரம் கெட்ட பெயரேயாம். அங்ஙனம் நிலை மொழி வருமொழியாய் நிற்றல் 'பயின்று' என்றதனாற் கொள்க. இதனானே 'யாவது நன்றெனவுணரார் மாட்டும்' என ஏனை ஒன்றறி சொல்லும் நிலை மொழியாய் நிற்றல் கொள்க. இன்னும் இதனானே யாரவர் யாவதது என இவ்விரு சொல்லும் [1]நிலைமொழியாய் வருதல் கொள்க.

வேங்கட.

'யாவர்' என்பதற்கும் 'யார்' என்பதற்கும் வேறுபாடுண்டு. அஃதியாதோ எனின், 'யாவர்' என்பது தொடர்புடை வினாப் பெயர். அஃதாவது 'இதனை உனக்குக் கூறியவர் யாவர் அவரைக் கூட்டிக் கொண்டு வா' என்பது போல் வருவது. 'யார்' என்பது வினாவினைச் சொல். தொடர்புடை வினாப் பெயராகிய

சு. வே.

1. வருமொழியாய். [இப்பாடம் தவறு.]

'யாவர்' என்பது அந்நியதியின்றித் தனியே வினாப் பெயராய் வரும். அவ்வாறு வரும் யாவர் என்பது, 'அவர் யாவர்' என்பது போலப் பலர்பாலிலேயே வரும்; அவன் யாவர்? அவள் யாவர் என்று வாராது. யார் என்பது, அவன் யார்? அவள் யார்? என்பது போல உயர்திணை மூன்று பால்களுக்கும் வரும்.

இவற்றை,

> ......
> யாவன் யாவள் யாவர் என்னும்
> ......
> பாலறி வந்த உயர்திணைப் பெயரே (சொல் பெய. 8)

என்பதனானும், இச்சூத்திரத்தில்,

> 'பலரறி கொன்முன் யாவர் என்னும்
> பெயரிடை'

என்றதனானும்

> யாஅர் என்னும் வினாவின் கிளவி
> அத்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்தே (வினை. 13)

என்பதனானும் அறியலாகும்;

இதுபோலவே 'யாவது' என்பது பெயர்; 'யாது' என்பது வினைக்குறிப்பு.

'யாவர்' என்பதன் திரிபாகிய 'யார்' என்பது பெயராய் நின்று வேற்றுமை ஏற்பது போன்று, 'யாவது' என்பதன் திரிபாகிய 'யாது' என்பதும் பெயராய் நின்று வேற்றுமை ஏற்கின்றது.

'யாவர்', 'யாவது' என்பன இரண்டும் 'யா' என்னும் வினாப் பெயரோடு சுட்டுப் பெயர் சேர்ந்து ஒரு தன்மையின் அமைந்த சொற்களாகலின், 'யாவர்' என்பதன் வகரம் கெடும் என்றாங்கு 'யாவது' என்பதன் வகரம் கெடும் என்பது முறைமையாகும்'.

சிவ.

நச்சினார்க்கினியரின் தடை விடை விளக்கம் ; —

யாவர் என்பது அவர் என்பதன் முன்வரின் இடை வகரம் கெட்டு யார் என வரும்; அப்படி வருவது மரூஉ முடிபாகும். அவர் யார் என வரும்.

அவன் யார் அவள் யார் அவர் யார் என 'யார்' என்பது வினாவினைக்குறிப்புச் சொல்லாய் வரும் என்பது, வினையியலில்

யாஅர் என்னும் வினாவின் கிளவி
அத்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்தே (வினை. 13)

என்னும் சூத்திரத்தில் கூறப்பட்டது. மரூஉ முடிபாகிய அவர் யார் என்பதன் யார் என்பது வினாவினைக் குறிப்புக் கிளவி யாகிய 'யார்' என்னும் சொல்லாகாதோ? தனித்துக் கூறவேண்டுவது ஏன் என்னும் வினா எழுகிறது. விடை :—

வினையியலுட் கூறப்பட்ட யார் என்பது வினைச் சொல் அது இயல்பாகவே இருப்பது. இங்குக் கூறப்பட்ட யாவர் என்பது பெயர்ச்சொல்; இதன் இடை வகரம் கெட்டு யார் எனத் திரிந்து மருவி வருவது. யாவர் என்னும் பெயர்' என்று சூத்திரத்தில் கூறியது காண்க. மேலும் பெயரியலிலும்

''யாவன் யாவள் யாவர் என்னும்
ஆவயின் மூன்றொடு......
பாலறி வந்த உயர்திணைப் பெயரே'' (8)

என யாவர் என்பது பெயர் எனக்கூறப்பட்டதும் காணலாம்.

இங்கே சொல்லப்பட்ட யாவர் என்பது பலர் அறிசொல் முன் வரும் என்றமையால் அவன் யாவர் அவள் யாவர் என ஆண் பெண் பாலறி சொல்முன் வராது என்பது கொள்ளப்படும். அதனால் அவர் யாவர் என்பது அவர் யார் என வந்த விடத்து யார் என்பது பெயராகவே அமையும். வினையியலில் கூறப்பட்ட யார் என்பது உயர் முப்பாலுக்கும் வருதலின் வினையாகிறது. யாவர் என்பது யார் என வருவது மரூஉ என்பதும் காணத் தக்கது. அன்றியும் எழுவாய்க்குப் பயனிலையாக 'யார்' என்பது வரும் என்று 'வினாவிற்கேற்றல்' (சொல். 66) என ஆசிரியர் கூறினார் என்பதும் கருதத்தக்கது.

தனியாகப் பலர் அறிசொல்முன் வாராமல் யார் எனவரின் அது யாவர் என்பதன் திரிபாகிய பெயரே என்று கொள்ளல் வேண்டும். 'யார் யார்க்கண்டே உவப்பர்' என்பதில் காண்க. பெயராக இருத்தலினால் யாரை யாரை என இரண்டாம் வேற்றுமைப் பொருள் கொள்கிறோம்.

தொகைமரபு உரைவளம் முற்றும்.

சொல்லகராதி

(எண் — பக்க எண்)

அஃறிணை 52
அஃறிணை உயர்திணையோடு விரவிய பெயர் 52
அஃறிணை விரவுப் பெயர் 51
அக்கை 37
அகத்தோத்து 3 9
அகல் 98
அடிகளாசிரியர் 13 38 40
அடைந்தது 8 21 50
அடைந்தான் 41 43 50
அடைபு 41
அடைவு 9 10
அணிகலன்கள் 77
அதுகொறோழி 77
அதுயாவது 108
அதோ 73
அதோள் 71 73
அதோளிக்கொண்டான் 71 73
அதோளி 71 72 73
அந்தை 98
அய்யன் 37
அரசக்கன்னி 43
அரும்பதவுரை 71
அரும்பதவுரைகாரர் 48
அரைகுறிது 67
அலிக்கொற்றன் 67 68
அவ் 39
அவ்வடை 76 77 78
அவ்வழி 71 72
அவ்வழிக்கொண்டான் 71 72
அவ்வழிகொண்டான் 71 72
அவ்வை 37
அவர் யார் 108
அவர்க்கண்டு 62 65
அவற்கண்டு 61 62
அழகிது 10
அழகியள் 43
அழகு 10 50
ஆக்கம் 10
ஆங்கவைக் கொண்டான் 71 72
ஆங்கவை கொண்டான் 71
ஆங்கிலமொழிபெயர்ப்பு (ஆ. மொ.) 4 7 12 16 20 23 25 27 29 33 40 45 48 53 58 66 69 74 78 81 84 88 90 91 94 95 97 99 107
ஆசிரியர் தொல்காப்பியர் 19
ஆசீவகப்பள்ளி 42 43
ஆசீவகன் 42
ஆட்டம் 9
ஆடிற்று 8

ஆடூஉ வறிசொல் 63 65
ஆண்டைக் கொண்டான் 71 72
ஆய் 37
ஆயிடைக்கொண்டான் 72
ஆயிடை கொண்டான் 72
ஆயிற்று 10
ஆல்+இலை 12
ஆழாக்கின் குறை 92
ஆன என்பது அசைநிலை 7
இகலா 83
இடா 98
இடிந்தது 8
இடிபு 9
இதோ 73
இதோள் 71
இதோளி 71 73
இதோளிக்கொண்டான் 71 72
இம்மி 98
இல்லை 10
இலக்கண விளக்கம் (இல. வி.) 8 13 20 28 30 34 40 46 49 53 59 66 75 86
இலக்குவனார் (இல.) 3 4 7 12 16 20 25 27 29 34 40 45 48 55 68 66 69 74 78 81 84 88 90 91 93 97 99 107
இவ் 39
இவ்வழிக்கொண்டான் 71
இலேசு—எளிது 10
இளம்பூரணர் 1 முதல்
இளமை 10
இறந்தது விலக்கல் 19
இறைவ நெடுவேட்டுவர் 41 43
இறைவன்+நெடுவேட்டுவர் 42
ஈங்கிவைக்கொண்டான் 71 72
ஈங்கிவை கொண்டான் 71 72
ஈட்டம் 9 10
ஈடிற்று 10
ஈண்டிற்று 21
ஈண்டைக் கொண்டான் 71 72
ஈதோளி 74
ஈந்தா 83
ஈர்க் கொற்றா 30 31
ஈர் கொற்றா 30 31
ஈரிற்று 8
ஈரெழுத்தொருமொழி 17
ஈழவக் கத்தி 43
ஈழவர் 43
உடம்படுமெய்கோடல் 9
உடம்பொடு புணர்த்தல் 62
உடன்படாமை 17
உடைந்தது 8
உடைபு 9
உண் 32 38
உண்கு 44
உண்கொற்றா 30 31
உண்டனிர் புலவரே 29
உண்டார் சான்றார் 42
உண்டி கொற்றா 29
உண்டீர் சான்றீர் 44
உண்டீர் புலவரே 29
உண்டு 10 44
உண்டேஞ் சான்றேம் 42

உண்டேம் நாம் 42
உண்டேன் 44
உண்ப சான்றார் 42
உண்பல் 45
உண்பேன் பார்ப்பேன் 42
உண்ம் 38
உதோள் 71
உதோளி 71 73
உதோளிக் கொண்டான் 72
உம்மி 98
உம்மைத் தொகை 69
உயர்திணை அஃறிணையோடு விரவிய பெயர் 52
உயர்திணை விரவுப் பெயர் 51
உயர்வு 10
உயிர் மயங்கியல் 2 5
உயிரீற்றுப் புணரியல் 16
உயிரேறி முடிதல் 9
உரிக்குறை 90 91
உரிக்கூறு 91
உரிஞ் 10 39 84
உரிஞ் அனந்தா 82 83 84 100
உரிஞ் ஆதா 82 83
உரிஞ்யானா 82 83 84 100
உரிஞுக் கொற்றா 34 35
உரிஞு கொற்றா 34 35
உரிஞு ஞெள்ளா 100 101
உரிய நெல்லும் குறை நெல்லும் 91
உரியும் உழக்கும் 91
உருபியல் 2 80
உரைகாரர்கள் 12 35 44 78
உரையாசிரியர்கள் 11 16 22 44
உரையாசிரியர் 64
உரையாளர் 29 45
உரையாளர் இருவர் 94
உவ் 39
உவ் வவ்வழிக் கொண்டான் 71 72
உவ்வழி கொண்டான் 71 72
உவமைத் தொகை 69
உழக்கரை 88 89
உழக்கின் குறை 92
உழக்கு 98
உழக்கே யாழாக்கு 85 86
உழுந்தா 83
உள்ளுக் கொற்றா 101
உள்ளு கொற்றா 101
உளப்பட 11
ஊங்குவைக் கொண்டான் 71 72
ஊங்குவை கொண்டான் 11 72
ஊண்டைக் கொண்டான் 71 72
ஊட்டிற்று 21
ஊற்றம் 9 10
ஊறிற்று 8 10
ஊறா 83
எக்கண்டு 64
எட்டி 46 48
எட்டிப் புரவு 46
எட்டியது பூ 46
எடுத்தோத்து 10

எதோள் 73
எதோளிக் கொண்டான் 71 72
எம் 80
எம்மை 80
எயினர் 83
எல்லார் தமக்கும் 80
எல்லார் தமதும் 80
எல்லா நமக்கும் 80
எல்லா நமதும் 80
எல்லீர் நுமக்கும்
எல்லீர் நுமதும் 80
எவ்வழிக் கொண்டான் 71 72
எவ்வழி கொண்டான் 71 72
எழு 9
எழுச்சி 10
எழுத்ததிகாரத் தொடர் எண் 4
எழுத்தியல் 17
எழுந்தது 8
எள்ளழகிது 76
எறி கொற்றா 30 31
என்ப 2
என்மனார் 2
என்னை 80
எனக்கு 80
ஏக்கட்டினான் 63
ஏணி 9
ஏவல் 33
ஏவல் முன்னிலை 31
ஏற்றம் 10
ஏறிற்று 8
ஐ 37
ஐது 8
ஐந்நாழி உழக்கு 86
ஐயம் 9 10
ஐயா 83
ஒட்டுதற்கொழுகிய வழக்கு 88 89
ஒடிந்தது 9
ஒடுக்கம் 9
ஒரடை 98
ஒராடை 98
ஒரு சொல் நீர்மைத்து 32
ஒரு ஞார் 99
ஒரு திங்களைக் குருவி 71 72
ஒருதுவவி 99
ஒரு மாவரை 101 102
ஒருவென் 41
ஒருவேன் 45
ஒல்லைக் கொண்டான் 68
ஒழிவு 10
ஒழுக்கா 83
ஒற்றிரட்டல் 9
ஒன்றரை 88
ஒன்றின்குறை 92
ஒன்றே கால் 86

ஓக்கம் 9 10
ஓடிற்று 9
ஓதா 83
ஓரெழுத்தொருமொழி 17
ஔவியத்தான் 41 43 50
ஔவியம் 9 10 41 43 51 83
ஔவியத்தது 9
கஃறீது 25 26
கஃசரை 86
கட்டு 38 39
கடிக்கப்பட்டான் 56
கடிகா 67 69
கடு 9
கடுக்குறைத்தான் 64
கண்ணழகிது 76
கணேசய்யர் 17 87 67
கத்து 38
கதிர்ஞ்ஞெரி 13 14
கதிர்ஞெரி 13 14
கதிர்ந்நுரை 15
கபில பரணர் 41 43
கபிலன்+பரணன் 42
கமீல் சுலபில் (க. சு.) 3 4 8 13 16 20 23 25 27 29 33 40 45 48 53 59 66 70 74 78 81 85 88 90 91 93 95 97 99 107
கருவி 1
கருவிகூறுதல் 18
கருவிச் சூத்திரங்கள் 2
கருவித் திரிபுகள் 11
கல்+எறிந்தான் 12
கல்+தீது கற்றீது 26
கல்+நன்று 26
கலக்குறை 90 91
கலத்துக்குறை 93
கலம் 98
கலவரை 96
கலனே பதக்கு 85 86
கழஞ்சரை 89
கழஞ்சின்குறை 92
கழஞ்சு 98
கழிக்குறைத்தான் 61
கழஞ்சே குன்றி 89
கழுக் கொணர்ந்தான் 63
கற்கெழுசிறுகுடி 64
கன்னட ஆதிபுராணம் 37
கன்னன்று 25 26
காக்குறை 96
காணிக்குறை 90 91
காணியே முந்திரிகை 86 86
காது 38 39
காய் 17
காய்ஞ்ஞெரி 13
காய்ஞெரி 13
காலே காணி 83 86
காவிக்கண் 68 101
காவிதி 48
காவிதிப்புரவு 46
காவிதிப்பூ 46
காவின்குறை 96

காற்குறை 90 91
காற்றீது 77
கிளிக்குறிது 67 68
கிளிகுறிது 67 68
குமரகோட்டம் 43 42
குமரன் 2
குரிசிறீயன் 77
குரீ 9
குவளைக்கண் 68
குறணிமிர்ந்தது 77
குற்றியலுகரம் 11 36
குறியள் 43 50
குறியன் 41 43 50
குறியேன் 43
குறுணி நானாழி 85
கூட்டுக் கொற்றா 34 35 39
கூட்டுக் கொற்றி 34 35
கேள்வை 37
கேள்வெள 37
கை 9 41 43 50
கைஞ்ஞெரீத்தார் 13 14
கொட்குறை 90 91
கொணா கொற்றா 30 31
கொள்ளரை 89
கொள்ளே ஐயவி 85 86
கொற்றணைக்கொணர்ந்தான் 61
கோணிமிர்ந்தது 76
கோலிகக் கருவி 42 43
கோலிகன் 42
கோள்—கொள்ளுதல் 57
கோறீது 75 76 77
கோனன்று 75 76 77
கௌநெகிழ்ந்தது 10
கௌவுககொற்றா 34 35
சங்கர நமச்சிவாயர் 19
சாட்கோல் 21 22
சாட்கோல்—பண்புத்தொகை 22
சாடி—98
சாணாகிய கோல் 21
சாத்தன் 50 52
சாத்தன் குறிது 49 51
சாத்தன் குறியன் 49
சாத்தன் கை 49
சாததி 50 52
சாத்தி குறிது 51
சாதகம் 17
சாரப் பட்டான் 54 55
சிங்க நோக்கு 28
சித்திரைத் திங்கள் 68
சிலப்பதிகாரம் 48
சிலம்பு—71
சிவலிங்கனார் (சிவ) 4, 12, 23, 26, 27, 28, 39, 47, 51, 93, 96, 99, 110
சிறியள் 43
சிறியன் 41, 50

சிறியேன் 43
சீரகம் 98, 101
சுந்தர மூர்த்தி, சு. 58, 95
சுப்பிர மணிய சாஸ்திரியார் (சுப்பிர) 2, 6, 11, 14, 18, 21, 22, 24, 31, 35, 44, 51, 55, 72, 80, 83, 86, 92, 94
சூர்க் கோட்பட்டான் 54, 55
சூர் கோட்பாட்டான் 54, 55
செட்டிக் கூத்தன் 46
செப்புக் கொணர்ந்தான் 62, 64
செய்கு 38
செய்கும் 38
செய்கை 1
செய்கைச் சூத்திரம் 24
செய்கைச் சூத்திரங்கள் 2
செயப்பாட்டு வினை 56
செவி 41, 43, 50
செவிட்டரை 89
சென்மதி பாக 69
சென்மே 38
சே 9
சேனாவரையர் 52
சேறு 44
சொல்லழகிது 76
சோ 9
சோ—அரண் 10
சோ ஞொள்கிற்று 10
ஸம் க்ஷேபம் 3
ஞாற்சி 9, 10, 11, 24, 41, 51
ஞான்றது 9, 10, 11
ஞான்றாள் 50
ஞெகிழ்ச்சி 24
ஞெகிழ்ந்தது 21
ஞெள்ளா 31, 32
தக்கயாகப்பரணி 40
தம் 80
தம்மாடை 76
தம்மை 75, 77, 80
தமக்கு 79, 80
தமது 79, 80
தலை 41, 43, 51
தற்கொண்டான் 64
தன்மை வினை 33
தன்னின முடித்தல் 62
தன்னை 80
தனது 80
தா நல்லர் 76
தாய்க் கொலை 61, 65
தாய் கொலை 65
தானல்லன் 76
திராவிட மொழியின் மூவிடப் பெயர் 36
திருமுக் கொற்றா 34 35
தில்லைச் சொல்லே 68, 69

தின் 32, 38
தின் கொற்றா 30, 31
தின்ம் 38
தினை 48
தினைக்குறிது 67, 68
தினைகுறிது 67, 68
தினைப் புரவு 46, 47
தினைப் பூ 46, 47, 48
தினை பிளந்தான் 61
தீண்டப் பட்டான் 54, 55
தீயன் 43, 50
தீயன் 41
தியேன் 43
து 16
துக் கொற்றா 31, 32, 100, 101
துஞ் ஞெள்ளா 100
துரைச்சானியம்மா 47
தூதை 98
தெய்வச்சிலையார் 7
தெருட்டு 38
தெவ் 39 101
தெவ்—பகை கொள் 39
தெவ்வர் 39
தெவ்வர்—பெயர்ச்சொல் 39
தெவ்வலன்—76
தெவ்விலான் 39
தெவ்வு 39
தெவ்வுக் கொற்றா 34, 35
தெவ்வு கொற்றா 34, 35
தெவ்வுதல்—முகத்தல் 40
தெவ்வுவி—39
தெவ்வுவித்தான் 39
தேவநேயப் பாவாணர் 17
தொகுத்து முடித்தல் 4
தொகுத்து முடித்த நூற்பாக்கள் 4
தொகைச் சொல் 32
தொகை நிலைச் சொல் 65
தொகை மரபுத் தொடர்கள் 4
தொகைமரபு—1முதல்
தொகையியல் 2
தொடர்மொழி 14
தொடி—98
தொடிக்குறை 90 91
தொடியரை 88 89
தொடியே கஃசு 85 89
தொல்காப்பியனார் 81
தொன்னூல் விளக்கம் (தொன்) 29 75
தோணன்று 76
தோழி 52
தோற்றண்டை 101
நங்கை 43
நங்கைச் சானி 47

நங்கைப்பெண் 47
நங்கையைக் கொணார்ந்தான்
63
நச்சினார்க்கினியம் 22
நச்—1முதல்
நச்சி—1முதல்
நட 32
நடக்கொற்றா 30 31
நட கொற்றா 30 31
நடஞெள்ளா 100 101
நப்புணர்வில்லா நயனிலோர்
64
நப்புணர்வு 64
நம் 80
நம்மை 80
நம்பி 41 43
நம்பித்துணை 46
நம்பிப்பிள்ளை 46
நம்பிப்பூ 46
நம்பிப்பேறு 46
நம்பியைக் கொணர்ந்தாள்
61 63
நம்மை 75 77
நமக்கு 79 80
நமது 79 80
நன்னூல் (நன்) 8 20 23 27 30
40 45 49 53 66 75 79
நன்னூலார் 19 32 65
நாய்கோட் பட்டான் 54 55
நாரைகுறிது 67
நாழி 98
நாழிக்கூறு 91
நாழியே யாழாக்கு 86
நாளை 31 33
நான்குகணம் வன்கணம், மென்
கணம் இடைக்கணம்
உயிர்க்கணம் 42 43
நிக்கந்தக் கோட்டம் 43
நில் கொற்றா, நிற் கொற்றா
31 100
நிலைமொழிக் கருவி 80
நிறை 98
நின்ஞான் 101
நின்மே 38
நின்னை 77 80
நினக்கு 80
நினது 80
நீ—37
நீட்சி 9, 10, 24, 41, 51
நீட்டிப்பு 10
நீடிற்று 10
நீண்டது 8, 9, 10, 21,
நீண்டான் 41, 43, 50
நீம் 38
நீ—முன்னிலை விரவுப்பெயர்
43
நீயிர் 28
நீயிர்—நும் 81

நுந்தை 9, 38
நுந்தையது 9, 10, 21,
நும் 28, 80, 81, 82
நும்மின் திரிபெயர் 28 31
நுமக்கு 81, 82
நுமது 81, 82
நெகிழ்ச்சி 10
நெகிழ்ந்தது 10
நெய்யகல் 76
நேமிநாதம் (நேமி) 27, 74
நொ—16
நொக் கொற்றா 31, 32
பட்டான்—தம்மினாகிய சொல் 57
படர்க்கை வினை 33
பண்டைச் சான்றார் 71, 72
பண்புத்தொகை 69
பனைத்தோள் 68
பதக்கு நானாழி 101
பருத்தி குறிது 67, 68
பல் சங்கத்தார் 43
பல் சான்றார் 41
பல் சான்றோர் 43
பல்லரசர் 41, 43
பலர்+அரசர் 42
பலவரைசர் 41
பலா 9
பலாக் குறைத்தான் 61, 63
பவணந்தியார் 33
பனைக்குறை 96
பனைத் தடிந்தான் 63
பனைதடிந்தான் 63
பனையின் குறை 96
பாதகம் 17
பாம்புக் கோட்பாட்டன் 54, 55 56,
பாம்பு கோட்பட்டான் 54, 55 56
பார்ப்பார் 44
பார்ப்பீர் 44
பாவாணர் 90
பானை 98
பிரம கோட்டம் 42,
பிரமன் 42
பிளவுபட்டிசைப்பது 32
பிற்கால இலக்கண நூல்கள் (பி. இ. நூ) 8, 13, 16, 23, 27, 30, 34, 40, 45, 49, 53, 59. 66, 70, 74, 78, 79, 81, 85, 88, 90, 91, 93, 96, 107
பிற்குறிப்புகள் (பி. கு) 7, 16, 18, 57, 66, 72, 84, 95
புணரியல் 1
புலம் புக்கனன் 62
புலிக்கொற்றன் 67 68
புலிகோட் பட்டான் 54 55

புலைக் கொற்றன் 67
புள்ளிமயங்கியல் 2 5
புளிக்குறைத்தான் 63
புளிகுறைத்தான் 61 63
புறம் 41 43 51
புறனடை 99
பூ 9
பூ ஞாற்றினார் 14
புஞெரி, பூஞ்ஞெரி 13 14
பூல் குறைத்தான் 63
பூற் குறைத்தான் 63
பெரியன் 41 43 50
பெரியள் 50
பெரியேன் 43
பேஎய்க் கோட்பட்டான் 54 55
பேஎய் கோட்பட்டான் 54 55
பேராசிரியர் 82
பொருநுக் கொற்றா 34 55
பொருநு கொற்றா 34
பொருந் 39
பொருந் அனந்தா 82 83
பொருந் ஆதா 82 83
பொருந் யானா 82 83
பொன் 21 29
பொன் கொணர்ந்தான் 63
பொன் ஞாத்த 18
பொன் ஞாத்த தார்ப்புரவி 18
பொன் யாத்த 18
பொன் யாத்த தார்ப்புரவி 18
பொன்றீது 75 76
பொன்னகல் 76
பொன்னன்று 25 26
மகட் பெற்றாள் 61 63
மகட் பெற்றான் 61 63 64
மகற்பெற்றான் 64
மகள் 24
மகன் 21
மண்கடிது 100
மண்கொணர்ந்தான் 63
மண் ஞாத்த 18
மண் ஞாத்த கோட்ட மழ களிறு 18
மண் ஞான்றது 19
மண் ஞாமை 18
மண்டீது 27 28
மண்டை 98
மண்ணகல் 77
மண்ணன்று 27 28
மண்யாத்த 18
மண்யாத்த கோட்ட மழ களிறு 18
மண்யாமை 18
மண்யான்றது 19
மண்ணுக் கொற்றா 100 101
மண்ணு கொற்றா 100 101
மணி + அடித்தான் 12
மதுரைக் காஞ்சி 40

மயிலைநாதர் 32
மரக்குறைத்தான் 63
மரங்குறிது 55
மரங்குறைத்தான் 61
மரபுபற்றிகூறல் 4
மரபு மட்டும் பற்றிய நூற்பாக்கள் 4
மருத்துவமாணி 41
மருத்து மாணிக்கர் 41 43
மருத்துவன் + மாணிக்கன் 42
மழவரோட்டிய 63 65
மன்னைச் சொல்லே 68
மா 91
மாசித்திங்கள் 68
மாட்சி 9 10 24 41 51
மாடா 31 32
மாண்டது 8 9 10 21
மாண்டாள் 50
மாண்டான் 41 43 50
முடத்தி 50
முடவன் 50
முண்ணன்று 28
முத்துவீரியம் (முத்து) 17 20 23 27 34 41 46 49 53 60 66 70 79 81 85 88 91 95 96 107
முதல் + நிலை = முதனிலை 77
முந்தை—முத்தை விவகாரம் 86
முருக்கு 38
முள் + நன்று 28
முன்னிலை 36
முன்னோரது கொள்கை 2
முஃடீது 28
மூவகைமொழி 1 3
மூவுழக்கரை 89
மூன்றாம் வேற்றுமையுருபு 54
மூன்றுதிரிபு 1
மெய் 17
மெய்ஞ்ஞானம் 13 14
மெய்ந்நூல் 13 14
மெய்ம்மறந்தார் 13 14
மைக் கொணர்ந்தான் 62
மொழிப 2

மொழிவாம் என்னும் உத்தி 4
யாங்கவைக் கொண்டான் 71 72
யாங்கவை கொண்டான் 71 72
யாண்டைக் கொண்டான் 71 72
யாது 8 9 10
யாப்பருங்கல விருத்தி 73
யாப்பு 9 10 41 51
யாரவர் 108
யாவத்து 108
யாவரென்பதன் திரிபாகிய யார் 110
யாவள் 43 50
யாவன் 41 43 50
ராசராசபுரி 40
வட்டில் 98
வடுகா 31 32
வண்டினைக் கொணர்ந்தான் 61 63
வண்டு கொணர்ந்தான் 61
வண்ணாரப் பெண்டிர் 42 43
வண்ணாரன் 42
வரகு 11
வருது 38 44
வருதும் 38
வரை 98
வலிது 8 9 10
வலிமை 9
வலியள் 43 50
வலியன் 41 43 50
வலுமை 41
வழிமொழி 5
வளிக்கோட்பட்டான் 54 55
வளி கோட்பட்டான் 54 55
வன்மை 10 51
வா 32
வாட்டானை 101
வாலிழந்த நரி 77
வாழைப்பழம் 32
வாழைப்பழம் 32
வியப்பு 17
விரவுப்பெயர் 51
விரற்றீது 77
விரனன்று 77
வில் கோள் 62 64
விள 8 9 10
விளக்குறுமை 5, 6, 7
விளக்குறைத்தான் 6 61 63
விள + கோடு 6
விள ஞான்றது 100
விளங்குறைத்தான் 62
விளங்கோடு 5 6
விளி மரபு 50
விற்கோள் 62 64
வீரசோழியம் (வீர) 27 74,
வெரிந் 10 39

வெள்ளைவாரணனார்
(வெள்ளை) 3, 6, 7, 12, 32,
44
வேங்கடாரசுலு ரெட்டியார்
(வேங்கட) 2 15 22 31 36
44 47 56 64 72 83 87 94 109

வெள 9
வெளவுக் கொற்றா 35
வெளவு கொற்றா 35
வேல் 10
வேனன்று 76

———

நூற்பா முதற்குறிப்பு அகராதி

(எண் — பக்க எண்)

அஃறிணை விரவு 84

அத்திடை வரூஉ 93

அரையென வரூஉ 88

அவற்றுள், இகர 45

அவற்றுள், மெல்லெழுத் 12

அளவிற்கு நிறை 97

ஆறன் உருபினு 78

ஈறியல் மருங்கின் 99

உகரமொடு புணரும் 82

உயிரீறாகிய முன்னிலைக் 29

உயிரீறாகிய வுயர்திணை 40

உயிரும் புள்ளியும் 84

ஔவென வரூஉம் 33

க ச த ப முதலிய 4

குற்றியலுகரக் 91

குறையென் 90

சுட்டுமுதலாகிய 69

ஞ ந ம ய வ 7

ண ள வென் புள்ளி 27

ண ன வென் 17

நும்மென் இறுதி 81

நெடியதன் முன்னர் 74

பலரறி சொல்முன் 107

பனையென் 95

புள்ளியிறுதியும் 53

மெல்லெழுத்துமிகு 58

மொழி முதலாகு 19

லனவென வரூஉம் 25

வேற்றுமைக் கண்ணும் 23

வேற்றுமையல்வழி 66

இணைப்பு

கருவியும் செய்கையும்

ஒரு நாடகம் என்றால் தலைவனும் தலைவியும் சிறந்தவர்களாகவும் மற்றைய உறுப்பினர் அவர்கட்குத் துணை புரிபவராகவும் அமைவர். இசையரங்கில் பாட்டு நிகழ்ச்சி என்றவுடன் வாய்ப்பாட்டாளர் முன்னவராகவும் மற்றைய தோல் துளை நரப்புக் கருவியினர் அவர்க்குத் துணை புரிபவராகவும் அமைவர். உணவு என்றவுடன் (நம் பக்கத்தில்) சோறு முதன்மையானதாகவும் மற்றைய கறி முதலியன அதற்குத் துணைப்பொருள்களாகவும் அமையும். எனவே பல சேர்ந்துவரும் ஒரு நிகழ்ச்சியில் அப்பலவற்றுள் ஒன்று அல்லது சில சிறந்தும் மற்றையன துணை புரிந்தும் வரும் என்பது தெரியலாம். இவ்வாறே எழுத்ததிகாரத்தும் கொள்ளலாம். எழுத்ததிகாரம் என்றது நூன்மரபு முதல் குற்றியலுகரப் புணரியல் ஈறகா ஒன்பது இயல்களின் தொகுதியாம். இவ்வதிகாரத்தில் எழுத்தினைப்பற்றி, எழுத்து இனைத்தென்றலும், இன்ன பெயர வென்றலும், இன்ன முறைமைய வென்றலும், இன்ன அளவினவென்றலும், இன்ன பிறப்பின வென்றலும் இன்ன புணர்ச்சிய வென்றலும், இன்ன வடிவின வென்றலும், இன்ன தன்மைய வென்றலும் என எட்டு வகையானும் எட்டிறந்த பலவகையானும் உணர்த்தினர் ஆசிரியர் தொல்காப்பியர். இவற்றுள் 'இன்ன புணர்ச்சிய என்றல்' என்பதே முதலாவதாகவும் மற்றையன வெல்லாம் அதற்காகக் கூறப்பட்டனவாகவும் கொள்ளலாம். அதனால் இவ்வதிகாரத்துள்ள இயல்களில் நிலைமொழி வருமொழியோடு புணரும் புணர்ச்சி பற்றியனவான தொகைமரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகிய ஐந்தும் சொல்லப்பட வேண்டியனவாகவும் மற்றையவியல்கன் அவற்றிற்குத் துணைபுரிவனவாகவும் அமைந்தனவாம். துணைபுரிவனவற்றைக் கருவி என்னலாம். எனவே நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல் புணரியல் ஆகியவை கருவியியல்களாக

வும், மற்றையன செய்கை யியல்களாகவும் கொள்ளலாம். இவற்றுள் கருவியியல்களிற் செய்கை நூற்பாக்களும் ஆங்காங்கு அமைந்தனவும் உண்டு.

கருவியின்றிச் செய்கை நிகழ்தல் இல்லை ஆதலின் செய்கை பற்றிக் கூறவேண்டிய விடத்தில் கருவிபற்றியும் கூறவேண்டுவதே. செய்கை என்றது சமைத்தல் போன்றது. கருவி என்றது அச்சமைத்தல் தொழில் தொடங்குதற்குமுன் அதற்கு வேண்டிய அரிசி, காய் முதலியவற்றைத் திருத்திக்கொள்வது போன்றது. ஆதலின் முதல் நான்கியல்கள் கருவி பற்றியனவாகவும், பின் ஐந்தியல்கள் செய்கை பற்றியனவாகவும் அமைந்தன.

இனி இளம்பூரணர் கருவி செய்கைபற்றிக் கூறியதன் விளக்கம் காண்போம்.

> ''இவ்வதிகாரத் திலக்கணம் கருவியும் செய்கையும் என இருவகைத்து, அவற்றுள் கருவி, புறப்புறக் கருவியும், புறக் கருவியும், அகப்புறக் கருவியும், அகக்கருவியும் என நான்கு வகைப்படும். செய்கை, புறப்புறச் செய்கையும், புறச் செய்கையும், அகப்புறச் செய்கையும், அகச்செய்கையும் என நான்கு வகைப்படும்.''

என்றார். இவற்றுள் செய்கையைப்பற்றி முதலில் தெரிந்து கருவியைப்பற்றிப் பின்னர்த் தெரிவோம். செய்கை என்பது நிலைவரு மொழிகளின் புணர்ச்சி பற்றியதாம்—அதாவது நிலைமொழி பிறுதி வருமொழி முதலொடு சேரும் புணர்ச்சி பற்றியதாம்.

அகச் செய்கை :

இச்செய்கை நான்கனுள் அகச்செய்கை யென்பது நிலை மொழியீறு பற்றியதாம். ''தொகை மரபு முதலிய ஒத்தினுள் இன்ன வீறு இன்னவறாம் எனச் செய்கை கூறுவனவெல்லாம் அகச் செய்கை'' என இளம்பூரணர் கூறினர்.

வாழிய வென்னும் சேயென் கிளவி
இறுதி யகரம் கெடுதலும் உரித்தே. **(212)**

இந்நூற்பா 'வாழிய' என்ற சொல்லின் இறுதியில் உள்ள யகர வுயிர்மெய்யானது வருமொழி வல்லெழுத்தோடு சேரும்போது

கெடாது நிற்றலேயன்றிக் கெட்டு நிற்றலும் உரித்து'' என்ன வந்தது. வாழிய + கொற்றா = வாழிகொற்றா எனக் காண்க. இந்நூற்பா, இறுதி எழுத்து பற்றியது. ஆதலின் இஃது, அகச் செய்கை நூற்பா எனப்படும். இவ்வாறே பிறவும் அறிக. தொகைமரபு முதலிய வியல்கள் பெரும்பாலும் நிலைமொழி யீறுபற்றியனவாதலின் இளம்பூரணர் அவற்றினை அகச் செய்கை யென்றார். (அவற்றுள் புறச்செய்கை பற்றியும் சில நூற்பாக்கள் உள)

புறச் செய்கை :

லனவென வருஉம் புள்ளி முன்னர்த்
தநவென வரிற் றனவா கும்மே. (150)

இந்நூற்பாவைப் புறச் செய்கைக்கு உதாரணம் காட்டினர் நிலைமொழி யிறுதியில் லகரம் அல்லது னகரம் நிற்பின் வருமொழி முதலில் உள்ள தகரம் அல்லது நகரம் னகரமாகத் திரியும்'' என்பதைக் கூற வந்தது இது. அதாவது வருமொழியின் முதல் எழுத்து பற்றிக் கூற வந்ததாம். கஃறீது, கன்னன்று; பொன்றீது பொன்னன்று என உதாரணம் காண்க. இதனல் புறச்செய்கையாவது, வருமொழியானது நிலைமொழியீறு தன்னுடன் புணரும்போது எவ்வாறாம் எனக் கூறுவது என்றறியலாம். அதாவது வருமொழியின் முதல் எழுத்து பற்றி யது புறச்செய்கை என்னலாம்.

அகப்புறச் செய்கை ;

அகப்புறச் செய்கை என்பது நிலைமொழியீற்றை நோக்கியும் வருமொழி முதலை நோக்கியும் கூறப்படுவதாம். இதற்கு உதாரண மாக

உகரமொடு புணரும் புள்ளி யிறுதி
யகரமும் உயிரும் வருவழி யியற்கை. (164)

என்பதைக் காட்டினர். உகரமொடு புணரும்புள்ளியிறுதிகளாவன உரிஞ்,பொருந் என்பனவாகக் கொள்வோம். இவற்றின் முன் 'யானு' 'அனந்தா' என யகர முதல் மொழியும், உயிர் முதல் மொழியும் வருமிடத்து, யாதொரு திரிபும் இன்றி, 'உரிஞ்யானு',

உரிஞ்அனந்தா' வெனத் தம்மியல்பில் அவை நிற்பனவாம். உகர மொடுபுணரும் புள்ளியிறுதியென நிலைமொழி யிறுதி பற்றியும், 'யகரமும் உயிரும் வரு வழி' யென வருமொழி முதல் பற்றியும் கூறி, அவ்விரண்டும் இயல்பாகப் புணரும் எனச் செய்கையும் கூறினார். நிலைமொழி யீற்றில் ஏதேனும் மாறுபாடு இருந்தால் அகச்செய்கை யென்று கூறிவிடலாம். அல்லது வருமொழி முதலிலாவது மாறுபாடிருந்தால் புறச்செய்கை யென்று கூறிவிடலாம். இரண்டிடத்தும் மாறுபாடில்லாமையாலும் இயல் பாகப் புணரும் எனச் செய்கை கூறினமையாலும் அகமும் புறமும் பற்றி வந்த நூற்பாவிது எனக் கொள்ளவேண்டும். ஆதலின் இதனை அகப்புறச் செய்கை யென்றார். (''லனவென் வரூஉம் புள்ளி முன்னர்'' என்ற நூற்பா வருமொழி முதல் பற்றி மட்டும் கூறியதை இங்கு நினைவு கொள்க.)

அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்
ஒற்று மெய்கெடுதல் தெற்றென் றற்றே
அவற்றுமுன் வரூஉம் வல்கலழுத்து மிகுமே. (134)

''இஃது அத்தும் வற்றும் வருமிடத்து நிலைமொழியினும் வருமொழியினும் வரும் செய்கை கூறுதல் நுதலிற்று'' என்றார் இளம்பூரணர் அதனால் இதுவும் அகப்புறச் செய்கை என்ன லாம். கலன்+குறை என்பன அத்துச்சசரியை யிடைவந்து 'கலத்துக்குறை' எனப்புணரும். 'கலன்' என்பதன் இறுதி னகரம் கெடுதல் கூறினமையின் நிலைமொழியீறு பற்றியதாதலின் அகச்செய்கையும், 'குறை' என்பதன் முதல் வல்லெழுத்து மிகுதல் கூறினமையின் வருமொழி முதல் பற்றியதாதலின் புறச்செய்கை யும் ஆகிய இரண்டும் இருத்தலின், இந்நூற்பா அகப்புறச் செய்கைக்கு உதாரணம் ஆகும்.

புறப்புறச் செய்கை

புறப்புறச் செய்கை யென்பது நிலைமொழியீறு வருமொழி முதலோடு புணருமிடத்து நிலைமொழியீற்றுக்கோ வருமொழி முதலுக்கோ யாதொரு விதியும் இன்றி—அதாவது நிலைமொழி யீறு வருமொழி முதலோடு சேராதிருக்க, அவற்றைச் சேர்த்து வைக்கப் பிறிதோர் எழுத்து இடையில் வரும் என்பது போன்ற இலக்கணம் அமைப்பது என்னலாம்.

எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார் (14)

என்ற நூற்பாவை இதற்கு உதாரணம் காட்டினர் இளம்பூரணர் இஃது உடம்படு மெய்பற்றியதாம். விள, அழகிது என்பன 'விளவழகிது' எனப் புணரும், நிலைமொழியீற்று உயிரும் வருமொழி முதல் உயிரும் யாதொரு மாறுபாடுமின்றி அப்படியே நின்றன. 'உரிஞ் அனந்தா' என்ற விடத்தும் அவ்வாறு மாறுபாடின்றியிருந்தாலும் அப்படியே புணரும் இயல்புப் புணர்ச்சி விதி உண்டு. அதுபோல விள, அழகிது என்பனவற்றில் இயல்புப் புணர்ச்சி விதியில்லை. ஏனெனின் உயிரும் உயிரும் கூடுதல் இல்லை. அதனால் இரண்டுயிர்களையும் புணர்க்க உடம்படு மெய் வந்தது. எனவே நிலைமொழி யீறுபற்றியும் இன்றி வருமொழி முதல்பற்றியும் இன்றிப் பிறிதோர் எழுத்து பற்றிக் கூறியிருத்தலின் இந்நூற்பா புறப்புறச் செய்கைக்குதாரணம் ஆயிற்று. 'எல்லாமொழிக்கும்' என நிலைமொழி பற்றிக் கூறியிருந்தாலும் 'உயிர்வருவழி' என வருமொழி பற்றிக் கூறி யிருந்தாலும் இவ்விரண்டுயிர்கட்கும் புணர்ச்சிச் செய்கையின்மை யின் அகமும் அன்று புறமும் அன்று. ஆயினும் இடையில் உம்படுமெய் வந்து இரண்டினையும் புணர்த்தும் என்பார் 'உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார்' என்றமையின் ஓராற்றால் செய்கையும் உண்டென்ன வேண்டும். அதனால் இந்நூற்பா புறப்புறச்செய்கை யெனப்பட்டது.]

இறுகாறும் செய்கைப்பற்றிக் கூறியவற்றால் அகச் செய்கை யென்பது நிலைமொழியீறு பற்றியது என்பதும், புறச்செய்கை யென்பது வருமொழி முதல் பற்றியது என்பதும், அகப்புறச் செய்கை யென்பதும் இரண்டும் பற்றியது என்பதும், புறப்புறச் செய்கையென்பது இரண்டுக்கும் அப்பாற்பட்ட--இரண்டையும் புணர்க்க வந்த ஒன்றுபற்றயது என்பதும் பெறப்படும். இவை நான்கும் நிலைமொழியீறு வருமொழி முதலோடு புணரும் நிலை பற்றியனவாதலின் செய்கையெனப்பட்டன

இனிக் கருவி பற்றிக் காண்போம். செய்கை யென்பது புணர்ச்சி பற்றியதாதலின் கருவியென்பது புணர்ச்சி பற்றியன்றி அதற்கு முன் செய்து கோடற்குரிய ஏற்பாடு பற்றியது என்பது முன்னரே கூறப்பட்டது.

அகக்கருவி

அக்கருவி நான்கனுள் அகக்கருவி யென்பது நிலைமொழியை வருமொழியோடு புணர்தற்குரிய நிலையில் ஒழுங்குபடுத்துவது.

எகர ஒகரம் பெயர்க்கீ றாகா
முன்னிலை மொழிய என்மனார் புலவர் (273)

என்னும் நூற்பாவை அகக்கருவிக்கு உதாரணமாகக் காட்டினர். உயிர் மயங்கியலில் எகர ஒகர வீறுபற்றிக் கூறவந்த விடத்துள்ளது இது. பன்னிரண்டு உயிர்களுள் "ஔ" ஒழிந்த பதினொன்றும் மொழிக்கிறுதியில் வரும் என்று ஆசிரியர் மொழி மரபில் கூறியுள்ளார். "உயிர் ஔ எஞ்சிய விறுதியாகும்" என்பது நூற்பா. அதனால் உயிர் மயங்கியலில் எகர ஒகர வீறு, வருமொழி வல்லின முதலிய மெய்களுடன் புணரும்போது எவ்வாறு புணரும் எனக்கூறவந்த விடத்தில் எகரமும் ஒகரமும் பெயர்க்கு ஈறுதல் இல்லையாதலின் அதைக் கூற வேண்டும். ஆதலின் அவ்வாறு கூறிய இந்நூற்பா கருவி நூற்பாவாயிற்று. நிலைமொழி பற்றியதாதலின் அகக்கருவி ஆயிற்று.

புறக்கருவி

மொழிமரபினைப் புறக்கருவி யென்றார் இளம்பூரணர் மொழிமரபில்—மொழிகளில் சார்பெழுத்துக்கள் பயிலுமாறும் அளபெடையும், எழுத்துக்கள் தொடர்ந்து மொழியாமாறும், போலியெழுத்துக்கள் இவையென்பதும். மொழிக்கு முதல் ஈறுகளில் வரும் எழுத்துக்கள் இவையென்பதும், இடைநிலை மயக்க எழுத்துக்கள் இவையென்பதும் பிறவும் கூறப்பட்டன. இவையனைத்தும் நேரே சொற்புணர்ச்சிக்குரியன வல்ல. என்றாலும் சொற்களின் இயல்பைப் பற்றியன வாதலாலும், உயிர் மயங்கியல் முதலிய அகவியல்களில், இம்மொழி மரபில் ஆண்ட பெயர்களையும் விதிகளையும் அப்படியே ஆளுதலினாலும் மொழி மரபு புறக்கருவி யெனப்பட்டது. இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் தொடர்ந்த சொல்லைத் தொடர்மொழி யென்றார் ஆசிரியர். 'இரண்டிறந்திசைக்கும் தொடர்மொழி (மொழி-12) என்றது காண்க. இத்தொடர்மொழி யென்ற பெயரை, "சொல்லிய தொடர்மொழியிறுதியான" (தொகை மரபு-5) எனத்தொகை மரபிலும், "ஈரொற்றுத் தொடர்மொழி"

(குற்றிய-22) எனக் குற்றியலுகரப் புணரியலிலும் ஆளுதலையும், மொழிமரபில்'' மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்'' எனக் கூறியதற்கேற்பத்தாமே, ''ஞநமவய இயையினும் உகரம் நிலையும்'' எனத் தனி மெய்களை அகரம் சேர்த்துக் கூறியிருத்தலையும் காணலாம். எனவே புறக்கருவி யென்பது பொதுவில் நிலைவருமொழிகளாகப் புணரும் மொழிகளைப் பற்றியது என்னலாம்.

அகப்புறக்கருவி

புணரியலை அகப்புறக் கருவியென்றார். புணரியலில் மொழிகளின் முதல் எழுத்து ஈற்றெழுத்து யாவை யென்பதும், பெயரும் வினையும் புணருமாறும், அக்காலத்து ஏற்படும் இயல்பு திரிபுகளும், உருபு புணர்ச்சியுண்டென்பதும் பிறவும் கூறப்பட்டன. மொழி மரபிற் கூறியதுபோலப் பொதுவில் சொற்களைப்பற்றிக் கூறாமல் நிலைவருமொழிகளாகப் புணருதற்குரிய சொற்கள் எனக்கொண்டு அவற்றின் இயல்புகளைக் கூறினமையால் அகக்கருவி யென்றும், நிலைமொழிகளுக்கிடையில் வேறான சாரியைப்புணர்ச்சியும் உண்டென்று அச்சாரியைகளின் திரிபு முதலியனவும் கூறினமையால் புறக் கருவி யென்றும் கொள்ளலாம். அதனால் புணரியல் அகப்புறக் கருவி யெனப்பட்டது.

புறப்புறக் கருவி

நூன்மரபும் பிறப்பியலும் புறப்புறக்கருவி யெனப்பட்டன. நிலைவருமொழிகளாகப் புணரும் சொற்கள் எழுத்துக்களான் வருதலின் அவ்வெழுத்துக்களைப் பற்றிக் கூறும் இவ்விரண்டியல்களும் புறப்புறக் கருவிகளாயின. நூன்மரபில் குறிக்கப்பட்ட குறில் நெடில் மெய் முதலிய (எழுத்துக்களின்) பெயர்கள் புணர்ச்சி விதிகூறும் இயல்களில் ஆளப்படுதலாலும், பிறப்பியலில் வரும் எழுத்துக்களின் பிறப்பிலக்கணம் புணர்ச்சி பற்றிய இயல்களுக்குத் துணை புரிதலாலும் இவ்விரண்டியல்களும் செய்கைக்குத் துணைபுரிவனவே என்னலாம். வருமொழி வல்லெழுத்துமிக்கு முடியுமிடத்தில் இன மெல்லெழுத்து மிகுதல் பிறப்பு ஒற்றுமையான் என்னலாம்: தேக்குடம், தேங்குடம் எனக் காண்க. உயிரும் இடையெழுத்தும் மிடற்றினை இடமாகக் கொண்டு பிறக்கும் என்பதற்கேற்ப அவ்விரண்டும் சுட்

டெழுத்தின்முன் வரும்போது வகரமெய்பெற்று முடிதலும் பிறப்பிட ஒற்றுமையே காரணம் என்னலாம். அ+ஆடை=அவ்வாடை எனவும், அ+வாடை=அவ்வாடை யெனவும் கண்டு கொள்க. எனவே இவ்விரண்டியல்களும் நிலைவருமொழிகளைப் பற்றியன அல்ல வாதலினாலும் மொழிகள் உருப்பெறுதற்குத் துணையாம் எழுத்துக்கள் பற்றியன வாதலினாலும் புறப்புறமாகவும் கூறப்பட்டன.

இதுகாறும் கூறிவாற்றால் அகக்கருவியென்பது நிலைமொழி பற்றியது என்பதும், புறக் கருவி என்பது பொதுவில் மொழிகளைப்பற்றியது என்பதும், அகப்புறக்கருவி என்பது புணர்தற்குரிய நிலை வருமொழிகளின் இயல்பும் இடைவரும் (சாரியை) சொல்லும் பற்றியது என்பதும், புறப்புறக் கருவி என்பது எழுத்துக்களைப் பற்றியது என்பதும் பெறப்படும். இவை நான்கும் நிலைவருமொழியோடு புணர்தற்குத் துணையாக முன் அமைத்துக் கொள்ளப்படுவன வாதலின் கருவி யெனப்பட்டன.

கருவியே செய்கை :

. செய்கை நான்கும் கருவி நான்கும் என எட்டாகவன்றிச் செய்கை கருவி யென இரண்டாக அடக்கிக் கூறுவதாயின், நிலைமொழியீறு பற்றியது செய்கை யென்றும் மற்றையவெல்லாம் கருவியென்றும் கொள்ளல் வேண்டும். அதனால்தான்.

> லனவென வரூஉம் புள்ளி முன்னர்த்
> தந வென வரிற் றனவா கும்மே.

என்ற நூற்பாவைப் புறச் செய்கைக்கு உதாரணம் காட்டிய இளம்பூரணர், இதன் உரையில் ''இது மயங்கியலை நோக்கியதோர் வருமொழிக்கருவி கூறுதல் நுதலிற்று'' என்றார். இவ்வாறே வருமொழி பற்றிக் கருவி கூறியவிடமெங்கும் கருவி செய்கை யென இரண்டாகக் கூறும்போது கருவி யென்றும், எட்டாகக் கூறும்போது செய்கை யென்றும் கொள்ளவேண்டும். "ஆறன் உருபின் அகரக் கிளவி, ஈறாகு அகரமுனைக் கெடுதல் வேண்டும்'' (116) என்ற நூற்பாவும் இத்தகையதேயாம்.

நிலைமொழிக் கருவி :

இனி நிலைமொழியீறு பற்றியும் கருவி கூறப்படும். தாம் நாம் என்ற சொற்கள் அது என்ற ஆறாம் வேற்றுமை யுருபு வருமிடத்துத் தமது நமது என வரும்.

> **ஆறன் உருபினும் நான்கன் உருபினும்**
> **கூறிய குற்றொற் றிரட்ட லில்லை**
> **ஈறாகு புள்ளி அகர மொடு நிலையும்**
> **நெடுமுதல் குறுகும் மொழிமுன் னான** **(163)**

இந்நூற்பாவில், நெடுமுதல் குறுகும் மொழிகளாகிய 'தாம் 'நாம்' என்பனவற்றின் இறுதி மகரம் 'அ' என்ற எழுத்தொடு புணரும் என்பது கூறப்பட்டது. அதாவது தம்+அ, நம்+அ என வரும் என்பதாம். இதில் தாம் நாம் என்பன நெடுமுதல் குறுகும் மொழி யெனப் பட்டனவேயன்றி நெடுமுதல் குறுகும் என்று சொல்லப் பட்டனவில்லை. ஆதலின் தாம் நாம் என்பன தாம, நாம என்றாகி நிலைமொழிகளா யிருந்தும் 'அது' என்ற உருபாகிய வருமொழியுடன் புணர்தற்குரிய தகுதியில் இல்லை. உருபியலில் 'தாம் நாம் என்னும்மகரவிறுதியும்'' (189) என்னும் நூற்பாவில், ''ஏனை யிரண்டும் நெடுமுதல் குறுகும்'' என விதித்த பின்னரே தம, நம என்றாகிப் புணர்தற்குரிய தகுதி பெறுகின்றன. ஆதலின் ''ஆறன் உருபினும்'' என்னும் நூற்பா நிலைமொழியீறு பற்றியதாயினும் கருவிச்சூத்திரம் ஆயிற்று. அதனால்தான் இளம்பூரணர், இதனை, ''உருபியலை நோக்கிய தோர் நிலைமொழிக் கருவி கூறுதல் நுதலிற்று'' என்றார். அஃது அகக்கருவி என்னலாம்.

ஆ. சிவலிங்கனார்

(இளம்பூரணர் எழுத்துரை. பக். 11—23
மாணிக்கம் மதிப்பகம், சென்னை -7.)

உரைத்தொடர் விளக்கம்

(எண்—சூத்திர எண்)

இளம்பூரணர்

இவ்வோத்து...தொகைமரபு எனப்பட்டது. உருபுபுணரியல் உயிர் மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகிய நான்கும், நிலைமொழியீறுகளாகிய உயிர், மெய் ஆகிய வற்றை நெடுங்கணக்கு முறையில் நிரல்பட வருமொழிகளுடன் புணருமாறு கூறுவன. அதனால் அவை அகஇயல்கள் எனப்படும். உருபியல், உருபு புணர்ச்சி கூறுவதாதலின் இங்குக் கூறப்பட்ட அக இயல்கள் மற்றைய மூன்றுமே உயிர்மயங்கியலில் உயிர் பன்னிரண்டும், புள்ளிமயங்கியலில் ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள் என்னும் மெய் பதினொன்றும், குற்றுயலுகரப் புணரியலில் ஈற்றுக் குற்றுகரமும் ஆக இருபத்து நான்கு எழுத்துகளில் தனித்தனியாக விரிவாகப் புணர்ச்சி விதிகள் கூறப்பட்டுள்ளன அவற்றைத் தொகுப்புத் தொகுப்பாகக் கூறி முடித்தலின் இவ் வியல் தொகைமரபு எனப்பட்டது.

இளம்.
சூத்திரம் 144.

இத்தலைச்......நுதலிற்று :

நச்

இத்தலைச் ....கருவி கூறுகின்றது :

அகர ஈற்று மரப் பெயர் வருமொழிவல்லெழுத்துடன் சேரும் போதுஇடையில் மெல்லெழுத்து வரும் என்பதுஉயிர்மயங்கியலில் கூறப்படுகிறது. ''மரப் பெயர்க்கிளவி மெல்லெழுத்து மிகுமே'' (எழு. 217) என்பது சூத்திரம். அதன்படி விள + கோடு என்பன இடையில் ஒரு மெல்லெழுத்து வந்து முடிய வேண்டும். ஆனால் எந்த மெல்லெழுத்து என்பது அதில் சொல்லப்பட வில்லை. இது வேற்றுமை விதி.

அதுபோலவே அல்வழி விதிக்கும் "அல்வழியெல்லாம் மெல்லெழுத்தாகும்" (எழு. 314) என்று கூறப்பட்டதேயன்றி எந்த மெல்லெழுத்து எனக் கூறப்பட வில்லை. மரம்+குறிது இவற்றின் இடையில் ஒரு மெல்லெழுத்து வந்து முடிதல் வேண்டும்.

விள+கோடு என்பது உயிர் ஈற்றுக்கு
மரம்+குறிது என்பது மெய்யீற்றுக்கு

உயிர் மயங்கியலிலும் புள்ளிமயங்கியலிலும் இப்படிக்கூறப் பட வேண்டியதை நோக்கி இச்சூத்திரம் அம்மெய்யெழுத்தானது வருமொழிமுதலில் உள்ள வல்லின எழுத்து எதுவோ அதற்கு இனமான மெல்லெழுத்து மிகுதல்வேண்டும் என்று கூறுகிறது. ஆதலின் இது அவ்விரண்டியலையும் நோக்கியதாகும். அன்றியும் இப்படிப் பொதுவாக இங்குச் சொல்லிக் கொள்வதால் அவ்விரண்டியல்களிலும் அங்கங்கும் இனமெல்லெழுத்து என்று சொல்லிக் கொண்டிருக்க வேண்டுவதில்லை. ஆதலின் முன் ஏற்பாடான கருவிச் சூத்திரமாகவும் இது அமைகிறது விளங்கோடு, மரங்குறிது. ககரத்துக்கு ஙகரம் இனம்.

இளம். தோன்றும் என்றதனால்......என்பது :

விள+கோடு = விளங்கோடு என மெல்லெழுத்துத் தோன்றியது. அதுவும் இன மெல்லெழுத்து.

மரம்+குறிது= மரங்குறிது என்பதில் ங் என்ற மெல்லெழுத்துத் தோன்ற வில்லை. அதற்குப்பதில் மரம் என்பதின் இறுதி மகரமே திரிந்தது. வருமொழிவல்லெழுத்தாகிய ககரத்துக்கு இனமான ஙகரமெய்யாகத் திரிந்தது. எனவே சூத்திரத்தில் இல்லாதது தோன்றும் என்று சொல்லப்பட்டிருந்தாலும் ஏற்கெனவே இருப்பதாகிய மெல்லெழுத்தும் இன மெல்லெழுத்தாகவே திரியும் எனக் கொள்ளல் வேண்டும்.

இளம் அன்னமரபின்......மிகாதாயிற்று :

விள+குறுமை என்றவிடத்தில் விளக்குறுமை என வல்லெழுத்து மிக்கது; மெல்லெழுத்து மிகவில்லை. ஏன்எனின் மெல்லெழுத்து மிகும்படியான தொடரில் விள என்பது இதில் அமையவில்லை வல்லெழுத்தே மிகும்படி

யான சொல்லாக அது அமைந்துள்ளது. ‘அன்னமரபின் மொழி’ என்றால் மெல்லெழுத்து மிகும்படியான முறைமையையுடைய மொழி என்பது பொருள். விளங்கோடு என்னும் ஆறாம் வேற்றுமைத் தொடர், பொருள் வேற்றுமைத் தொடர்.

விளக்குறுமை என்னும் ஆறாம் வேற்றுமைத்தொடர், குண வேற்றுமைத் தொடர்

பொருட்புணர்ச்சியான பொருள் வேற்றுமைத் தொடர் அன்னமரபின் மொழியாயிற்று; குணவேற்றுமைப் புணர்ச்சித் தொடர் அன்னமரபின் மொழியல்லதாயிற்று.

நச்.

அன்ன மரபின்...மெல்லெழுத்துப் பெறாவாயின.

விளங்கோடு—ஆறாம் வேற்றுமை. இது மெல்லெழுத்து பெறும் மரபினையுடைய தொடர்.

விளக்குறுமை, இது விளவின்கண் குறுமை என ஏழாம் வேற்றுமைத் தொகைத் தொடர். விளங்கோடு என்பதை நோக்க விளக்குறுமை என்பது வேற்றுமைத்திரிபுடையது—மாறுபாடுடையது ஆதலின் மெல்லெழுத்துப் பெறும் மரபினையுடையதன்று.

நச். இங்ஙனம்......உணர்க:

நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில் எழுத்துமிகும் என்பதும் நிலைமொழியிறுதி யெழுத்துத் திரியும் என்பதும் வருமொழி பற்றியே நிகழும் என உணர்க.

145. இளம். ஈண்டு உளப்பட......பொருண்மைத்து :—

உளப்பட என்பதற்கு உட்பட எனப் பொருள் கொண்டால் ‘ஞநமயவ என்னும் முதலாகுமொழியும், உயிர் முதலாகிய மொழியும் உளப்பட’ என்றால், ‘இவ்விருவகை மொழியும் உள்ளடங்க அவையனைத்து மொழியும் என வேறுமொழியுண்டென்று கொள்ள நேரும். வேறுமொழியில்லாமையால் முதலாகு மொழியும் முதலாகிய மொழியும் ஆக அவையனைத்தும் எனக் கொள்ளல் வேண்டும். அதனால் உளப்பட என்பது ஆக எனப் பொருளுடையதாம்.

நச். உயிரீற்றின்......கொள்க :

எகர ஒகரம் பெயரில் மெய்யோடு ஈறாகாது ஆகலின் இவ்வாறு எழுதினார்.

146. இளம். வருமொழி முற்கூறியவதனால் :

முன் நிற்பதாகிய நிலைமொழி முற்கூறவேண்டும். அதைத் தொடர்ந்து வரும் வருமொழி பிற்கூறவேண்டும். மெல்லெழுத்தியற்கை என்பது வருமொழியைக் குறிப்பது. அது முற்கூறப்பட்டது இச்சூத்திரத்தில். தொடர்மொழி என்பது நிலைமொழியை யுணர்த்துவது; பிற் கூறப்பட்டது. இது மாறுபாடு. இம்மாறுபாடு படக் கூறியதால் தொடர்மொழிக்குக் கூறிய இவ்விதியே ஓரெழுத்தொருமொழிக்கும், ஈரெழுத்துமொழிக்கும் வரலாகும் சில விதிகளையும் இங்கேயே கொள்க.

147. இளம். ஞா முற்கூறாது யாமுற்கூறிய......கொள்க :—

நெடுங்கணக்கு முறைப்படி ஞா முற்கூறப்படவேண்டும். நெடுங்கணக்கில் பிற்பட்டதான யா முற்கூறப்பட்டதனால் யா வர வேண்டிய இடத்தில் ஞா வருமேதவிர ஞா வரவேண்டிய இடத்தில் யா வராது.

இதற்கு நச்சினார்க்கினியர் விளக்கம் உண்டு.

148. நச். இவை நின்ற சொல்முன்......திரியாமை கூறிற்று :—

மண்கடிது பொன்கடிது என அல்வழி முடியில் ணகர னகரம் திரியாமல் இயல்பாக வந்தன. "ஞநமயவ" (144) என்னும் நூற்பா விதிப்படி இயல்பாக முடிந்தது என்று கொள்ளலாயிருக்க இந்நூற்பா கூறவேண்டுவதேன் எனின் 'ஞநமயவ' என்னும் நூற்பா வருமொழியின் முதல் எழுத்துத் திரியாமை பற்றிக்கூறுவது;இந்நூற்பா நிலைமொழி ணகரஈறுகள் திரியாமை பற்றிக் கூறுவது ஆதலின் தனி நூற்பா கூறப்பட்டது; 'ஞநமயவ' என்பதில் சேராது.

149. நச். மேல் நான்கு......கூறுப :—

'அவற்றுள் மெல்லெழுத்தியற்கை' என்னும் சூத்திரத்தால் பெறப்பட்ட கதிர், இதழ் போலும் சொற்களுக்கும், "ணன வென்" "மொழிமுதலாகும்" "வேற்றுமைக்கண்ணும்" என்னும்

சூத்திரங்களால் பெறப்படும்ணகர னகர ஈற்றுச் சொற்களுக்கும் வருமொழியில் வல்லெழுத்து வருமிடத்துத் திரியும் திரிபு பற்றி அவ்வவ்வீறு பற்றிய உயிர் மயங்கியல் புள்ளிமயங்கியல் சூத்திரங் களுள் கூறுவர் ஆசிரியர்.

152. இளம். உயிரீறு புள்ளி......கொள்க :—
நச். ஈறென்று..... கொள்க :— } :–

முன்னிலைக்கிளவி என்பது பெயரும் வினையும் குறிக்கும். நீ நீயிர் என்பன முன்னிலைப் பெயர்கள். முன்னிலைப் பெயரில் பல உயிர் ஈறும் பலமெய்யீறும் இல்லை. வினைச் சொல்லில் பல உயிர் ஈறும் பல மெய்யிறும் உள்ளன. அன்றியும் வினையில் ஏவல் வினையாகிய தொழிற்படுத்தும் வினைகளும், தொழி[illegible] செய்யும் வினைகளும் உள்ளன. எனவே உயிர் ஈறு புள்ளியிறுதி என விதந்து கூறினமையால் முன்னிலைப் பெயரை விட்டு வினையைக் கொள்ளல் வேண்டும். நீ என்பது ஓரெழுத்து மொழியாதலின் உயிர் ஈறு என்று சொல்லவேண்டுவதில்லை.

நச். இயல்பும் உறழ்வும்......மிக்கே முடிதல் கொள்க : —

இயல்பும் உறழ்வும் என்று இரண்டியல்பின என்றால் அவ்விரண்டு இயல்பில்தான் முன்னிலைக்கிளவி வரவேண்டும் என்பது படும்; ஆகுக என்றால், ஆக்கம் செயற்கையாதலின் வேறுவகையான் ஆதலும் உண்டு என்பதற்கு இடம் கொடுக்கும். அவ்வாறு இடம் கொடுப்பதால் து, நொ என்னும் முன்னிலை யேவல் ஓரெழுத்து வினைகள் துக்கொற்றா துஞ்ஞெள்ளா துந்நாகா தும்மாடா துவ்வடுகா எனவும், நொக்கொற்றா நொஞ்ஞெள்ளா நொந்நாகா நொம்மாடா நொவ்வடுகா எனவும் வருமொழி மெய்கள் மிக்குவரவும் ஆம் எனக் கொள்க.

154. இளம். உயிரீறு புள்ளியிறுதி என்றதனால் = உயர்திணைப் பெயர் என்பதே அமையும்; உயிரீறாகிய உயர்திணைப் பெயர் புள்ளியிறுதியுயர்திணைப் பெயர் எனக்கூற வேண்டு வதில்லை; கூறியது மிகையே; அம்மிகைக் கூற்றால்.

156. நச். உயர்திணைப் பெயரோடு......செய்வரால் எனின் : —

அஃறிணை விரவுப் பெயர் என்பது அஃறிணையானது உயர் திணையோடு சென்று கலக்கும் பொதுப் பெயர் என்று பொருள்படும்.

உயர்திணை அஃறிணை இரண்டுக்கும் பொதுவான பெயரை ஆசிரியர் இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமையான பெயர் (சொல் 172) என்று சூத்திரம் செய்து கூறுவராதலின் இங்கு இயல்பான உயர்திணையில் அஃறிணை சென்று கலந்தது என்பது ஏன் என்று வினாவினால்.

157. நச். மெய்ம்மை பட்டாங் காதலின் இயல்பாம் : —

மெய்ம்மை—உண்மை; பட்டாங்கு—அமைந்த படியே யிருப்பது. மெய்ம்மை யென்றால் இருந்தபடியேயிருப்பது என்ற பொருளாகுமாதலின், இருந்தபடியேயிருப்பது இயல்பாதலின் இயல்பு மெய்ம்மை யெனப்பட்டது. இச்சூத்திரத்தில் மெய்ம்மை யாகலும் என்பதற்கு இயல்பாகலும் எனப்பொருள் கொள்ளப் பட்டது.

இளம். 1 நச். புள்ளியிறுதி உயிர் இறுதி என்றதனால்=எல்லாப் பெயரும் என்னாமல் இவ்வாறு கூறியதால்.

158. இளம்பூரணர்தரும் உதாரணங்களுக்கு விளக்கம் நச்சினார்க்கினியர் தெளிவாக உரையிலேயே எழுதியுள் ளார்; காண்க.

159. இளம். பெயர்க்கிளவி அல்லாத கிளவி—வினை, இடை, உரிக்கிளவிகள்.

160. இளம். நச். ஆங்கவை ஈங்கிவை ஊங்குவை யாங்கவை—இவை திரிபுடையன. ஆங்கு என்பது ஆங்கவை என வந்தது திரிபு.

161. இளம். நச். மேலைச் சூத்திரத்து நான்கன் உருபு பிற்கூறியதனால் : —

அடுத்து வரும் நூற்பாவில் நான்கன் உருபு முற்கூறாது பிற்கூறியதால்—(ஆறனுருபினும் நான்கனுருபினும் என்றது காண்க)

162. நச். ஆறனுருபாகிய அகரம் ஏறி முடியாமைக்குக் காரணம் "ஆறன் உருபின் அகரக்கிளவி (எழு 115) என்புழிக் கூறினாம் : — "தமது...எனவரும். இது நிலை மொழிக்கு ஓர் அகரம் பெறும் என விதியாது உருபு அகரம் ஏறி முடியும் என விதித்தால் வரும் குற்றம் உண்டோ எனின், நினவ கூறுவல்

எவைகேண்மதி (புறம் 35) என்றாற் போல ஆறாவதற்குரிய அகர உருபின் முன்னரும் ஓர் அகர எழுத்துப் பேறு நிலைமொழிக்கண் வருதல் உளதாகக் கருதினாராதலின் ஆறனுருபிற்கும் நான்கன் உருபிற்கும் பொதுவாக நிலை மொழிக்கண் அகரப் பேறு விதித்து, அது வென்னும் ஒருமையுருபு வந்தால் ஆண்டுப் பெற்று நின்ற அகரத்தின் முன்னர் அது என்பதன் கண் அகரங்கெடுக என்று ஈண்டுக் கூறினார் ஆதலின் அதற்குக் குற்றம் உண்டென்று உணர்க''

இதற்கு விளக்கம் :

தமது என்பது தாம் + அது எனப்பிரிக்கப்படும். தாம் என்பது தம் என நெடு முதல் குறுகும். இதற்கு விதி உருபியலில் "தாம் நாம்" என்னும் சூத்திரத்தில் (16) நெடுமுதல் குறுகும் எனக் கூறப்பட்டது. எனவே தம் + அது என நிற்கும். தம் என்பது அகர எழுத்தைச் சேரும். இதற்கு விதி தொகை மரபில் உள்ள இச்சூத்திரத்தில் ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும் என்பது. எனவே தம் + அ + அது என நிற்கும். இது தம + அது எனப் பின்வரும். இதில் அது உருபின் அகரம் கெட்டு தம + து என நிற்கும். இந்த இடத்தில் ஒரு வினா எழுகிறது. தம் என்பது அகரம் பெற்றுப் பின்னர் 'அது' உருபின் அகரம் கெடும் என்பதை விடத் தம் என்பது அகரம் பெறாமல் இருந்து மகர மெய்யின் மேல் அது உருபின் அகரம் ஏறித் 'தமது' என முடியும் என்றால் என்ன என்பது அவ்வினா. அதற்கு விடை :— நினவ என்றொரு சொல் உண்டு (புறம் 25). அது நீ + அ எனப் பிரிக்கப்படும். பின் நின் + அ என்றாகும். அகரம் ஆறாம் வேற்றுமைப் பன்மையுருபு. நின் என்பது அகரம் பெறும். நின் + அ + அ என்றமைய உடம்படு மெய் வகர ஒற்று வந்து நினவ என்றாகும். இந்த இடத்தில் பன்மையுருபாகிய அ என்பது வருமொழியாய் வர, நின என்பதில் இறுதியில் அகரம் அழியாது நிற்றலின் அது உருபு அகரத்தைக் கண்ட போதும் தமது என்பதில் உள்ள தம என்பதன் இறுதி அகரம் தானும் அப்படியே நின்றது. நின + அ—நினவ என ஆனது போல தம் + அது—தமவது என வாராமையின் அது உருபின் அகரம் கெட தமது என்றாயிற்று. நினவ என்னும் சொல்லாட்சியைக் கொண்டு தமது முதலியவற்றுக்கும் நிலைமொழியிறுதிக்கு ஆறன் உருபினும் நான்கன் உருபினும் அகரம் வரும் எனக்கூறி ஒருமையில் அது உருபின்

அகரம் கெடும் என்றார். ஆதலின் நிலை மொழியீறுதிக்கு அகரம் கெடாது அதுவுருபின் அகரம் ஏறி முடியும் எனின் குற்றமாம்.

164. இளம் நச். புள்ளிமயங்......செய்கை கூறுதல் நுதலிற்று:—

புள்ளி மயங்கியலில் ஞகர ஒற்றும் நகர ஒற்றும் இறுதியாக வுடைய தொழிற் பெயர்ச்சொற்கள் நிலை மொழியாக நிற்க, வருமொழியில் வல்லெழுத்து வந்தால் உகரமும் வல்லெழுத்தும் பெறும் என்றும், மெல்லெழுத்தும் இடையெழுத்தும் வந்தால் உகரம் மட்டும் பெறும் என்றும் கூறப்பட்டன (சூ. 1,2,3) இதனால் உரிஞ், பொருந் என்னும் தொழிற்பெயர்கள் உகர மொடு புணரும் புள்ளியிறுதிகள் எனப்பட்டன. அவை இச் சூத்திரத்தில் யகரமும் உயிரும் வருமொழியாகவரின் எவ்வாறு செய்கை பெறும் என்பது விதித்தலின், இச்சூத்திரம் புள்ளிமயங்கி யலை நோக்கியதாகவும் செய்கைச் சூத்திரமாகவும் ஆகும்.

166. நச். ஒட்டுதற்கொழுகிய...........விலக்கல் வேண்டிற்று :—

அளவுப் பெயர்களுள் பேரளவுப் பெயரும் அதன் குறையளவுப் பெயரும் நிலை வருமொழிகளாகவரின் இடையே 'ஏ' என்னும் சாரியை வரும் என்பது முதல் சூத்திரத்தில் கூறப்பட்டது. இச் சூத்திரத்தில் அரை என்னும் சொல்வருமொழியாகவரின் சாரியை தேவையில்லை என்கிறது. உழக்கே ஆழாக்கு எனவும், உழக்கரை எனவும் காண்க. இங்கு ஒரு வினா எழுகிறது.

புணரியலில் 'பெயருந் தொழிலும்' எனத் தொடங்கும் சூத்தி ரத்தில் (30) சாரியையானது தான் பொருந்துதற்கு ஏற்ற வழக் கொடு பொருந்தி வரும்; பொருந்தா இடத்து வாராது எனக் கூறப்பட்டுள்ளது ''ஒட்டுதற்கொழுகிய வழக்கொடு சிவணி'' வரும் என்பது ஆசிரியர் வாக்கு. அந்த இடத்திலேயே உழக்கரை என்னும் இடத்தில் ஏ என்னும் சாரியை வாராமையும் அடங் காதோ —தனிச் சூத்திரம் இங்கு ஏன்? என்பது அவ்வினா. அதற்கு விடை:—

புணரியல் சூத்திரத்தில் சாரியை பெறுதலும் பெறாமையும் ஆகிய இரண்டு நிலைகளுக்கும் விதி கூறியதாகும். இச்சூத்திரம் பெறாமைக்கே கூறியதாகும். மேலும் அச்சூத்திரத்தில் நிலை வருமொழிகள் எவ்வாறிருக்க வேண்டும் என்ற விதியில்லை.

இச்சூத்திரத்தில் நிலைமொழிக்கு—அதாவது நிலைமொழியாகிய அளவுப் பெயர்க்கு வருமொழியாகிய அளவுப் பெயர் அகப்பட்டதாக (குறைந்ததாக) இருக்க வேண்டும் என்ற விதியும் உள்ளது. அதனால் ஒட்டுதற்கொழுகிய வழக்கொடு சிவணி என்பதில் ஒட்டாத வழக்கில் இது அமையாது என்க.

இளம். இது ஒட்டுதற்கு........செல்லாதென்பது:—இதற்கும் மேலதே விளக்கமாகக் கொள்க. இதில் தம்மகப்பட்ட என்பதற்கு மட்டும் விளக்கம் கொள்க. நச்சினார்க்கினியர் கூறிய முதற்காரணம் இளம்பூரணர கூறவில்லை. இளம் – உரைக் கீழ்க்குறிப்பையும் பார்க்க.

167. இளம். முன் என்றதனால்
நச். முன் வருகாலை எனறதனால் } ;—

வருகாலை என்பதுவே அமையும் முன் என்பது தேவையில்லை. அதனால் முன் என்பது மிகை; அம்மிகையினால்.

169. இளம். இது கலன் என்னும்............கொள்ளப்படும்:—

கலத்துக்குறை = கலம்+அத்து+குறை எனப்பிரிக்கப்படும் கலத்தினது குறை என வேற்றுமை முடிவு போலக் கொண்டார் போலும் இளம்பூரணர். அப்படியாயின் கலம் என்பதன் மகர ஈறு ''மகர இறுதி வேற்றுமையாயின்'' என்னும் புள்ளிமயங்கியற் சூத்திர விதிப்படிக் கெட்டு, கல+அத்து+குறை என நின்று 'அத்தின் அகரம் அகரமுனையில்லை' (புணரியல் 23) என்பதால் அத்துச்சாரியையின் அகரம் கெட்டு 'மகர இறுதி' (புள்ளி 15) என்னும் நூற்பாவின் விதிப்படி வல்லெழுத்து மிக்குக் கலத்துக் குறை எனமுடிந்தது என்பது இளம்பூரணர் கருத்து. 'மஃகான் புள்ளிமுன்அத்தே சாரிஎ' (எழு. 186) என்பதும் அவர்க்குத் துணையாயிற்று.

கலம் என்பதைக் கலன் என்னும் னகர வீற்றுச் சொல்லாகக் கொண்டால் கலமும் அதன் குறையும் என அல்வழி முடிபாக அமையும். அதற்கு விதி 'அத்தே வற்றே' என்னும் சூத்திரவிதிப்படி (புணரியல்) கலன் என்பதன் னகர ஈறுகெட அத்துச்சாரியையின் அகரம்கெட வருமொழி வல்லெழுத்து மிக்குக் கலத்துக் குறை என்றாயிற்று எனக் கொள்ளவேண்டும். கலன்+அத்து+குறை→ கல+அத்து+குறை→கல+த்து+குறை→கல+த்து+க்+குறை→ கலத்துக்குறை.

நச்சினார்க்கினியர் கலம், கலன் எதுவாயினும் கலத்துக்குறை என்றானதற்கு 'அத்தே வற்றே' என்னும் சூத்திரவிதியினையே கொண்டார்.

இளம். சாரியை முற்றிய...வீழ்க்க
நச். சாரியை...வீழ்க்க } :—

சாரியை என்பது முற்கூறியவதனால் =

நிலைமொழியாகிய கலம் என்பதை முன்கூறாமல் நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடைவந்து சாரும் அத்துச்சாரியையினை முற்கூறியதனால் (கலமென் அளவு அத்திடைவரும் எனக் கூறாததனால்)

இன்சாரியை...வீழ்க்க = கலம் என்பது அத்துச் சாரியையுடன் இன் சாரியையும் பெறுமானால் அதாவது கலத்தின் என வருமானால், ''குறையென்கிளவி முயிவருகாலை நிறையத்தோன்றும் வேற்றுமையியற்கை'' என்னும் நூற்பாவின்படி அளவுப் பெயர்கள் எழு. 241, 317, 397 ஆம் சூத்திரங்களில் கூறிய வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்குரிய வல்லெழுத்து மிகுதியைப் பெற்றுக் கலத்துக்குறை என வந்ததில் உள்ள க் என்னும் வல்லெழுத்தைக் கெடுத்துவிடுக.

170. நச். இவற்றை வேற்றுமை......எண்ணும் ஆதலின் :—

பனை ஐகார ஈற்றுச்சொல் ஐகார ஈறுபற்றி வேற்றுமை இஐ'' என்னும் சூத்திரத்தில் கூறினார். அங்கேயே இதையும் கூறலாமோ எனின் அங்கு பொருட்பெயர் பற்றிக் கூறப்பட்டது. இங்கு அளவு நிறை எண்ணுப் பெயர் பற்றிக் கூறியது ஆதலின் அங்குக்கூறவில்லை

உதாரணப் பொருள் விளக்கம்

(எண்—சூத்திர எண்)

144. விளங்கோடு = விள மரத்தினது கிளை—6ஆம்வேற்றுமைத் தொகை.
மரங்குறிது = மரமானது குறியது—எழுவாய்த் தொடர்.
விளக்குறுமை = விளமரத்தின் கண் உள்ள குறிய தன்மை. 7ஆம். வே. தொகை. விளமரத்தினது குறிய தன்மை. 6ஆம் வே. தொகை.

145. தாழ் = தாழைமரம்.
ஞான்றது = தொங்கியது, அசைந்தது.
மாண்டது = மாட்சிமையுடையது—சிறந்தது.
ஈரிற்று = குளிர்ந்தது
ஐது—அழகுடையது
ஔவியத்தது—பொறாமையது
நுந்தை = நும்தந்தை—மொழிமுதற்குற்றியலுகரச்சொல்.
எழு = எழுதல். தல்குறைந்த முதல்நிலைத்தொழிற்பெயர்.
ஒக்கம் = உயர்ச்சி
உரிஞ்—உரிஞுதல்
வெரிந்—முதுகுப்புறம்
வேய்—மூங்கில்
தெவ்—பகை
கோள்—கொள்கை, கோள்மீன்

146. கதிர்ஞெரி = கதிரின் நெரிசல், கதிரின் நெருக்கம்
கதிர்முரி—கதிரினது வளைவு
பூஞாற்றினார்—பூவைத் தொங்கவிட்டார்.

147. மண்யாத்த கோட்ட மழகளிறு = மண்ணால் செய்யப்பட்ட கொம்புகளையுடைய இளமையான ஆண்யானை
பொன் யாத்த தார்ப் புரவி—பொன்னால் செய்யப்பட்ட மாலையணிந்த குதிரை
மண் யானை—மண்ணால் செய்யப்பட்ட யானை

148. ஈண்டிற்று—செறிந்தது
ஔவை—அவ்வை—தாய்
சாட்கோல்—சாண்+கோல் (சாணாகிய கோல்) சாணள வாகிய கோல்

149. கஃறீது—(கல்+தீது)—கல்லானது தீயது.
கன்னன்று (கல்+நன்று)—கல்லானது நல்லது

150. மண்டீது (மண்+தீது)
மண்ணன்று (மண்+நன்று)
முஃடீது (முள்+தீது)
முண்ணன்று (முள்+நன்று)

151. எறி கொற்றா—(வேலை)எறிவாயாக கொற்றா
கொணா—கொண்டுவா
ஈர்—இழு
துக்கொற்றா (து+கொற்றா) துய்ப்பாயாக கொற்றா.
ஞெள்ளா—ஞெள்ளன் என்னும் பெயருடையவனே.

152. பொருநு—ஒத்திரு.
பொருந்—ஒப்புமை
திரும்—திரும்புதல், மாறுபடுதல்
தெவ்வு—கொள்வாயாக (தெவ்வுக் கொளற்பொருட்டே உரியியல்)

153. நம்பி—மக்களுள் சிறந்தவன்
ஞான்றான்—தொங்கினான், அசைந்தான்
மாண்டான்—சிறந்தான், இறந்தான்
ஒருவென்—ஒருவனாகிய யான்
புறம்—முதுகு
பல்சான்றார்—பலர்சான்றார்
கபிலபரணர்—கபிலனும் பரணனும்
இறைவநெடுவேட்டுவர்—இறைவனும் நெடுவேட்டுவனும்
மருத்துவ மாணிக்கர்—மருத்துவனும் மாணிக்கனும்
பல்லரசர்—பலர் அரசர்
கோலிகக் கருவி— கோலிகனுக்குரிய கருவி
கோலிகன்—துணி நெய்வோன்
வண்ணாரப் பெண்டிர்—வண்ணார்களின் பெண்டிர்
ஆசீவகப் பள்ளி—ஆசீவகனுடைய இடம் (மடம்)
குமரகோட்டம்—குமரனுடையகோயில், குமரன்—முருகன்
உண்டே நாம்—உண்டேம் நாம்

நிக்கந்தக் கோட்டம்—நிக்கந்தனின்கோயில். நிக்கந்தன்—அருகன்.
ஈழவக்கத்தி—ஈழவனின் கத்தி
வணிகத்தெரு—வணிகர் தெரு
அரசக்கன்னி—அரசரின் கன்னி
பல்சங்கத்தார்—பலர்சங்கத்தார்
உண்கு—உண்பேன்
உண்டு—உண்டேன்
வருது—வருவேன்
சேறு—செல்வேன்
உண்பல்—உண்ணுவேன்

154. எட்டிப்பூ—எட்டிக்குக் கொடுக்கப்படும் பூ
எட்டிப்புரவு—எட்டிக்குக் கொடுக்கப்படும் இறையிலி நிலம்.

எட்டி—வணிகருட் சிறந்தோன் பெறும் சிறப்புப் பட்டம்
காவிதி—வேளாளருட் சிறந்தோன் பெறும் சிறப்புப் பட்டம்

நங்கைப் பெண்—நங்கையாகிய பெண்
நங்கைச்சானி—பெண்களுள் சிறந்தவள்
சானி—உயர் மகளிரைக் குறிக்கும் ஓர் இடைச்சொல் (துரைச்சானி என்னும் வழக்குக் காண்க)
தினை—ஒரு சிறப்புப்பட்டப் பெயர்

155. சாத்தன்—ஆடவருள் ஒருவற்கிடும் பெயர், விலங்குகளுள் ஆணுக்கிடும் பெயர் | திணைப் பொதுப் பெயர்

156. நாய் கோட்பட்டான்—நாயால் கொள்ளப்பட்டான்
சூர்—அச்சுறுத்தும் தெய்வம்
வளி—காற்று, பெருங்காற்று

157. பூல்—ஒரு வகைமரம்
வில்கோள்—வில்லைக் கொள்ளுதல்
கடு—நஞ்சு
செப்பு—செம்பு
வரைபாய் வருடை—மலையில் பாய்ந்து விளையாடும் வருடை என்னும் மான்

புலம்புக்கனன் = புலத்தின்கண் (நிலத்தின்கண்) புகுந்தனன்
புல்லணற்காளை (புல் + அணல் + காளை) புல்லிய தாடியினையுடைய (காளைபோலும்) ஆண்மகன்
மறங்கடிந்த அருங்கற்பின்—தீமையை நீக்கிய அரிய கற்பினையுடைய
சில் சொல்லிற் பல்கூந்தல்—சிலவான சொற்களையும் பலவான கூந்தலையும்
ஆயிருதிணையின் இசைக்குமன்—அவ்விரண்டு திணைக்கண்ணும் ஒலிக்கும் (மன் அசை)
ஏக்காட்டினான்—அம்பைக் காட்டினான்
பனைதடிந்தான்—பனைமரத்தை வெட்டினான்
மகட்பெற்றான்—மகளைப் பெற்றான்
மழவர் ஓட்டிய—மழவரை ஓடச்செய்த
எற்கண்டு பெயருங்காலை யாழநின் கற்கெழு சிறுகுடி—என்னைக்கண்டு பெயரும்போது நினது கல்பொருந்திய சிறிய குடி யாழ—அசை
நப்புணர்வில்லா நயனில்லோர் நட்பு—நம்மைச் சேர்தல் இல்லாத அன்பற்றவர் நட்பு.
தற்கொண்டான்—தன்னைக் கொண்டவன்
செறுத்தான்—அழித்தான், கொன்றான்

158. பருத்தி—ஒருவகைச் செடி.
அரை—ஒருவகைக் கீரை, அரைக்கீரை எனச் சேர்த்தே சொல்வது வழக்கு.
அலிக்கொற்றன் — அலியாகிய கொற்றன் — பண்புத் தொகை. புலிக் கொற்றன்—புலிபோலும் கொற்றன்—உவமத்தொகை.
தினை—தினைப்பயிர்
ஒல்லைக் கொண்டான்—விரைவில் கொண்டான்.
தில்லைச் சொல்—தில் என்னும் சொல் (தில்லையாகிய சொல்)
மன்னைச் சொல்—மன் என்னும் சொல் (மன்னையாகிய சொல்)
பணைத்தோள்—பருமனாகிய தோள்,
பணை—உரிச்சொல் ஆதலின் பணைத்தோள் என்பது உரிச்சொற்றொடர்.

காவிக்கண்—காவிப் பூ (நீலப்பூ)ப் போலும் கண்
குவளைக்கண்—குவளைமலர் போலும் கண்
மாசித்திங்கள்—மாசியாகிய மாதம்
சென்மதிபாக—செல்வாயாக பாகனே.
கடிகா—காவல் மிகுந்த சோலை, மணமிகுந்த சோலை.

159. அதோளி→ அவ்விடம் ←ஆண்டை
இதோளி→ இவ்விடம் ←ஈண்டை
உதோளி→ உவ்விடம் ←ஊண்டை
எதோளி→ எவ்விடம் ←யாண்டை
ஆங்கவை—அவ்விடம்
பண்டைச் சான்றார்—பழங்காலச் சான்றோர்
ஒருதிங்களைக் குழவி—ஒருமாதக்குழந்தை
ஒரு நாளைக் குழவி—ஒருநாள் குழந்தை.
ஆயிடை—அவ்விடம்
அன்றைக் கூத்தர்—அக்காலக் கூத்தர்.

160. கோனன்று—கோல்+நன்று } கோல்—செங்கோல். திரட்சி எனினும் ஆம்
மண்ணகல்—மண்ணால் ஆகிய அகல்
பொன்னகல்—பொன்னால் ஆகிய அகல்
அவ்வடை—அ+அடை
கோணிமிர்ந்தது (கோண்+நிமிர்ந்தது) கோண்—கோணல்
(கோள்+நிமிர்ந்தது)—கோள்—கோள் மீன்
வேனன்று—வேல்+நன்று
தோணன்று—தோள்+நன்று
கோறீது—கோல்+தீது
வேறீது—வேல்+தீது
தெவ்வலன்—பகைவன் அல்லன்
விரனன்று—விரல்+நன்று
குறணிமிர்ந்தது—குறள்+நிமிர்ந்தது. குறள்—கூன்
வராறீது—வரால்+தீது
காற்றீது—கால்+தீது
விரற்றீது—விரல்+தீது
நாண்டீது—நாண்+தீது நாண்—கயிறு, நாணம்.

164. உரிஞ் யானா } யானா, அனந்தா, ஆதா என்பன
உரிஞ் அனந்தா } பெயர்கள். உரிஞுக யானா எனப்
உரிஞ் ஆதா } பொருள் கொள்க. பிறவும் இப்படியே.

இகலா, ஈந்தா, உழுந்தா, ஊறா, எயினா, ஏறா, ஐயா, ஒழுக்கா, ஓதா, ஔவியா—இவைகளும் பெயர்களே.

165. உழக்கே யாழாக்கு—உழக்கும் ஆழாக்கும்
கொள்ளே ஐயவி—கொள் அளவும் (அதனிற் குறைந்த) ஐயவி அளவும்.
குறுணி நானாழி—குறுணியும் (அதிற் குறைந்த) நான்கு நாழியும்.
கழஞ்சே குன்றி—கழஞ்சும் (அதனிற் குறைந்த) குன்றியும்

166. உழக்கு, செவிடு—முகத்தலளவைப் பெயர்கள்
கஃசு, கழஞ்சு, தொடி, கொள்—நிறுத்தல் அளவைப் பெயர்கள்.

167. உரிக்குறை—உரியளவும் (அதனிற்) குறைந்த அளவும்
கலக்குறை—கல அளவும் (அதனிற்) குறைந்த அளவும்
கலப்பயறு—கல அளவுப் பயறு
பாகு—பாக்கு, வெல்லப்பாகும் ஆம்
உரிக்கூறு—உரியளவும் அதன் ஒரு கூறளவும்

168. உழக்கின் குறை—உழக்கும் அதன் குறையளவும்—அல்வழி
உழக்கினது குறை—வேற்றுமைத்தொகை.

169. கலத்துக்குறை—கலமும் அதன் குறையும்—அல்வழி
கலத்தினது குறை—வேற்றுமைத் தொகை.

170. பனையின் குறை—பனையும் அதன் குறையளவும்—அல்வழி பனையினது குறை—வேற்றுமைத் தொகை.
காவின்குறை-காவும் அதன்குறையளவும்-அல்வழி.
காவளவினது குறை—வேற்றுமைத்தொகை.

171. கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டில், அகல், உழக்கு—இவை முகத்தல்அளவைப் பெயர்கள்.
கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை, உம்மி இவை நிறுத்தலளவைப் பெயர்கள்.

இம்மி ஒரடை என்பனவும் நிறுத்தலளவைப் பெயர் கள். இடா—முகத்தலளவைப் பெயர்.

172. மண்ணு—கழுவு
உள்ளு—நினைக்க
பதக்க நானாழி—பதக்கும் நானாழியும் நானாழி—நான்கு நாழி.
வாட்டானை—வாள் + தானை
தோற்றண்டை—தோல் + தண்டை
சீரகரை—சீரகம் + அரை
நாகணை—நாகம் + அணை

173. யார்யார்க்கண்டே உவப்பர்—யாரை யாரைக் கண்டு மகிழ்வர்.
யாவது நன்றென உணரார் மாட்டும்—யாது நல்லது என அறியாதாரிடத்தும்.

பயன்படுத்தப் பெற்ற நூல்கள்

1. தொல்காப்பியம்—எழுத்ததிகாரம்—இளம்பூரணம், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், (வெளியீடு எண். 800 முதற்பதிப்பு) சென்னை (1955).

2. தொல்—எழுத்து—நச்சினார்க்கினியம், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை வெளியீடு 17. ஆறாவது பதிப்பு (1972).

3. தொல்—எழுத்து—குறிப்புரையுடன் டாக்டர் பி. சா—சுப்பிரமணிய சாஸ்திரியார், திருவையாறு, சாமிநாதன் பதிப்பு (1937).

4. தொல்—எழுத்ததிகார ஆராய்ச்சி, வே. வேங்கடராசுலு ரெட்டியார் சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு (1945).

5. தொல்—எழுத்து—இளம் திரு—அடிகளாசிரியர் பதிப்பு கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர் (1969).

6. தொல்—எழுத்து—நச். சி. கணேசய்யர் பதிப்பு, இலங்கை, சுன்னாகம் திருமகள் அழுத்தகம் வெளியீடு (1952).

7. தொல்—எழுத்து—நச். இராம—கோவிந்தசாமி பிள்ளை பதிப்பு தஞ்சைச் சரசுவதிமால் வெளியீடு (1958).

தொல்—எழுத்து—இளம் கு. சுந்தரமூர்த்தி பதிப்பு (1969) தெற்குத் தெரு, திருப்பனந்தாள் (தஞ்சை).

8. அவிநயம்
க. ப. அறவாணன் பதிப்பு
சைன இளைஞர் மன்றம், சென்னை—17 (1975).

9. இலக்கண விளக்கம்
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை (1973).

10. தொன்னூல் விளக்கம்
டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் பதிப்பு
தமிழ்ப் பதிப்பகம், அடையாறு, சென்னை 20 (1978).

11. நன்னூல்—சங்கர நமச்சிவாயர் உரை
டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு.

12. நேமிநாதம்
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை (1964).

13. முத்துவீரியம்
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை (1972).

14. வீர சோழியம்
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை (1970).

15. சுவாமிநாதம்
டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் பதிப்பு
விற்பனை உரிமை, பாரிநிலையம், சென்னை (1967).

16. Tolkappiyam-in English with critical studies, S. Ilakkuvanar, Kural Neri Publishing House, Madurai (1972).

17. Journal of Tamil studies, September 1972, International Institute of Tamil Studies, Madras-113.

...வன வெளியீடுகள்

1.	தமிழில் விடுகதைகள்	...	ரூ.	12	00
	தமிழ் இலக்கியக் கொள்கை—III	...	ரூ.	8	00
3.	தமிழ் இலக்கியக் கொள்கை—IV	...	ரூ.	10	00
4.	தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு	...	ரூ.	15	00
5.	தமிழ் இலக்கியக் கொள்கை—V	...	ரூ.	12	00
6.	தமிழ் இலக்கியக் கொள்கை	...	ரூ.	16	00
7.	தமிழர் நாட்டு விளையாட்டுகள்	...	ரூ.	14	00
8.	தமிழர் ஆடைகள்	...	ரூ.	16	00
9.	தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்	...	ரூ.	16	00
10.	தமிழர் கண்ட மனம்	...	ரூ.	9	00
11.	தமிழர் நோற்கருவிகள்	...	ரூ.	10	00
12.	தமிழர் உணவு	...	ரூ	12	00
13.	தமிழக நாட்டுப்புறக் கலைகள்	...	ரூ.	10	00
14.	தந்திவனபுராணம்	...	ரூ	15	00
15.	தொல்காப்பியம்—சிறப்புப்பாயிரம்	...	ரூ.	10	00
16.	தொல்காப்பியம்—நூன்மரபு	...	ரூ.	9	00
17.	தொல்காப்பியம்—மொழிமரபு	...	ரூ.	9	00
18.	தொல்காப்பியம்—மரபியல	...	ரூ.	10	50
19.	தொல்காப்பியம்—பிறப்பியல்	...	ரூ.	8	00
20.	தொல்காப்பியம்—புணரியல்	...	ரூ.	10	00
21.	அடியார்க்கு நல்லார் உரைத்திறன்	...	ரூ.	12	00
22.	கருவூரார் பலதிரட்டு	...	ரூ.	12	00
23.	திருக்குருகூர் திருவேங்கடநாதன்	...	ரூ.	12	00
	பிள்ளைத்தமிழ்	...	ரூ.	7	50
24.	பணவிடு தூது	...	ரூ.	6	00
25.	சின்ன மகிபன் குளுவ நாடகம்	...	ரூ.	5	00
26.	உலகத் தமிழ் எழுத்தாளர் யார்-எவர்?	...	ரூ.	6	00
27.	கூவநூல்	...	ரூ.	7	00
28.	பிரபந்தத் திரட்டு	...	ரூ.	16	00
29.	மனைநூல்	...	ரூ.	15	00
30.	A Study of Perunkatai	...	Rs.	12	00
31.	Papers on Tamil Studies	...	Rs.	15	00
32.	Thiru Murugan	...	Rs.	5	00
33.	Dissertations on Tamilology	...	Rs.	10	00
34.	Tamil Research through Journal	...	Rs.	7	50
35.	Dr. Mu. Va.	...	Rs.	20	00
36.	The Tamil writers Directory	...	Rs.	10	00
37.	Tamil Drama	...	Rs.	20	00
38.	Cultural Heritage of the Tamils	...	Rs.	20	00
39.	Literary Heritage of the Tamils	...	Rs.	50	00
40.	Heritage of the Tamils—Language and Grammar	...	Rs.	22	00
41.	Epigraphical Evidences for Tamil Studies		Rs.	10	00

இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
டி டி டி ஐ, தரமணி, சென்னை-600 113.